
கலைமாமணி
விக்கிரமன்



# தியாகவல்லபன்

# தியாக வல்லபன்

(சரித்திரப் புதினம்)

தமிழ்நேசன் மின்நூலகம்
www.tamilnesan1981.blogspot.in

கலைமாமணி **விக்கிரமன்**

யாழினி

**யாழினி பதிப்பகம்**™

புதிய எண். 18, அம்பர்சன் தெரு,
முதல் தளம், குறளகம் எதிரில்
பிராட்வே, சென்னை - 600 108
தொ.பேசி 044-25369892, 25363186

# நூல் விளக்கக் குறிப்பு

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | **தியாக வல்லபன்** |
| ஆசிரியர் | : | **கலைமாமணி விக்கிரமன்** |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | வரலாற்றுப் புதினம் |
| உரிமை | : | © ஆசிரியருக்கு |
| அளவு | : | டெமி 1/8 |
| மொத்தப் பக்கங்கள் | : | 136 |
| விலை | : | ₹ 90/- |
| யாழினி முதல் பதிப்பு | : | 2013 |
| நூல் வெளியீடு | : | யாழினி பதிப்பகம்™<br>பு.எண் 18, அம்பர்சன் தெரு,<br>முதல் தளம், குறளகம் எதிரில்,<br>பிராட்வே, சென்னை-600 108.<br>தொ.பேசி. 044-25369892, 25363186 |
| அச்சிட்டோர் | : | தி இம்பீரியல் கிராபிக்ஸ்,<br>சென்னை-600 001. |

# முன்னுரை

'தியாகவல்லபன்' சரித்திர நவீனம், 'கல்கி' வார இதழில் தொடராக வெளிவந்தபோதே நான் வாசித்து மகிழ்ந்திருக்கிறேன். கால் நூற்றாண்டுக் காலங்களுக்குப் பின் இப்போது ஒருமுறை இதை வாசிக்கும் வாய்ப்பை எனக்கு வழங்கினார் பெரியவர் கலைமாமணி விக்கிரமன் அவர்கள். அன்று வாசித்த அதே சுவாரஸ்யத்துடன் இப்போதும் வாசித்து மகிழ்ந்தேன்.

பிற்காலச் சோழர் சரித்திரம் என்னும் மாகடலில் மூழ்கி முத்தெடுப்பதில் வல்லவர் கலைமாமணி விக்கிரமன் என்பது தமிழ் கூறும் நல்லுலகு அறிந்த சங்கதி. அவர் எழுதிய 'நந்திபுரத்து நாயகி' தொடங்கி, 'வந்தியத் தேவன் வாள்', 'கங்கா புரிக்காவலன்', 'சோழ மகுடம்', 'சோழ இளவரசன் கனவு' என்று அந்தப் பட்டியல் நீளும். அதிக எண்ணிக்கையில் சோழ சரித்திரப் பின்னணியிலான புதினங்களை எழுதியர் என்கிற பெருமைகூட இவருக்கே உரித்தானது எனலாம்.

'தியாக வல்லபன்', இரண்டாம் இராசராச சோழரின் வரலாற்றுப் பின்புலத்தைக் கொண்ட புதினம்.

சோழ மன்னர் திடீரென உடல் நலிவுறுகிறார். அப்போது அவருக்கு மிகச் சிறிய கைக்குழந்தைகள் இரண்டு வாரிசாக உள்ள நிலை. சோழ மாததேவியும் உயிருடன் இல்லை. பெற்ற குழந்தைகளைத் தந்தை நேரில் சந்திக்கக் கூடாது என்கிற சோதிடக் கட்டுப்பாடு. இந்த நெருக்கடிகளைச் சமாளிக்கவும் இடைக்கால ஆட்சியாளர் ஒருவரை நியமிக்கவும், குழந்தைகளைப் பாதுகாப்பாக வளர்த்து, தக்க வயதில் அவர்களில் ஒருவரிடம் ஆட்சியை ஒப்படைக்கவுமான சூழ்நிலையை உருவாக்க மன்னரும் அவருடைய நம்பிக்கைக்குரியவர்களும் படுகிறபாடுதான் இப்புதினத்தின் கதைக் களம்.

அரசரின் இளவயது நண்பனாகவும் படைத்தலைவனாகவும் இருந்து, முதலமைச்சராக உயர்கிற பெருமான் நம்பிப் பல்லவரையர்,

அரசின் மாமனாராகவும் அவருடைய வாரிசுக் குழந்தைகளின் பாட்டனாராகவும் உள்ள திருக்கோவலூர் மலையமான், அரசரின் சகோதரி அறம் வளர்ச் செல்வி எனப்படும் நெறியுடைப் பெம்மாள் மற்றும் அவளுடைய புதல்வனும் வேங்கி நாட்டிலிருந்து வந்து சோழ அரசின் இடைக்கால ஆட்சியாளனாகப் பொறுப்பேற்க வேண்டிய சூழ்நிலையில் உள்ளவனுமான வல்லபன் ஆகிய மிகச்சில பாத்திரங்களை வைத்துக் கொண்டு, மிக அற்புதமான - பிரம்மாண்டமான இந்தச் சரித்திரப் புதினத்தை சற்றேனும் சுவாரஸ்யம் குன்றாமல் படைத்திருக்கிறார், கலைமாமணி விக்கிரமன்.

அலட்டிக் கொள்ளாமல் வாசகனைப் பிரமிக்க வைக்கிற ஓர் அதியற்புத எழுத்து நடை இவருக்கு வசப்பட்டிருக்கிறது. எண்ணியெண்ணி இன்புறுகிற காதல் இருக்கிறது. ஆனால், காதல் காட்சிகளை விவரிக்கிறேன் எனப் புகுந்து விரசப்படுத்துகிற பாங்கு ஓரிடத்தில் கூட இல்லை. யுத்தம், சதி, வஞ்சகம் பேசப்படுகிறது. எங்கும் இரத்த வாடை இல்லை. கோரமோ, குதர்க்கமோ இல்லை. பட்டுச் சீலையில் சித்திரம் பதித்துப் பொன்னிழை பாவுகிற ஒரு நேர்த்தியோடு, அரசியல் களத்தின் அத்தனை விஷயங்களும் பதிவாக்கப்பட்டுள்ளன.

பெரும்புலவரான ஒட்டக்கூத்தரும், மகாபண்டிதரான கேசவ சுவாமிகளும் அவசியமான இடங்களில் தோன்றி, தங்கள் பங்கினை ஆற்றுகிறார்கள். இந்தப் புதினத்தில் இடம்பெற்றுள்ள பெரும்பாலான கதாபாத்திரங்கள் நிஜ சரித்திரத்திலிருந்தே எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள், ஒன்றிரண்டு துணைக் காதாபாத்திரங்கள் மட்டுமே கற்பனை.

கலைமாமணி விக்கிரமன் அவர்களை என் ஆசானாக வரித்துக் கொண்ட ஏகலைவன் நான். அவர் என் எழுத்துகளுக்கு ஏற்றம் தந்து, விருதுகளால் என்னுள் தன்னம்பிக்கை வளர்த்துத் தலை நிமிரச் செய்து மகிழ்பவர். இவரால் எழுத்துலகில் ஏற்றம்பெற்ற ஒவ்வொருவருமே சொல்லக்கூடும், விக்கிரமனே ஒரு 'தியாகவல்லபன்' என்று. இது புகழ்ச்சியில்லை; உண்மை!

- கௌதம நீலாம்பரன்
('கல்கி' விருது பெற்ற வரலாற்று நாவலாசிரியர்)

# என் உரை

**வ**ரலாற்றுப் புதினத்தில் தியாகவல்லபன் கதைச் சம்பவம் ஓர் திருப்புனை. முன்னுரை எழுதியுள்ளள கல்கி விருதுபெற்ற, வரலாற்று நாவல்கள் பல எழுதியுள்ள கதையை ஓரளவுக்கு திரு. கௌதம நீலாம்பரன் விவரித்துள்ளார்.

இந்தப் புதினத்தை எழுத எனக்கு வாய்ப்பளித்த அந்தச் சமயம் - கல்கி ஆசிரியராக இருந்த திரு. கி.ராஜேந்திரன் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

அமுதசுரபியைத் தவிர நான் வெளி வார இதழ்களில் வரலாற்று நாவல்கள் எழுதியவை குறைவு. எழுதப்பட்ட கதைகளைப் பற்றியே கதை எழுதிவிடலாம். என் வாழ்க்கையே போராட்டங்கள் நிறைந்த ஓர் புதினம்தான். என்னைத் தொலைவிலிருந்துக் கவனித்து வந்துள்ள திரு. கௌதம வல்லபன் கூறுவது மிகை அன்று. தியாகவல்லபனில் துணைக் கதை மாந்தர்கள்தாம் கற்பனை.

இந்தப் புதினத்தை வெளியிடும் யாழினி பதிப்பகத்தாருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

- **விக்கிரமன்**

# 1. குழந்தை மலர்கள்

வெள்ளை நிற விநாயகருக்குத் தன் வணக்கத்தைத் தெரிவிப்பது போல், காவிரி நதி அங்கே வலம் வந்து கொண்டிருந்தது.

இளவேனில் காலத்தில், ஒருநாள் இளங்காலைப் பொழுது கதிரவனின் உதயத்தை அறிவிக்க, வானத்திரைச் சீலையில் வண்ணச் சித்திரங்கள் எழுந்தன. மெல்லிய செம்பொற் கதிர்கள் சலசலவென்று ஓடும் பொன்னி ஆற்றில் மெல்லத் தவழ்ந்து வந்தன. நீராடு துறையில் நீராட வருவோரும், இருள் பிரியுமுன்பே நீராடி, நனைந்த ஆடையை உடுத்தியவரும், கவிழ்ந்து வளைந்திருந்த மரக்கிளைகளின் மீதிருந்து ஆழமான இடத்தில் குதித்து நீந்துவோருமாக நீராடு துறை களை கட்டிவிட்டது.

கரையோரமாகத் திகழும் தோப்புகளினின்று மிக மிக அவரசமாகப் புள்ளினங்கள் பறந்து சென்றன. எருமைகள், சிறு வீடு மேய்ந்து கொண்டிருந்தன.

திருவலஞ்சுழி ஆலயத்தை ஒட்டியுள்ள பூந்தோட்டத்தில் மல்லியண்ணன், அன்றலர்ந்த இளமலர்களைக் கொய்து கொண்டிருந்தான். முல்லையையும், இருவாட்சியையும் செண்பகத்தையும் அவன் பார்த்துப் பார்த்துக் கொய்யும் வீதமே தனிதான். ஏதோ அந்த மலர்களை அன்று தான் முதன் முதலாகப் பார்ப்பது போன்ற ஒருவித பிரமிப்பு அவனிடமிருந்தது. காலை இளம் போதில் அவன் பூக்கொய்யும் பணியைச் செய்து பல மாதங்களாகி விட்டன. சிறிது நேரம் சென்றால் உதவி செய்யப் பணியாட்கள் வந்துவிடுவர். அவனுடைய அருமை மகள் அல்லிவிழி இருள் பிரியா முன்னர் எழுந்திருந்து பூக்களைப் பறிப்பாள். திருவேரகத்துச் சுவாமிநாதன் திருமார்பை அலங்கரிக்கவும், திருவலஞ்சுழி கற்பகநாதருக்குக் காணிக்கையாக்கவும் அந்த மலர்கள் செல்லும். அரசர் இராஜராஜன் திருமார்பை அலங்கரிக்கப் பழையாறை மாளிகைக்குச்செல்லும். ஆயிரத்தளி மாளிகைகளிலுள்ள அந்தப்புரப் பெண்டிர் கூந்தலை அழகுப்படுத்தவும் செல்லும்.

"அல்லி"! என்று குரல் கொடுத்தான் மல்லியண்ணன். சில நாள்களாகவே அல்லி அதிகாலைப் போதில் எழுந்திருப்பதில்லை. விழித்துக் கொண்டாலும் பாயில் படுத்துக் கொண்டு ஏதோ சிந்தித்தவாறிருக்கிறாள். அவள் விழிகளிலிருந்து நீர் கசிந்துருகித் தலையணையை நனைக்கிறது. மல்லியண்ணனுக்குத் தெரியும் மகளின் துயரம். குழந்தை இறந்த துயரத்தால் வாடும் மகளை என்ன கூறி அவனால் தேற்ற முடியும்?

தோட்டத்து வாவியிலுள்ள செங்கழுநீர் மலரைப் பார்த்துச் சிரிப்பாள். பூத்துக் குலுங்கி நிற்கும் மல்லிகைப் பந்தல் அருகே செல்வாள். பூமித்தாய்க்கு அர்ச்சனை செய்ததுபோல் பரவிக் கிடக்கும் பவழ மல்லிகை மலர்களைக் கை நிறைய எடுத்துக் கண்களில் ஒத்திக் கொள்வாள். இருவாட்சியும், சாமந்தியும் பூத்து நிற்கும் செடிகளருகே செல்வாள். அவை எல்லாம் அவள் குழந்தைகளாகத் தோன்றும். அவளுடைய துயரத்தை மாற்றுவதற்கு மாறாக அவை அதிகப்படுத்தும். பூச்செடிகளின் சூழலிலிருந்து ஓடோடி வந்து நந்தவனத்து நடுவே திகழும் குடிலின் உள்ளே நுழைந்து தரையில் படுத்து விடுவாள்.

மல்லியண்ணன் பெருமூச்சு விடுவான். குழந்தையைப் பறிகொடுத்த துக்கத்தை எப்படி மாற்றுவது என்று தெரியாமல் திண்டாடுவான். தன்னந் தனியனாகப் பூக்களைப் பறித்து வந்து மகளருகே தொடுத்துக் கொடுக்கக் குவிப்பான்.

"அல்லி" என்று மீண்டும் குரல் கொடுத்தான் மல்லியண்ணன். இன்று இருள் பிரியுமுன்பே, அல்லி விழித்து எழுந்து விட்டாள் என்பது அவனுக்குத் தெரியும். அவனது குரலுக்கு மறுமொழி வரவில்லை. ஆனால், இனிய இசை மிதந்து வந்தது.

**'என்ன புண்ணியம் செய்தனை**
**நெஞ்சமே! இருங்கடல் வையத்து**
**முன்னம் நீ புரி நல்வினைப்**
**பயனிடை முழுமணித் தாளங்கள்**
**மன்னு காவிரி சூழ்திரு**
**வலஞ்சுழி வாணனை வாயாரப்**
**பன்னி ஆதரித்து ஏத்தியும்**
**வழிபடும் அதனாலே...!'**

மல்லியண்ணன் சாளரம் வழியே எட்டிப் பார்த்தான்.

அல்லியின் கரங்கள் மிக வேகமாக இயங்கிக் கொண்டிருந்தன. இருவாட்சியும், மல்லிகையும் அவள் விரல்களில் ஸ்பரிசம் பட்டுச் சிரித்தன. கோக்கப்பட்ட மலர்கள் வளைந்து நெளிந்து

மாலையாகத் தரையில் திகழ்ந்தன. இனிய குரலெடுத்து அவள் பாடிப் பல மாதங்களாகி விட்டன. அல்லியின் மனத்துயர் மெல்லக் குறைவதையறிந்தான் மல்லியண்ணன்.

யாரோ, நந்தவனத்துச் சுற்று வேலிப் படலைத் திறந்து கொண்டு வருவது தெரிந்தது. மல்லியண்ணன். உற்றுப் பார்த்தான். போர்த்தியிருந்ததால் அவனால் அடையாளம் காண முடியவில்லை.

"யாரது?" என்று குரல் கொடுத்தான் மல்லியண்ணன். "ஸ்" என்று உதட்டின்மேல் விரலை வைத்துச் சைகை செய்த உருவம் அருகே வந்து போர்வையை விலக்கியது.

"ஆ, தாங்களா?" என்று வியப்புடன் கூவிய மல்லியண்ணன், "ஐயா, வாருங்கள் வாருங்கள். இந்தக் குடில் என்ன பாக்கியம் செய்ததோ?" என்று பரபரப்புடன் அவரை உட்கார வைக்க இருக்கையைத் தேடினான்.

பெருமான் நம்பிப் பல்லவராயன் சுற்று முற்றும் கம்பீரமாகப் பார்த்தார். சக்கரவர்த்தி இரண்டாம் இராஜராஜ சோழரின் வலக்கரம் போல் விளங்கும் அவர், சோழநாட்டுப் படைத் தலைவர்.

"மல்லியண்ணா! உள்ளே பாடுவது உன் மகள் தானே?" என்று கேட்ட அவர், "உன் மகளுக்குக் குரலினிமை சிறந்திருக்கிறது" என்றார்.

"ஆமாம், ஐயா! அவள் பாடிப் பல நாள்களாகின்றன. குழந்தையைப் பறிகொடுத்த பிறகு அவள் ஊமையாகி விட்டாள். இன்று தான் அவள் பறவை போல் கலகலப்பாக இருக்கிறாள்" என்றான் மல்லியண்ணன்.

"அடடா, குழந்தை இறந்த ஏக்கமா? உனக்குப் பெயரனைப் பிரிந்ததால் வருத்தமிருக்கும். உன் மருமகனார் எங்கே இருக்கிறார்?" என்று சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டே கேட்டார் பெருமான் நம்பி.

"அவனை உங்களுக்குத் தெரியாமலிருக்க முடியாது ஐயா! ஆயிரத்தளி அரண்மனையில் பணியாற்றுகிறான். குழந்தையைப் பறிகொடுத்த அல்லிக்கு ஆதரவாயிருந்து அவள் துயர் துடைக்காமல் வீட்டுப் பக்கம் வராமல் எங்கோ சுற்றுகிறான்" என்று மல்லியண்ணன் குறைப்பட்டுக் கொண்டான்.

"குழந்தையைப் பறிகொடுத்த ஏக்கமும், கணவனின் பிணக்கும் என் மகளைப் பித்துப் பிடித்ததுபோல் செய்துவிட்டன. இன்று

நல்லநாள். தங்கள் வருகையால் இந்த நந்தவனமே மணக்கிறது..." என்று கூறிய மல்லியண்ணனைக் கையமர்த்தி, " மல்லியண்ணா! நன்றாகப் பேசுகிறாய். நான் வராமலேயே இந்த நந்தவனத்துக்கு மணமிருக்கிறது. அதிகம் பேச நேரமில்லை. உன் மகளாலும், உன்னாலும் எனக்கு மிகப்பெரிய காரியமாக வேண்டும். அதனால் தான் நான் வந்தேன்..." என்று மெல்லிய குரலில், அழுத்தமாகப் பேசிய பெருமான் நம்பி, மேல் போர்வையைச் சரிசெய்து கொண்டார்.

உள்ளேயிருந்து கேட்ட பாடல் ஒலி நின்றது, "அல்லி" என்று குரல் கொடுத்த மல்லியண்ணனை நோக்கி, "உம்... இப்போது அவளை இங்கே அழைக்காதே. நான், சொல்வதை விவரமாகக் கேள். பிறகு உன் மகளிடம் கூறலாம்" என்றார்.

"ஐயன்மீர், கட்டளையிடுங்கள். நான் காத்திருக்கிறேன். இட்ட பணியை நிறைவேற்றுமாறு கட்டளையிடத் தாங்களே நேரே வரவேண்டுமா? சொல்லியனுப்பியிருந்தால் நான் வந்திருப்பேனே?" என்று மல்லி பணிவும் பரிவும் நிறைந்த குரலில் கூறினான்.

இதுவரை நின்று கொண்டிருந்த பெருமன் நம்பி திண்ணையில் உட்கார்ந்தார். திண்ணை நன்றாக மெழுகப்பட்டு மாக்கோலம் இடப்பட்டிருந்தது.

பெருமான் நம்பி நெற்றியில் அரும்பிய வியர்வையைத் துடைத்துக் கொண்டார். களைப்பு என்பதே அறியாத அவருக்குச் சில நாள்களாகக் களைப்பு தலைதூக்குகிறது. கவலையின் காரணமாக இருக்கலாமே தவிர முதுமை அவரை வாட்டுகிறது என்பதனால் இருக்க முடியாது.

" மல்லியண்ணா! கூப்பிட்டனுப்பியிருந்தால் நீ ஓடி வந்து விடுவாய் என்பது எனக்குத் தெரியாதா? ஆனால், நானே இந்தக் காலைப் பொழுதில் உன்னைத் தேடி வந்திருக்கிறேன் என்றால் அதிலுள்ள முக்கியமும், அவசரமும் தான் காரணம். உன் குடும்பத்தால் அரச குலத்துக்கு, இந்த சோழ நாட்டுக்கு ஆக வேண்டிய மகத்தான காரியமொன்றிருக்கிறது..." – பெருமான் நம்பி சொல்லிக் கொண்டே போகும்போது, மல்லியண்ணன் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான். அவன் பார்வையில் கம்பீரமிருந்தது. மார்பை நிமிர்த்திக் கொண்டான்.

"சோழ நாட்டிற்கு என் குடும்பத்தால் ஆக வேண்டியதைச் சொல்லுங்கள் ஐயா, சொல்லுங்கள். மலர் தொடுத்தளித்துச் செய்யும் கைங்கர்ய பலன் இன்று கைமேல் கிட்டிவிட்டது.

இந்த ஏழையால் சோழ நாட்டிற்கும் ஏதாவது துரும்பு எடுத்துப் போட முடியுமென்றால் அதை விட ஆனந்தமளிக்கும் செய்தி வேறென்ன இருக்கிறது... சொல்லுங்கள் ஐயா, சொல்லுங்கள்.." என்று கூறிக் குடிலுக்குள் செல்ல எத்தனித்த மல்லியண்ணனை நோக்கிப் பெருமான் நம்பி,

" மல்லி! நீ உள்ளே செல்ல முயல்வதன் காரணம் எனக்குத் தெரிகிறது. இந்தக் காலை வேளையில் மோர் விட்டுக் கூழ் கரைத்துக் கொண்டு வருவாய். வேண்டாம்; தொல்லைப்படாதே. அதற்கெல்லாம் நேரமில்லை. ஆக வேண்டியவற்றை நான் கூறிவிட்டு மன்னரைக் காணப் பழையாறைக்குச் செல்ல வேண்டும்" என்றார்.

"ஐயா! இந்த ஏழைக்குக் கிடைத்துள்ள அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். இந்த நாட்டிற்கு என் குடும்பத்தார் என்ன செய்ய வேண்டும்? கட்டளையிடுங்கள். என் குடும்பம் என்பது இப்போது என் மகளையும் என்னையும் தவிர வேறு யாருமில்லை. என் மருமகன் மீது எனக்கு நம்பிக்கையில்லை. அவன் திருந்தி வந்து, என் மகளை மகிழ்வித்தால் அது வலஞ்சுழி கற்பகநாதர் அளிக்கும் அருளால் தான் முடியும்" என்ற மல்லி உணர்ச்சி பொங்கக் கூறினான்.

" மல்லியண்ணா, இந்த நாட்டில் நடக்கும் விவகாரங்களை அறிந்து கொள்வதில் நீ எப்போதாவது ஆர்வங்காட்டியதுண்டா?" என்று பெருமான் நம்பி பீடிகையுடன் தொடங்கினார்.

மல்லி மெல்ல நகைத்து, "எனக்கு அதற்கெல்லாம் நேரமேது ஐயா? நந்தவனத்தைப் பண்படுத்துவது, உரமிடுவது, களை பிடுங்குவது, பூக்கும் புதுமலரைக் கண்டு ஆனந்திப்பது இவை தவிர நான் சிந்தனையை வேறெதிலும் செலுத்துவதில்லை. வலஞ்சுழி கற்பகநாதர் அருளும், சேர பாண்டியர்களை நடுநடுங்க வைத்த தங்களைப் போன்ற பெரும் படைத் தலைவர்களும் இருக்கும்போது என்னைப் போன்றவர்கள் அதில் நாட்டங்கொள்வதெதற்கு?" என்றான்.

"மல்லி! அப்படிச் சொல்லாதே. சோழ நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் தம் நாட்டைப் பற்றிக் கவலைகொள்ளும் காலம் வந்துவிட்டது. சோழ மன்னர் ராஜராஜனுக்கு எதிராகத் திட்டமிடுகிறார்கள் சிலர்..."

"ஐயா! நான் கேள்விப்பட்டது உண்மையா? சோழ மகாராஜா உடல்நலம் சரியில்லாமல் படுத்த படுக்கையாக

இருக்கிறார்களாமே..." என்று மல்லியண்ணன் கவலையுடன் கேட்டான்.

"ஆமாம், மல்லி! அதைப் பயன்படுத்திக் கொண்டு வேண்டியவர்கள் போல் நடித்துச் சிலர் சதிசெய்கிறார்கள். சோழநாட்டையே தங்களுடையதாக்கிக் கொள்ள விரும்புகிறார்கள்" என்று பெருமான் நம்பி கூறும்போது "ஆ... அப்படியா?" என்று மல்லி கூவினான்.

"மல்லி! அதிகமாக வளர்த்துக் கொண்டு பேச நேரமில்லை. நீயே புரிந்து கொள்வாய். உன் நந்தவனத்து மலரைப் போல் எண்ணிச் சோழ மன்னரின் மீதும் நீ கவனம் செலுத்தப் போகும் காலம் நெருங்கி வந்துவிட்டது. மிக நம்பிக்கைக்கு உரிய ஒருவரை நான் சிலநாள்களாகத் தேடி வந்தேன். மற்றவர்கள் கவனத்தில் படாது ஒதுங்கித் தன் வேலையும் தானுமாய் இருக்கும் ஒருவரைத் தேடி வந்தேன், அதற்கு ஏற்றவன் நீ தான்..."

பெருமான் நம்பி இவ்வாறு சொல்லச் சொல்ல மல்லியின் பரபரப்பு அதிகமாகியது.

"மல்லி! நமது மாமன்னருக்குப் பிறகு நாட்டைத் தாமே ஆளவேண்டும் என்று சிலர் துடிக்கிறார்கள். மன்னருக்கு வாரிசு இல்லை என்று அவர்கள் நினைக்கிறார்கள்" – என்று பெருமான் நம்பி கூறினார்.

"எனக்குக் கூட கவலையாக இருக்கிறது ஐயா! நம் மாமன்னர் யாருக்கு இளவரசர் பட்டம் சூட்டப் போகிறார்...?" என்று மல்லி கேட்டான்.

"அதைப் பற்றி இப்போது பேசிக் கொண்டிருக்க நான் வரவில்லை. எல்லாரும் நினைப்பது போல் மாமன்னருக்கு வாரிசு இல்லாமல் போகவில்லை.

"சோழசூரியன் அஸ்தமித்து விடவில்லை. மன்னருக்கு வாரிசு இருக்கிறது. இரண்டு புதல்வர்கள் இருக்கிறார்கள்..." என்று கூறிச் சற்று நிறுத்தினார் பெருமான் நம்பி.

"நமது மாமன்னருக்கு இரண்டு புதல்வர்கள் இருக்கிறார்களா?" மல்லி ஆவலுடனும் அதிசயத்துடனும் கேட்டான்.

"ஆம்; கங்கை கொண்ட சோழபுரத்தில் இருக்கிறார்கள். உன் மகள் பெற்ற குழந்தையை இழந்துப் பரிதவிக்கிறாள். ஆனால் அங்கு இரு பாலர்களும், பெற்ற தாயை இழந்து, சீராட்ட, பாராட்டத் தக்கவரின்றித் தவிக்கிறார்கள். அந்த இரு குழந்தைகளையும், கொன்றுவிடத் திட்டமிடுபவர்களைப்

பற்றிய செய்தி இப்போது தான் எனக்குக் கிடைத்தது. அதனால் அக்குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டிய பெரும் பொறுப்பை உணர்ந்து நான் இங்கே ஓடோடி வந்தேன்..."

பெருமான் நம்பி, மல்லியின் முகத்தையே உற்றுப் பார்த்தவாறு பேச்சை சற்று நிறுத்தியவுடன், மல்லி மிகுந்த பரபரப்படைந்தான்.

"ஐயா! நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று உடனே சொல்லுங்கள். பாலின்றிப் பாலகர்கள் பரிதவிப்பதை மாற்ற அரச குடும்பத்தில் எத்தனையோ பேர் இருப்பார்கள். நாங்கள் என்ன செய்யவேண்டும்? கட்டளையிடுங்கள்..." என்று துடிப்புடன் கூவினான்.

"மல்லி! அந்தத் தாயில்லாக் குழந்தைகளுக்குப் பாலூட்டும் பொறுப்பை உன் மகள் ஏற்க வேண்டும்" என்ற நம்பியின் குரல் கேட்டு, அதுவரை அங்குக் கதவருகே நின்ற கேட்டுக் கொண்டிருந்த அல்லி தன் மார்பை அழுத்தமாய்ப் பிடித்துக் கொண்டு விழிகளை மெல்ல மூடிக் கொண்டு விம்மினாள்.

"ஆகா, அந்தப் பாக்கியம் என் மகளுக்குக் கிடைக்கிறதா? சோழ சக்கரவர்த்தியின் குழந்தைகளைப் பாலூட்டி வளர்க்கும் பொறுப்பு அல்லிக்குக் கிடைக்கிறதா? சற்று முன்பு பாடினாளே என்ன புண்ணியம் செய்தேனோ என்று – முற்பிறவி புண்ணியத்துக்கான பலன் கிடைத்து விட்டது... சொல்லுங்கள்... ஐயா சொல்லுங்கள்... நான் என்ன செய்ய வேண்டும்? உடனே சொல்லுங்கள்..." என்று பரபரத்தான் மல்லியண்ணன்.

பெருமான் நம்பி சிறிது நேரம் மௌனமாயிருந்தார். பிறகு மெல்லிய குரலில், "மல்லி! நீ மிகவும் எச்சரிக்கையுடன் கவனமாகச் செயல்பட வேண்டும். உன் மகள் இன்று இரவே கங்கை கொண்ட சோழபுரம் செல்கிறாள். அங்கே பெரிய நாச்சியார் அம்மங்கை தேவி இருக்கிறார்கள். அவர்களிடமிருந்து உன் மகள் இரு குழந்தைகளையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அழும் குழந்தைக்குப் பாலூட்ட வேண்டும். அரசியின் குழந்தைகள் அவை அக்குழந்கைளை இன்னும் சில நாள்களிலே கொன்று விட, உடன் கூட்டத்தார் சதி செய்து கொண்டிருக்கிறார்கள். அதற்குள் குழந்தைகளை இங்கே கொண்டு வர வேண்டும்."

பெருமான் நம்பி, திட்டத்தைக் கூறியவுடன் மல்லிக்கு உடனே ஏதும் பேசத் தோன்றவில்லை. "ஆகா! கங்காபுரியில், அம்மங்கை தேவியார் இன்னமும் உயிருடன் இருக்கிறார்களா? சுங்கத்

த்விர்த்த குலோத்துங்க சோழதேவரின் திருமகளார் பெரிய நாச்சியாரான அம்மங்கை தேவியாருக்கு எழுபது பிராயத்துக்கு மேல் இருக்குமே?" என்று மல்லியண்ணன் தன் பிரமிப்பை வார்த்தைகளால் புலப்படுத்த முயன்றான்.

"மல்லி! அரச குழந்தைகளை எடுத்துவரப் படைவீரர்களும், பரிவாரங்களும், பணிப் பெண்களும், அந்தப்புரத்து மாதரும் இருக்கும்போது உன் சிறிய மகள் எப்படிக் காப்பாற்றுவாள் என்று கவலைப்படுகிறாயா? தில்லையம்பல நடராசர் அருளால் உன் மகளுக்கு மகத்தான திறமை வரப்போகிறது. கங்கை கொண்ட சோழபுரத்து அந்தப்புரத்தில் வசிக்கும் அரச குடும்பத்து மகளிர் அனைவரையும் மாளிகையோடு தீயிட்டுக் கொளுத்தி கூண்டோடு கயிலாயம் அனுப்பத் திட்டமிட்டிருக்கும் சதிகாரர்களின் திட்டம் நிறைவேறாமல் என்று பரிவாரங்கள் பார்த்துக் கொள்வார்கள். ஆனால், அந்தக் குழப்பத்தில் அரச பாலகர்களுக்கு ஆபத்து வந்துவிடக் கூடாது. பசியால் பால் நினைந்து அழும் குழவிகளின் குரல் வெளியே ஒலித்தால் திட்டம் பாழாகி விடுமே! அதனால் தான் மகவை இழந்த உன் மகள் தாயற்ற அக்குழந்தைகளை அழாமல் காப்பாற்றுவாள் என்று உறுதியுடன் நம்புகிறேன்" என்றார். இயற்கையாகவே கம்பீரமான தோற்றமுடைய நம்பி இப்போது விழிகள் ஒளிவீச நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டார்.

மல்லியண்ணன் உணர்ச்சி பொங்க விம்மினான். அவர்கள் பேசுவதைக் கதவருகே நின்று கேட்டுக் கொண்டிருந்த அல்லியின் மார்பகத்தின்று தாய்மை உணர்ச்சி பிரவாகித்தது.

"மல்லி! மிக மிக எச்சரிக்கையுடன் நீ நடந்து கொள்ள வேண்டும். சுவாமிமலைக் கோயில் அருகே கூண்டு வண்டி ஒன்று இன்றைய மாலைப் பொழுதில் நிற்கும். அதில் பல பயணிகள் இருப்பர். உன் மகளும் அவர்களுடன் கங்காபுரிக்குச் செல்லும் பூக்காரியைப் போல் பயணமாகிறாள். தக்க சமயத்தில் அவளுக்கு ஆலோசனைகளும், உத்தரவுகளும் உதவிகளும் வரும். இதோ இந்த முத்திரை மோதிரத்தை அவளிடம் கொடு. சமயத்துக்கு இது பெரும் உதவி புரியும்" என்று கூறி விட்டு உடனே புறப்பட்டார் பெருமான் நம்பி.

அவர் போகும் திசையைப் பார்த்துக் கொண்டிருந்த மல்லி, சோழ அரசிளங்குமாரர்களைக் காப்பாற்றும் பெரும் பொறுப்பு தனக்களிக்கப் பட்டிருப்பதைப் பற்றிப் பெருமகிழ்ச்சியடைந்தான். அல்லியோ இரு குழந்தைகளை அணைத்து அமுதூட்டும் சுகமான கற்பனையில் மிதந்தாள்.

அந்தச் சமயம் இவ்வளவு நாள்களாக வராத அவள் கணவன் குடிலின் வாயிலில் வந்து நிற்பதை அவர்கள் இருவரும் கவனிக்கவில்லை.

## 2. அரசத் துரோகம்

அல்லி விழியின் கணவன் கோவிந்தன் தொண்டையைக் கனைத்துக் கொண்ட பிறகு தான், மல்லியண்ணன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்துத் தன் மருமகன் வந்திருப்பதை அறிந்தான். அவனை வரவேற்கக்கூடத் தோன்றாமல் அல்லியை நோக்கி, "அல்லி, யார் வந்திருக்கிறார்கள் பார்!" என்று குரல் கொடுத்தான். பிறகு "வாங்க மருமகப்பிள்ளை, வாங்க வாங்க" என்று அழைத்தான்.

கோவிந்தனின் விழிகள் சிவந்திருந்தன. இரவு உறக்கமில்லாமல். அல்லி தன் விழிகளில் ததும்பி நீரை துடைத்துக் கொண்டு, தன் கணவனை நோக்கிப் புன்முறுவல் புரிந்தாள்.

"ஏன் விழிகளெல்லாம் சிவந்திருக்கின்றன? இரவு தூக்கமில்லையா?" என்று கேட்டாள்.

கோவிந்தன், நந்தவனத்து வாயிலை உற்று நோக்கியவாறு, "தலை முதல் கால் வரை போர்வையைப் போர்த்திக்கொண்டு இப்போது சென்றது யார் மாமா?" என்று கேட்டான்.

தந்தையும் மகளும் திடுக்கிட்டு ஒருவருயொருவர் பார்த்து விழித்தனர்.

"நம்ப சாம்பவன்தான். குளிர் காய்ச்சல்; வீட்டுக்குப் போகிறான்" என்றான் மல்லியண்ணன்.

"ஓ! எனக்குக்கூட இன்னும் இரண்டு நாள்களில் காய்ச்சல் வந்து விடும்" என்று கூறிய கோவிந்தன் தொடர்ந்து, "இப்படி நான் இரவெல்லாம் கண் விழித்துக் கொண்டிருந்தால் மயங்கக்கூட வந்துவிடும்" என்று தன் அசதியை புலப்படுத்தினான்.

குடிலுக்கு வந்து சென்றவன் தளபதி என்பதை கோவிந்தன் கண்டு கொள்ளவில்லை என்பதை அறிந்து கொண்ட தந்தையும், மகளும் "அப்பாடா!" என்று பெருமூச்சு விட்டனர்.

அல்லி கணவனருகே வந்து அவன் தோளைப் பற்றியவாறு நின்று கொண்டாள்.

"இவ்வளவு நாள்களாக எங்கே சென்றிருந்தீர்கள்? ஏன் இரவெல்லாம் கண்விழிக்கிறீர்கள்? இங்கே நான் கண் விழித்துக்

கண்ணீர் சிந்தி வேதனைப்படுவது போதாதா?" என்று துயரம் நெஞ்சையடைக்கக் கேட்டாள் அல்லி.

"ஆயிரத்தளி மாளிகையில், நமது சக்கரவர்த்தி நோயுற்றுப் படுத்திருக்கிறாரே உனக்குத் தெரியாதா?" என்று கோவிந்தன் கேட்டான்.

தெரியாது என்பதற்கு அறிகுறியாக அல்லி தலையசைத்தாள். கோவிந்தன் தன் மாமனை நோக்கி, "மாமா! தங்களுக்கும் தெரியாதா?" என்று கேட்டான். அவனும் தெரியாது என்று தலையசைக்கவே, "மாமா! நமது சோழ நாட்டுக்குப் பெரும் ஆபத்து ஒன்று நெருங்குகிறது. நமது மாமன்னர் திடீரென்று மயங்கிக் கீழே விழுந்து விட்டார்!" என்று கோவிந்தன் கூறினான்.

தந்தையும், மகளும் ஒரே சமயத்தில், "ஐயோ!" என்று வாய்விட்டுக் கூவினர்.

"நாள்தோறும் மாளிகைக்கு மலர் மாலைகளை அனுப்புகிறேனே, மன்னர் அணிவதில்லையா?" என்று மல்லியண்ணன் கேட்டான்.

"மன்னர் அணியாவிட்டால் என்ன? அந்தப்புர மாதர் அணிகிறார்கள். இல்லாவிடில் அரசிலாற்றங்கரை மாளிகையில் வந்து கூடியிருக்கும் குறுநில மன்னர்கள் அணிகிறார்கள்" என்றான்.

இராஜராஜ சோழரைச் சந்திப்பதற்காக, பழையாறைக்குத் திருகோவலூரிலிருந்து மலையமானும், சேந்தமங்கலத்திலிருந்து காடவராயரும் வந்திருக்கின்றனர். அதற்கு முன்பே சம்புவராயர் பரிவாரங்களுடன் வந்திருக்கிறார். அவர்களுக்கு வேண்டிய சுக சௌகரியங்களைக் கவனிக்கவே பணியாட்கள் நியமிக்கப்பட்டனர். சந்தனமும் பன்னீரும், வாசமுள்ள மலர்களும், மாளிகைக்கு ஏராளமாகச் சென்றன.

சக்கரவர்த்தி திடீரென்று மயக்கமுற்று வீழ்ந்தவுடன், மாளிகை மருத்துவர் ஒருவரையும் சந்திக்க அனுமதிக்காமல் ஓய்வாக அரசர் இருக்க வேண்டும் என்று கட்டளையிட்டதனால் சிற்றரசர்கள் ஆயிரத்தளிக்கு வரமுடியாமல் போய்விட்டது. தளபதி பெருமான் நம்பி பல்லவராயர் அரசரிடம் ஒருவரையும் நெருங்கவிடாமல் பார்த்துக் கொண்டார். அதனால் குறுநில மன்னர்களால் சக்கரவர்த்தியைச் சந்திக்க முடியவில்லை.

கோவிந்தனுக்கு அரசர் படுத்திருக்கும் கூடத்தில் நின்று பணிபுரிய வேண்டிய பொறுப்பு அளிக்கப்பட்டது. இரவு பகல்

முழுதும் அவன் அங்கேயே இருக்க நேர்ந்தது. கிடைக்கும் ஓய்வு நேரத்தில் அவன் அரசிலாற்றங்கரையிலுள்ள மாளிகை ஒன்றுக்குச் சென்று அங்குள்ளவர்களிடம் பேசிவிட்டுத் திரும்பி வருவான். அந்த மாளிகை பாழடைந்த நிலையில் காணப்பட்டது. ஆனால் கம்பீரமாகத் திகழ்ந்தது. ஒரு காலத்தில் அரச குடும்பத்தார் வசிக்கும் மாளிகையாக விளங்கியது. சோழர் குலத்தின் ஒளிவிளக்காக விளங்கிய அருண்மொழிவர்மர் என்றழைக்கப்பட்ட முதலாம் இராஜராஜரின் வழிவந்த அதிராஜேந்திரனுக்குப் பல மனைவியர். அந்த மனைவியரின் புதல்வர்களுள் ஒருவரான சோழேந்திர சிங்கன் எப்பொழுதும் ஆட்சிக்குத் தொல்லை கொடுத்து வந்தான். அவன் அந்த மாளிகையில் வசித்து வந்தான். அரச குடும்பத்தவரைச் சேர்ந்தவன் என்ற முறையில் அவனுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. அவன் பரம்பரையில் வந்தவர்கள், சோழநாடு தங்களுக்கு உரிமை உடையது என்று சொல்லி வந்தனர்.

இப்போதே அதே பரம்பரையில் வந்த மல்லபதேவன் மறைமுகமாகத் தனக்கு ஆதரவு தேடி வந்தான். சக்கரவர்த்தி ராஜராஜன் நோய்வாய்ப்பட்டதிலிருந்து அவன் சுறுசுறுப்புடன் இயங்கி வந்தான். சோழ நாட்டின் ஆணைக்குட்பட்ட சிற்றரசர்களைச் சந்தித்துப் பேசிவந்தான். அவர்களுடைய உதவியைப் பெறுவதற்கு ஒவ்வோர் ஊராகச் சென்று வந்தான். பழையாறை மாளிகையில் ராஜராஜனைச் சந்திக்க வருபவர்கள் யார், யார், அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பவையெல்லாம் கேட்டறிய, கோவிந்தனைப் பயன்படுத்தி வந்தான். கோவிந்தன், ஓய்வு கிடைத்த நேரங்களில் அரசிலாற்றங்கரை மாளிகைக்குச் சென்று, அரச மாளிகையில் நடைபெறுவனவற்றைச் சொல்லி வருவான். அதனால் அவனுக்கு ஓய்வென்பதே இல்லாமல் போய்விட்டது. நந்தவனக் குடிலுக்குச் சென்று மனைவியைச் சந்திக்கவும் முடியாமல் போய் விட்டது.

இன்று ஓய்வு கிடைத்தது.

அதனால் அல்லியைக் காண ஓடோடி வந்தான்.

"இரவும் பகலும் கண் விழித்து உங்கள் உடலையும் கெடுத்துக் கொண்டு என் உள்ளத்தையும் வேதனைப்படுத்த அப்படி என்ன முக்கியமான வேலையோ?" என்று அல்லி அவனைக் கேட்டாள். அதில் மெல்லிய கோபமும் கலந்திருந்தது.

"அல்லி! எனக்கு அதிர்ஷ்டம் அடிக்கப் போகிறது. நிறையப் பொன்னும் பொருளும் கிடைக்கப் போகின்றன. நீ அரசி போல்

வாழ வேண்டாமா? இப்போது நான் உண்மையாக நடந்து கொண்டால் தானே பிறகு சுகமாக வாழ வழி கிடைக்கும்?" என்றான். அல்லியின் மெல்லிய கரங்களைப் பிடித்து தன் கன்னங்களில் வைத்துக் கொண்டான். அவனிடமிருந்து கை நழுவுவது போல் நழுவிய அல்லி, "நீங்கள் செய்வது அரசத் துரோகக் காரியமல்லவா? என்ன பாபம் செய்தோமோ, முதலில் நமக்குப் பிறந்த ஆண் குழந்தை நோய் ஏதுமில்லாமல் இருந்தும் பிறந்த ஒரே மாதத்தில் இறந்து விட்டது. மறுபடியும் தெரிந்து பாபம் செய்யாதீர்கள். நமக்கு சந்ததியே இல்லாமல் போய்விடப் போகிறது" என்று கூறி விம்மினாள் அல்லி.

அல்லியின் விழிநீரைத் துடைக்கத் தோன்றாமல் கோவிந்தன் கோபத்துடன், "எது துரோகம்? உனக்கு அரச விவகாரங்கள் தெரியுமா? இந்தச் சோழநாடு யாருக்குச் சொந்தமென்று நினைக்கிறாய்? இப்போது அரியணையிலிருக்கும் ராஜராஜருக்கா? கிடையவே கிடையாது. மல்லப்ப தேவரே உரிமையானவர். அவர் தக்க ஆதாரங்களை வைத்திருக்கிறார். அது போகட்டும். குழந்தை இறந்தது நம்முடைய பாவச் செய்தவர். அதனால் அவருக்கு வாரிசு இல்லை. அவரது பட்டத்து அரசிக்கோ, மற்ற அரசிகளுக்கோ ஒரு குழந்தை கூடப் பிறக்கவில்லை. இனியும் பிறக்கும் என்பது என்ன உறுதி? உன் கொள்கைப்படி அவர் மகாபாவம் செய்தவர் இல்லையா? அல்லி, பாவ புண்ணியத்தைப் பற்றி பேச வேண்டாம். நம் அரசரே சோழ நாட்டின் நியாயமான வாரிசு அல்லர். அவருக்குப் பிறகு இந்தநாடு மல்லப்பருக்கே சொந்தமாக வேண்டும். அதற்கான முயற்சியில், குறுநில மன்னர்களின் ஆதரவை, உதவியைத் திரட்டுவதில் அவர் ஈடுபட்டிருக்கிறார். நான் அவருக்கு உதவியாக இருக்கிறேன். அவர் தம் முயற்சியில் வெற்றியடைந்தால் இந்தச் சோழ நாட்டின் மாமன்னர் அவரே. நான் அப்போது..." என்று பேச்சைப் பாதியில் நிறுத்தி விட்டுக் கம்பீரமாக மார்பை நிமிர்த்தி நின்று அல்லியை நோக்கினான் கோவிந்தன். அல்லி கண்களை மெல்லத் துடைத்துக் கொண்டிருந்தாள்.

"நான் அப்போது...." என்று கூறி நிறுத்திய கோவிந்தன், "எனக்கென்ன பதவி கிடைக்கும்?" என்று என்னையே கேட்டுக் கொண்டான். அவனைப் பார்த்து அல்லி சிரித்து விட்டாள்.

"தங்களுக்குச் சிறைத் தண்டனை கிடைக்கும். அரசாங்கத்துக்கு எதிராகச் சதிசெய்பவனுக்கு ஆயுள் தண்டனை என்று சொல்வார்கள்" என்றாள்.

"ஒரு காலுமில்லை. அல்லி! நீயும் பார்க்கத்தான் போகிறாய். குறுநில மன்னர்கள் இராஜராஜபுரத்து மாளிகையில் கூடியிருக்கிறார்கள். மன்னரைச் சந்தித்து அடுத்து இளவரசர் பட்டம் சூட்டுவதைக் குறித்துப் பேசப் போகிறார்கள். இன்னும் சில நாள்களிலேயே முடிவாகி விடும். நேற்றே முடிவாகியிருக்க வேண்டும். திடீரென மன்னருக்கு மயக்க மேற்பட்டு விட்டது." என்று பேசிக் கொண்டே போன கோவிந்தனின் பேச்சின் போக்கை வெளித்திண்ணையில் அமர்ந்து கேட்டுக் கொண்டிருந்த மல்லியண்ணன் மாற்ற விரும்பி உள்ளே நுழைந்து, "மருமகப்பிள்ளை! வெயில் ஏறிக் கொண்டே போகிறது. எழுந்து ஆற்றில் அமிழ்ந்து குளித்து விட்டு வாருங்கள். மணக்க மணக்க முருங்கைக் காய் குழம்பு வைக்கச் சொல்கிறேன். பசியாற உண்டு, படுத்து உறங்குங்கள்" என்றான்.

"ஆமாம், ஆமாம். இன்று நான் அரண்மனைக்குப் போகப் போவதில்லை. இங்கே தான் நாள் முழுவதும் - இரவு கூட இருக்கப் போகிறேன்" என்று அல்லியைப் பார்த்துக் கண் சிமிட்டிவாறு கூறினான்.

கணவர் இதுவரை வீட்டுக்கு வரவில்லையே என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்த அல்லி, அது கேட்டுத் திடுக்கிட்டாள். தந்தையின் முகத்தை நோக்கினாள். தனது கங்கை கொண்ட சோழபுரப் பயணம் என்னாவது என்பதை அவள் விழிகள் கேட்டன. தப்பித் தவறிக்கூட அதைப் பற்றிப் பேசி விடாதே என்று மல்லியண்ணன் விழிகள் மகளை எச்சரித்தன.

"மாமா! நான் குளித்து விட்டு வருகிறேன். நான் பேசியவற்றை ஒருவரிடம் கூட மூச்சு விடாதீர்கள். வெளியே தெரிந்தால் திட்டங்கள் சிதைந்து விடும். அந்தக் கழுகுக் கண் பெருமான் நம்பியின் செவியில் வீழ்ந்தால் காரியம் கெட்டு விடும். உம்..." என்று கடுமையாக எச்சரித்து விட்டு நீராடப் புறப்பட்டான் கோவிந்தன்.

சோழப் படைத் தளபதி பெருமான் நம்பியின் கட்டளைப்படி அன்று மாலையில் கணவன் அறியாது கங்கை கொண்ட சோழபுரத்துக்கு எப்படிப் புறப்படுவது என்று தவியாய்த் தவித்தாள் அல்லி.

# 3. மறைந்திருக்கும் இரகசியம்

பழையாறை நகரிலுள்ள ஆயிரத்தளி அரண்மனை கடந்த சில நாள்களைப் போலன்றி, சற்று மகிழ்ச்சியுடன் காணப்பட்டது. ஆயிரத்தளி அரண்மனை பரம்பரைச் சிறப்பு வாய்ந்தது. சோழர் குலத்து அரச குடும்பத்தினர் வசிக்கும் மாளிகையாகவும் அது திகழ்ந்து வந்தது. இராஜராஜசோழரின் புதல்வர் இராஜேந்திர சோழரால் நிறுவப்பட்ட கங்கை கொண்ட சோழபுரம், இரண்டாம் இராஜராஜனின் தலைநகராக விளங்கினாலும், தம் ஆட்சியின் பெரும் பொழுதைப் பழையாறையிலுள்ள ஆயிரத்தளி மாளிகையிலேயே கழித்தார். அவர் மகிழ்ச்சியுடன் இருந்ததும் அந்த மாளிகையில் தான். இப்போது நோய்வாய்ப்பட்டு உடலும் உள்ளமும் நொந்து வாழ்வதும் அந்த அரண்மனையில் தான்.

மன்னர் திடீரென்று ஒருநாள் மயக்கமுற்றுக் கீழே வீழ்ந்து விட்டார் என்பதும், நினைவு திரும்பப் பல நாழிகைகள் ஆயின என்பதும் அறிந்த பெருமான் நம்பி அரண்மனைக்கு விரைந்தார். சோழர்களின் பரம்பரை மருத்துவர் மன்னரின் உடல் நிலையைச் சோதித்து, சில நாள்களுக்கு ஒருவரும் தொந்தரவு செய்யக்கூடாது என்று தடுத்து விட்டார்.

பெருமான் நம்பி உடனே முன் யோசனையுடன் இயங்கினார். வேளக்காரப் படை வீரர்களை அழைத்தார். ஒரு பகுதியினரை ஆயிரத்தளி அரண்மனையிலும், ஒரு பகுதியினரைக் கங்கை கொண்ட சோழபுரத்திலும் கண்ணும் கருத்துமாகக் காவல் காக்குமாறு கட்டளையிட்டார்.

ஆயிரத்தளி அரண்மனையை மிகமிகக் கவனத்துடன் பாதுகாப்பது நியாயமே. மன்னரைக் காக்க வேண்டியது கடமை. கங்கை கொண்ட சோழபுரத்து மாளிகையில் பாதுகாவல் அவசியமா? அப்படி முக்கியமானவர்கள் அங்கு யார் இருக்கிறார்கள்?

யார் இருக்கிறார்கள் என்பதைக் குறிக்குப் பெருமான் நம்பி வேளக்காரப் படையினரிடம் கூறவில்லை. அவர் உத்தரவென்றால் உத்தரவு தான். மன்னரைத் தவிர மற்றவர்களின் கட்டளைக்குக் கீழ்ப்படியாத வேளக்காரப் படைவீரர்கள் பெருமான் நம்பியின் உத்தரவுக்கு மறுபேச்சுப் பேச மாட்டார்கள்.

பழையாறை ஆயிரத்தளி மாளிகைக்குள் பெருமான் நம்பி

நுழைந்து நேரே மன்னர் படுத்திருக்குமிடத்துக்குச் சென்றார். பெருமான் நம்பியைக் கண்டவுடனேயே இராஜ ராஜனுக்குப் புதுத் தெம்பு பிறந்து விட்டது. அவர் முகத்தில் புதிய ஒளி பரவுவதை நம்பி உணர்ந்தார்.

பெருமான் நம்பியின் கரங்களைப் பற்றிக் கொண்ட மன்னரின் விழிகள் கலங்கின. நம்பி உடனே ஏதும் பேசவில்லை. அங்கிருந்த பணிப்பெண்களைச் சற்று வெளியேயிருக்குமாறு கூறினார்.

"நம்பி" என்று அழைத்தார் இராஜராஜன். அந்தச் சொற்களில் கனிவு இருந்தது. பல காலம் பிரிந்திருந்த ஒருவரைச் சந்திக்கும் போது ஏற்படுவதைப் போன்ற உணர்ச்சி இருந்தது.

"நம்பி, நான் பிழைந்தெழுந்து உன்னைச் சந்திக்க முடியும் என்று நினைக்கவே இல்லை. ஐராவதேச்வரரைத் தரிசனம் செய்து விட்டு வந்து உட்கார்ந்தேன். நெஞ்சு வலித்தது. உடலெல்லாம் படபடத்தது. உடல் முழுவதும் வியர்த்தது. கண்கள் இருண்டன. ஐராவதேச்வரர் ஆலயத்து மேல் மாடத்துக்குச் செல்வது போல தோன்றியது. சோழர் குலம் விளங்க வைத்த என் பாட்டனுக்குப் பாட்டன் இராஜராஜ சோழதேவர் அங்கே நின்று கொண்டு என்னைக் கனிவுடன் அழைப்பது போல் தோன்றியது. ஆகா! அவருடைய எழிலுடைத் திருமேனியின் வடிவழகை என்னவென்று கூறி வர்ணிப்பேன்? பொன்னார் மேனியுடன் அவரது நீண்ட கரங்களையும், பரந்த மார்பினையும் நான் கண்டு அதிசயித்திருக்கிறேன். அவர் திருநாமத்தை எனக்கு எதற்காகச் சூட்டினார்கள் என்று எண்ணியபோது நான் வெட்கமுற்றேன். அவர் கம்பீரம் என்ன, அவர் வடிவழகு என்ன? பெரிய விமானம், பெரிய நந்தி, பெரிய நடராசர் சிலை என்று எல்லாவற்றையும் மிகப்பெரியதாகப் படைத்த அவர் ஆற்றல் என்ன! அவர் சோழநாட்டுக்கு ஆற்றிய பணிகள், செய்த நன்மைகள் ஆகியவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்தேன்.

அந்த மாபெரும் மன்னருக்குப் பொருந்திய இராஜராஜர் என்கிற பெயர் எனக்கு எள்ளவும் பொருந்தாது என்று தோன்றிவிட்டது... நம்பி..." இராஜராஜன் பேச முடியாமல் திணறினார்.

"அரசே!" என்று பெருமான் நம்பி பரபரப்புடன் அவர் அருகே சென்று அவர் மார்பைத் தடவிக் கொடுத்து அவர் நெற்றியில் துளிர்த்த வியர்வையைத் தனது மேலங்கியில் ஒத்தியெடுத்து, "தாங்கள் இவ்வாறு உணர்ச்சி வசப்படலாமா? தங்களைத் தாங்களே குறை கூறிக் கொள்ளலாமா? தங்களுக்கு எந்தவித நோயுமில்லை. தங்கள் உள்ளத்தில் வெளியிட முடியாது

அடக்கி வைத்துக் கொண்டிருக்கும் ஏதோ ஒன்று தங்களை அதிர்ச்சிக்குள்ளாக்கி விட்டது. அரசர்க்கரசே! இளம்பிராயம் முதல் தங்களிடம் நெருங்கிப் பழகிய என்னிடம் கூடச் சொல்லாமல் இதயப் பேழையில் தாங்கள் பாதுகாத்து வரும் இரகசியத்தை நான் அறியலாமா?" என்று பெருமான் நம்பி அரசருக்கு மட்டும் கேட்கும் குரலில் கேட்டார்.

இராஜராஜன், நம்பியின் கரங்களை அழுத்தமாகப் பற்றிக் கொண்டார்.

"நம்பி! என்னை விட்டு நீ எங்கும் சென்றுவிடாதே. சொல்ல முடியாத பய உணர்ச்சி என்னுள்ளே குமுறி என்னை வாட்டுகிறது. இந்தச் சோழ நாட்டுக்குப் பெருந் துன்பம் ஏதோ நேரப் போகிறது என்று என் உள்ளுணர்வு கூறுகிறது..." பேச முடியாமல் பேசினார் அவர்.

நம்பி தன் மடியிலிருந்த பையிலிருந்து திருநீற்றை எடுத்து இராஜராஜனது நெற்றியில் இட்டு அவர் மார்பிலே தடவி, "அரசே! தில்லையில் ஆனந்த நடனமாடும் பாதனின் பிரசாதம் இது. தங்கள் நலமும் நாட்டின் நலமும் மிக வேண்டி நடராசப் பெருமானிடமிருந்து பெற்றுவந்த திருநீறு. மந்திரமாகும் இந்த நீறு தங்கள் மனக்கவலையைப் போக்கிவிடும். சில நாள்களாகச் சோழநாட்டில் ஆங்காங்கே சிலர் பேசிக் கொள்வதை நானும் அறிந்தேன். தங்களுக்குப் பிறகு இந்த நாட்டுக்கு யார் வாரிசு என்று கேள்வியை எழுப்பி அவர்களே மறுமொழியையும் கூறிக் கொள்கிறார்கள்" என்று உள்ளம் நெகிழச் சற்று மெல்லிய குரலில் பேசிய நம்பி, திடீரென்று, "அவர்கள் என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்? உங்களுடைய இறுதி நாளை அவர்களே முடிவு செய்து விட்டார்களா" என்று உரத்த குரலில் கேட்டார்.

மூன்றாம் பிறைச் சந்திரனைப் போல் புன்னகையின் கீற்று இராஜராஜனின் முகத்தில் தோன்றியது.

"அவர்கள் பேசுவதில் நியாயம் இருக்கிறது" என்றார் மன்னர்.

"எது நியாயம்? அவர்கள் உங்களுடைய இறுதி நாளை எதிர்பார்ப்பது தான் நியாயமா? உங்களால் இந்த நாட்டு மக்களுக்குக் கடுகளவாவது துன்பம் ஏற்பட்டிருக்கிறதா? 'தந்தையிலோர்க்குத் தந்தையாகியும், தாயிலோர்க்குத் தாயாகியும், மைந்தரில்லோர்க்கு மைந்தராகியும், மன்னுயிர்கட்குயிராகியும்

விளங்கும்' தங்களைக் கண்டு மனம் வெறுப்பவர்களும் இருக்கிறார்களா?"

இராஜராஜன் இப்போது கலகலவென்று சிரித்தார்.

"அவர்கள் என் இறுதி நாளை எதிர்பார்க்கிறார்கள் என்று சொல்லமாட்டேன். எனக்குப் பிறகு நான் யாருக்கு இளவரசுப் பட்டம் சூட்டப் போகிறேன் என்று எதிர்பார்ப்பது நியாயம் தான். அந்த எதிர்பார்ப்பின் பலனைத் தாங்களே அடைய நினைப்பவர்கள் கூடித் திட்டம் வகுப்பதும் இயற்கைதானே?" என்று கூறியவர், "நம்பி! இப்போது நீ கூறினாயே, 'மைந்தரில்லோர்க்கு மைந்தராகி' என்று எனக்கு மைந்தரில்லை. எனக்கு நானே மைந்தனாக முடியுமா? என் விஷயத்தில் அது பொய்த்துவிட்டது என்றுதான் அனைவரும் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். நம்பி! உனக்குத் தெரியாமலிருக்க முடியாது. எனக்கு வாரிசு இல்லை என்று பலர் நினைக்கிறார்கள். என் குழந்தைகளைக் குறித்து நான் பெருமைப்படலாம். அதை ஓர் இரகசியமாகவே இதுவரை காப்பாற்றி வந்திருக்கிறேன்" என்று கூறும் போது, பெருமான் நம்பி, குறுக்கிட்டு, "அரசே! நான் அறிவேன்..." என்று மட்டும் கூறி நிறுத்தினார்.

இராஜராஜன் திடுகட்டுத் திகைத்தார். "நம்பி! உனக்குத் தெரியுமா? தெரிந்தும் அதைப் புலப்படுத்திக் கொள்ளவில்லையே! உன்னுடைய இடத்தில் மற்றொருவர் படைத்தளபதியாக இருந்தால் என்னனைப் பற்றி நினைப்பதே வேறாக இருந்திருக்கும். நீ சேனாபதி என்ற உயர் அதிகாரி என்பது இருக்கட்டும்; நீயும் நானும் சமவயதுடையவர்கள். கங்கை கொண்ட சோழபுரத்தில் ஒன்றாகவே கல்வி கற்றோம். உன்னைவிட, எனக்குக் கல்வியில் அதிக நாட்டம் சென்றது இல்லையா?" என்று கூறிய போது இருவரும் மெல்ல நகைத்தனர்.

"இராச பண்டிதன் என்று என்னை உடன் படித்த மாணவர்கள் புகழ்ந்தார்கள். நான் அரசனானேன். நீ அதற்குள் புஜபலமிக்க பெருவீரனாக விளங்கினாய். சேரநாட்டின் மீது படையெடுத்துச் சென்று வெற்றி பெற்று வந்தாய். உன்னைப் படைத்தலைவனாக்கினேன்.." என்று கூறிச் சற்று நிறுத்தி இளைப்பாறினார்.

மன்னரை மேலும் பேசவிடாமல், "அரசர்க்கரசே! நீங்களும் நானும் பிள்ளைப் பிராயத்தில் பழகிய இன்ப நினைவுகளைப் பல நாள்களுக்குப் பேசிக் கொண்டிருக்கலாம். என்னைப் படைத் தலைவனாக்கினீர்கள். பல்லவரையர் என்ற பட்டம் கொடுத்துச்

சிறப்பித்தீர்கள். என் வாழ்நாளில் நான் பெற்ற பெரும் பேறு அது. அவ்வாறெல்லாம் கௌரவித்த தாங்கள் தங்களுக்குக் குழந்தைகள் பிறந்ததை என்னிடம் தெரிவிக்கவில்லை என்பதை நான் தவறாகக் கருதவில்லை. அதற்கு ஏதோ ஒரு காரணமிருக்கிறது என்று முடிவு செய்து கொண்டேன்" என்றார்.

"ஆம், பெருமான் நம்பிப் பல்லவரையரே! அதற்குக் காரணம் இருக்கிறதென்பது உண்மைதான். அதை உன்னிடம் இதுவரையில் சொல்லாது மறைத்து வைத்திருந்தேன். தக்க சமயத்தில் சொல்ல எண்ணினேன். அதற்கான சமயம் இப்போது வந்து விட்டது" என்றார் இராஜராஜன்.

மன்னர் கூறப்போகும் அந்தச் சம்பவத்தைக் கேட்க நிமிர்ந்து உட்கார்ந்தார் சோழநாட்டுப் படைத்தலைவர், பெருமான் நம்பிப் பல்லவரையர்.

## 4. இராஜராஜன் கூறிய இரகசியம்

படைத்தலைவர் பெருமான் நம்பி பல்லவரையர், தான் இரகசியம் என்று கருதியவற்றை அறிந்திருக்கிறார் என்பதறிந்த சோழச் சக்கரவர்த்தி இராஜராஜர் முகத்தில் வியப்பின் பிரதிபலிப்பு நிழலாடியது. அவர், நம்பியின் முகத்தையே உற்று நோக்கினார்.

நம்பியின் இதழ்களில் புன்முறுவல் நெளிந்தது. "ஆம் அரசே! எனக்குத் தெரியும், சோழ நாட்டின் வாரிசு உருவாகி விட்ட செய்தி. ஆனால், அந்தச் செய்தி பரம இரகசியமாகக் கடந்த இரண்டாண்டுகளாகப் பாதுகாக்கப்பட்டிருக்கிறது என்பது தான் வியப்புக்குரியது. சோழ மன்னருக்குக் குழந்தை பிறந்தது என்றால், நாடே குதூகலமடையும். பட்டி தொட்டி எங்கும் கோலாகலமாகக் கொண்டாடப்படும். அதிலும், சோழநாட்டுக்கு வாரிசு ஏற்பட்டு விட்டதால் நாட்டு மக்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைக்காமல் என்ன செய்வர்? இனிய செய்தியை ஏன், இரகசியமாக்கினீர்கள்?" நம்பி கேட்டார்.

இராஜராஜன் உடனே மறுமொழி கூறவில்லை. சுற்றுமுற்றும் பார்த்தார்.

'ஒருவருமில்லை அரசே! மனம் விட்டுப் பேசுவதற்காகத் தான் பணிப்பெண்களைக் கூட வெளியே அனுப்பி விட்டேன். தேவைப்படும்போது திருமந்திர ஓலை நாயகத்தை மட்டும்

அழைக்கலாம்" என்று நம்பி கூறியவுடன் மன்னர் நிமிர்ந்து உட்கார்ந்து, "நம்பி! நல்ல செய்தியை இரகசியமாக வைக்க வேண்டும் என்ற எண்ணமே எனக்குத் தோன்றவில்லை. எனது நான்கு மனைவியருள் ஒருத்தி கருத்தரித்திருக்கிறாள் என்றால் அதைவிட ஆனந்தம் வேறு உண்டா? இரகசியமாக் அந்தச் செய்தியைக் காப்பாற்றுவதும் முறையில்லை" என்று கூறும்போது நம்பி குறுக்கிட்டார்.

"பட்டத்தரசி கருத்தரிக்காமல் மலையமான் மகள் அவனி முழுதுடையாளுக்கு அந்தப் பேறு கிடைத்துவிட்டது. தங்களுக்குப் பிடிக்காமல் இருந்திருக்கலாம். அதனால்..."

இராஜராஜன் பரபரப்புடன், "அதெல்லாம் தவறான செய்தி. நம்பி! உனக்குத் தெரியாமல் எனக்குப் பிடித்தவர் – பிடிக்காதவர் என்ற பேத உணர்ச்சி இருக்க முடியுமா? மலையமானுக்கும் எனக்கும் சிறிது காலமாக மனவருத்தம் உண்டு. ஆனால் அது மலையமான் மகளிடம் பிரதிபலிக்கவில்லை என்பது உனக்குத் தெரியாதா?" என்று கூறினார்.

நம்பி குறும்புப் புன்னகை மிளிர, "அரசே! எனக்கு நன்றாகத் தெரியும். பட்டத்தரசியை விட மலையமான் மகளிடம் தங்களுக்கு அந்தரங்க அன்பு உண்டென்று தெரியும். திருத்தலங்களுக்குச் செல்லும்போது மலையமான் மகளைத் தானே அழைத்துச் செல்வீர்கள்? அவர்களிடம் தங்களுக்கு அன்பு அதிகமென்பதும் நானறிவேன்... ஆனால் அவர்கள் சூலுற்ற செய்தியைத் தாங்கள் பரம இரசகியமாக வைத்திருந்தது தான் அனைவருக்கும் ஆச்சரியமான இருந்தது.." என்றார்.

"நம்பி! இதிலென்ன இரகசியம்? பகிரங்கமாக எல்லாரும் அறியவில்லையே தவிர, பரவலாக மக்கள் அறிவர். எனக்குக் குழந்தை பிறக்கப் போகிறது என்ற நல்ல செய்தி கிடைத்தவுடனேயே எனக்கு இந்த அவனியே அஸ்தமித்தது போலாகிவிட்டது. ஒருவருடன் பேசவும் பிடிக்கவில்லை. நான் பழையாறை மாளிகையை விட்டு வெளியே எங்கும் செல்லவில்லை. கங்கை கொண்ட சோழபுரம் சென்று மூன்றாண்டுகள் ஆகிவிட்டன. நம்பி! உன் சொந்த ஊருக்கு நீ சென்று மீனாட்சி அம்மனுக்குக் கோயில் கட்டும் பணியில் ஈடுபட்டுவிட்டாய். நான் அந்தரங்கத்தை யாரிடம் பகிர்ந்துகொள்வேன்? 'வாரிசு ஏற்பட்டு விட்டது' என்ற இனிய செய்தி எனக்கு மகிழ்ச்சியைத் தரவில்லை. அதுதான் இரகசியம். அது உனக்குத் தெரியுமா நம்பி?" என்று இராஜராஜன் கேட்டார்.

நம்பியின் எண்ணங்கள் எங்கோ பறந்து சென்று கொண்டிருந்தன. இரண்டாண்டுகள் அரசரின் மௌனம் கங்கை கொண்ட சோழபுரம் பக்கமே செல்லாத நிலை, நாட்டில் எத்தகைய மறைமுகக் கிளர்ச்சியை ஏற்படுத்தி விட்டன என்று எண்ணினார்.

மலையமானுடன் இராஜராஜனுக்கு உள் மனத்தாங்கல் பெரிதாக வளர்ந்து கொண்டே வந்தது. ஆனால், மலையமானுக்கு ஒரே திருப்தி, கங்கை கொண்ட சோழபுரத்தில் வளரும் தன் பெண் வயிற்றுக் குழந்தைகள் நாளை சோழநாட்டு அரியணை ஏறப் போகின்றன என்பதே. அதனால் பெருமான் நம்பியும், மலையமான் கோபத்தையும் பிணக்கையும் தவிர்க்கவே முயன்று வந்தார்.

ஆனால், கேர்விந்தனையும் சிற்றரசர்களையும் கூட்டுச் சேர்த்துக் கொண்டு மல்லப்பதேவன் சோழநாட்டின் இளவரசுப் பட்டத்தைத் தனக்கே சூட்ட வேண்டும் என்று திட்டமிடுவது தான் பெருமான் நம்பிக்கு ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இல்லை. அவனது திட்டங்களை முறியடிக்க நம்பி முயன்று கொண்டிருந்தார். அரசரிடமும் உடனே அச்செய்தியைக் கூறத் துடித்தாலும் அதைப் பற்றியே சிந்தனையில் நம்பி இருந்தார். "நம்பி! அந்த இரகசியம் என்னவென்று கேட்காமல், ஏதோ சிந்தனையில் இருக்கிறாயே" என்று இராஜராஜன் நம்பியைப் பார்த்துக் கேட்ட பிறகு தான் நம்பி தம் நிலை உணர்ந்தார்.

"உம்... உம் சோழ நாட்டின் வாரிசாக ஒரே ஒரு குழந்தை பிறக்கக்கூடாதா என்று தவம் சய்து கொண்டிருந்த தங்களுக்கு இரண்டு குழந்தைகள் பிறந்ததும் தாங்கள் மகிழ்ச்சியடைவில்லையே ஏன்? அதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. தாங்கள் தான் சொல்லவேண்டும்" என்றார் நம்பி. அரசர் நடந்தவற்றைக் கூறக் கூற நம்பிக்கு வியப்பு கூடியது.

தன் அன்புக்கினிய அரசி, மலையமான் மகள் கருத்தரித்திருக்கிறாள் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியைக் கேசவ சுவாமியிடம் தெரிவிக்க இராஜராஜன் விரைந்தோடினார். கேசவ சுவாமிகளிடம் இராஜராஜன் மதிப்பும் மரியாதையும் மிக்கவர். வடமொழியில் பெரும் புலமை வாய்ந்த கேசவ சுவாமி முக்காலும் உணர்ந்தவர். சோதிடக் கலையில் வல்லவர்.

கேசவ சுவாமி சிறிது நேரம் இராஜராஜனை உற்று நோக்கிய வாறிருந்தார். பிறகு, " இராஜராஜா! நாம் உடனே ஆயிரத்தளி

அரண்மனைக்குச் செல்வோம். அங்கே நான் மாளிகைத் தெய்வமான காளியை வேண்டித் துதிக்கிறேன். காளியின் கருணை எவ்வாறு உள்ளது என்று அறிந்து சொல்கிறேன்" என்றார்.

மகிழ்ச்சி என்னும் புரவியில் ஏறிப் பறந்து வந்த இராஜராஜனுக்கு ஒரு கணம் இதயத்தை யாரோ பிடித்து அழுத்துவது போல் தோன்றியது. நல்ல செய்தியைச் சொன்னவுடன் கேசவ சுவாமி, ஆனந்தம் மிக அடைந்து ஆசி கூறுவார் என்று எண்ணப்போக, கேசவ சுவாமியின் முகத்தில் சந்தோஷத்தின் அறிகுறியைக் காணவில்லை என்பதைக் கவனித்தார். ஆயிரத்தளி அரண்மனையின் தெற்கு வாயிலில் குடிகொண்டிருக்கும் துர்க்கையின் சந்நிதானத்துக்குக் கேசவ சுவாமியும் இராஜராஜனும் வந்து சேர்ந்தனர்.

கேசவ சுவாமி துர்க்கையின் எதிரே தியானத்தில் அமர்ந்தார். நெடுநேரம் நிஷ்டையிலிருந்து தெளிந்த கேசவ சுவாமி, இராஜ ராஜனிடம் குங்குமப் பிரசாதத்தை அளித்து, " இராஜராஜா! உன் மகிழ்ச்சியை மாற்றக்கூடிய செய்தியை நான் சொல்ல வேண்டியுள்ளது. நாளை முதல் குழந்தை பிறக்கும் வரை அருமை அரசி அவனி முழுதுடையாளை நீ சந்திக்கக்கூடாது. குழந்தை பிறந்த பிறகு மீண்டும் அதன் நட்சத்திரத்தைப் பார்த்து, பின் விளைவுகளைக் கூறுகிறேன்" என்றார்.

இராஜராஜன் திடுக்கிட்டான். "அவனி முழுதுடையாளை நான் சந்திக்கக்கூடாதா? அதெப்படி முடியும் சுவாமி? என் அன்புக் கினியாளை நான் பார்க்காமல் எப்படி இருப்பது? சோழர் குலத்தை விளங்க வைக்கப் போகும் மாமணியைத் திருவயிறு கொண்டவளை நான் எப்படிப் பார்க்காமலிருக்க முடியும்?" என்று கதறினார்.

கேசவ சுவாமி அவரைத் தேற்றி, " இராஜராஜா! இதற்கெல்லாம் கலங்கலாமா? ஓராண்டு காலம் ஓடி மறைந்து விடும். இப்போது உன் கால பலன் சரியில்லை. உன் அன்புக்கினிய அரசியின் நன்மைக்காகத்தான் சொல்கிறேன். அவள் பெற்றுப் பிழைத்து நலமாகக் காலெமல்லாம் வாழ வேண்டுமானால் அவளைப் பார்க்காது தான் இருக்க வேண்டும். இது காளியின் கட்டளை" என்றார்.

கேசவ சுவாமியின் சொற்களைச் சிரமேற்கொண்டு நடக்கும் இராஜராஜன் அவர் கட்டளையை ஏற்று அவ்வாறே இருந்தார்.

கங்கை கொண்ட சோழபுரத்து அந்தப்புரத்தை அரசி அவனி முழுதுடையாள் அடைந்தாள். கங்கை கொண்ட சோழபுரத்தில் தங்கிய பிராட்டி அம்மங்கைதேவி, தமது வாழ்நாளை மிக அமைதியுடன் கழித்துக் கொண்டிருந்தாள்.

எண்பது பிராயத்துக்கு மேல் கடந்த அம்மங்கை தேவியின் பராமரிப்பில் அவனிமுழுதுடையாளை ஒப்படைத்து விட்டு, பழையாறை அரண்மனையை வந்தடைந்தார் இராஜராஜன்.

இதுவரை இராஜராஜன் கூறியவற்றை மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்த பெருமான் நம்பி, 'அரசே! கேசவ சுவாமியின் வாக்குப் பொய்க்காதே. தாங்கள் அரசியாரைச் சந்திக்காமல் மிகக் கட்டுப்பாட்டுடன் இருந்தும், எவ்வாறு, அரசியாருக்கு மரணம் சம்பவித்தது?" என்று கேட்டார்.

இராஜராஜன் தமது விழிநீரை மெல்லத் துடைத்துக் கொண்டு, "விதியை யாரால் மாற்ற முடியும் நம்பி? உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு மிகுந்த கட்டுப்பாட்டுடன் தான் நான் இருந்தேன். சூலுண்ட அரசியைச் சந்திக்க முடியாத வாழ்வு ஒரு வாழ்வா என்று நான் விரக்தியடைந்ததுண்டு. அப்படியொரு சோர்வும் பிரிவாற்றாமையும் என்னை வாட்டும் போது பழையாறையை விட்டுப் புறப்பட்டு விடுவேன். நினைவிருக்கலாம். உன் ஊருக்கு வந்து மீனாட்சியம்மனைத் தரிசித்துச் சில நாள்களைக் கழித்தேன். அப்போதும் உன்னிடம் கூறவில்லை. இரகசியமாக என் ஆருயிர்த் தேவியைச் சந்திக்க வேண்டும் என்ற துடிப்பு எனக்கு அதிகமானது. ஐயிரண்டு திங்கள் ஓடி மறைந்தன. குழந்தை பிறக்கும் நாள் நெருங்கும் போது நான் கேசவ சுவாமியை அழைத்துக் கொண்டு கங்கை கொண்ட சோழபுரம் சென்றேன். ஓராண்டு காலமாகத் தலைநகருக்குச் செல்லாத என் வருகையை அறிந்த மக்கள் ஆனந்தக் கூத்தாடினர்.

"கேசவ சுவாமி கலகலப்புடன் காணப்படவில்லை. ஆண் குழந்தை பிறந்தது என்று செய்தியைத் திருமந்திர ஓலை நாயகம் விரைந்து வந்து தெரிவித்தான். நாள்தோறும் வானத்தையும் கையில் உள்ள பஞ்சாங்கச் சுவடியைப் பார்ப்பதும் ஏதோ மனத்துக்குள்ளேயே கணக்கிடுவதுமாக இருந்தார் கேசவ சுவாமி.

"சுவாமி! ஆண் குழந்தை பிறந்து விட்டது. வாருங்கள்! தாயையும், சேயையும் போய்ப் பார்க்கலாம்" என்று மகிழ்ச்சியாய் பரபரப்புடன் கூறினேன்.

கேசவ சுவாமி கையசைத்தார். கூடாது என்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்தார். "இராஜராஜா! நீ குழந்தையையும், தாயையும் காணும் தருணம் இன்னும் வரவில்லை" என்று மட்டுமே கூறினார்.

"பாசம், என் மதியை மறைத்தது. பற்றுதல் என் உணர்ச்சியைக் கட்டுக்கடங்காமல் செய்தது. ஒரு கணம் ஜோதிட சாத்திரத்தையே வெறுக்கத் தோன்றியது. பத்து நாள்கள், இருபது நாள்கள் என்று நான் கேசவ சுவாமியின் அருகேயே கட்டுப்பாட்டுடன் இருந்தேன். என் மனத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. சோழர் குலவிளக்கை மிக அருகே வைத்துக் கொண்டு அதைப் பாராமல் தடுக்கும் எந்தச் சக்தியையும் மீறி விட முடிவு செய்தேன். என் அருமை அரசி என்னைக் காணாமல் எப்படித் துடித்துக் கொண்டிருப்பாள் என்று எண்ணினேன். நம்பி! உன்னிடம் மனம் விட்டுச் சொல்வதில் என்ன வெட்கம்?" என்று கூறி இராஜராஜன் சற்றுப் பேச்சை நிறுத்தினார்.

நம்பி மெல்ல நகைத்து, "கட்டுப்பாட்டையும் தடையையும் மீறியதால் தான் மற்றொரு குழந்தையும் தங்களுக்குப் பிறந்தது என்பதும் எனக்குத் தெரியும். கேசவ சுவாமியின் சோதிடம் பொய்த்து 'விட்டது என்று கைகொட்டி முழங்கினீர்கள். கேசவ சுவாமி கோபித்துக் கொண்டு சோழ நாட்டை விட்டே போய்விட்டார். இதெல்லாம் நான் அறிவேன்" என்றார்.

நம்பியின் மெல்லிய சிரிப்பொலிவுடன் இராஜராஜனும் சேர்ந்து கொண்டார். கேசவ சுவாமி கோபத்துடன் வெளியேறு முன்பு என்னிடம் வந்து, ' இராஜராஜா! விதிப்பயனை வெல்ல இந்தக் கேசவனால் கூட யோசனை கூற முடியாது. ஆனால் விதியை மதியால் வெல்லலாம். உன் மதியைக் கட்டுக்கடங்கி வைத்துக் கொள். மற்றொரு முறையும் எச்சரிக்கிறேன். உனக்கு மற்றொரு குழந்தையும் பிறக்கப் போகிறது' என்று கூறினார்.

"என் செய்கையைக் கண்டு நானே பிறகு வெட்கிப் போனேன். என் அன்புக்கினியவள் மீண்டும் கருத்தரித்தாள். கேசவ சுவாமி புறப்படும் முன்பு கூறினார்: " இராஜராஜா! அடுத்துப் பிறப்பதும் ஆண் குழந்தை தான். உனக்கு ஏனோ சோதிடத்தின் மீது நம்பிக்கை குறைந்துவிட்டது. இருந்தாலும் நான் சொல்கிறேன்; சில ஆண்டுகள் வரையிலாவது இந்தக் குழந்தைகள் மறைந்தே வாழட்டும். குழந்தை பிறந்ததைப் பற்றிப் பிரபலப்படுத்தாதே. இரண்டாண்டுகள் கழிந்த பிறகு மீண்டும் குழந்தையின் பிறந்த

கோளைப் பார்த்து அதன் பலன் கூறகிறேன்" என்று கூறிப் புறப்பட்டார். அவரை நான் எவ்வளவோ தடுத்தும் கேசவ சுவாமி கேட்கவில்லை. புறப்பட்டு விட்டார். "மீண்டும் இரண்டு ஆண்டுக்ள் கழித்து வருகிறேன்" என்று கூறிச் சென்றார். அவர் சென்ற பிறகு ஏனோ என் உள்ளத்தில் ஒருவித பயம் பிடித்துக் கொண்டது. அவர் சொல்லை மீறி நான் அரசியைச் சந்தித்திருந்தது தவறோ என்று நினைத்தேன்.. அதன் பலன் ஓராண்டுகள் மற்றொரு குழந்தையை அரசி ஈன்றெடுத்தாள். ஆனால்.. ஆனால்... நம்பி!..." என்று மேலே பேசுவதற்குள் மன்னரின் நாத்தழுதழுத்தது. குழந்தை போல் விம்மினார்.

நம்பி அவரைத் தேற்றி, "அரசே! நடந்ததை நினைத்து வருத்தப்படாதீர்கள். ஒருவருக்கும் ஒரு தீங்கும் செய்தறியாத தங்களுக்கு இத்தகைய சோதனை வந்திருக்கக்கூடாதுதான். இறைவன் செயல். முதல் குழந்தை பெற்ற உடல் நிலை தேறு முன்னர் மற்றொரு குழந்தைக்கு அரசி தாயாகியதால் உடல் பலவீனப்பட்டு விட்டது. குழந்தையைப் பெறுவதற்கு அரசியார் மிகவும் துன்பப்பட்டார் என்றும் பழுவூரினின்று மருத்துவர் வந்து மிகவும் பிரயாசையின் மீது அந்தக் குழந்தையைப் பூவுலகத்துக்குக் கொண்டு வந்தார் என்றும் நான் அறிவேன். சேய் பிழைத்தது. தாயைக் காப்பாற்ற முடியவில்லை. சோழகுலத்துக்கு வாரிசு கிடைத்தது. ஆனால் இரு குழந்தைகளுக்குத் தாயான அரசி அவனி முழுதுடையாளைக் காப்பாற்றித் தர முடியவில்லை. மலையமான் மகள் இறையடி சேர்ந்த சேதியைத் தங்களால் தாங்க முடியவில்லை என்பதை நான் அறிவேன். ஆனால், தாயற்ற அந்தக் குழந்தைகளை இன்னும் அநாதைக் குழந்தைகளைப் போல் கங்கை கொண்ட சோழபுரத்திலேயே இரகசியமாக வளர்க்கும் இரகசியம் என்ன...?" என்று நம்பி கேட்டார்.

விம்மல் ஒலி தணிந்து இதய வேதனையைக் கண்ணீரால் கரைத்து, மெல்லத் தன்னைத் தானே தேற்றிக் கொண்ட பரகேசரி எனும் பட்டமுடைய இராஜராஜ சோழன், "நம்பி! அந்த இரகசியத்தை உன்னிடம் சொல்லாமல் எப்படி இருக்க முடியும்? இதுவரை படைத்தலைவராகவும் என் நண்பனாகவும் மட்டுமிருந்த நீ இன்று முதல் அமைச்சராகவும் ஆகப்போகிறாயே. உன்னிடம் அதைச் சொல்லாமல் இருக்க முடியுமா? சொல்லி வைத்தாற்போல் கேசவ சுவாமி துக்க நிகழ்ச்சிக்குப் பிறகு என்னைத் தேடி வந்தார்" என்று கூறி, அரசர் சிறிது நேரம் மௌனமாயிருந்தார்.

கேசவ சுவாமி பாதங்களில் வீழ்ந்து இராஜராஜன் கதறினார். அவர் அரசனைத் தேற்றி, "இராஜராஜா! நடக்க வேண்டியதைத் தடுக்க நம்மால் முடியாது. அலகிலா விளையாட்டுடைய ஆண்டவனின் திருவுளப்படியே எல்லாம் நடக்கும். இனியும் நீ துயரத்தில் ஆழ்ந்திருக்கக்கூடாது. இதுவரை விரோதிகளே இல்லாது வாழ்நாளைக் கழித்த உனது காலம் இப்படியே செல்லப் போவதில்லை. உடனே சோழ நாட்டின் அரசுரிமையை அடுத்து ஏற்க வாரிசு ஒருவனைத் தேடு. அவனுக்குத் தாமதமின்றி இளவரசுப் பட்டம் சூட்டிவிடு" என்றார்.

இராஜராஜன் திடுக்கிட்டார். "சோழநாட்டுக்கு வாரிசா? நான் தேடுவதா? தேடி அவனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டுவதா? சுவாமி! புதிர் போடுகிறீர்களே, கங்கை கொண்ட சோழபுரத்தில் வளர்கிறார்களே, என் இரு செல்வங்கள். அவர்கள் நினைவு தங்களுக்கு வரவில்லையா?" என்று இராஜராஜன் கேட்டான்.

"நினைவு இல்லாமலா நான் இங்கு வந்தேன்? இரண்டாண்டுகள் கழித்து வருவதாகச் சொன்னேன். சொன்ன வாக்குத் தவறாமல் கங்கை கொண்ட சோழபுரம் சென்றேன். குழந்தைகள் சரியான பராமரிப்பின்றி வாடுகின்றனர். வாழப்பிறந்த குழந்தைகள் தாயற்ற அநாதையாய்த் தவிக்கின்றனர்" என்று கேசவசுவாமி கூறிவரும் போது பரபரப்புடன் குறுக்கிட்ட இராஜராஜன், "சுவாமி! கங்காபுரியில் அவர்கள் ஏன் வாட வேண்டும்? இங்கே கொண்டு வந்துவிடுகிறேன். இரு குழந்தைகளுள் மூத்தவன் இருக்கும்போது இளவரசுப் பட்டத்திற்கு * மண்டை கவிழ்க்க வேறு ஒருவனை ஏன் தேட வேண்டும்?" என்று கேட்டார்.

கேசவ சுவாமி நகைத்தார், "என்ன செய்வது? அந்தக் குழந்தைகளின் அதிர்ஷ்டம் அப்படி, இராஜராஜா! மீண்டும் சொல்கிறேன். அந்தக் குழந்தைகள் பிறந்தவேளை சரியில்லை. பதினெட்டு ஆண்டுகள் வரையில் அந்தக் குழந்தைகள் உன்னிடமிருந்து பிரிந்து தான் இருக்க வேண்டும். அதுவரை அந்தக் குழந்தைகளுக்கு அரியணை ஏறும் யோகம் இல்லை. பிறகு எப்படி நடக்கும் என்று இப்போது சொல்ல முடியாது. அது போகட்டும், இப்போது

இன்னும் நான்கு ஆண்டுகள் வரை அந்தக் குழந்தைகளுக்குப் பெரும் ஆபத்து காத்திருக்கிறது. அதனால் தான் இளவரசுப்

* இளவரசருக்குச் சூட்டும் முடி

பட்டத்துக்கு ஏற்ற வேறு ஒருவனாகத் தேடி அழைத்து வா என்கிறேன்" என்றார்.,

கேசவ சுவாமி கூறியது கேட்டு நான் அதிர்ச்சியடைந்தேன். கேசவ சுவாமி சொல்வதை இன்னும் அலட்சியம் செய்வது மிகத் தவறு என்ற முடிவுக்கு வந்துவிட்டேன். என்ன செய்வது என்றே எனக்குப் புரியவில்லை. உன்னை உடனே அழைத்து வர மெய்க்காவலரை அனுப்பினேன். நம்பி! இளவரசுப் பட்டத்துக்கு வாரிசு தேடுவது இருக்கட்டும்; என் இரு கண்மணிகளுக்கும் ஆபத்தான காலம் என்று சுவாமி சொன்னார்ரே, நீதான் குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டும். சோழநாட்டின் பிரதம மந்திரியாக இன்றே பொறுப்பேற்று உடனே குழந்தைகளைக் காப்பாற்ற வழி செய்" என்று கூறி இராஜராஜன் பெருமான் நம்பியின் இருகரங்களையும் பலமாகப் பற்றினார்.

பெருமான் நம்பியும் உணர்ச்சிவசப்பட்டார். "சோழப் பெருநாட்டு மாமன்னரே! கேசவ சுவாமியின் ஆரூடப்படி பற்றி அறியும் முன்பே நான் இரு குழந்தைகளையும் காப்பாற்ற நடவடிக்கை எடுத்துவிட்டேன். யார் யார் சோழ நாட்டின் வாரிசு உரிமைக்காக சதித்திட்டங்கள் தீட்டுகிறார்கள் என்பதை அறிந்த நான் தாங்கள் கட்டளையிடும் முன்பே கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து இரு குழந்தைகளையும் காப்பாற்ற ஏற்பாடு செய்துவிட்டேன். கங்கை கொண்ட சோழபுரத்திலுள்ள இரு குழந்தைகளையும் சில நாள்களில் கொன்று விடத் திட்டமிட்டிருக்கும் செய்தியும் எனக்குக் கிடைத்தது. அதற்குள் குழந்தைகள் காப்பாற்றப்பட்டு விடுவர். இது சத்தியம்" என்றார்.

இராஜராஜன் முகத்தில் புத்தொளி பரவியது. அவர் உடலை விட்டு நோயெல்லாம் பறந்து விட்டது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது.

"நம்பி! யார் யார் சதிதிட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள்? அதில் மலையமானுக்கும் பங்கு உண்டா? வேண்டியவர் வேண்டாதவர் என்று பாராமல் சதியிலீடுபட்டவர்களைச் சிறையில் அடைத்துவிடு. குழந்தைகளுக்கு ஒரு வித ஆபத்தும் ஏற்படாமல் காப்பாற்று" என்று அவர் கூறி நம்பியின் தோள்களைத் தொட்டார்.

அப்போது கங்கை கொண்ட சோழபுரத்தை நோக்கிச் செல்லும் கூண்டு வண்டியில் அல்லி சென்று கொண்டிருந்தாள். புதிய அனுபவத்தால் ஒருவிதப் பரபரப்பும், தன் கணவனின் சதிச் செயலைப் பற்றி ஒருவிதக் கவலையும் எழுந்து கொண்டிருந்தன.

மற்றொருபுறம் இரு குழந்தைகளையும் கவர்ந்து எடுத்துச் செல்வதற்குச் சிலர் கங்கை கொண்ட சோழபுரம் நோக்கி விரைந்து வந்து கொண்டிருந்தனர் என்பதும், அந்த கூட்டத்தில் அல்லியின் கணவனும் இருந்தான் என்பதும் அல்லி அறிய நியாயமில்லை.

## 5. மாளிகைக்கு வழி

இரட்டை மாடுகள் கட்டிய கூட்டு வண்டி மெல்ல மெல்ல அசைந்தாடிப் புறப்பட்டது. மாடுகளின் கழுத்து மணிகள் ஓசையும், கால்களில் கட்டிய சலங்கை ஒலியும் தாளம் தவறாது எழுந்தன. மாலைச் சூரியனின் சாயும் கிரணங்கள் வண்டிக்குள்ளும் பொற்சரடு போல் ஊடுருவிச் சென்றன. வண்டிக்குள்ளிருந்தவர்கள் அனைவரும் பெண்டிர். ஒவ்வொருவர் ஒவ்வோரிடத்துக்குச் சென்று கொண்டிருந்தனர். சிலர் வழியிலேயே இறங்கிவிடுவர். ஒவ்வொருவரும் ஒருவரையொருவர் குலம் விசாரித்துக் கொண்டனர். தனக்குத் தாயாகவும் விளங்கிய தந்தையை விட்டுப் பிரியும் போது சிறிது கண்கலங்கினாள் அல்லி.

"கண்களைத் துடைத்துக் கொள் அல்லி! மிகவும் சந்தோஷத்துடன் ஏற்று நடத்தும் பணி இது. சோழ நாட்டுத் தளபதி, திருச்சிற்றம்பலம் உடையார் பெருமான் நம்பிப் பல்லவரையர். மகளே! மலர்ந்த முகத்துடன் செய்" என்று மல்லியண்ணன் மகளது நெற்றியில் திருநீற்றை இட்டான்.

அல்லி வீழிநீரைத் துடைத்துக் கொண்டாள், "அப்பா! நந்தவனத்தைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள். தொழுவத்தில் நந்தினியும் நாகுவும் பசி தாங்க மாட்டா. வேளைக்கு வைக்கோல் போடுங்கள். அவர் வந்து கேட்டால் என்ன செய்வீர்கள்?" என்று, விடை பெறும்போது தந்தையிடம் கேட்டாள்.

அவன் கணவன் கோவிந்தன் குளித்து வட்டு வருகிறேன். என்று சென்றவன் தான், உச்சி வேளை தாண்டி மஞ்சள் வெயில் சாயத் தொடங்கிய பிறகும் வரவில்லை. பெருமான் நம்பி இட்ட கட்டளையை நிறைவேற்ற முடியாமல் புறப்படும் பொழுது தன் க்ணவன் எங்கே வந்து விடுகிறானோ என்ற கவலையிலிருந்த அல்லிக்கு அந்த நேரம் வரை திரும்பி வராததை மறந்தே விட்டாள்.

"அல்லி! நீ கவலைப்படாதே போ. அவன் வந்து கேட்டால் நான் ஏதாவது சொல்லிக் கொள்கிறேன். பொறுப்பற்ற மருமகன் எனக்கு வந்து வாய்த்து விட்டான். எந்த வேலையும் செய்யாமல் சோம்பேறியாக அவன் இருந்து விட்டால்கூட நான் கவலைப்படமாட்டேன். ஆனால், அரசத் துரோகியாக அவன் இருப்பது தான் எனக்கு ஆத்திரமூட்டுகிறது. இன்று அவன் எங்கே வரப்போகிறான்?" என்றான் மல்லியண்ணன்.

பழையாறையை விட்டு வேறு ஊருக்குப் பயணம் செய்வது அல்லிக்குப் புதிய அனுபவம் தான். முற்றிலும் புதிய மனிதர்களுடன் வண்டியில் செல்வது அவளுக்குச் சிறிது அச்சத்தையும் அளித்தது.

மாலைக் கதிரவன் மிக வேகமாக மறைந்தான். அந்திவானத்து குருதிக்கோடுகள் மறைந்து இருள் எங்கும் சூழ்ந்து கொண்டது. கூட்டையடையும் பறவைகள் இடும் கூச்சல் இருளின் பயங்கரத்தை அதிகப்படுத்தின. விடிய விடிய வண்டி சென்று கொண்டிருந்தது. பொழுது புலரும் முன்பு கொள்ளிடத்தைக் கடந்து வடகரையில் சிறிது தங்கியது.

வண்டியிலுள்ளவர்கள் தூங்கி வழிந்தனர். வண்டியின் ஆட்டத்துக்குகேற்ப அவர்கள் தலை ஆடி அசைந்து வண்டிக் கூண்டுக்குள் மோதின. சில சமயம் தலைகள் இரண்டும் மோதிக் கொண்டன.

கிருஷ்ணபட்சத்து அஷ்டமி சந்திரன் சந்தனக் கிண்ணத்தைக் கவிழ்த்தது போல் வானத்தில் ஒளிவீசிக் கொண்டிருந்தான். நிசப்தமான அந்த வேளையில் அல்லி மட்டும் உறங்காமல் விழித்திருந்தாள். என்ன துணிவுடன் இந்த பொறுப்பை ஏற்றோம் என்று அவள் எண்ணினாள். நம் துணிவு இருக்கட்டும், படைத்தலைவர் நம்மைத் தேர்ந்தெடுத்ததில் அவருக்குத்தான் மிகுந்த துணிவு என்று எண்ணினாள்.

கொள்ளிட மணலில் வண்டிச் சக்கரங்கள் புதைய ஆற்றை வண்டி மெல்லக் கடந்து கொண்டிருக்கும்போது பொழுது புலர்ந்து விட்டது. ஆற்றின் ஓர் ஓரமாகச் சலசலவென்று தண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது. காலை இளங்காற்றும், கால்களில் பரவிய நீரும் சுத்தமாக இருந்தன. கணுக்கால் வரை நனைந்தோடிய நீரில் அல்லி நடந்து சென்றாள். ஒரு கையெடுத்து முகத்தில் தெளித்துக் கொண்டாள்.

ஆற்றங்கரைத் தோப்பைத் தாண்டிய உடனே கங்காபுரி என்று அழைக்கப்படும் கங்கை கொண்ட சோழபுரப்பெரும்

நகரின் வெளிமதில் கம்பீரமாக உயர்ந்து நிற்பது தெரிந்தது. பெரும் மதிலுக்குள் மதிலாக விளங்கும் கோட்டையின் நுழைவாயில்களைக் கடந்து செல்ல வேண்டும் என்று நினைக்கும் போதே அல்லிக்குப் பிரமிப்பாக இருந்தது.

ஆயிரத்தளி மாளிகையையும், இராசராசேச்வரக் கோயிலையும் அதை ஒட்டிய அரண்மனையையும் பார்த்தே வியப்படைந்து திகைக்கும் அல்லிக்குக் கங்கை கொண்ட சோழபுரத்து நுழைவாயிலே பெரும் அதிசயமாகக் காட்சியளித்தது.

மதில்கள் பல கடந்து நகரத்தின் புறப்பாடிகளையும் கடந்து செல்லும் போதே கங்கை கொண்ட சோழீசர் ஆலயத்து விமானம் ஓங்கி உயர்ந்து நிற்பதை அவள் பார்த்து விட்டாள். கங்கை கொண்ட சோழபுரத்து இறைவர் பெருவுடையாரைப் பற்றி அவள் தந்தை சொல்லியிருக்கிறார். முடிந்தால் காலையிலேயே கோயிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்துவிட்டு மாளிகைக்குள் செல்லலாம் என்று முதலில் எண்ணினாள். பிறகு மனத்தை மாற்றிக்கொண்டு நேரே மாளிகைக்குச் செல்வது என்று முடிவு செய்து கொண்டாள்.

கழனிக் குளம் அருகே வண்டியை நிறுத்திவிட்டார்கள். வண்டியிலிருந்து இறங்கியவர்கள் தத்தம் பேட்டைகளுக்குச் செல்லத் தொடங்கினர்.

அவள் சோழ கேரளன் திருமாளிகைக்குச் செல்ல வேண்டும் என்பதையும் அந்த மாளிகை இருக்குமிடத்தையும் தந்தை விவரித்திருந்தார். அங்கே தான் அம்மங்கைதேவியார் வசித்து வந்தார்.

அகலமான வீதிகளையுடைய கங்காபுரி விழித்துக் கொண்டு விட்டது. மக்கள் தத்தம் அலுவல்களாக கவனிக்கப் புறப்பட்டுச் சென்று கொண்டிருந்தனர். பெருவுடையார் திருக்கோயிலின் விமானமிருக்கும் பக்கம் நோக்கி அல்லி சென்று கொண்டிருந்தாள். அவள் சிறு மூட்டை ஒன்றை அணைத்தவாறு இங்குமங்கும் வெறித்து நோக்கும் பார்வையும், மெல்ல தயங்கித் தயங்கி ஊருக்குள் நடப்பதும் ஊருக்கு அவள் புதியவள் என்பதைப் புலப்படுத்தின.

சோழ கேரளன் திருமாளிகை எங்கே இருக்கிறது என்று யாரைக் கேட்டறிவது என்று எண்ணியவாறு மற்றோர் அகலமான வீதியை அவள் அணுகினாள். சாலையைக் கடக்க நினைத்த போது குதிரைகள் சில வேகமாக வருவதைக் கண்டாள். புழுதிப்படலத்தை எழுப்பியவாறு சென்ற குதிரைகளில் ஒன்றில்

அமர்ந்து சென்றவருள் ஒருவன் அவள் கணவனைப் போல் தோற்றமளித்ததைக் கண்டு அவள் திடுக்கிட்டு நின்றாள். குதிரைகள் விரைந்து சென்று மறைந்தன. குதிரைகள் செல்வதற்காக வழிவிட்டு நின்று ஒருவரைப் பார்த்து அல்லி கேட்டாள்: "ஐயா! சோழ கேரளத் திருமாளிகை எங்கே இருக்கிறது?" என்று.

அவர், அல்லியை ஒருமுறை ஏறிட்டுப் பார்த்து, "இந்த ஊருக்கு நீ புதியவளா?" என்று கேட்டார். இல்லை என்பதற்கு அறிகுறியாக அல்லி தலையசைத்தாள்.

"அப்படியென்றால் திருமாளிகை எங்கே இருக்கிறது என்று ஏன் கேட்கிறாய்? திருமாளிகையைத் தெரியாதவர்கள் யாரிருப்பார்கள்? மாளிகை பல ஆண்டுகளாகச் சோபை இழந்திருந்தாலும், அரச குடும்பத்து முக்கியமான மகளிரெல்லாம் அங்கு தானே இருக்கிறார்கள்?" என்று அவள் கேட்காத கேள்விக்கெல்லாம் அவர் மறுமொழி கூறிவிட்டுச் சாலையைக் கடந்து சென்றுவிட்டார். சாலையைக் கடந்து மறுபக்கம் சென்றவருக்கு என்ன தோன்றியதோ, "பெண்ணே! அதோ வருகிறதே சிவிகை அதைத் தொடர்ந்து சென்றால் திருமாளிகையை அடையலாம்" என்று சொல்லிவிட்டுத் திரும்பிப் பாராமல் சென்றுவிட்டார்.

சிவிகை சுமப்பவர்கள் ஒருவித ஒலியை எழுப்பிக் கொண்டு வந்தனர். சிவிகைக்கு முன்பு, குதிரை மீது வீரனொருவன் பாதுகாவலாகச் சென்று கொண்டிருந்தான். குதிரை மெல்லிய கதியில் சென்றதால் அதன் மீது அமர்ந்திருந்த வீரன் குதித்துக் கொண்டு செல்வது போல் தோன்றியது. சிவிகையின் இருபுறங்களிலும் தொங்கிய திரைகளில் புலியின் உருவம் தீட்டப்பட்டிருந்ததால், அரச குடும்பத்தைச் சேர்ந்த முக்கியமானவரொருவர் சென்று கொண்டிருக்கிறார் என்பதை அறிய முடிந்தது. வழிப்போக்கன் கூறியதைப் போல் அல்லி சிவிகையைப் பின் தொடர்ந்தாள்.

சிவிகை சென்று கொண்டேயிருந்தது.

காலை வெயில் மெல்ல மெல்ல மாறிக் கொண்டே வந்தது. "இன்னும் எவ்வளவு தூரம் செல்ல வேண்டியிருக்குமோ?" என்ற கவலை அவளைப் பிடித்துக் கொண்டது.

சிவிகை சென்று கொண்டே இருந்தது. வீதியின் இருபுறமும் மாடங்கள் நிறைந்த மாளிகைகள் இருந்தன. அன்னக்கொடி பறக்கும் சத்திரங்கள் இருந்தன. வேதமொலிக்கும் பாடசாலை இருந்தது. பண்ணிசைக்கும் தேவராப் பள்ளிகள் இருந்தன.

திவ்யப் பிரபந்தங்களை இசையுடன் ஓரிடத்தில் பாடிக் கொண்டிருந்தார்கள். ஓரிடத்தில் 'ஜல், ஜல்' என்ற சதங்கை ஒலி கேட்டது. அந்த வீட்டில் பெண்கள் நிறைந்திருந்தார்கள். மாடத்திலிருந்து சில பெண்கள் எட்டிப் பார்த்தார்கள். சிலர் முதுகுப்புறம் மட்டும் வெளியே தெரிய சுவாரசியமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

வேடிக்கை பார்த்துக் கொண்டே அல்லி மெல்ல நடை போட்டதால் சிவிகையும், குதிரை வீரனும் வெகுதூரம் போய்விட்டார்கள். அல்லி ஓட்டமும், நடையுமாய்ச் சிவிகையைப் பின் தொடர்ந்தாள். ஒரு நாழிகைப் போது அவள் நடந்திருப்பாள். கடைசியில் பெரிய மாளிகை ஒன்றின் முன்புறம் சிவிகையைக் கீழே இறக்கி வைத்தார்கள். மாளிகையைச் சுற்றிப் பெரிய மதில் இருந்தது. பெரிய மரக்கதவுகள் மதில் வாயிலை மூடியிருந்தன. வாயிற்கதவின் திட்டி வாசல் திறந்திருந்தது. சிவிகை வந்ததைக் கண்ட வீரர்கள் பெரிய மரக்கதவுகளைச் சிறிது திறந்தார்கள். சிவிகையினின்று மூதாட்டியார் இறங்கினார். எண்பது பிராயத்துக்கு மேல் ஆகியும் அவர்கள் திடகாத்திரத்துடன் இருந்தார்கள். தும்பை மலரைப்போல் தலைமுடி நரைத்திருந்தது. வெண்ணிறப் பட்டாடை அணிந்திருந்தார்கள். தோளையும், சிகையையும் இழுத்துப் போர்த்தி மூடி மறைந்திருந்தார்கள். நெற்றியில் வெண்ணீறு துலங்கியது. கையில் கம்பளப்பை இருந்தது. வாயிற் காவலர்கள் வணக்கம் தெரிவித்து உள்ளே செல்ல வழி விட்டு மரியாதை செலுத்தினார்கள். சிவிகையைக் கீழே இறக்கி வைத்திருக்கும் சிவிகை சுமப்போர் வணங்கியவாறு நின்றிருந்தனர். பெரிய பிராட்டியாரான மதுராந்தகித் தேவி மெல்ல நடந்து, வழியே உள்ள வாயிற்வழியே நுழைந்ததைப் பார்த்துக் கொண்டிருந்த அல்லி, பிராட்டியை நோக்கி விரைந்து ஓடினாள். என்ன கூறி அவர்களை அழைப்பது என்று புரியாமல் வார்த்தைகள் தொண்டைக் குழியிலேயே நின்று விட்டன.

வாயிற் கதவுகள் மூடப்பட்டன. உள்ளே செல்ல விடாமல் வாயிற் காவலர் அவளைத் தடுத்து விட்டனர். தன் கையிலிருந்த பெருமான் நம்பி கொடுத்த அடையாளச் சின்னத்தைக் காட்டலாமா என்ற ஒரு கணம் அவள் எண்ணினாள். தான் தளபதியால் அனுப்பப்பட்டவள் என்பதைத் தெரிவிக்கலாமா என எண்ணினாள்.

"நான் யார் தெரியுமா? பழையாறையிலிருந்து வருகிறேன். என்னை இந்த நாட்டுத் தளபதி அனுப்பினார்" என்று அல்லி சொல்லி முடிப்பதற்குள் அவள் உடல் வியர்த்தது.

"ஹோ ஹோ" என்று காவலாளிகள் நகைத்தனர். "காலையிலிருந்து எவ்வளவு பேர் இப்படி வருவீர்கள், தளபதி அனுப்பியதாகச் சொல்லிக் கொண்டு?" என்று கூறி மீண்டும் அவர்கள் சிரித்தார்கள். அல்லி ஒன்றும் புரியாமல் விழித்தவாறு நின்றாள். திடீரென்று அவர்கள் சிரிப்பொலி நின்றது.

"உம், இந்த இடத்தில் வழியை மறைத்து நிற்காதே. அப்படி நிழல் பக்கமாக மரத்தடியில் போய் நில்" என்று கடுமையாகக் காவலர்கள் கூறவே அல்லிக்கு அழுகை வரும்போல் ஆகியது. என்ன செய்வது என்று புரியாமல் அவள் மெல்ல நடந்து மரத்தடிக்கு வந்தபோது அவளருகே குதிரை வந்து நிற்பதை உணர்ந்து திடுக்கிட்டாள்.

குதிரையின் மீது அவளுடைய கணவன் அமர்ந்திருந்தான். அவளுக்கு வியப்புத் தாங்கவில்லை. காண்பது கனவா? கங்கை கொண்ட சோழபுரத்திலிருக்கிறோமா அல்லது பழையாறையிலிருக்கிறோமா என்ற சந்தேகம் அவளுக்கு ஒரு கணம் எழுந்தது.

"அல்லி, நீயா? இங்கே எங்கே, ஏன் வந்தாய்? என்று அவன் கேட்டான்.

அல்லியின் உடல் நடுங்கியது. நடுவீதியில் கணவர் என்ன சொல்வாரோ என்ற பயம் அவளைப் பிடித்தது. இருந்தாலும் உறுதியை வரவழைத்துக் கொண்டு "உங்களைத் தேடித் தான் வந்தேன்" என்று ஒரு பெரும் பொய்யைத் தூக்கிப் போட்டாள்.

கோவிந்தன் திடுக்கிட்டான். கங்கை கொண்ட சோழபுரத்துக்கு அவன் மல்லப்ப தேவனுடன் வந்திருப்பதும், மன்னனின் குழந்தைகளைக் கொன்றுவிட முடிவு செய்திருப்பதும் அல்லிக்குத் தெரிந்து விட்டதா? பயம் அவனை ஆட்கொண்டது.

## 6. யார் அந்த வாரிசு?

பழையாறை நகரம், கங்கை கொண்ட சோழபுரத்தை விடக் கலகலப்பு மிகுந்து காணப்பட்டது. காவிரியின் அரவணைப்பால் இயற்கையாகவே வளம் பெற்றிருந்தது அந்நகரம். இராஜராஜ சோழதேவர் இப்போது சில ஆண்டுகளாகப் பழையாறையைத் தம் இருப்பிடமாகக் கொண்டிருந்ததாலும் பல நாட்டவர்கள் வணிகம் கருதி வந்து செல்வதாலும் மேலும் அது சிறப்பு பெற்றிருந்தது.

அந்த நகரத்தில் சோழ நாட்டுக் குறுநில மன்னர்கள் பலரின் வருகையால் ஆரவாரம் மிகுந்து காணப்பட்டது. ஒவ்வொரு சிற்றரசரும் தம்முடன் ஒரு பரிவாரத்தையே கொண்டு வந்திருந்தனர். இரட்டைக் குதிரைகள் பூட்டி ஓடிய ரதங்களும், சூரியன் ஒளியில் தக தகக்கும் ஒளிவீசும் முக படாங்களையுடைய யானைகளும், குதிரைகளும், சிவிகைகளுமாகப் பழையாறை வீதிகள் திருவிழாக் கோலம் பூண்டு திகழ்ந்தன.

பழையாறை நகரின் ஒரு பகுதியான இராஇராச புரத்து மாளிகையில் அனைவருக்கும் விருந்தளிக்கப் பெருமான் நம்பி பல்லவரையர் ஏற்பாடு செய்திருந்தார். அதற்கிடையில் நம்பி ஒவ்வொரு குறுநில மன்னரையும் தனித்தனியே சந்தித்து மனம் விட்டுப் பேசி அவர்கள் கருத்தை அறிந்திருந்தார். அனைவரையும் ஒருசேர விருந்து மண்டபத்தில் சந்திக்கும் திட்டத்தை அறிவித்தவுடன் அனைவரும் மகிழ்ச்சியுடன் வரச் சம்மதித்தனர்.

இராசஇராசபுரத்து மாளிகையின் நடுக்கூடத்தில் ஒளி வீசிய விளக்குகள் இரவை வென்று, பகலாக்கிக் கொண்டிருந்தன. காடவராயரும், சம்புவரையரும், முத்தரையரும் கடம்பராயரும் தத்தம் உடன் கூட்டத்தார்களுடன் வந்து சேர்ந்தனர். பேச்சொலியாலும், சிரிப்பொலியாலும் மண்டபமே அதிர்ந்தது.

குறுநில மன்னர்களைச் சிறிது நேரம் மகிழ்விக்கப் பலவித இசைக் கருவிகளுடன் இசைவாணர்கள் வந்திருந்தனர். யாழும், வீணையும், மத்தளமும், குழலும் இன்னிசை எழுப்ப ஐராவதேச்வரர் கோயிலில் தேவ தொண்டாற்றும் ஆடல் அணங்குகள் ஆடலால் மகிழ்விக்க வந்திருந்தனர். ஆடலழகியரின் நாட்டியச் சிறப்பையும் இசை விருந்தையும் அளித்து, தளபதி எங்கள் கருத்தை எளிதில் மாற்றி விட முடியாது" என்று சம்புவரையர் குரல் கொடுத்தார். அவரது இடி முழக்கம் போன்ற குரலால், மண்டபத்தில் ஏற்பட்டிருந்த களிப்பும், கும்மாளமும் ஒரு கணம் நின்று அமைதி நிலவியது.

"சம்புவரையர் என்னதான் சொல்ல விரும்புகிறார்?" என்று பல்லவராதித்தன் கேட்டான். அங்கு வந்திருப்பவர்களுள் வயதில் சிறியவன். இராஜராஜன் சோழரின் சார்பில் கங்கநாட்டின் அரசப் பிரதிநிதியாக விளங்குபவன்.

"தம்பி! மனத்திலுள்ள அனைத்தையும் சொல்லவே இங்கு கூடியுள்ளோம். நாம் வந்த வேளை அரசர் உடல் நலம்

சரியில்லாதிருக்கிறார். ஆனால், பெருமான் நம்பி நம்மைச் சந்தித்து நமது கருத்தைக் கேட்க இசைந்திருப்பதால் நாம் ஒளிவு மறைவு இன்றி எடுத்துச் சொல்லலாம்" என்றார் காடவராயர். அவரது முன்னோர்கள் திருமுனைப்பாடி நாட்டு நாடுக் காவல் அதிகாரியாகப் பல தலைமுறையினராக இருந்து வருகிறார்கள்.

'மனத்திலிருப்பதைச் சொல்ல வேண்டுமென்றால், ஒவ்வொருவரும் சேழநாட்டு இளவரசர் பதவி தங்களுக்கே வேண்டுமென்று கொண்டிருக்கும் ஆசையைத் தெரிவிக்கும்படி இருக்கும்" என்றான் பல்லவராதித்தன், குறும்புச் சிரிப்புடன்.

"தம்பி, நீ எப்படிக் கூறலாம், எங்களுக்கு இளவரசுப் பட்டம் சூட்டிக் கொள்ள ஆசையென்று? ஒருவேளை உனக்கு அப்படிப்பட்ட எண்ணம் மனத்தின் அடித்தளத்தில் இருக்கலாம். இளம்பிள்ளை. நம் அரசருக்கு மிகுந்த அபிமானம் உன்னிடம் உண்டு. அதனால் இளவரசராகலாம் எனப் பகற்கனவு கண்டிருக்கலாம். எங்களையும் அப்படிச் சொல்லி விட்டாயே?" என்று வங்கார முத்தரையன் சீறினான்.

பல்லவராதித்தன் 'ஹோ ஹோ' வென்று பெரிதாகச் சிரித்தான். அந்தச் சிரிப்பின் பின்னணியில் சீற்றமிருந்தது.

"நான் இளைஞன் தான். எனக்கும் உங்கள் அனைவரையும் போல் ஆசைகள் உண்டு. சோழநாட்டின் இளவரசராக வேண்டும் என்ற பேராசை எனக்கு இல்லை. சோழச் சக்கரவர்த்திக்கு வாரிசு இல்லை என்றால் நாம் ஆசைப்படுவதில் அர்த்தமிருக்கிறது. வாரிசில்லாத அரசர் என்று அவரை நினைத்துவிட்டீர்களா?" என்று அவன் குத்திக் காட்டினான்.

மிக அமைதியாக ஒரு தூணின் ஓரமாக அமர்ந்திருந்த கடம்பராயர், "நம் சக்கரவர்த்திகளுக்குக் குழந்தைகள் பிறந்திருக்கின்றனர் என்ற செய்தியை இப்போதுதான் நான் அறிந்தேன். சக்கரவர்த்திகள் ஏன் இந்த நற்செய்தியை வெளியே சொல்லாமல் மறைத்து விட்டார்? தம் குழந்தைகள் தமக்குப் பின் ஆள வேண்டாம் என்ற அவர் கருதுவதில் ஏதோ ரகசியமிருக்க வேண்டும். அந்தக் குழந்தைகள் அவருடைய வாரிசுகளாக இல்லாமலிருப்பதற்கு வேறு ஏதாவது காரணமிருக்க வேண்டும்" என்று கூறி முடிப்பதற்குள், "என்ன சொன்னீர் காடவராயரே?" என்று ஹூங்காரத்துடன் ஒருவர் சீறி எழும் குரல் கேட்டது.

திருக்கோவலூர் மலையமான் வாளை உருவிக் கொண்டு ஆவேசத்துடன் பேசினார்.

"கடம்பராயரே! என்ன சொல்லி விட்டீர்கள்? தெரிந்து

சொன்னீர்களா? தெரியாமல் தான் சொன்னீர்களா? அறியாமை என்றால் மன்னித்து விடுகிறேன். அறிந்து அகம்பாவ வார்த்தை என்றால், இதோ இந்த வாளுக்கு மறுமொழி கூறும். சோழச் சக்கரவர்த்திகளுக்கும் எனக்கும் பலவித மனத்தாங்கல் உண்டு.

"அதனால் என் மகள் அவனி முழுதுடையாளைக் காண்பதற்கு ஒரு தடவை கூடப் பழையாறைக்குச் செல்லவில்லை. சோழநாட்டுப் பட்டத்தரசியாக என் மகள் தானிருக்க வேண்டும். அந்த விஷயத்தில் எனக்கேற்பட்ட கோபம் தணியவே இல்லை. படைகளைத் திரட்டி மன்னரைப் போருக்கு இழுக்கவும் திட்டமிட்டேன். ஆனால் ஒரு சமயம் வாரிசற்ற அவரை நினைக்கும் போது பரிதாபமாக இருக்கும். அவரது செய்கையை மறந்து மன்னித்து விடத் தோன்றும். உலகெலாம் காக்கும் எங்கள் குலதெய்வம் திருநாராயணப் பெருமாளை நான் பிரார்த்திக்காத நாளில்லை. என் பிரார்த்தனை பலித்தது. என் மகள் கருவுற்றிருக்கிறாள் என்ற செய்தி கிடைத்தது. ஆறு மாதங்களுக்குப் பிறகு தான் அந்த நல்ல செய்தி எட்டியது. என் மீதுள்ள கோபம் என் மருமகரான சோழ சக்கரவர்த்திக்கு தீரவில்லை என்பது, என் மகளைச் சந்திக்கச் சீர்வரிசைகளுடன் நான் வந்தபோது தெரிந்தது. என் மகளை – சோழ அரசியை --- காணவும் அவர் அனுமதிக்கவில்லை. என் மகள் பழையாறையில் இல்லை என்பதும் தெரிந்தது. தாங்க முடியாத கோபத்தை நான் அடக்கிக் கொண்டேன். ஆண் குழந்தையாகப் பிறக்க வேண்டும் என்ற என்று பெருமாளை வேண்டிக் கொண்டேன். என் பிரார்த்தனைக்கு நாராயணன் மீண்டும் செவி சாய்த்தார். ஆண் குழந்தை பிறந்த செய்தியையும் பல திங்கள் கழித்தே எனக்குத் தெரிந்தது. சக்கரவர்த்தி மீதுள்ள கோபம் பறந்தோடி விட்டது. சோழ நாட்டுக்கு வாரிசு பிறந்து விட்டான்; மலையமான் குலக் கொழுந்து ஆண் குழந்தையைப் பெற்றளித்துவிட்டாள் என்று மகிழ்ந்தேன். பொன்னும் மணியும், பட்டாடையும் சீர்வரிசையாக எடுத்துக் கொண்டு கங்கை கொண்ட சோழபுரம் சென்றேன். ஆனால் என் மகளைப் பாாக்க முடியவில்லை. எனதருமைக் குறுநில மன்னர்களே! அந்தச் சோகக் கதையை விவரிக்க விரும்பவில்லை. என் மகள் மற்றோர் ஆண் குழந்தையையும் பெற்றாள். பெற்ற பிறகு இவ்வுலகை விட்டே மறைந்து விட்டாள் என்ற செய்தியும் எனக்குப் பல நாள்கள் கழித்தே கிடைத்தது. பெற்றமகளின் ஈமச்சடங்குக்கு அழைக்காத சோழ அரசன் ஓர் அரசனா? நேரே சந்தித்து என் கோபத்தைப் புலப்படுத்தவே இங்கு வந்தேன். உங்கள்

அனைவரையும் போல் இளவரசுப் பட்டத்துக்குப் போட்டியிட அன்று.– நான் சக்கரவர்த்தியுடன் வாதிடுவது பிறகு இருக்கட்டும், சோழர்குல வாரிசாக இரு குழந்தைகள் பிறந்திருக்கும் போது நீங்கள் எல்லாம் என்ன திட்டமிடுகிறீர்கள்? உங்களுடைய பிள்ளைகளுள் ஒருவனை இளவசரனாக்க அரசரிடம் வற்புறுத்தப் போகிறீர்களா? என்ன நியாயமிது? அநியாயத்தைப் பற்றிப் பேசவா நாம் இங்குக் கூடியுள்ளோம்? அதற்கு ஒரு விருந்து. இசை நாட்டிய நிகழ்ச்சிகள்..," மலையமானின் வார்த்தைகள் தணல் துண்டங்களாக வீழ்ந்து, அங்கு அதுவரை நிலவி வந்த இனிய சூழ்நிலையை மாற்றின.

பயங்கர அமைதி குடிகொண்டது. ஒருவரும் பேசத் துணியவில்லை. அப்போது தான் மண்டபத்துக்குள் நுழைந்த பெருமான் நம்பிப் பல்லவரையர். "வாரிசுக்குப் போட்டியிட யோசனை கூறத் தங்களை எல்லாம் நான் இங்கு அழைக்கவில்லை; எனது மதிப்புக்குரிய சம்புவரையே, கடம்பராயரே! காடவராயரே! சக்கரவர்த்திகளுக்குத் தெரியாத யோசனையையா நாம் தெரிவிக்கப் போகிறோம்? மதிப்புக்குரிய மலையமான் மகள், சோழநாட்டுக்கு வாரிசை அளித்து விட்டுச் சென்றிருப்பது முக்காலும் உண்மை. நாளைக்கே அக்குழந்தைக்கு இளவரசுப் பட்டம் சூட்ட முடியுமா? பிஞ்சுக் குழந்தையின் தலையில் மகுடங் கவிழ்க்க முடியுமா? சொல்லுங்கள்" என்றார்.

சபை மண்டபத்தில் ஒருவரிடமிருந்தும் மறுமொழி வரவில்லை. பெருமான் நம்பியே பேசினார்.

"இரு குழந்தைகளும் பிறந்த வேளை சரியில்லை என்று கேசவசுவாமி சொல்லிவிட்டார். குழந்தைகளுக்கு ஆபத்து ஏதாவது நேரலாம் என்றும் கூறியுள்ளார்" என்று கூறும் போது மௌனமாயிருந்த மண்டபத்தில் குரல்கள் பல பொங்கி எழுந்தன.

"ஆபத்தா, யாரிடமிருந்து? உடனே சொல்லுங்கள், சோழர் குலக் கொடியைச் சிதைக்க முயல்பவர் யார்?" என்று ஒரே சமயத்தில் பலர் முழங்கினர்.

"யார் என்பது இப்போது நான் சொல்ல விரும்பவில்லை. அப்படி ஆபத்து ஏற்படுத்த முயல்பவரை நீங்கள் அடையாளம் கண்டுபிடித்துத் தக்கதண்டனை அளியுங்கள்.." என்றார் நம்பி.

"உறுதியுடன் செய்வோம், சோழர்குல வாரிசு நீடுழி வாழ்க! சோழச் சக்கரவர்த்தி நீடுழி வாழ்க!" என்று பல குரல்கள் எழுந்தன.

"பெரியவர்களே! பொறுப்புள்ளவர்களே! மிகவும் மகிழ்ச்சி! குழந்தைகள் பெரியவர்களாகும் வரை அவர்கள் சார்பில் இளவரசுப் பொறுப்பை ஏற்க யாராவது முன் வரவேண்டாமா? நீங்களே ஒன்று கூடி ஒருவர் பெயரைச் சூட்டுவோம். ஆனால், இளவரசராக வரப்போகிறவர் எந்த நொடியும் குழந்தைகளுக்காக ஏற்றுக் கொண்ட உரிமையை விட்டுக் கொடுக்கச் சித்தமாக இருக்க வேண்டும். எந்தக் கணத்திலும் இளவரசுப் பட்டத்தை துறக்கத் தயாராயிருக்க வேண்டும். யார் வருகிறீர்கள்? சொல்லுங்கள். உடனே சொல்லுங்கள். உங்கள் கருத்தை அரசரிடம் சென்று தெரிவிக்கிறேன்" என்று பெருமான் நம்பி பல்லவரையர் நாற்புறமும் திரும்பிக் குறுநில மன்னர்களைப் பார்த்துக் கேட்டார்.

ஒருவரிடமிருந்தும் மறுமொழி வரவில்லை. "நான் சொல்லட்டுமா? இளவரசுப் பட்டம் ஏற்றுக் கொள்ளத் தகுதியானவர் பெயரை நான் இப்போது சொல்லட்டுமா?" என்று பெருமான் நம்பி கேட்டார்.

"சொல்லுங்கள், சொல்லுங்கள்" என்று குரல் எழுந்தன.

சற்று மௌனமாயிருந்த பெருமான் நம்பி, இளவரசுப் பட்டம் சூட்டத் தகுதியானவரின் பெயரைத் தெரிவித்தார். சிறிது நேரம் மௌனமாயிருந்த குறுநில மன்னர்கள், தங்களுக்குள் மெல்லிய குரலில் பேசத் தொடங்கினர். ஒருவர்க்கொருவர் மெல்லிய குரலில் பேசுவதே பெரும் ஒலியாக வியப்பும் திகைப்பும் நிறைந்த ஒலியாகச் சபை மண்டபத்தில் எதிரொலித்தது.

## 7. நெறியுடையப் பெம்மாள்

**சோ**ழநாட்டின் இளவரசராகப் பட்டம் சூட்டப் பெற இருப்பவனின் பெயரை, பெருமான் நம்பிப் பல்லவரையர் கூறியவுடன், மற்ற குறுநில மன்னர்கள் என்ன நினைத்தனரோ, என்னவோ? திருக்கோவலூர் மலையமான் கரிய பெருமாள் முகத்தில் மகிழ்ச்சியின் ஒளி வீசியது.

சோழ மன்னர் இராஜராஜனுடன் அதுவரை கொண்டிருந்த பிணக்குகள் யாவும் அந்தக் கணமே மறந்து விட்டார், "பல்லவரையரே! தாங்கள் சொல்வது சக்கரவர்த்திகளின் கருத்தா, அல்லது தாங்களே அப்பெயரைச் சொந்தக் கருத்தாகச் சொல்கிறீர்களா?" என்று கேட்டார்.

"இல்லை, இல்லை. என் கருத்தைத் தெரிக்கும் முன்பே, அரசரே அப்பெயரைத் தெரிவித்துவிட்டார். ராஜகுரு கேசவ சுவாமியிடமும் அவர் தெரிவித்து ஆசி பெற்றுவிட்டார்" என்றவுடன் சம்புவரையர் சூள்கொட்டி, "ஏன், அந்தப்பிள்ளையின் ஜாதகத்தையும் பார்த்துச் சொல்லியிருப்பாரே?" என்று ஏளனமாகக் கூறினார்.

"அப்படிச் சொல்லாதீர்கள் சம்புவரையரே! கேசவ சுவாமியின் சக்தி உங்களுக்குத் தெரியாது. அவர் முக்காலமும் உணர்ந்தவர். அவர் கூறுவது பலிக்கும். சோழநாடு அவரைக் குருவாகப் பெற்றிருப்பதே பெரும் பேறு" என்று கூறிவிட்டு, பெருமான் நம்பியைப் பார்த்து, "நான் இப்போதே சக்கரவர்த்திகளைச் சந்திக்க வேண்டும். இளவரசுப் பட்டம் அவர் யாருக்கு வேண்டுமானாலும் சூட்டிவிட்டுப் போகட்டும். என் பெயரன்கள் நிலை என்ன என்பதை நான் அறிந்து கொள்ள வேண்டும். திருக்கோவலூருக்கு அழைத்துச் சென்று வளர்க்கிறேன். அவர்கள் வளர்ந்து ஆளானவுடன் இந்த நாட்டை அவர்களிடம் ஒப்படைப்போம் என்ற உறுதியைப் பெற்றுக் கொண்ட பிறகு தான் நான் திருக்கோவலூர் திரும்பப் போகிறேன்" என்றார். கூறியதுடன் நில்லாமல் மற்ற குறுநில மன்னர்களைப் பார்த்து. "பெரியவர்களே! உடன் பிறந்தவர்களே! நான் புறப்படுகிறேன். எப்போதும் போல் நாம் சோழ நாட்டின் உயர்வுக்கும் வெற்றிக்கும் உழைப்போம். உறுதுணையாய் இருப்போம்" என்று கூறிவிட்டுப் புறப்பட்டார். சபை கலைந்தது.

கரிய பெருமாள் பெரிய நாயகனான நரசிங்க மலாடுடையார் மலையமான் நேருக்கு நேர் பல ஆண்டுகளுக்குப் பிறகு சந்தித்தார்.

தங்கத் தாம்பாளங்களில் ஆபரணங்கள், பட்டாடைகள், முக்கனிகள், நிறைந்திருக்க அவற்றை அரசரின் முன்பு வைத்துவிட்டு வணங்கி நின்ற காட்சி மாமனாரும் மருமகனும் சந்திப்பதுபோல் தோன்றவில்லை. மும்முடிச் சோழ மண்டல அதிபரும், குலோத்துங்க சோழரின் பெயரரும், பாண்டியரும் சேரரும் இரட்டர்களும் கங்கர்களும் மற்றும் குறுநில மன்னர்களும் அடிபணிந்து நிற்கும் சோழ சக்கரர்த்தியை ஒரு குறுநில மன்னர் சந்தித்துத் திறையளித்து வணங்குவது போலிருந்தது.

இராஜராஜன் சிறிது நேரம் எதுவும் பேசவில்லை. அவர் கண்கள் கலங்கியிருந்தன. மஞ்சத்திலிருந்து மெல்ல எழுந்து "மாமா! இதெல்லாம் என்ன - தாங்கள் திறைப்பொருளுடன்

வந்து என்னை வணங்கலாமா? அபசாரம், அபசாரம்" என்று அவர் மலையமானின் கரங்களை அழுத்தமாகப் பிடித்துக் கொண்டார்.

அந்த அழுத்தத்தில் எத்தனை எத்தனையோ அர்த்தங்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன. பேசுவதற்குச் சொற்கள் வந்து நிற்கவில்லை. கைவிரல்கள் ஒன்றோடொன்று பேசின. விழிகள் பேசிக் கொண்டன. துடிக்கும் உதடுகள் பேசிக் கொண்டன. இதயங்கள் இரண்டு இதுவரை சந்தித்துப் பேசாத நாள்களின் சம்பவங்கள் அனைத்தையும் பேசிக் கொண்டன. இருவர் விழிகளினின்றும் கண்ணீர் தாரை தாரையாக வழிந்தோடின.

"மாமா!" என்று மீண்டும் மன்னர் விளித்தார். "திருக்கோவலூரில் தங்கள் இளைய மகள் நலமா? தங்கள் இளைய சகோதரர் நலமா? நாட்டு வளப்பம் விசாரித்து, மெல்ல மெல்ல இதயத்தில் படிந்துள்ள குரோத உணர்ச்சியைத் துடைத்துக் கொள்ள முயன்றார்.

சிறிது நேரம் அங்கே மௌனம் நிலவியது. திடீரெனக் கரியபெருமாள், "சோழர்குல வாரிசுகளாகப் பிறந்துள்ள என் பெயரர்களை நான் பார்க்க வேண்டாமா? அவர்கள் எங்கே? உடனே நான் பார்க்க ஏற்பாடு செய்யுங்கள். குழந்தைகளை விட்டுப் பிரிந்து ஒருகணங்கூட நான் இருக்கமாட்டேன்!" என்று ஆவலுடன் கேட்டார்.

மன்னர் மறுமொழி ஏதும் பேசவில்லை.

"குழந்தைகள் எங்கே இருக்கின்றனர்? கங்கை கொண்ட சோழபுரத்தில் இருப்பதாக அறிந்தேன். புறப்படுங்கள். நாம் இருவரும் போய்ப் பார்த்து விட்டு வருவோம். குழந்தைகளை நான் திருக்கோவலூருக்கு அழைத்துச் செல்கிறேன். குழந்தைகளைப் பார்த்தால் என் இளைய மகள் சந்தோஷப்படுவாள். மலையமான் மகள் பெற்றெடுத்த அரச குமாரர்களைக் கண்டு எங்கள் நாடே ஆனந்தப்படும்" என்றார்.

மன்னர் பேசவில்லை. அருகிலிருந்த பெருமான் நம்பியும் மன்னரின் முகத்தைப் பார்த்துக் கொண்டே இருந்தார். ஏதும் பேசவில்லை.

"ஏன் மௌனமாயிருக்கிறீர்கள்? தவப் புதல்வர்களைக் காண வேண்டும் என்ற ஆசை தங்களுக்கு இல்லையா? அவர்களை நல்ல முறையில் வளர்க்க வேண்டும் என்ற ஆவல் தங்களுக்கு இல்லையா? என்னிடம் ஒப்படையுங்கள். என் மகள் வளர்ப்பாள். அவளுடைய சகோதரியின் குழந்தைகளைத் தன் குழந்தைகள் போல் வளர்ப்பாள்" என்று பரபரப்புடன் கேட்டார்.

பெருமான் நம்பி மெல்லச் சிரித்தார். அப்போதும் அரசர் பேசவில்லை.

"இதில் நகைப்பதற்கு என்ன இருக்கிறது நம்பி?" என்று எரிச்சலுடன் கேட்டார் மலையமான்.

"தங்கள் இளைய மகளுக்கு எப்போது திருமணம் செய்தீர்கள்? எங்களுக்கெல்லாம் சொல்லவில்லையே?" என்று கேட்டார் நம்பி.

மலையமான் திடுக்கிட்டு, "திருமணமா, என் மகளுக்கா? நான் ஏதோ கேட்கிறேன். நீங்கள் ஏதோ சொல்கிறீர்கள். பெருமான் நம்பி! என்னிடம் சிறுபிள்ளை போல் விளையாடுகிறீரா?" என்று கேட்டார் கோபம் மிகுந்து.

"மலையமான் மகளுக்குத் திருமணமாகிக் குழந்தைகள் பிறந்திருந்தால் அல்லவா இந்தக் குழந்தைகளைத் தன் குழந்தைகள் போல் வளர்க்க முடியும்? அதை நினைத்த போது சிரிப்பு வந்தது" என்றார் நம்பி.

நம்பியின் பேச்சியிலுள்ள நகைச்சுவை அப்போதுதான் புரிந்து கொண்ட மலையமான் மீண்டும் பேசத் தொடங்குவதற்குள், நம்பி சற்று அழுத்தமான குரலில், "நரசிங்க மலாடுடையாரே! கங்கை கொண்ட சோழபுரத்தில் குழந்தைகள் இருவரும் வாடி வருவதை அறிநதேன். பாலூட்டி வளர்க்கத் தகுந்த தாதியை ஏற்பாடு செய்து விட்டேன். குழந்தைகளை வளர்க்கும் பிரச்சினை தான் இருக்கட்டும். அதைவிட எந்த நேரத்திலும் குழந்தைகளின் உயிருக்கு ஆபத்து இருக்கிறது. சதிகாரர்களைக் கண்டுபிடித்து அவர்களின் திட்டங்களை முறியடிக்கும் வரை எனக்கு உறக்கமில்லை" என்றார்.

"அதனால்தான் சொல்கிறேன், குழந்தைகளைத் திருகோவலூருக்கு எடுத்துச் சென்று வளர்க்கிறேன் என்று. சிறு துரும்பும் குழந்தைகள் மீது பட விடுவேனா?" என்றார் கரியபெருமாள்.

இப்போது இராஜராஜனே பேசினார். "நரசிங்கமலாடுடையாரே! சோழர் குல விளக்குகளின் மீது தங்களுக்குள்ள அன்பை அறிந்து மகிழ்கிறேன். அவர்களுக்குத் தாங்கள் பாட்டனார். தாங்கள் எப்போது வேண்டுமானாலும் அவர்களைப் பார்க்கலாம். கொஞ்சி மகிழலாம். ஆனால் நான்... நான்... குழந்தைகளைப் பார்க்கவே கூடாது. மலாடுடையாரே. நான் பார்க்கவே கூடாது" என்று கூறி, மன்னர் சிறு குழந்தை போல் விம்மினார்.

பெருமான் நம்பி இப்போது குறுக்கிட்டு, மலையமானிடம் கேசவசுவாமி எச்சரித்துள்ளவற்றை எடுத்துக்கூறி, குழந்தைகளுக்கு

எட்டாண்டுகள் வரை போதாத காலம் என்றும், மிகவும் இரகசியமான இடத்தில் வளர்க்க வேண்டும் என்றும் மன்னரும் குழந்தைகளைச் சந்திக்கக்கூடாது என்றும் தெரிவித்தார்.

மலையமான் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார். அவர் முகத்தில் வேதனை ததும்பி நின்றது. திடீரென்று அவர், "குழந்தைகளுக்குப் போதாத காலம்; மறைந்துவாழ வேண்டும் என்பன போன்றவற்றை நீங்களுமா நம்புகிறீர்கள்? தோள் வலியும், வாள் பலமும் இருக்கும் போது எந்தச் சதிக்காரர்களால் என்ன செய்ய முடியும் என நினைக்கிறீர்கள்?" அரசே! எழுந்திருங்கள். குழந்தைகளைப் பார்க்கப் போகலாம் வாருங்கள். குழந்தைகளுள் மூத்தவனை உடனே இளவரசாக்குங்கள்" என்று உரத்த குரலில் கூறினார்.

பெருமான் நம்பி மிக அமைதியான குரலில், "மலாடுடையாரே! கேசவ சுவாமிகளின் சொற்களை நம்பாதிருக்க முடியாது. தங்களைப் போன்று சுவாமிகளின் பேச்சை நம்பாததால் மன்னர் கண்கூடாகப் பல தொல்லைகளை அனுபவித்து விட்டார் என்பதைக் கண்டு விட்டேன். சோழ நாட்டரசியை, குழந்தைகளின் தாயை, தங்கள் மகளை இழந்ததே கேசவ சுவாமிகளின் பேச்சை அலட்சியப்படுத்தியதால் தான்.." என்றார்.

மலாடுடையார் தலையை அசைத்தார். "கேசவ சுவாமியிடம் எனக்குள்ள நம்பிக்கையும், பக்தியும் மற்ற எவருக்கும் குறைந்ததன்று. எட்டாண்டுகளுக்குப் பிறகாவது பட்டத்துரிமை அவர்களிடம் ஒப்படைக்கப்படும் என்பதற்கு உறுதி என்ன?" – சற்று கோபமாகவே கேட்டார்.

"நான் உறுதி கூறுகிறேன். இந்த வாளின் சாட்சியாக உறுதி கூறுகிறேன். அதனால் தான் படைத்தலைவர் பொறுப்போடு, முதல் அமைச்சர் பொறுப்பையும் ஏற்றிருக்கிறேன். என்னை நம்பலாம். நான் சொன்ன சொல் தவறினால், சோழநாட்டில் எல்லாச் சிற்றரசர்களும் சேர்ந்து முச்சந்தியில் நிறுத்தி எனக்கு தண்டனையளிக்கலாம்.." என்று உருக்கமாகப் பேசினார் பெருமான் நம்பி. மலாடுடையார் மௌனம் சாதித்தவாறு அமர்ந்திருந்தார். பிறகு ஒரு முடிவுக்கு வந்தவரைப் போல, மன்னரை நோக்கி, "தங்கள் இளவரசுப் பட்டத்துக்குத் தேர்ந்தெடுத்திருப்பவரை நான் சந்திக்க வேண்டும். அதற்காவது வழி செய்வீர்களா?" என்று கேட்டார்.

இராஜராஜன் முகத்தில் ஒளி பிறந்தது. "மலாடுடையாரே! இளவரசுப் பட்டத்துக்கு நான் தேர்ந்தெடுப்பவன் வேறு

அந்நியன் அல்லன். எனது சொந்த உடன் பிறந்தாள் அறம்வளர்ச் செல்வியின் மகன் தான்..." என்று கூறும் போது மலாடுடையார், உற்சாகம் நிறைந்த குரலில், "யார் நெறியுடையப் பெருமாளின் மகனா? வளர்ந்த மகன் அவளுக்கு இருக்கிறானா?" என்று நம் வியப்பைத் தெரிவித்தார்.

இராஜராஜ சோழதேவரின் அருமைச் சகோதரி நெறியுடையப் பெம்மாள் எனும் அறம் வளர்ச் செல்வி. தன் சகோதரியின் மீது மன்னருக்கு மிகுந்த அன்புண்டு. அழகும், தெய்வபக்தியும் இணையப் பெற்ற அவளைச் சேர நாட்டுப் படைத்தலைவனுக்கு மணம் செய்து கொடுத்தார். சிறிது காலம் அவர்கள் இன்பமாக வாழ்ந்தனர். வல்லபன் எனும் ஆண் குழந்தை அவர்களுக்குப் பிறந்த பிறகு, அவள் கணவன் சென்ற இடம் தெரியவில்லை. அரச குடும்பத்தில் பிறந்தவள் தெய்வபக்தி நிறைந்தவளாக இருந்ததால், வாழ்க்கைச் சோதனைகளை இறைவன் திருவிளையாடல் என்று எண்ணி மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு தன் மகன் வல்லபனை அறிவுடையவனாகவும், ஆற்றலுடையவனாகவும் வளர்ப்பதில் கவனம் செலுத்தினாள். வேங்கியில் உள்ள சிறிய பாட்டனாரிடம் சில காலமும், கங்கை கொண்ட சோழபுரத்தில் சில காலமுமாக வல்லபன் வளர்ந்து வந்தான்.

"நெறியுடைய பெம்மாள் எங்கே இருக்கிறாள்? நான் பல ஆண்டுகளுக்கு முன்பு பார்த்தது. சேரநாட்டுக்குத் திருமணமாகிச் சென்ற பிறகு நான் அவளைப் பார்க்கவில்லை" என்றார் மலாடுடையார்.

"நாமிருவருமே கங்கை கொண்ட சோழபுரம் செல்வோம். நெறியுடையப் பெம்மாளைச் சந்திப்போம்" என்று கூறினார் நம்பி.

"உடனே புறப்படுங்கள். இளவரசுப் பட்டம் கட்டுவதற்கு ஏற்ற நாளைக் கேசவ சுவாமி கணித்துக் கொடுத்திருக்கிறார். என் சகோதரியைச் சந்தியுங்கள். பழையாறைக்கு வருமாறு வல்லபனுக்குச் செய்தி அனுப்பச் சொல்லுங்கள். அவளையும் உடனே இங்கு வரச் சொல்லுங்கள்" என்று இராஜராஜன் கூறினார்.

கங்கை கொண்ட சோழபுரத்து சோழ கங்கப் பேரேரிக்கருகே. தோப்பின் நடுவே பர்ணசாலைப் போன்று அமைந்திருந்த குடிலில் இராஜராஜனின் சகோதரி அறம்வளர் செல்வி, சிவபூஜை செய்வதிலும், பசுக்களைப் பராமரிப்பதிலும் தன் வாழ்நாளைக் கழித்துக் கொண்டிருந்தாள்.

அந்தக் குடிலின் வாயிலில் இரண்டு வெண் புரவிகள் வந்து நின்றன. அதன் மீது கம்பீரமாக அமர்ந்திருந்த பெருமான் நம்பிப் பல்லவரையரும், கரிய பெருமாள் நரசிங்க மலாடுடையாரும் இறங்கிக் குடிலுக்குள் நுழைந்தனர்.

குடிலின் ஒருபுறத்தே நடராசர் படிமம மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மலரின் மணத்துடன் தூப மணமும் கலந்து அந்த இடம் திருக்கோயிலொன்றின் கருவறைய நினைவுபடுத்தின. நடசராசர் படிமத்தின் முன் நெறியுடை பெம்மாள் அறச்செல்வி அமர்ந்து தன்னை மறந்து தியானித்துக் கொண்டிருந்தாள். அவள் உதடுகள் மெல்ல முணுமுணுத்தன.

"உலகமெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவனே. நிலவு உலா விடும் நீர்மலி வேணியனே, அலகில் சோதியனே, அம்பலத்தாடும் எம் பிரானே, உன் மலர் சிலம்படியல்லாது மற்று வேறொன்றும் நான் நினைப்பதில்லை. என்றும் உன்னை மறவாதிருக்கும என் வாழ்வில் பல சோதனைகளை உண்டாக்கினாய். எனக்கு ஏற்பட்டுள்ள சோதனைகளையெல்லாம் உன்னடியை நினைத்தவாறு தாங்கிக் கொள்வேன். ஆனால், என் மகன், அறிவிலும ஆற்றலிலும் சிறந்து உயர்பதவியை அடைந்து வாழ வேண்டும் என்று நான் பல காலமாக வேண்டுவதை மட்டும் நிறைவேற்றாது இருந்து விடாதே. என் மகனுக்காவே நான் உயிர் வாழ்கிறேன். அவனுக்கு வலிமையைக் கொடு. உயர்மதியைக் கொடு; உயர்ந்த வாழ்வைக் கொடு" என்று மனமுருக வேண்டி, நைவேத்தியம் செய்து கற்பூரம் காட்டி நிமிர்ந்த அவள் நம்பியையும் மலாடுடையாரையும் கண்டு திகைத்தாள்.

கற்பூரத் தட்டை அவர்களிடமும் நீட்டினாள் செல்வி. வந்திருப்பவர்கள் இன்னார் என்று அவள் அறிந்து கொள்ள முடியவில்லை.

"நல்ல தருணத்தில் தான் வந்திருக்கிறோம். தாங்கள் வேண்டிக் கொண்டவற்றை நிறைவேற்ற அம்பலவாணனே அனுப்பியது போல் வந்திருக்கிறோம்" என்றார் நம்பி.

நெறியுடைய பெம்மாள் இப்போது அவர்களை அடையாளம் கண்டு கொண்டுவிட்டாள். அவளிடம் பரபரப்பு அதிகமாகியது. "வாருங்கள், வாருங்கள்" என்று கூற முயன்றபோது அவளுக்குச் சொற்கள் வரவில்லை.

அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஒருவரும் இதுவரை எட்டிப் பார்க்காத அந்தக் குடிலுக்கு முதலமைச்சர், பெருமான் நம்பி முதல் அமைச்சரான செய்தியை அம்மையார் அறியமாட்டார்

மலையமானுடன் வந்திருக்கிறார் என்றால் அதில் ஏதோ விசேஷமிருக்கிறது என்று அவள் எண்ணினாள்.

"இந்தக் குடில் பல ஆண்டுகளுக்குப் பிறகு பாக்கியம் செய்திருக்கிறது. இந்தக் குடிசையிலிருந்து ஆடவல்லானை விடாது வேண்டிக் கொண்ட தங்கள் பிரார்த்தனை பலிக்கும் காலம் எதிரே நிற்கிறது" என்று நம்பி கூறினார்.

"என்ன சொல்கிறீர்கள்?" என்று திகைப்புடன் கேட்டாள் செல்வி. அவர்கள் ஏதோ நல்ல செய்தியைக் கூற வந்திருக்கிறார்கள் என்று அவளது உள்ளுணர்வு உணர்த்தியது. என்ன செய்தியாக இருக்கக்கூடும்?

'மன்னருக்கு என் நினைவு இப்போதுதான் வந்திருக்கலாம். என்னைப் பழையாறைக்கு அழைக்கலாம். மாளிகையில் வாழுமாறு வற்புறுத்தலாம். அல்லது, பதினாறு ஆண்டுகளுக்கு முன்பு என்னைப் பிரிந்து சென்ற கணவரைப் பற்றிய செய்தி ஏதாவது கிடைத்து அதைத் தெரிவிக்கப் பெருமான் நம்பி வந்திருக்கலாம்' என்று எண்ணினாள்.

"தேவி! தங்கள் பிரார்த்தனை பலிக்கும் காலம் வந்து விட்டது" என்று திரும்பவும் ஒருமுறை அழுத்தமான குரலில் கூறினார் நம்பி.

சொல்ல வந்ததை உடனே சொல்லாமல் தாமதப்படுத்துகிறாரே என்ற பரபரப்பு மிக, "பெருமான் நம்பி அவர்களே, நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள் என்பதை என்னால் ஊகித்துக் கொள்ள முடியவில்லை. நானே மனத்தில் கற்பனை செய்து வந்த காலம் போய்விட்டது. எல்லாம் அவன் செயல் என்று அவனிடம் ஒப்படைத்து விட்டேன். என் மகன் வல்லபன் கங்காபுரியும், வேங்கியுமாக அலைந்து கொண்டிருக்கிறான். வேங்கியில் அவனுக்கு நியாயமாகச் சேரவேண்டிய அரசுரிமைக்காக இப்போது பாடுபடுகிறான். அவனுடைய இலட்சியம் ஈடேற வேண்டும் என்பதே என்னுடைய பிரார்த்தனை" என்றாள் செல்வி.

மலாடுடையார் தொண்டையைக் கனைத்துக் கொண்டார். "தங்கள் பிரார்த்தனை பலித்துவிட்டது என்று நம்பி இப்போது கூறியதைக் கேட்கவில்லையா? தங்கள் மகன் எதிர்பாராமலேயே அரச பதவி அவனைத் தேடி வந்திருக்கிறது" என்றார்.

செல்வி இருவரையும் மாறி மாறிப் பார்த்தாள். அவளது விழிகள், "நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்காமல் கேட்டன.

"தேவி! நாங்கள் இருவரும் சக்கரவர்த்தி அனுப்பி இங்கு வந்திருக்கிறோம். தங்களை உடனே பழையாறைக்கு சக்கரவர்த்தி அழைத்து வரச் சொன்னார்" என்றார் நம்பி. இன்னும் அவர் விஷயத்தை முழுமையாகச் சொல்லவில்லை.

"நான் நினைத்தேன்; என் சகோதரருக்கு என் நினைவு வந்துவிட்டது. பாவம் அவர் தான் என்ன செய்வார்? அன்புக்குரிய அவனி முழுதுடையாளைப் பறிகொடுத்த துக்கம் இன்னும் மாறியிருக்காது. சொந்தச் சகோதரனின் துக்கத்தைப் பகிர்ந்து கொள்ளப் பழையாறைக்குச் சென்றேன். என்னை அங்கே யார் இலட்சியம் செய்கிறார்கள்? துயரம் நெஞ்சையடைக்கத் திரும்பி வந்து விட்டேன். இப்போது அரசர் எதற்காக என்னை அழைக்கிறார்? பெருமான் நம்பி அவர்களே! என் அமைதியைக் கெடுக்காதீர்கள்..." என்று தழுதழுத்த குரலில் கூறினாள்.

"நடக்கக் கூடாதது நடந்துவிட்டது. பெற்ற மகளின் முகத்தைக் கூடப் பார்க்காத மலாடுடையாருக்கு நேர்ந்த துயரத்தை விட மற்ற ஒருவருக்கு நேரப்போமா? தன் பெயரர்களைப் பார்க்க முடியாமல் தவித்து நிற்கிறாரே. அதைவிட வேதனை தரும் நிகழ்ச்சி வேறு வேண்டும்?" – நம்பி கேட்டார்.

செல்வி விழிகளை மெல்லத் துடைத்துக் கொண்டாள். "சோழர் குலம் தழைக்க வாரிசை அளித்துச் சென்றாள், மகராசி மலையமான் மகள். ஒன்றுக்கு இரண்டு குழந்தைகள்! ஒருவேளை குழந்தைகளை வளர்க்கத்தான் என்னை மன்னர் அழைக்கிறாரோ?" என்று கேட்டாள்.

"தேவி! அதற்கும் மேல் – சோழநாட்டை வளர்க்கத் தங்களை மன்னர் அழைக்கிறார்" என்றார் நம்பி.

செல்வியிடமிருந்து மெல்லிய நகைப்பொலி பிறந்தது.

"நான் சோழ நாட்டை வளர்ப்பதா? என் அருமைச் சகோதரரை விடப் பொன்னி பாயும் வளநாட்டைக் கட்டிக்காக்க வேறு ஒருவரால் முடியுமா? திருச்சிற்றம்பலமுடையார் பெருமான் நம்பி பல்லவரையர் என்ற மகத்தான மனிதர் சோழ நாட்டின் தூணாக இருந்து காத்து நிற்கும் போது நான் – ஒரு பெண் என்ன செய்ய முடியும்? சோழநாட்டின் குறுநில மன்னர்கள், மலாடுடையாரைப் போன்றவர்கள் இருக்கும் போது, என்னையும் ஒரு பொருட்டாக நினைத்து மன்னர் அழைக்கிறார்?" என்று செல்வி கேட்டாள்.

"ஆமாம், தேவி! மன்னருக்கு உடல்நலக் குறைவு அவ்வப்போது ஏற்படுகிறது. சமீபத்தில் மயக்கமடைந்து வீழ்ந்து, பலநாள்கள் படுத்த படுக்கையாய்க் கிடந்தார்..." என்று பெருமான்

நம்பி கூறவும், செல்வி திடுக்கிட்டு, "ஆ?" என்று பயத்தால் கூவினாள்.

"மன்னரை மனவேதனை – உடல் வேதனை இரண்டும் வாட்டுகின்றன. தக்கவருக்கு இளவரசுப் பட்டம் சூட்ட வேண்டிய காலம் வந்துவிட்டது..." என்று நம்பி கூறிவரும் போது, "பிறந்த குழந்தைகளுக்கு எப்படி இளவரசுப் பட்டம் சூட்டுவது?" என்று செல்வி சந்தேகத்தை எழுப்பினாள்.

"ஆமாம், குழந்தைகளுள் ஒருவருக்கு இளவரசுப் பட்டம் சூட்டுவது இயலாத காரியம்."

"சக்கரவர்த்தி வேறு யாருக்குப் பட்டம் சூட்டப் போகிறார்" என்று செல்வி ஆவலுடன் கேட்டாள்.

"அதற்காகத் தான் நாங்கள் வந்திருக்கிறோம், தங்கள் உதவியை நாடி. சோழநாட்டின் வருங்காலம் தங்களிடமிருக்கிறது. மன்னர் தங்களை அழைத்து வரச் சொன்னது அதற்காகத்தான்" என்றார்.

செல்வி ஒரு கணம் மௌனமாயிருந்தாள். அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"தங்களுடைய திருக்குமாரன் வல்லபனுக்குச் சோழநாட்டு இளவரசுப் பட்டத்தைச் சூட்ட விரும்புகிறார் மன்னர். தங்கள் சம்மதத்தைக் கேட்கவும், தங்களிடம் உறுதிமொழி ஒன்றைப் பெறவுமே தங்களைச் சந்திக்க மன்னர் விரும்புகிறார்" என்று நம்பி கூறினார்.

நெறியுடைப் பெம்மாள் எங்கோ வானவீதியில் பறப்பதைப் போல உணர்ந்தாள். சோழநாட்டின் இளவரசுப் பட்டமா? என் மகனுக்காக? நான் கேட்பது உண்மை தானா? தன்னெதிரே பெருமான் நம்பி நிற்பதும், மலாடுடையார் நிற்பதும் உண்மை தானா?

விழிகளை ஒருமுறை கசக்கிக் கொண்டாள். திருச்சிற்றம் பலமுடையார் பெருமான் நம்பி பல்லவரையரும், மலாடுடையாரும் அங்கே நிற்பது உண்மை. அவர்கள் சொல்வது உண்மை.

'கீழைச் சாளுக்கிய நாட்டின் அரசனாவதற்கு என் மகன் முயல்வது சரியா; சோழ நாட்டின் இளவரசனாக, அமர்வது சரியா?' – செல்வி சிந்தித்தாள்.

"தேவி! நாம் இங்கே அதிகம் பேசிக் கொண்டிருக்க நேரமில்லை. [illegible] இன்னும் சிறிது நேரத்தில் இங்கு வரும். தாங்கள் [illegible]. அங்கே சென்றவுடன்

இளவரசனின் தாய் என்ற மதிப்புடன் வரவேற்கப்படுவீர்கள். ஆனால், தாங்கள் உறுதியாக ஒரு முடிவுடன் செல்ல வேண்டும். மன்னருக்குத் தாங்கள் ஓர் உறுதிமொழி அளிக்க வேண்டும். அதிலிருந்து என்றும் மாறக்கூடாது என்பதற்குத் தங்கள் மகன் சார்பில் உறுதி தரவேண்டும்" என்றார் நம்பி.

"ஆம்; தங்கள் உறுதிமொழியை நான் உன்னிப்பாகக் கவனித்து கொண்டிருப்பேன். அதிலிருந்து தாங்கள் சிறிதும் மாறக்கூடாது" என்றார் மலாடுடையார்.

"நான் என்ன செய்யவேண்டும்? என்ன உறுதிமொழி கொடுக்க வேண்டும்? நான் கொடுக்கும் உறுதிமொழியை என் மகன் ஒப்புக் கொள்வான் என்பது என்ன நிச்சயம்? பெயருக்கு ஏற்ப அவன் எதிரிலிப் பெருமாள்; கட்டுப்படாதவன். இருந்தாலும் சொல்லுங்கள். நான் என்ன உறுதியோடு மன்னரிடம் செல்லவேண்டும்?" என்று கவலை தோய்ந்த குரலில் கேட்டாள்.

"தங்கள் மகன் எதிரிலிப் பெருமாள், தான் ஏற்கப் போகும் பதவியை எந்தக் கணமும் விட்டு விடத் தயாராயிருக்க வேண்டும். அப்படித் தங்கள் மகன் ஒப்புக் கொள்வானா? தாங்கள் சம்மதிப்பீர்களா? ஒரு முடிவுடன் தாங்கள் மன்னரைச் சந்திக்கச் செல்லுங்கள்" என்றார் நம்பி.

நெறியுடைப் பெம்மாள் என்று அழைக்கப்படும் அறம்வளர் செல்வி இதைக் கேட்டுத் திடுக்கிட்டாள். இப்படி ஒரு கட்டுப்பாட்டுடன் தன் மகனுக்கு இளவரசுப் பட்டம் தேவையா? என்ற கேள்வி செல்வியின் உள்ளத்தில் எழுந்தது.

## 8. கண்டறியாதவன் கண்டாள்!

"உங்களைத் தேடிவந்தேன்" என்று பெரும் பொய்யைக் கூறியது கேட்டு அல்லியின் கணவன் கோவிந்தன் திடுக்கிட்டான். தான் எதற்கு வந்து மாளிகை வாயிலில் நின்று கொண்டிருக்கிறோம் என்பதை அறிந்தால் கணவன் கோபங் கொள்வானே என்ற அச்சமும் அல்லியின் மனத்தில் எழாமலில்லை. கோவிந்தனும் அல்லியும் என்ன சமாதானம் சொல்வது என்று ஒருவருக்கொருவர் யோசித்துக் கொண்டிருந்தனர்.

கோவிந்தனே முதலில் பேச்சை ஆரம்பித்தான். "அல்லி! என்னைத் தேடிக் கொண்டு இவ்வளவு தூரம் எப்படி வந்தாய்?

வழி தெரிந்ததா?" என்று குரலில் ஆசை தவழக் கேட்டான். "ஏன் வந்தாய்?" என்று கேட்கவில்லை.

அல்லிக்குக் கோபம் வந்தது. "நீங்கள் இங்கு எப்படி வந்தீர்கள்?" என்று கேட்டாள். என்ன சொல்வது என்று ஒரு கணம் திகைத்தான் கோவிந்தன்.

. "குளிப்பதற்காக ஆற்றங்கரைக்கு சென்றேனா? அங்கு என்னைத் தேடி மல்லப்பதேவனின் அந்தரங்க ஆட்கள் வந்து விட்டனர். உடனே வருமாறு என்னை வற்புறுத்தினர். மாற்றுடை கூட எடுத்துக் கொள்ளவில்லை. உன்னிடம் கூடச் சொல்லிக் கொள்ளாமல் புறப்பட்டுவிட்டேன்" என்று மெல்லச் சிரித்தவாறு கூறினான். பிறகு, "நான் இங்கு வந்திருப்பேனென்று உனக்கு எப்படித் தெரியும்?" என்று இவன் கேட்ட போது அசட்டுத்தனம் அதில் ஒளி வீசியது.

"எனக்குத் தெரியாதா? உங்கள் நடவடிக்கைகள் எனக்குப் புரிந்து விட்டன. உங்கள் துரோகச் செயலுக்கு எல்லையே கிடையாதா?" என்று அல்லி சீறினாள்.

"என்ன துரோகம் செய்துவிட்டேன்?" – என்று அவளை எரித்து விடுபவன் போல் பார்த்து அவன் கேட்டான்.

"இதோ இங்கே வந்திருக்கிறீர்களே இதுவும் துரோகச் செயல் தான்" என்றாள் அல்லி.

"இது எப்படித் துரோகம் ஆகும? என் கடமையைச் செய்யத்தான் வந்திருக்கிறேன்."

"எது கடமை?"

"என் கடமை எது, என்ன என்று நீ கேட்பது சரியில்லை. ராஜாங்கத்தில் வேலை செய்பவன், மேலதிகாரிகளின் உத்தரவுப்படி நடப்பது கடமை."

"உங்கள் மேலதிகாரி படைத்தலைவர். அவர் சொல்படி நடக்கிறீர்களா? உரிமை அற்ற ஒருவர் அரசருக்குத் துரோகம் செய்யப் பார்க்கிறாரே, அவர் சொல்படித் தானே நடக்கிறீர்கள்?" – அல்லியின் சொற்கள் அழுத்தம் திருத்தமாகப் பாய்ந்தன.

அல்லியின் பேச்சு அவனுக்குத் திகைப்பை அளித்தது. இவ்வளவு திறமையுடன் பேச அல்லி எப்போது கற்றுக் கொண்டாள்? அவள் தன்னைத் தேடி வரவில்லை என்பதை அவனுடைய உள்ளுணர்வு கூறியது.

"குடிலை விட்டு வேறு எங்கும் சென்றறியாத நீ இங்கு எப்படி வந்தாய்?" என்று கோவிந்தன் கேட்டான்.

"மாட்டு வண்டியில் மிக்க வசதியுடன் வந்தேன்" என்றாள் அல்லி.

"வந்தாய். என்னை எங்கே தேட நினைத்தாய்?"

"நகரம் முழுமையும், துரோகிக் கூட்டம் எங்கிருக்கிறதோ அங்கெல்லாம்."

"அப்படியென்றால் மாளிகையின் வாசலில் ஏன் நிற்கிறாய்?"

"மாளிகையில் நீங்கள் இருப்பீர்கள் என்று நினைத்தேன்" அல்லி இவ்வாறு கூறியவுடன், கோவிந்தன் திடுக்கிட்டான். எனினும் வெளிக்குப் புலப்படுத்திக் கொள்ளாமல், "சரி, அப்படியென்றால் மாளிகையின் வெளியே ஏன் நிற்கிறாய்?" என்று கேட்டான்.

அல்லிக்கு எரிச்சல் வந்தது. "நீங்கள் உள்ளே இருப்பீர்கள் என்று நான் நினைக்கவில்லை. ஆனால் அந்தக் குழந்தைகள் இருவரும் உள்ளே இருக்கின்றனர். நான் அவர்களைப் பார்த்தாக வேண்டும். பொழுது விடிந்து இவ்வளவு நேரமாகி விட்டது. குழந்தைகள் துடித்துக் கொண்டிருப்பார்கள் என்பதை நினைத்தால் என் உடல் துடிக்கிறது" என்றாள் அல்லி.

கோவிந்தன் புரிந்து கொண்டு விட்டான். குழந்தைகளைப் பறிக்க அவன் வந்திருக்கிறான். வளர்க்க அவள் வந்திருக்கிறாள்! அல்லிக்கு யாரோ சதித்திட்டம் முழுமையையும் சொல்லியிருக்கிறார்கள். அவளிடமிருந்து மெல்ல உண்மையை அறிவதற்காகச் சிரிப்பை உதடுகளில் பிறக்க வைத்து, "குழந்தையைத் தேடி இங்கு வருவானேன்? குழந்தை வேண்டுமென்றால் நமது குடிலுக்கே வராதா?" என்று சம்பந்தமில்லாமல் பேசினான்.

அல்லிக்கு ஆத்திரம் அதிகமாகியது.

"குழந்தை குடிலுக்கு வருமாம்! இருந்த குழந்தையைத் தான் பறிகொடுத்துவிட்டு நிற்கிறேனே! குழந்தை இறந்த துக்கத்தை மாற்றுவதற்கு என் அருகில் இல்லாமல் வீட்டுக்கும், நாட்டிற்கும் துரோகம் செய்யத் துணிந்து விட்டீர்களே! நீங்கள் செய்திருக்கும், செய்யப் போகும் பாபச் செயலுக்குப் பரிகாரம் தேட வந்திருக்கிறேன்" என்று அல்லி அழுத்தம் திருத்தமாகப் பேசினாள்.

"ஓ! நான் செய்வது பாபச் செயல். நீ செய்வது? கணவனுக்கு விரோதமாகச் செயல்பட வந்து விட்டாயே, அது பாபமல்லவா?" என்று கோவிந்தன் கேட்டான்.

"நாட்டுக்கு விரோதமாகச் செயல் புரியும் கணவனைத் திருத்துவது நியாயமானதே. ஆனால், நான் சொல்லி நீங்கள் திருந்தப் போவதில்லை என்றாலும் உங்கள் செயலைத்

தடுத்து நிறுத்த முடியுமா என்று பார்க்கவே இங்கு வந்தேன்" என்றாள்.

கோவிந்தன் திகைத்தான். தன் மனைவியின் துணிகரமான பேச்சைக் கேட்டுத் திகைத்தான். அவன் எதிர்பார்த்தது போல் தன் திட்டங்களை முறியடிக்க யாரோ இவளை ஏவியிருக்கிறார்கள் என்று முடிவு செய்து கொண்டான். அதிக நேரம் அங்கே நின்று விவரித்துக் கொண்டிருக்க அவனால் இயலவில்லை. மல்லப்ப தேவன் காத்திருப்பான். அன்று பகல் பொழுதுக்குள் மிக முக்கியமான முடிவை எடுத்தாக வேண்டும். சோழ கேரளன் மாளிகையைச் சூழ்ந்து கொண்டு திடீரெனத் தாக்கத் திட்டம் வகுக்க வேண்டும். யார் யார் எங்கெங்கு நிற்பது என முடிவு செய்துகொள்ள வேண்டும். மாளிகைக்குள் ஊடுருவிச் சென்று மறைந்து நிற்பவர்கள் யார், அந்தப்புரத்தில் குழந்தைகள் இருக்கும் மேல் மாடப் பகுதியில் இருந்து பார்த்து குழந்தைகளைக் கவர்ந்து செல்பவர் யார் என்ற முடிவை மிகத் துல்லியமாக முடிவு செய்ய வேண்டும்.

அவன் திட்டத்தை நிறைவேற்ற வந்திருக்கிறான். அவள் மனைவி அதை முறியடிக்க வந்திருப்பாளோ?

அப்போதே, மிகக் கண்டிப்புடன் பேசி, அல்லியைத் திரும்பி ஊருக்குப் போகுமாறு செய்து விடலாம். ஆனால், கோவிந்தன் ஒரு கணம் சிந்தித்தான். அல்லியை விட்டுப் பிடிக்க வேண்டும். அல்லியை வைத்துக் கொண்டே சதித்திட்டத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம். இந்த யோசனையைச் சொன்னால் மல்லப்பதேவன் பாராட்டுவார் என்று முடிவு செய்து கொண்ட கோவிந்தன், அந்த இடத்திலிருந்து புறப்படுவது எப்படி என்று யோசித்துக் கொண்டிருந்த போது நான்கு குதிரைகள் வேகமாக வருவது அவனுக்குத் தெரிந்தது. அவர்கள் கோவிந்தனுடைய கூட்டாளிகள். அவன் அங்கு நிற்பதைக் கண்டால் கோபப் படுவார்கள்.

கோவிந்தன் விரைந்து குதிரை மீது ஏறி, அல்லியின் செவிகளில் மட்டும் விழுமாறு, "அல்லி! உன்னைப் பிறகு சந்திக்கிறேன். என் செயலில் குறுக்கிட்டு வெற்றியடைந்து விடலாம் என்று ஒரு காலும் நினைக்காதே. நீ இனி செய்யப்போகும் ஒவ்வொரு செயலும் எனக்கு உதவியாகத் தான் இருக்கப் போகிறது. அதுதான் உத்தமமான மனைவிக்கு இலட்சணம்" என்று கூறிக் குதிரையைத் தட்டி விட்டு விரைந்தான்.

அவன் போகும் திக்கையே பார்த்தவாறு நின்று கொண்டிருந்த அல்லி, எவ்வளவு நேரம் மரத்தடியிலேயே நின்று கொண்டிருப்பது என்று கவலை கொண்டாள். அடையாள மோதிரத்தைக் காட்டி மாளிகைக்குள் நுழைந்து விடுவோமா என எண்ணினாள்.

மிக விரைவில் மாளிகைக்குள் செல்ல வேண்டும். அம்மங்கை தேவியைச் சந்தித்துக் குழந்தைகளின் பராமரிப்பை ஏற்க வேண்டும். இந்நேரம் அந்தப் பச்சிளங்குழந்தைகள் பாலின்றி வாடி அழுதிருக்கும். அன்புடன் அரவணைக்க ஆளின்றிக் கதறியழுது கொண்டிருக்கும். நேரத்தை வீணடித்து விட்டோமே என்ற எண்ணம் தலை தூக்கியவுடன் எப்படியாவது மாளிகைக்குள் நுழைந்து விடுவது என்று முடிவு செய்து விட்டாள்.

அப்போது இருபது முப்பது பேர் பெண்கள் சேர்ந்து கூட்டமாக வந்து கொண்டிருந்தனர். சிலர் தலையில் கூடைகள் இருந்தன. கீரைக் கட்டுகள் இருந்தன. துணி மூட்டைகள் இருந்தன. வளையல்கள் கோத்துத் தோளில் ஒரு பெண் தொங்கவிட்டிருந்தாள். அவர்களைப் பார்க்கும்போது அவர்கள் மாளிகையில் உள்ளவர்களுக்குப் பண்டங்கள் விற்பவர்கள் போல் தோன்றினர். மாளிகைக்குள் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களும், உறவினர்களும் வசித்து வந்தனர். வயது முதிர்ந்த இளையராணிகள் பலரும், குலோத்துங்கனின் உறவினர்களும் வாழ்ந்து வந்தார்கள்.

அல்லிக்கு ஒரு கணத்தில் யோசனை பளிச்சிட்டது. தானும் அவர்களுள் ஒருத்தியாக உள்ளே நுழைந்து விட முடிவு செய்தாள். தன்னிடமிருந்த துணி மூட்டையைத் தலையின் மீது வைத்துக் கொண்டாள்.

காவலர்கள் ஒவ்வொருவரையும் கூர்ந்து பார்த்தே உள்ளே அனுமதித்துக் கொண்டிருந்தனர். அதோ – அவள் நெருங்கி விட்டாள். அல்லிக்கு இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது. தன்னையும் எங்கே தடுத்து நிறுத்தி விடுவார்களோ என்று பயந்தாள். கடவுளை வேண்டிக் கொண்டாள். தன் தந்தையின் நல்லாசியை நினைத்துக் கொண்டாள். பெருமான் நம்பி தனக்கு இட்ட கட்டளையை நினைத்துக் கொண்டாள். ஏன் அவள் கவலைப்பட வேண்டும்? அடையாள மோதிரத்தைக் காட்டிச் சுலபமாகச் சென்று விடலாம். ஆனால், மிகமிகத் தேவைப்பட்டால் தான் அதை உபயோகிக்க வேண்டும் என்று தன் தந்தை எச்சரித்திருந்தது அவளுக்கு நினைவுக்கு வந்தது.

அவள் காவலரைக் கடந்து உள்ளே சென்று விட்டாள். இனி அவளுக்கு பயமில்லை. உள்ளே நுழைந்தவுடன் எந்தப் பக்கம் போவது என்று தெரியாமல் திகைத்தாள். அருகே சென்று கொண்டிருந்த ஒருத்தியிடம் பேச்சுக் கொடுத்தாள்.

"அம்மங்கை தேவியார் எங்கே இருக்கிறார் என்று உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டாள். அவள், அல்லியை ஏற இறங்கப் பார்த்து, "இந்த மாளிகையின் கோடியில் மேல் மாடத்தில் இருக்கிறார். நீ யாரம்மா? அவர்களைப் பார்க்க வேண்டுமா?" என்று அன்பாகக் கேட்டது, அல்லியின் மனத்தில் புதிய தெம்பை அளித்தது.

மேலும் அந்தப் பெண்ணிடம் பேச்சுக் கொடுத்து, அவளைப் பற்றித் தெரிந்து கொண்டாள்.

"நாங்கள் எல்லாம் கோட்டைக்கு வெளியே புறப்பாடியில் வசிப்பவர்கள். வேளாண் குடி மக்கள். மாளிகையில் வசிப்பவர்களுக்கு வேண்டிய நவதான்யங்கள், காய்கறிகள் துணிகள் போன்றவற்றை விற்பனைக்குக் கொண்டு வருவோம்" என்று சொன்னாள்.

"நீங்கள் ஏன் வர வேண்டும்? அந்தப்புரப் பெண்டிருக்கு பணிப்பெண்கள் இல்லையா? அவர்கள் வந்து வாங்கிச் செல்லமாட்டார்களா?" என்று அல்லி கேட்டாள்.

அந்தப் பெண் பெருமூச்சு விட்டாள். "மாளிகையில் இப்போது பணிப்பெண்களும், தாதிகளும், செவிலியர்களும் குறைந்து விட்டார்கள். அவர்கள் வேண்டிய பொருள்களை வாங்க மாளிகையிலிருந்து வெளியே வருவதுமில்லை. அதனால் வாரம் ஒருமுறை நாங்களே மாளிகைக்குக் கூட்டம் கூட்டமாக வந்து விற்கிறோம். வாரம் ஒருமுறை அரச குலத்து மக்களைச் சந்திப்பதில் எங்களுக்கும் மகிழ்ச்சி. வாங்கும் பண்டங்களுக்கு உரிய விலையைக் கொடுப்பதுடன், சமயத்தில் பரிசுப் பொருள்களும் தருவார்கள். எங்களுடன் கலகலப்பாகப் பேசுவதில் அவர்கள் ஆனந்தமடைவார்கள்" என்று கூறினாள். நடந்துகொண்டே,

"கங்கை கொண்ட சோழபுரத்து மகாராஜா வருவதே இல்லையா?" என்று அல்லி கேட்டாள்.

"அவர் வந்து பல மாதங்களாகி விட்டன. அவர் இங்கே வந்தால் அவருக்குத் துக்கம் இன்னும் அதிகமாகி விடுமாம்" என்றாள் அந்தப் பெண்.

"அவருக்கு என்ன துக்கம்?" – அல்லி அறியாதவள் போல் கேட்டாள்.

"உனக்கு ஒன்றுமே தெரியாதா? அவர் தன் அருமை மனைவியைப் பறிகொடுத்துப் பித்துப் பிடித்தவர் போல் பழையாறையிலேயே தங்கியிருக்கிறாரே..."

"மனைவியைப் பறிகொடுத்ததற்காக ஓர் அரசர் இப்படி வருத்தப் படலாமா? ஒரு மனைவி போனால் அந்தப்புரத்தில் வேறு மனைவிகள் இல்லையா? அவர் என்ன இராமபிரானா, ஒரே மனைவியுடன் வாழ?" அல்லி கேள்வி கேட்டுத் தூண்டினாள்.

பண்டம் விற்கும் அந்தப் பெண் கோபத்துடன், "என்ன சொன்னாய்? நமது மகாராஜா மலையமான் மகளிடம் மிகுந்த அன்பும் பாசமும் கொண்டிருந்தார். சோழர் குலத்துக்கு வாரிசாக ஆண் குழந்தைகளைப் பெற்றெடுத்த பெருமை அவளுக்கு உண்டு. அதனால் மலையமான் மகள் இறந்த பிறகு மன்னர் அதிர்ச்சி அடைந்ததில் ஆச்சரியமில்லை" என்றாள்.

அவள் கோபத்தை மாற்ற விரும்பிய அல்லி, "இரண்டு குழந்தைகளா? நீங்கள் அந்தக் குழந்தைகளைப் பார்த்திருக்கிறீர்களா? அந்தக் குழந்தைகளுக்கு யார் பாலூட்டி வளர்க்கிறார்கள்?" என்று ஆவல் நிறைந்த குரலில் கேட்டாள்.

"குழந்தைகளைப் பார்க்க யாருக்கும் அனுமதி இல்லை. பெரிய பிராட்டி தனது மேற்பார்வையில் குழந்தைகளை வளர்க்கிறார்கள்" என்றாள் அவள்.

"பெரிய பிராட்டியா?" அல்லி கேட்டாள். "ஏதுமே தெரியாமல் கேட்கிறாயா? அம்மங்கை தேவியாரை பெரிய பிராட்டி என்று அழைக்கிறோம்."

"பெரிய பிராட்டிக்குக் கண் தெரியவில்லை என்று சிலர் சொல்கிறார்களே?" என்று கேட்டாள் அல்லி.

"இந்த வயது முதிர்ந்த பருவத்தில் அவர்கள் திடமுடன் வாழ்வது எங்களுக்கெல்லாம் ஆச்சரியமாயிருக்கிறது. கண் பார்வை மங்க வில்லை; நடை தளரவில்லை. கவனம் குறையவில்லை. ஆனால் தன் கண் எதிரே மாளிகையில் பல துக்ககரமான நிகழ்ச்சிகளைப் பார்க்கும் போது ஏற்படும் அதிர்ச்சி அவர்களுக்கு ஒரு வேளை உடலில் தளர்ச்சியை ஏற்படுத்தலாம்" என்றாள்.

அல்லியும் அந்தப் பெண்ணும் பிரியும் இடம் வந்து விட்டது. பெரிய பிராட்டி இருக்குமிடத்தை அவள் சுட்டிக் காட்டினாள்.

அல்லி தன் பசியை மறந்தாள். களைப்பை மறந்தாள். கடுங்கோடையின் அனல் காற்றை மறந்தாள். பெரிய பிராட்டி இருக்கும் மாளிகையை நோக்கி ஓடினாள்.

பெரிய பிராட்டி வசிக்கும் இடம் தனித்திருந்தது. மூன்று அடுக்கு மாடங்கள் கொண்ட அந்த மாளிகை புதுச் சுண்ணம் பூசப்படாமல் பொலிவிழந்து காணப்பட்டது. மாளிகை அருகே மரஞ்செடி கொடிகள் வளர்ந்திருந்தன.

மாளிகையின் கீழ்க் கூடத்தில் அவரவர்கள் தத்தம் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தனர். அல்லியை யார் என்று ஒருவரும் கேட்கவில்லை. அல்லி முதல் மாடம் ஏறினாள். சுற்றும் முற்றும் பார்த்தாள். குழந்தைகள் எங்கே இருக்கின்றனர் என்று தேடினாள். மூன்று நான்கு வயதுடைய சிறு குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தனர். அவர்கள் அரச குமாரர்கள் அல்லர்.

அல்லி திகைத்து நின்று சுற்றும் முற்றும் பார்த்தாள். 'குழந்தைகள் எங்கே? பெரியபிராட்டி எங்கே?' – ஒருவரையும் கேட்கத் துணியவில்லை.

மூன்றாவது மாடத்துப் படிகளில் மெல்ல ஏறினாள். ஏதோ பேச்சுக் குரல் கேட்டது. யாரோ மெல்ல இருமும் ஓசை கேட்டது. தொடர்ந்து குழந்தையின் அழுகுரல். குழந்தை அழுதது. யாரோ மெல்லச் சமாதானப்படுத்த முயலும் ஒலி கேட்டது.

அல்லி படிக்கட்டுகளில் தாவி ஏறிக் கூடத்துக்கு வந்து சேர்ந்தாள்.

கூடத்தின் ஓர் ஓரத்தே இருந்து மஞ்சத்தில் பெரிய பிராட்டியார் கையில் விசிறியுடன் அமர்ந்திருந்தாள். நடுக்கூடத்திலிருந்த தொட்டிலில் குழந்தை ஒன்று உறங்கிக் கொண்டிருந்தது.

மற்றொரு குழந்தை கீழே விரிக்கப்பட்டிருந்த பஞ்சணையில் விரிட்டு அழுது கொண்டிருந்தது. பணிப்பெண் ஒருத்தி சங்கில் பாலை ஊற்றி ஊற்றி அதற்குப் புகட்ட முயன்று கொண்டிருந்தாள். குழந்தையைச் சரியாக அணைத்து வைத்துக் கொள்ள கூட அவளுக்குத் தெரியவில்லை. குழந்தை அழுகையை நிறுத்தவில்லை.

அல்லி கண்டறியாதன கண்டவளைப் போல் ஒரு கணம் நின்றாள். மறுகணம் "என் செல்வங்களா!" என்று கூவியவாறு குழந்தைகளிடம் ஓடினாள். தொட்டிலில் உறங்கும் குழந்தையைக் குனிந்து முத்தமிட்டாள். பிறகு கீழே கதறி அழும் குழந்தையைத் தாதியிடமிருந்து பெற்றுக் கொண்டாள்.

அவள் உடலெங்கும் ஒரு புத்துணர்ச்சி. ஆனந்த அனுபவம். மார்புக் கச்சை நனைந்தது. குழவியின் செம்பவள உதடுகளின் ஸ்பரிசம் அவளை இந்த உலகத்தை மறக்கச் செய்தது. அவள் கங்காபுரியை மறந்தாள். சோழ கேரள மாளிகையை மறந்தாள்.

அருகே, வியப்புடனும் திகைப்புடனும் நோக்கும் தாதியை மறந்தாள். குழந்தை அழுகுரலை நிறுத்தியதையும், குழந்தைகளுக்குப் பெண் ஒருத்தி பாலூட்டுவதையும் கண்டு மெல்ல தன்னிருக்கையிலிருந்து எழுந்து வரும் பெரிய பிராட்டியை மறந்தாள். அவள் சஞ் சரிக்கும் உலகம் தனியானது. விசித்திரமானது. சுவர்க்க போக இன்பங்களையும் விடப் பேரின்பம் அளிக்க வல்லது. தன் வயிற்றில் பிறந்து ஐந்தே நாள்கள் இருந்து இறந்து விட்ட அதே குழந்தை மீண்டும் தன் மடியிலிருந்து பால் குடிப்பது போன்ற உணர்வு அல்லிக்கு.

"யாரம்மா நீ? இதுவரை உன்னைப் பார்த்ததில்லையே! குழந்தைக்குப் பாலூட்டும்படி யார் உனக்குச் சொன்னது?" என்று பெரிய பிராட்டியார் அவள் அருகே வந்து அவளை உற்றுப் பார்த்தவாறு கேட்டாள்.

இந்த உலகத்துக்குப் பிடித்துத் தள்ளப்பட்டாள் அல்லி. குழந்தை அழுகையை நிறுத்தி உறங்கி விட்டிருந்தது.

"நானா... நானா...?" என்று அல்லி, பெரிய பிராட்டியைப் பார்த்தவாறு ஏதோ சொல்ல முயன்றாள். குழந்தையைக் கீழே கிடத்த அவளுக்கு மனமில்லை.

அவள் தடுமாறுவதைப் பார்த்த பெரிய பிராட்டி கையமர்த்தி, "அழும் குழந்தையைச் சமாதானப்படுத்தும் மாயசக்தியை வைத்திருக்கிறாயே, பெண்ணே நீ யார்?" என்று வியப்புடன் கேட்டாள்.

"மாயசக்தி ஒன்றுமில்லை அம்மா! தாய்மையின் சக்தி தான்" என்று கூறித் தன்னை, பெருமான் நம்பி அனுப்பிய செய்தியை விவரமாகக் கூறி, "இளவரசரைக் காப்பாற்றும் பொறுப்பு எனக்கு ஏற்பட்டது முன்பிறவிப் புண்ணியம்தான்" என்றாள். பிறகு குழந்தையைக் கீழே மெல்லக் கிடத்திவிட்டு, பெரிய பிராட்டியை மண்டியிட்டு வணங்கி "என்னை வாழ்த்தி ஆசி கூறுங்கள்" என்றாள்.

"பெண்ணே! ராஜராஜனின் மகனைக் காப்பாற்றும் யாரும் நீடுழி வாழ்வார்கள்" என்று கூறினாள்.

"குழந்தைக்காக நான் நோய் நொடியின்றி உயிருக்கு அபாயமின்றி வாழ்ந்தாக வேண்டும். மாளிகைக் காவல்காரர்களிடம் கூறி இங்கே உடனே காவலுக்கு ஏற்பாடு செய்யச் சொல்லுங்கள்" என்றாள்.

பெரிய பிராட்டி மெல்லச் சிரித்தவாறு, "பெண்ணே! நீ அஞ்ச வேண்டாம். நமக்கு யாரம்மா விரோதிகள் இருக்கிறார்கள்? குழந்தைக்கு ஒன்றும் நேராது" என்றாள்.

ஆனால் அல்லிக்கு ஒவ்வொரு கணமும் பயம் தோன்றிக் கொண்டே வந்தது. இரவு நெருங்க நெருங்க அவளுடைய அச்சம் அதிகமானது. தொட்டிலில் தவழும் மூத்த குழந்தை ஒரே வயது நிறைந்த குழந்தைக்குத் தாய்ப்பால் தேவைப்படவில்லை. இரண்டாவது குழந்தை ஒரே மாதம் நிறைந்த குழந்தை. அல்லியின் மடியை விட்டுப் பிரியவில்லை.

மாளிகை அயர்ந்து கண் உறங்கும் நேரம் காற்றில் மரங்கள் அசைந்தாடிக் கொண்டிருந்தன. பின்னிலவுச் சந்திரனின் மங்கிய ஒளி இருளை எதிர்த்துப் போரிட முயன்று கொண்டிருந்தது. பாயில் விழித்துக் கொண்ட பறவைகள். சில 'சடசட' என்று ஓசையை ஏற்படுத்தின. அல்லி தூங்கியும் தூங்காமலும் அருகே குழந்தையை அணைத்தவாறு படுத்துக் கொண்டிருந்தாள்.

'சடக்' என்ற மெல்லிய காலடி ஓசை கேட்டது. திறந்த சாளரத்து வழியே வீசிக் கொண்டிருந்த மதிஒளியில் ஓர் உருவம் நகர்ந்து வருவது தெரிந்தது.

அல்லி நன்றாக விழித்துக் கொண்டாள். கண்களை மலர விழித்து பார்த்தாள். குழந்தையை எடுத்து மடியில் வைத்துக் கொண்டாள். அடிமேல் அடி வைத்து நகர்ந்து வரும் உருவம் கோவிந்தன் என்பதை ஒரு கணத்தில் உணர்ந்து கொண்டாள் அல்லி... அவள் உடல் நடுங்கியது.

# 9. விழிக்குத் துணை

துங்கபத்திரை ஆற்றங்கரையை ஒட்டி அமைந்திருந்த சிறு வீட்டில் நால்வர் அமர்ந்து தீவிரமாகப் பேசிக் கொண்டிருந்தனர். மூன்று பேர் கொச்சைத் தமிழில் பேசினர். அவர்களுள் வயதில் இளைஞன் ஒருவன் மட்டும் தெளிவாகத் தமிழில் பேசியதுடன், தெலுங்கிலும் வார்த்தைகள் சிதையாமல் பேசினான்.

அவன் பேசும்போது அவனுடைய முகத்தையே மற்றவர்கள் காந்தத்தால் கவரப்பட்டவர்கள் போல் உற்று நோக்கிக் கொண்டிருந்தனர். அவனுடைய பேச்சும், பேசும்போது ஏற்படும் முகபாவமும் அவர்களைக் கவர்ந்திருக்க வேண்டும். அகன்ற நெற்றியும் ஒளிவீசும் விழிகளும் அவர்களைக் கவர்ந்திருக்க வேண்டும். ஒளி விழிக்கு நிகரான அழகிய நாசியும் நாசியின் கீழே சற்றுப் பெண்மையின் சாயலை அளிக்கும் அதரங்களும் அவர்களை மகுடியில் கட்டுண்ட நாகம்போல் கவர்ந்திருக்க வேண்டும்.

அவனை விட வயதில் மூத்தவர்களான மூன்று பேரும் அவனிடமிருந்து வரும் யோசனைகள் ஒவ்வொன்றையும் உற்சாகமாக வரவேற்றதிலிருந்து அவர்களுக்கு அந்த இளைஞனிடம் பரிபூரண நம்பிக்கை இருப்பது தெரிய வந்தது.

"வல்லபா! கடைசியாக, உன் முடிவுதான் என்ன? ஒரு வார்த்தை உம் என்று சொன்னால் நாங்கள் படைகளுடன் மாளிகையைச் சூழ்ந்து கொண்டு உன் சிற்றப்பனைத் தாக்கிக் கொன்று விடுவோம்! என்று ஒருவன் பரபரப்புடன் கூறினான். அப்போதே எழுந்து சென்று விடுவது போன்ற துடிப்பு அவனிடமிருந்தது. அவனுடைய கரம் உடைவாளைத் தொட்டுக் கொண்டிருந்தது. மற்ற இருவரும் மீசையை மெல்ல முறுக்கிவிட்டுக் கொண்டிருந்தனர்.

வல்லபன் மெல்ல நகைத்தான். சிரிக்க வேண்டிய சமயம் அதுவன்று, சீற்றமுடன் கிளர்ந்தெழுந்து "வாருங்கள், புறப்படுவோம்" என்று பொங்கி எழும் பொழுதில், வல்லபன் 'அமைதி அமைதி' என்று கை அமர்த்தினான். தாக்குவது, மல்லுக்கு நிற்பது, வாளெடுத்து நேருக்கு நேர் போரிடுவது போன்றவற்றில் மிகத் திறமை படைத்த வல்லபன் அமைதியை உபதேசித்தான்.

அவனுடைய நலனுக்காகத் தான் அந்த மூவரும் அங்கே அடிக்கடி வருகிறார்கள், யோசிக்கிறார்கள். திட்டமிடுகிறார்கள். கீழைச்சாளுக்கிய நாட்டின் படை வீரர்களிடையே முக்கிய பதவி வகிப்பவர்கள் அவர்கள். ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு மீசை அரும்பாப் பாலகனாய் வந்தபோதே அவன் தான் வேங்கியின் அரியணையில் அமரவேண்டிய நியாயமான வாரிசு என்பதை உணர்ந்து கொண்டார்கள். வல்லபன் என்ற பெயரே அவர்களைப் பெரிதும் கவர்ந்தது. அவனுடைய வடிவழகு, திண் தோள்கள் யாவும் அவர்களைக் கவர்ந்தன. கீழைச்சாளுக்கிய நாட்டை ஆளக்கூடிய நியாயமான வாரிசு வல்லபன் தான் என்பதை அறிந்து கொண்டார்கள். வல்லபனுடைய சோகக் கதையை அவர்கள் கேட்டறிந்தார்கள். அவனுடைய தந்தை கரூரில் சேரநாட்டு அரசப் பிரதிநிதியாயிருந்தவர், திடீரெனச் சென்ற இடம் தெரியவில்லை. கணவனைக் காணாத துயரத்தால் வாடிய அவன் தாய் அறிவுடைச் செல்வி, வல்லபனின் திருமுகத்தைப் பார்த்ததே தன் துயரத்தை மறந்து வாழ்ந்து வந்தாள்.

தன் மகன் என்றாவது ஒருநாள் அரசனானவன் என்று அவளுடைய உள்ளுணர்வு சொல்லிக் கொண்டேயிருந்தது.

கீழைச் சாளுக்கிய நாட்டில் வாரிசு இல்லாது, அரசர் இறந்து விடவே வல்லபன் தான் நியாயமான உரிமை உடையவன் என்பதை அறிந்தாள் செல்வி.

கங்கை கொண்ட சோழபுரத்தில் எளிய வாழ்க்கை நடத்தத் தொடங்கிய செல்வி, தன் மகனை வீரனாகவும், அறிவுடையவனாகவும் வளர்த்தாள். தன் சகோதரனும் வல்லபனின் மாமனுமான சோழ மன்னர் இராஜராஜன் தன்னைத் திரும்பியும் பாராது அலட்சியமாக இருப்பதாகப் பல முறை அவளுக்குத் தோன்றியதுண்டு. அதனாலெல்லாம் அவள் வேதனைப்பட்டதில்லை. வருத்தப்பட்டதில்லை. கோபங் கொண்டதும் இல்லை. அவளுடைய இலட்சியமெல்லாம் தன் மகன் கீழைச் சாளுக்கிய நாட்டின் அரசனாக வேண்டும். முப்பாட்டனார்களான குலோத்துங்கன், விமலாதித்தன் போல் சிறந்த மன்னராக வேங்கியில் இருந்து அரசாள வேண்டும் என்பதே.

ஆஞ்சநேயரின் வீரத்தையும், இராமபிரானின் சீலத்தையும், வீர அபிமன்யுவின் தீரத்தையும், அர்ஜுனனின் தீரப் பிரதாபங்களையும் தன் மகனுக்குக் கதைபோல் எடுத்துக்கூறி அவன் உள்ளத்தில் வீர உணர்ச்சியை வளர்ந்தாள். கீழைச் சாளுக்கிய நாட்டின் பெருமையையும், வேங்கி நகரத்தின் சிறப்பையும் அவ்வப்போது எடுத்துக் கூறுவாள். வல்லபன் உள்ளத்தில் வேங்கி நகருக்குச் செல்ல வேண்டும் என்ற உணர்ச்சி பெரிதும் வளர்ந்தது.

முதலில் தக்க துணையுடன் அவனை அனுப்பி வைத்தாள். வல்லபன் சில மாதங்கள் வேங்கியில் மட்டும் தங்கியிருந்து திரும்பி வந்தான். வரும்போதே வாள் வீச்சைக் கற்று வந்தான். ஒவ்வொரு முறையும் சென்று வரும் போதும் வல்லபன் திறமையை வளர்த்துக் கொண்டதுடன் உரிமையை உணர்ந்து கொண்டான். வேங்கியில் அவனுக்குப் பலர் நண்பர்களானார்கள்.

இம்முறை வல்லபன், கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து புறப்படும் போது அவன், "தாயே! எனக்கு ஆசி கூறுங்கள். வேங்கியின் அரியணையில் என்னை அமர்த்தி விட்டுத்தான் மறுவேலை பார்ப்பது என்று படைத்தலைவர்கள் பலர் உறுதி கொண்டிருக்கின்றனர். என்னுடைய முயற்சி வெற்றி அடைய வாழ்த்தி அருளுங்கள் அம்மா!" என்று வேண்டி வணங்கி எழுந்த போது, செல்வி அவனுடைய நெற்றியில் திருநீற்றை அணிவித்து, 'மகனே! என் இலட்சியம், நீ அரசனாக வேண்டும் என்பதே. இந்தக் கங்காபுரியில் சிறுகுடிலில் வாழப் பிறந்தவனல்லன் நீ. சிற

வயதிலேயே உன்னை வேங்கிக்கு அனுப்பிய காரணம் நீ கீழைச் சாளுக்கிய நாட்டு அரசனாக வேண்டும் என்பதே. வேங்கியினின்று வந்தவர்களிடமிருந்து நான் தெரிந்து கொண்டேன், உனக்கு அங்கு ஆதரவு இருக்கிறதென்று. உன் வீரத்தைக் கண்டு அங்கு வியப்படையாதவர்களே இல்லையாமே? மேலைச் சாளுக்கிய நாட்டைச் சேர்ந்தவர்கள் அவ்வப்போது எல்லையை மீறி வந்து பசுக்களையும், ஆடுகளையும் கவர்ந்து சென்று விடுகிறார்களாம். ஒரு சமயம் நீ தன்னந்தனியாக அவர்களை எதிர்த்துப் போரிட்டு மாடுகளை மீட்டு வந்தாயாம். எதிரிலிப் பெருமாள் என்று உன்னை எல்லாரும் கொண்டாடுகிறார்களாமே! என்னிடம் இவற்றையெல்லாம் நீ ஏன் சொல்லவில்லை? மகனே! என்னுடைய பூரண ஆசி உனக்கு உண்டு. உன்னுடைய பட்டனார் குலோத்துங்க சோழரைப் போல் நீ வீரப்பிரதாபங்களுடன் வாழ ஆசி கூறுகிறேன்... ஆனால்..." என்று கூறி நிறுத்தினாள் செல்வி.

"சொல்லுங்கள் தாயே... நீங்கள் சொல்வதிலிருந்து அணு அளவும் நான் மீற மாட்டேன்!" என்று வல்லபன் தாயின் முகம் பார்த்து நின்றான்.

"வல்லபா! உன் உரிமையை மிகவும் அமைதியான முறையில் வற்புறுத்து, அமைச்சர்களிடம் எடுத்துக்கூறி வாதாடு. மக்களின் கருத்தைத் திரட்டி உருவாக்கு. இவை ஏதும் பலனளிக்காவிடில் கடைசியாகப் போருக்குப் புறப்படு. போர் என்று அதைச் சொல்லமாட்டார்கள். கலகம் என்பார்கள். கலகக்காரர்களைக் கொண்டு அரியணையைப் பிடிப்பது என் கருத்துக்கு ஏற்றதாயில்லை. உன்னை ஆதரிப்பவர்களின் எண்ணிக்கையை அதிகமாக்கு பிறகு என் சகோதரன் – உன் மாமனிடம் நான் உதவி கேட்கிறேன்" என்றாள்.

வல்லபன் தாயின் சொல்லை அப்படியே ஏற்றுக் கொண்டான். விடைபெற்றுப் புறப்பட்டான்.

"எதிரிலிப் பெருமாள், எதிர்ப்பிலிப் பெருமாளாக எடுத்த காரியம் முடித்துத் திரும்பி வருக" என்று தாய் ஆசி கூறினாள்.

"எதிரிலிப் பெருமாள்" என்று ஒருமுறை அவன் தனக்குள்ளேயே சொல்லிப் பார்த்துக் கொண்டான். குதிரை மீது செல்லும்போது பயணத்தின் இடையே அந்த வார்த்தையை மற்றொரு முறை சொல்லிப் பார்த்துக் கொண்டான். அவன் இதழ்க்கிடையில் நகை மலர் பூத்தது. அது இனிய மணத்தை வீசியது. அந்த மணத்துக்கு உரிய இளநங்கை தன்னருகே குதிரை மீதமர்ந்து வருவது போன்ற உணர்வு தோன்றியது.

அவள் தன் காதருகே நெருங்கி, 'எதிரிலிப் பெருமாள்' என்று கூறி முல்லைப் பற்கள் தெரிய நகைப்பது போல் தோன்றியது. அவன் கரங்கள் அவளது கன்னங்களை வருட வேண்டும் என்பதற்காக அசைந்தது. குதிரை கனைப்பது கேட்ட பிறகுதான் குதிரை மீதேறிப் பயணம் செய்யும் நினைப்பு அவனுக்கு வந்தது.

அவன் தன்னிலையை அறிந்து இப்போது சிரித்துக்கொண்டான். அவன் உடல் ஒருமுறை சிலிர்த்தது. இப்படித்தான் முதன் முதல் அவள் ஸ்பரிசம் அவனுடைய மார்பிலே பட்டபோது அவன் உடல் முழுமையும் சிலிர்த்தது. ஓர் இளமங்கையின் மென்னுடலின் பூங்காற்று அவனை மெல்லத் தொட்டுச் சென்றது. அதுதான் முதல் முதன் அனுபவம்.

அந்தச் சம்பவத்தை மீண்டும் இப்போது நினைத்துக் கொள்வதால் அந்த இனிய நினைவுகள் பயணக் களைப்பைப் போக்கிவிடும் என்று எண்ணினான்.

பல மாதங்களுக்கு முன்பு மேலைச் சாளுக்கியர்களிடமிருந்து பசுக்கூட்டங்களை மீட்டு வந்த பிறகு அவன் களைப்பாறிக் கொண்டிருக்கும் போது வயது முதிர்ந்த ஒருவரும் அவரைத் தொடர்ந்து இளமங்கையும் அவனைத் தேடி வருவதைக் கண்டு அவன் திகைத்தான்.

அந்தப் பெண் பெரிய கூடையை இடுப்பில் சுமந்து கொண்டிருந்தாள். அவள் ஒயிலாக, ஒரு புறம் சாய்ந்தவாறு நடந்து வரும் அழகை அவன் ரசித்திருந்த போது முதியவரின் குரல் அவன் கவனத்தைக் கவர்ந்தது.

"தம்பி! உன்னை எங்கெல்லாம் தேடிவந்தேன்? இந்த ஆற்றங்கரையில் தன்னந்தனியாக இருக்கிறாய் என்பதை அறிந்தேன். உனக்கு நன்றி சொல்லிவிட்டுப் போக வந்தேன். இவள் என்னுடைய பெயர்த்தி சந்திரபிரபா, இவளுடைய தந்தை இவளையும் பசு மந்தைகளையும் விட்டு விட்டு, இதே போல் அந்தக் கொடிய சாளுக்கியர்களை எதிர்த்துப் போரிட்டபோது இறந்து விட்டார். அந்தக் கொள்ளைக்காரர்களுக்கு எப்போதுமே, எங்களுடைய பசுமந்தைகளின் மீது ஒரு கண். நீ இருந்திராவிடில் எனது செல்வம் முழுதும் பறிபோயிருக்கும். நீ தன்னந்தனியாக ஒருவனே அவர்களை விரட்டியிருக்கிறாய். என் நன்றியைத் தெரிவிக்க வந்தேன். எனக்குக் கண்பார்வை இப்போது குறைந்து வருகிறது. அதனால் துணையாக இவளை அழைத்து வந்தேன்" என்றார்.

பாட்டனாரின் அருகே நின்று கொண்டிருந்த அவளை ஏற இறங்க வல்லபன் பார்த்ததைக் கண்ட அவள் தலையைக் குனிந்து கொண்டாள்.

"வழிக்குத் துணையாக வந்திருக்கிறாள். வாழ்க தங்கள் பார்வைக் குறைவு..." என்று முணுமுணுத்துக் கொண்டான்.

"என்ன தம்பி சொல்கிறாய்?" என்று முதியவர் கேட்டார்.

அவன் முணுமுணுத்தது சந்திரப்பிரபாவுவக்குக் கேட்டுவிட்டது அவள் சிரித்துக் கொண்டாள். வல்லபனும் அவளைப் பார்த்துச் சிரித்தான். அந்தச் சிரிப்பிலே ஏற்பட்ட புதுவித உணர்ச்சிகள் மெல்ல மெல்ல உள்ளத்தே நுழைந்து கொண்டிருக்கும் பருவம்.

"இதெல்லாம் எதற்குப் பாட்டா?" என்று வல்லபன் முதியவரை நோக்கிக் கேட்டான். அவள் கூடையை இறக்கிக் கீழே வைத்திருந்தாள். அதில் மாங்கனிகள் இருந்தன. ஒரு குலை வாழைப்பழம் இருந்தது.

"எங்கள் நன்றியைத் தெரிவிக்க இவை" என்றாள் அவள். கனியை விடக் கன்னியின் குரலில் இனிமை இருந்தது. மற்றுமொரு முறை வல்லபன் அவளை நோக்கினான். அவள் தரையில் கால் விரலால் கோலம் போட்டுக் கொண்டிருந்தாள்.

"தம்பியை வீட்டுக்கு அழைக்க வந்தோம். அங்கே உனக்கு விருந்தளித்துப் புத்தாடைகள் தருவதாக எண்ணியுள்ளோம்" என்று முதியவர் கூறினார். குரலில் நன்றி நிறைந்திருந்தது. வல்லபன் மறுக்கவில்லை.

வல்லபன் ஒருமுறை அவர்கள் வீட்டுக்குச் சென்றான். பிறகு பலமுறை அவள் அவனைத் தேடி ஆற்றங்கரை வீட்டுக்கு வந்தாள். ஒருமுறை வல்லபன் தெற்கே கங்காபுரிக்கு வந்து விட்டுச் சென்றபோது பிரிந்திருந்த ஆறு மாதங்கள் அவளுக்குப் பலயுகங்களைப் போல் தோன்றின. இப்பொழுது வல்லபன் கங்காபுரிக்குச் செல்லும்போது, அவளிடம் விடைபெறும் போது அவள் அடைந்த துயரத்துக்கு அளவில்லை. ஏதோ விட்ட குறை தொட்ட குறை போல் அவள் வருந்தினாள்.

வல்லபன் கங்காபுரியிலிருந்து திரும்பி விட்டான் என்றறிந்த போது அவளுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. இந்த ஆறு மாதங்கள் அவளிடையே பெரிய மாறுதலை ஏற்படுத்தியிருந்தன. பருவத்தின் அபிஷேகம் உடல் முழுவதும் பரவியிருந்தது.

வல்லபன் வந்த நாளிலிருந்து அவள் மிகவும் சுறுசுறுப்பாக இருந்தாள். அவனைச் சந்திக்க வரும்போதெல்லாம் அவனுடன்

யாராவது இரகசியமாகப் பேசிக் கொண்டிருப்பார். குடிலின் முன் வாயிலில் ஓரமாகப் பேச இயலாமல் நின்று விட்டுப் போய் விடுவார். அவள் புரிந்து கொண்டாள், வல்லபன் மேற்கொண்டுள்ள உரிமைப் போராட்டத்தை.

வல்லபன் அரச பரம்பரையைச் சேர்ந்தவன் என்று அறிந்த போது ஏற்பட்ட குதூகலத்தின் அளவைச் சொல்லி முடியாது. பாட்டனாரிடம் சென்று அவர் தோளைக் குலுக்கி, "தாத்தா, அவர் ஓர் அரச குமாரரா?" என்று கேட்டாள்.

"அவர் என்றால்... யாரையம்மா சொல்கிறாய் குழந்தாய்...?" என்று முதியவர் கேட்டார்.

அவள் முகம் சிவந்தது. அந்த நாணம் திடீரென அவள் முகத்தில் வந்து கலந்து கொள்ள என்ன காரணம்? அந்த நாணம் இவ்வளவு காலம் எங்கே சென்றிருந்தது? அவள் உடலில் இலேசான அதிர்ச்சி ஏற்பட்டு, புதிய புதிய விவரிக்க முடியாத இன்பத்தை ஏற்படுத்துகிறதே. அந்த அனுபவம் இவ்வளவு நாளும் எங்கே சென்றிருந்தது? வல்லபனைக் காணும்போது இதயம் படபடக்கிறதே. இந்தப் படபடப்பு இவ்வளவு காலம் எங்கே மறைந்திருந்தது?

முதியவர் மெல்ல நகைகத்துக் கொண்டார். அவருக்குப் புரிந்துவிட்டது. "யாரைச் சொல்கிறாய்? எதிரிலிப் பெருமாளையா? நானும் அவனைச் சாதாரணப் படைவீரன் என்று தான் நினைத்துக் கொண்டிருந்தேன். அவன் இந்த நாட்டை ஆளும் உரிமை பெற்றவன். அவன் தன் கட்சிக்கு நியாயமானவர்களைச் சேர்த்துக் கொண்டு வருகிறான். தன் உரிமையை நிலை நாட்ட அரசரிடம் நேரே சென்று கேட்கப் போகிறானாம்" என்றார்.

"நான் கேள்விப்பட்டதெல்லாம் உண்மைதானா?" என்று சந்திரப்பிரபா கேட்டாள். அவள் வழக்கத்துக்கு மாறாக வல்லபனின் மிக அருகே உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவள் முகம் அவனை நோக்கி நிமிர்ந்திருந்தது.

"என்ன கேள்விப்பட்டாய் பிரபா?" என்று வல்லபன் அவளுடைய கூந்தலை மெல்லக் கோதியவாறு கேட்டான்.

"தாங்கள் இந்த நாட்டின் அரியணையில் அமரும் உரிமை பெற்றவராமே?" என்று பிரபா கேட்டாள். வல்லபன் மெல்ல அவள் முகவாயைத் தட்டி, "உரிமை மட்டுமா, தகுதி பெற்றிருக்க வில்லையா?" என்று கேட்டான்.

உடனே அவனுடைய பேச்சுக்கு அவளால் மறுமொழி கூற முடியவில்லை. தலையை அசைத்து, "இரண்டும்தான்" என்றாள்.

பிறகு "உரிமை, தகுதி இரண்டும் என்னிடமில்லையே" என்றாள். அவள் கண்கள் மெல்லக் கலங்கத் தொடங்கின.

வல்லபனுடைய கரங்கள் அவளுடைய கூந்தலின் அழகை மெல்ல அனுபவித்து, பிறகு அவளுடைய பரந்த முதுகின் மென்மையை உணரத் தொடங்கின.

"உரிமை தகுதி இரண்டும் இருப்பதால் தான் என்னை இவ்வளவு எளிதில் கவர்ந்து விட்டாய்" என்றான் வல்லபன்.

"உன்னைப் பிரிந்திருக்க முடியாததால் தான் கங்காபுரியினின்று விரைவில் புறப்பட்டு விட்டேன்" என்று தொடர்ந்து வல்லபன் கூறியபோது அவள் நாணிக் கண் புதைத்தாள்.

"இந்த நாட்டின் அரசரான பிறகும் நீங்கள் கங்காபுரிக்குச் சென்று தான் வருவீர்களா?" என்று சந்திரப்பிரபா கேட்டாள்.

வல்லபன் சிறிது யோசித்தான். வேங்கி அரண்மனையில் அமர்ந்தபிறகு கங்காபுரிக்குச் செல்ல வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது? என்று எண்ணினான். தாய் இருப்பதனால், தெற்கே கங்காபுரிக்குச் செல்கிறோம். பிறகு தாய் எதற்காக என்னைப் பிரிந்திருக்க வேண்டும்? ராஜமாதாவாக மாளிகையில் வாழ வேண்டிய என் தாயைச் சிறுகுடிசையில் வாடவிடுவேனா?

"பிறகு நான் கங்காபுரிக்குச் செல்ல வேண்டிய அவசியமே நேராது. நான் வேங்கியின் மன்னன். அந்த நாட்டு மன்னரின் அழைப்பு இருந்தால் சோழநாட்டுக்குச் செல்வேன்" என்றான்.

சந்திரப்பிரபா பெருமூச்சு விட்டாள். அவள் ஏதோ ஒன்றைக் கேட்கத் துடித்தாள். ஒவ்வொரு முறையும் அவள் கேட்க முனைந்து விடுவாள். ஆனால் சொற்கள் நெஞ்சோடு நின்றுவிடும் நாள்கள் ஓடிக் கொண்டிருந்தன. அதன்பிறகு வல்லபனையும் அவளால் சந்திக்க இயலவில்லை. வேங்கி மன்னருடன் நடந்த சமாதானப் பேச்சு வார்த்தைகள் வெற்றியடையவில்லை. மீண்டும் ஆலோசனைக் கூட்டம். இப்போது வல்லபனை ஆதரிப்பவர்கள் எண்ணிக்கை அதிகமாகியது. போரா – அமைதியா என்ற முடிவுக்கு வல்லபன் வந்தாக வேண்டும்.

ஒருநாள் வல்லபனைத் தேடிக் கங்காபுரியினின்று தூதுவன் ஒருவன் வந்தான். அவன் பல காத தூரம் நடந்து வந்திருந்தான். அவன் செல்வியிடமிருந்து ஓலையொன்று கொண்டு வந்திருந்தான். வல்லபனைத் தேடி அலைந்த பரபரப்பில் எதிரே சந்திரப்பிரபா இருப்பதையும் மறந்தான்.

படித்து முடித்தவுடன் வல்லபன் துள்ளி எழுந்தான். "நான் இன்றே புறப்பட வேண்டும்" என்று கூறினான்.

ஓலையைப் படித்தவுடன் வல்லபனிடம் திடீரென்று ஏற்பட்ட மாறுதல் சந்திரப் பிரபாவையும் வியப்புறச் செய்தது.

"எங்கே புறப்பட வேண்டும்?" என்று மெல்லக் கேட்டாள் சந்திரப்பிரபா.

"கங்காபுரிக்கு. என் அருமைத் தாய் எனக்குச் செய்தி அனுப்பியிருக்கிறாள், என்னை உடனே புறப்பட்டு வருமாறு" என்று வல்லபன் குரலில் உற்சாகம் பொங்கக் கூறினான்.

"நில நாள்களுக்கு முன்பு சொன்னீர்கள். இனி கங்காபுரிக்குப் போக நேராது என்று; இப்பொழுது போகவேண்டும் என்று துடிக்கிறீர்களே" என்று சந்திரப்பிரபா துக்கம் நெஞ்சை வந்து முட்டக் கேட்டாள்.

வல்லபன் குரலில் உற்சாகம் இருந்தது. "ஆமாம். வேங்கியின் அரசனானால், தெற்கே செல்ல நேராது. ஆனால் நான் அரசனாக முடியவில்லையே" என்று வல்லபன் கூறினான்.

"தங்களுக்காகப் போரிடத் துடிப்பவர்களையும் தாங்கள் தடுத்து நிறுத்தியுள்ளீர்கள். முயற்சி எடுக்காவிடில் வேங்கி அரியணை தானே கிட்டுமா?" என்று சந்திரப்பிரபா கேட்டாள்.

"வேங்கி அரியணையைத் தற்போது நான் மறந்துவிட வேண்டும். என் தாய் என்னைக் கங்காபுரிக்கு வருமாறு அவசரக் கட்டளை பிறப்பித்துள்ளாள். அங்கே எனக்கு மிகப்பெரிய அதிர்ஷ்டம் காத்திருக்கிறதாம்" என்று உற்சாகத்துடன் கூறினான் வல்லபன்.

சந்திரப் பிரபாவினால் உடனே பேசமுடியவில்லை. பிரிவுத்துயர் அவளைப் பிடித்துக் கொண்டது. 'மிகப்பெரிய அதிர்ஷ்டம் என்னவாக இருக்கும்?' அவள் யோசித்தாள்.

"ஐயோ, இவரிடம் ஏன் பழகி மனத்தைப் பறிகொடுத்தோம்? தாத்தா கூறியது சரிதான். 'அந்தஸ்து வித்தியாசத்தில் ஏற்படும் காதல் மிகவும் சோதனையைத் தரும். மறந்து விடுவது மேல்' என்று அவர் எனக்காகத்தான் கூறினாரோ?"

சந்திரப் பிரபாவின் முகத்தில் ஏற்பட்ட வாட்டத்தைக் கண்ட வல்லபன் அவளை மெல்ல அணைத்துக் கொண்டு "பிரபா! திடீரென முகவாட்டம் ஏன்? கங்காபுரிக்ககுச் சென்று தாய் இட்ட பணியை நிறைவேற்றி விட்டு உடனே திரும்பி விடுவேன். உன்னைப் பார்க்காமல் என்னால் அங்கே ஒரு கணமும் இருக்க முடியாது" என்றான்.

சந்திரப்பிரபா விம்மினாள். "நான் எப்படி பிரிந்திருப்பேன்? இதற்கு முன்பெல்லாம் தாங்கள் சென்று வரும் போது என்

பிள்ளை மனம் பிரிவைப் பற்றிப் பெரிதாக நினைக்கவில்லை. இப்பொழுது பிரிவு பெரும் பிளவுபோல் காட்சி தருகிறது. நானும் தங்களுடன் வந்துவிடட்டுமா?"

வல்லபன் அவள் விழிநீரைத் துடைத்து, "கங்காபுரிக்குச் சென்று விரைவில் திரும்புவேன். என் வார்த்தையை உறுதியாக நம்பலாம்" என்று கூறியவன், தன் கையிலிருந்த மோதிரத்தைக் கழற்றிச் சந்திரபிரபா எதிர்பாராவிதமாக அவள் விரலில் அணிவித்தான்.

சந்திரப்பிரபா நெகிழ்ந்தாள். வல்லபனின் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு, "விரைவில் திரும்பி வந்து விடுவீர்களல்லவா? தாங்கள் வரத் தாமதமானால் நான் வேங்கியினின்று தங்களைத் தேடி அங்கு வந்து விடுவேன்" என்று கூறி விம்மினாள்.

மோதிரம் அணிந்த அவள் கையைப் பிரித்தான். அதன் மேல் தன் கையை வைத்தான். "விரைவில் வருவேன். உறுதி" என்றான்.

வல்லபன் பிரியாவிடை பெற்றுக் கொண்டு கங்கை கொண்ட சோழபுரம் நோக்கிப் புறப்பட்டான். அங்கே அவனுக்கு மாபெரும் அதிர்ஷ்டம் காத்திருந்தது.

## 10. "குழந்தைகளைக் காப்பாற்றுங்கள்!"

இருளில் வந்த உருவம் தன் கணவர் தான் என்று அல்லி புரிந்து கொண்டுவிட்டாள். இந்த நேரத்தில் மாளிகைக்குள் எப்படி வந்தார் என்றெல்லாம் அவளுக்குச் சிந்திக்க நேரமில்லை. இளம் குழந்தை ஆவலுடன் பாலைச் சுவைத்துக் கொண்டிருந்தது. அந்த இன்பத்தில் விழிகளை மூடி மெய்மறந்திருந்த அல்லி மெல்ல விழிகளைப் பாதிதான் திறந்தாள். கோவிந்தன் அவள் அருகே வந்து அமர்ந்து கொண்டான்.

அவள் உடல் நடுங்கியது. குழந்தையை இழுத்து அணைத்துக் கொண்டாள். "ஐயோ, இது அவராக இல்லாமல் இருக்கக்கூடாதா?" என்று சுவாமிமலை முருகனை வேண்டிக் கொண்டாள்.

"முருகா! உன் பன்னிரு முகங்களில் ஒரு முகம் அன்புடையவர் துதிக்க அவர்களுக்கு விருப்பத்துடன் வரத்தைக் கொடுக்கக்கூடியதாயிற்றே! எனக்கு உதவக் கூடாதா?" என்று வேண்டினாள்.

அவள் தந்தை கற்பித்திருந்த முருகன் துதியைச் சொல்லிக் கொண்டாள்.

"அல்லி, அல்லி" என்று மெல்ல அழைத்தான் கோவிந்தன். அந்த சொற்களில் கமழும் அன்பை இனிமையை அவளால் ஒதுக்கித் தள்ளிவிட முடியவில்லை. வாய் திறவாமலும், விழிகளைத் திறவாமலும், நன்றாக உறங்குபவள் போல் இருந்து விட்டால், அவன் போய் விடுவான் என்று எண்ணினாள். இதுபோன்ற இருளில் குடிலில் கணவன் வந்து மெல்லத் தொட்ட சம்பவம் நினைவில் வந்தவுடன் அவள் உடல் சிலிர்த்தது. அப்போது அவன் கரங்களைத் தன்னிடம் பற்றி இழுத்து இறுக அணைத்துக் கொண்டது நினைவுக்கு வந்ததுவுடன் அவள் இதழ்களில் புன்முறுவல் நெளிந்தது. ஆனால் மறுவிநாடியே அதை மறைத்துக் கொண்டாள். "அல்லி! அல்லி!" என்று அப்போது அவன் அவளைத் தொட்டு எழுப்பினான். அல்லி மெல்ல முனகுவது போல் பாசாங்கு செய்தாள், "உஸ்! சப்தம் போடாதே... நான்தான்" என்று மெல்லிய ஆனால் கரகரத்த குரலில் பேசினான் கோவிந்தன்.

அப்படியே படுத்திருக்க அல்லி விரும்பவில்லை. அதற்கு மற்றொரு காரணமுமிருந்தது. கோவிந்தனின் கரங்கள் குழந்தையை நோக்கி நீண்டன. குழந்தை பாலைச் சுவைத்துக் கொண்டிருப்பதைக் கூட அவன் இலட்சியம் செய்யாததை அறிந்த அல்லி, தன் அன்புக்கு ஏங்கி அவன் இங்கு வரவில்லை. அரக்க குணத்துடன் வந்திருக்கிறான் என்பதைப் புரிந்து கொண்டாள்.

அவனது கரத்தை அல்லி ஒதுக்கித் தள்ளினாள். அவளது விழிகள் அந்த இருளிலும் அக்னித் துண்டம்போல் ஜ்வலித்தன.

"இங்கே ஏன் வந்தீர்கள்? போய்விடுங்கள்..." என்று மெல்லிய குரலில் கூறினாள் அல்லி. அதில் எச்சரிக்கை பிரதிபலித்தது.

"அல்லி! குழந்தையை எடுத்துக் கொண்டு என்னுடன் வந்துவிடு. முடியாவிட்டால் குழந்தையையாவது என்னிடம் கொடுத்துவிடு" என்று அவள் கரத்தைப் பற்றினான் கோவிந்தன்.

அவன் கரத்தைப் பலத்துடன் தள்ளிய அல்லி, "போய் விடுங்கள், இங்கிருந்து, இருள் வேளையில் இப்படி இரகசியமாக வருவது உங்களுக்கே நியாயமாக இருக்கிறதா?" என்றாள்.

"நான் உன்னை மட்டும் தேடி வரவில்லை. இப்போது உன்னைவிட அந்தக் குழந்தை தான் எனக்கு வேண்டும்" என்றான் கோவிந்தன்.

"என்னையும் தரமாட்டேன். குழந்தைகளையும் தரமாட்டேன். வீணே வாதிடாதீர்கள். மெல்லிய குரல் இன்னும் வலுவடையும்.

பணிப்பெண்கள் எழுந்து விடுவார்கள். பிறகு நீங்கள் அகப்பட்டுக் கொள்வீர்கள். உங்கள் மனைவி என்று என்னை மற்றவர் அடையாளம் கண்டு கொண்டவுடன், 'பூதகி' என்று என்னை நினைத்து என்னையும் உங்களுடன் சிறையிலடைத்து விடுவார்கள்" என்று அல்லி மீண்டும் அவனுக்கு நல்லுரை கூறினாள்.

"என்னை யாரும் சிறைப்படுத்த முடியாது. நான் வீணே வாதிட விரும்பவில்லை. இந்த மாளிகைக்குப் பெரும் ஆபத்து வர இருக்கிறது. மாளிகையைச் சுற்றி என் ஆட்கள் சூழ்ந்து கொள்ளப் போகிறாக்ாள். சோழ வம்சத்துத் துளிரையும், பிஞ்சையும் கருக்கி விடப் போகிறார்கள். அதற்கு முன்பு நான் உன் மீதுள்ள காதலால் உன்னை எச்சரித்து, உன்னையும் தப்பிக்கச் செய்து குழந்தையையும் எடுத்துக் கொண்டோடி விட வந்தேன்" என்று கூறினான். மெல்லப் பேசுவதிலும் இவ்வளவு பயங்கரச் செய்திகளைக் கூற முடியுமென்பதை அப்போதுதான் உணர்ந்தாள். அல்லியின் மெய் சிலிர்த்தது.

"தங்கள் எண்ணம் நிறைவேறாது. நான் இப்போது கூக்குர லிடுவேன். என் கரத்தாலேயே தங்களைப் பிடித்துக் கொடுத்துவிடுவேன்" என்று அல்லி சீறினாள். அது நல்ல பாம்பின் சீறலாய்த் தெரிந்தது.

பல்லைக் கடித்துக் கொண்ட கோவிந்தன், "பெண் ஒரு பேதை என்று நன்றாகச் சொன்னார்கள். ஆனால் விடிவதற்கு ஒரு ஜாமத்துக்கு முன்பு இந்த சோழ கேரளத் திருமாளிகைக்கு என்ன கதி ஏற்படப் போகிறது பார். இந்த மாளிகையின் வாசலில் தான் காவல்காரர்கள் இருக்கிறார்களே தவிர, மற்ற மாளிகைக்குப் பாதுகாப்பு போதாது என்பது உனக்குத் தெரியாது. மல்லப்ப தேவனின் உதவியாளர்கள் பயங்கர ஆயுதங்களுடன் மாளிகையைத் தாக்கப் போகிறார்கள். அப்போது குழந்தை என்றும், பெரிய ராணி என்றும் பார்க்க மாட்டார்கள். என்னுடைய மனைவி என்றும் பரிதாபப்பட்டு உன்னை விட்டு விடமாட்டார்கள். அதற்காகத் தான் உன்னைக் காப்பாற்ற வந்தேன். நான் இங்கு வந்தது மல்லப்ப தேவருக்குத் தெரியாது. தெரிந்தால் என்னைக் கண்டதுண்டமாக வெட்டி விடுவார். அல்லி உடனே என்னுடன் புறப்பட்டுவிடு" என்று கோவிந்தன் பரபரப்புடன் அவளை வற்புறுத்தினான்.

அல்லியின் கோபம் உச்ச நிலையை அடைந்தது. "நீங்கள் எந்த இடத்திலும் உண்மையாக இருக்கமாட்டீர்கள் போல் தோன்றுகிறது. இப்போது உங்கள் தலைவருக்குத் துரோகம்

இழைக்கிறீர்கள். என்னை மட்டும் ஏன் காப்பாற்ற விரும்புகிறீர்கள்? இங்கிருந்து போய் விடுங்கள். உம்... போய்விடுங்கள்..." என்று சற்று உரத்த குரலில் பேசினாள்.

கோவிந்தன் தலையைப் பலமாக அசைத்தான். அல்லியிடமிருந்து குழந்தையைப் பறிக்க முற்பட்டான்.

அல்லி குழந்தையை அணைத்துக் கொண்டாள். குழந்தை விழித்துக் கொண்டது.

"இங்கிருந்து போய் விடுங்கள். நான் கூச்சலிடுவேன்..." என்று கூறி, அல்லி குழந்தையை மேலும் பாதுகாப்பாக அணைத்துக் கொண்டாள்.

குழந்தை சிணுங்கியது. திடீரென்று வீரிட்டு அழுதது. அல்லியைப் பிடித்து அவன் தள்ள எத்தனித்தபோது அல்லி "ஆபத்து ஆபத்து... உடனே ஓடி வாருங்கள்" என்று கூவினாள். குழந்தையை எடுத்துக் கொண்டு இருளில் தடுமாறியவாறு நடுக்கூடத்தை அடைந்தாள்.

யாரோ நடமாடும் ஓசை கேட்டது. திடுக்கிட்டு விழித்தெழுந்த பணிப்பெண் ஒருத்தி 'என்ன என்ன' என்று கேட்டவாறு எழுந்து வருவது தெரிந்தது.

கோவிந்தன் கணத்தில் தாவிக் குதித்தோடி இருளில் மறைந்தான்.

"அல்லி! கனவு ஏதாவது கண்டாயா?"என்று பணிப்பெண் கேட்டாள். விளக்கு ஏற்றப்பட்டது. அல்லிக்கு ஏற்பட்ட உடல் நடுக்கம் இன்னும் தீரவில்லை. பெரிய பிராட்டியும் எழுந்து விட்டாள். குழந்தை அழுது கொண்டிருந்தது.

கீழ் மடத்திலும் யாரோ எழுந்து பரபரப்புடன் பேசும் குரல் கேட்டது. பறவைகள் சில தமது சிறகுகளைச் சடசட வென்று அடித்துக் கொண்டு பறந்து சென்றன. ஓரிரு வௌவால்கள் அங்கும் இங்கும் பறந்தன. கூடத்தில் ஏற்றப்பட்ட ஒரே ஒரு விளக்கின் ஒளியில் அங்கு நிற்பவர்களின் நிழல் பயங்கரமாகத் தெரிந்தது.

அல்லி அழும் குழந்தையைச் சமாதானப்படுத்தியவாறு தொட்டிலில் உறங்கும் குழந்தையை நோக்கிச் சென்றாள். அந்தக் குழந்தை கவலையில்லாமல் உறங்கிக் கொண்டிருந்தது. நல்ல உறக்கத்தில் ஏதாவது கனவு கண்டிருக்க வேண்டும். உதடுகளைக் குவித்து அது சிரித்தது.

பெரிய பிராட்டியின் எதிரே போய் நின்ற அல்லி, "அம்மா! எனக்குப் பயமாக இருக்கிறது. காவலர்களை உடனே அழையுங்கள்" என்றாள்.

"ஏன், இப்படி நடுங்குகிறாய்? துர்சொப்பனம் ஏதாவது கண்டாயா?" – பெரிய பிராட்டி கேட்டாள்.

"கெட்ட சொப்பனம் அல்ல தாயே. கொடிய நனவு தான் தாயே! உண்மைச் சம்பவம் தாயே; கனவு அன்று. உடனே இங்கே தக்க பாதுகாவல் தேவை..." என்று அல்லி கூறினாள். அவள் குரலில் நடுக்கம். உடலில் நடுக்கம். பெரிய பிராட்டி மெல்லச் சிரித்தாள். "அல்லி! உனக்குப் புதிய இடம். ஏதாவது தீக்கனவைக் கண்டு பயந்திருப்பாய். கடவுளைத் துதித்து விட்டுப் படுத்துறங்கு, பயமாயிருந்தால், இங்கே இப்படி நடுக்கூடத்தில் உறங்கு..." என்று கூறி விட்டுப் பெரிய பிராட்டி சென்று விட்டாள்.

அல்லி செய்வதறியாது, சொல்வதறியாது திகைத்து நின்றாள். காற்று வேகமாக அடித்து எரிந்த விளக்கையும் அணைத்தது. மரக்கிளைகள் பலமாக அசைந்தன. யரோ பலர் வேகமாக ஓடிவரும் காலடி ஓசை கேட்டது.

"தாயே!... நான் கண்டது கனவன்று. குழந்தைகளுக்கு ஆபத்து நெருங்குகிறது தாயே! நான் சொல்வதைக் கேளுங்கள் தாயே!..." என்று அல்லி வாய் விட்டலறினாள்.

அவள் அஞ்சியது போல் ஆபத்து நெருங்கி விட்டது. தீவர்த்தியை ஏந்திய பலர், மாளிகை வாசலிலிருந்து ஓடி வருவது தெரிந்தது. அவர்களை நோக்கி மாளிகைக் காவலர்கள் கூச்சலிட்டவாறு தொடர்வதும், "பிடியுங்கள்... பிடியுங்கள்" என்று கூச்சலும், 'கிணிங் கிணிங்' என்று வாளுடன் வாள் மோதும் ஓசையும், கத்தி பாய்ந்ததால் 'ஆ'வென்று பயங்கர ஓலமும் மிக நெருக்கத்தில் கேட்டன.

இருள் திடீரென விலகி, செந்தணலின் நாக்குகளால் அந்த இடத்தில் பெரும் வெளிச்சம்.

"குழந்தைகளைக் காப்பாற்றுங்கள்" என்று அல்லி கூக்குர விடுவது பெருங்கூச்சலிடையே கேட்டது.

# 11. விதியின் எழுத்து

நெறியுடைப் பெம்மாள் என்று புகழ்ந்து போற்றப்படும் இராஜராஜ சோழனின் சகோதரி அறம்வளர் செல்வி தன் மகனான தியாகனைப் பழையாறை அரண்மனையில் சந்தித்தபோது அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. தன் தாயைப் பல ஆண்டுகளுக்குப் பிறகு சந்தித்ததால் எவ்வாறு பாசம் பொங்கிப் பாயுமோ அது போன்ற உணர்ச்சியைத் தியாகன் அடைந்தான். தாயின் முகத்தில் முன் எப்போதுமில்லாத பாச உணர்ச்சியுடன் பெருமை உணர்வும் பொங்கி வருவதைக் கண்டான்.

"தியாகா! வந்துவிட்டாயா? நீ வருவதை ஒவ்வொரு கணமும் எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்" என்றாள். செல்வி அவனைத் தழுவி உச்சி முகர்ந்து, கண்ணேறு கழித்து கன்னத்தில் முத்தமிட்டு மஞ்சத்தில் அமரச் செய்து, அவன் வழிநடைப் பயண விவரங்களைக் கேட்டறிந்த போது, தியாகன் ஆவலை அடக்க முடியாமல் "தாயே! உடனே வருமாறு என்னை வரவழைத்த காரணத்தைச் சொல்லுங்கள். நான் செய்ய வேண்டிய பணி ஏதாவது இருப்பின் உடனே சொல்லுங்கள். நிறைவேற்றிவிட்டு நான் உடனே வேங்கிக்குத் திரும்ப வேண்டும். எனக்கு உதவி செய்ய அங்கு பெரும் படையே திரண்டிருக்கிறது. நான் வேங்கியின் மன்னனாக வேண்டும் என்று தங்கள் ஆசையை நான் நிறைவேற்றும் தருணத்தில் வந்துவிட்டது" என்றான்.

செல்வி பெருமிதம் ததும்பும் பார்வையுடன், "வல்லபா! என் பிரார்த்தனை பலித்துவிட்டது. என் ஆசை நிறைவேறப் போகிறது. வேங்கிக்கு நீ திரும்பிச் சென்று அரச பதவியை அடைய வேண்டிய நிலைமை மாறிவிட்டது. " என்றாள்.

வல்லபனுக்குப் புரியவில்லை. "நான் வேங்கிக்குத் திரும்ப வேண்டாமா, போரிட வேண்டாமா? என்ன காரணம்? சொல்லுங்கள் தாயே, சொல்லுங்கள்" என்று பரபரத்தான்.

"சோழ நாட்டின் அரியணை உனக்காகக் காத்திருக்கிறது. தொண்ணூற்று விழுப்புண்களைப் பெற்ற விஜயாலய சோழ தேவர் அமர்ந்திருந்த சோழ சிங்காதனம் உனக்குக் கிடைக்கப் போகிறது" என்று கூறும்போது மகிழ்ச்சியால் வார்த்தைகள் வரமல் தடைப்பட்டன.

வல்லபன் திடுக்கிட்டான். "சோழநாட்டு அரியணையா? அம்மா, என்ன சொல்கிறீர்கள்? கனவில் நடக்கும் செய்தியைப் போல் ஏதோ கூறுகிறீர்கள். அதற்காகவா என்னைப் பலகாத தொலைவிலிருந்து வரவழைத்தீர்கள்?" என்று கேட்டான். குரலில் நம்பிக்கைக் குறைவு இருந்தது.

"இல்லை... இல்லை... கனவு இல்லை. கற்பனையில்லை; உண்மைதான் மகனே! நாள்தோறும் நான் வணங்கித் துதித்த அம்பலவாணன் அருள் புரிந்து விட்டான். உன் தாய்மாமன் விரும்பி உனக்கு அளிக்கும் பதவி" என்று செல்வி நடந்த செய்தியை விவரமாகக் கூறினார்.

"இளவரசர் பட்டத்தை உனக்குச் சூட்ட அவர் விரும்புகிறார். சோழநாட்டு முதலமைச்சரும் திருக்கோவலூர் மலையமானும் அப்போது உடனிருந்தார்கள். உன்னை உடனே வேங்கியிலிருந்து வரைவழைக்குமாறு கூறினார்கள். நான் உன்னைக் கேட்காமலேயே மன்னரிடம் சம்மதம் தெரிவித்து விட்டேன் ஆனால்..." என்று கூறிச் செல்வி நிறுத்தினாள்.

தாய் சொல்வது கற்பனையன்று, கனவின் நிகழ்ச்சி அன்று, உண்மைதான் என்று அறிந்தான் தியாகன். சோழநாட்டின் மாபெரும் இளவரசுப் பட்டம் மிக எளிதில் இளம் வயதில் தனக்குக் கிடைக்கிறது என்பதை அவனால் நம்ப முடியவில்லை.

" வல்லபா! என்ன யோசிக்கிறாய்?" என்று தாய் அவன் முகத்தை உற்று நோக்கியவாறு கேட்டாள்.

"சோழநாட்டு இளவரசுப் பொறுப்பு என்பது சாதாரணமானதா? ஆதித்த சோழரும் சுந்தர சோழரும் அருள்மொழிவர்மரும், இராசேந்திரசோழரும் குலோத்துங்க மாமன்னரும் இளவரசராயிருந்து தங்கள் திறமையை வலிமையைப் புலப்படுத்திய இடத்தில் எளிய வல்லபனால் அந்தப் பொறுப்பை நிர்வகிக்க முடியுமா? என்று சிந்திக்கிறேன்" என்று வல்லபன் கூறினான்.

தாய் செல்வி சிரித்தாள். "மகனே! கீழைச் சாளுக்கிய நாட்டின் அரசராக முயலும் நீ, இளவரசர் பதவியை ஏற்க ஏன் அஞ்சுகிறாய்? நானோ நீயோ கனவில் கூட எதிர்பாராத பதவி இது. உன்னுடைய திறமையை மன்னர் கவனித்து வந்திருக்கிறார். உன்னுடைய திறமை, வலிமை அவருக்கு நன்றாகத் தெரிந்திருக்கின்றன. பெற்ற தாய்க்கு மகனின் திறமை தெரியாதா? இப்போது அதைப் பற்றிய கருத்து வேற்றுமை யாரிடமும் இல்லை. ஆனால் நான் வாக்குறுதி ஒன்று கொடுத்திருக்கிறேன். அதை நீ நிறைவேற்ற வேண்டும்" என்றாள் செல்வி.

"தாயே! தாங்கள் கொடுத்த வாக்குறுதி என்னவென்று இன்னும் என்னிடம் சொல்லவில்லையே" என்று வல்லபன் கேட்டான்.

"மகனே! என் சகோதரரும், உன் தாய் மாமனுமான இராஜராஜ சோழ தேவருக்கு இவ்வளவு காலம் வாரிசை நிலைநாட்டக் குழந்தை இல்லை. ஓராண்டு முன்பு அவருக்குக் குழந்தை பிறந்து ஓராண்டு நிறைவேறுவதற்குள் மற்றொரு குழந்தையும் பிறந்துவிட்டது. ராஜகுருவின் யோசனையின் படி சக்கரவர்த்தி, எட்டாண்டுகள் அந்தக் குழந்தைகளைப் பார்க்கவே கூடாதாம். ஆனால் உடனே சோழ நாட்டின் இளவரசுப் பட்டத்திற்குரியவரை நியமித்தாக வேண்டும். ஒருவேளை ஈசன் செயலால் துரதிருஷ்டவசமாகச் சக்கரவர்த்திகளுக்கு ஏதாவது நேர்ந்து விட்டால் நீதான் சோழநாட்டுச் சக்கரவர்த்தி. ஆனால், இராஜராஜரின் குழந்தைகள் தக்க வயதை அடைந்து விட்டால் அவர்களிடம் நாட்டை ஒப்படைத்து விடவேண்டும். இந்த உறுதிமொழியைச் சக்கரவர்த்தி என்னிடம் கேட்டார். குழந்தைகளின் பாட்டன் திருக்கோவலூர் மலையமான் ஒருபடி மேலேயே உறுதிமொழி கேட்டார். 'குழந்தைகளுக்குச் சோழ அரியணையை விட்டுக் கொடுப்பதாக உறுதி கொடுத்தால் தான் இளவரசர் பொறுப்பை இப்போது ஏற்கலாம். அந்தச் சம்மதத்தை வல்லபன் இப்போதே சத்தியம் செய்தாக வேண்டும்" என்று... எனக் கூறி செல்வி நிறுத்தினாள்.

வல்லபன் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான். "தாயே! தாங்கள் அதற்கு என்ன மறுமொழி சொன்னீர்கள்?" என்று மெல்லக் கேட்டான்.

" என் மகனை உறுதியை ஏற்குமாறு நான் செய்கிறேன். அவன் என் சொல்லுக்குக் கட்டுப்படுவான் என்று வாக்குக் கொடுத்து விட்டேன்" என்று கூறி மகனின் முகத்தில் எழும் பிரதிபலிப்பை உற்று நோக்கினார் செல்வி.

வல்லபன் சிரித்தான். கடகடவென்று சிரித்தான். சிரிப்பை ஒருவாறு அடக்கி, "தாயே! இதென்ன விசித்திரமான வாக்குறுதி? இதுவரையில் சோழநாட்டிலே நடைபெறாத ஒரு செயலைச் செய்யுமாறு என்னை வற்புறுத்துகிறீர்களே!" என்று அவன் கேட்டான்.

"ஏன்! இதற்கு முன்பு நடந்திருக்கிறது. உனக்குப் பழைய வரலாறு தெரியுமா? பலநூறு ஆண்டுகளுக்கு முன்பு சோழநாட்டில் தஞ்சையில் பராந்தக சோழர் ஆண்டு கொண்டிருந்தார். அவருக்கு இராசாதித்தன், கண்டராதித்தன் அரிஞ்சயன், உத்தமசீலி என்று நான்கு புதல்வர்கள் இருந்தார்கள். மூத்த மகன் இராசாதித்தன்

போரில் கொல்லப்பட்டு வீரசுவர்க்கம் அடைந்தான். அவனுக்குப் பிறகு கண்டராதித்த தேவர் அரியணை ஏறினார். அவர் சிவபக்தி மிக்கவர். பல ஆண்டுகள் கழித்து அவருக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. குழந்தை பிறந்த சில நாள்களிலேயே தன் மகன் சிறு குழந்தை என்பதால் தன் இளைய சகோதரன் அரிஞ்சயனுக்குக் கண்டராதித்தன் பட்டம் சூட்டினார். மதுராந்தகன் தக்க பருவம் அடைந்ததும் அவனிடம் அரசு உரிமையைத் தருமாறு கூறிய கண்டராதித்தர் சேரநாட்டிற்குச் சிவத்தலங்களைத் தரிசிக்கச் சென்றார். பிறகு அங்கிருந்து மேற்குத் திசையிலுள்ள நாடுகளுக்குக் கலமேறிச் சென்றார். அதன்பின் நடைபெற்ற செய்தி தெரியவில்லை. இளவரசுப் பட்டம் சூட்டப்பட்ட அரிஞ்சயன் அரசரானார். என்ன துர்ப்பாக்கியம் தெரியுமா. சில ஆண்டுகளிலேயே அரிஞ்சயன் போர் ஒன்றில் உயிர் துறந்தார்..."

"பிறகு என்ன நேர்ந்தது?" - வல்லபன் ஆவலுடன் கேட்டான்.

"அது ஒரு பெரிய கதை! பிறகு சொல்கிறேன். சோழநாட்டில் இளவரசுப் பதவிக்கு எந்த விதத்திலும் போட்டி ஏற்படாமல் முதலமைச்சரும், குறுநில மன்னர்களும் ஒழுங்குபடுத்தி விடுவார்கள். இப்போதும் அவ்வாறே குழந்தைகள் பெரியவர்களான பிறகு அவர்களிடம் ஒப்படைக்க நீ சம்மதித்தால் இளவரசுப் பட்டத்தை ஏற்கலாம். உன் முடிவு என்ன?" என்று செல்வி கேட்டாள்.

வல்லபன் மௌனமாயிருந்தான். பிறகு அவன் சொன்னான். "தாயே! எனக்குப் பழைய வரலாறு தெரியும். அரிஞ்சயன் மகன் மதுராந்தகன் சிறு குழந்தையாயிருந்தார். ஆனால் அவருக்கு இளவரசுப் பட்டம் கிடைக்கவில்லை. அரிஞ்சயன் மகன் சுந்தரசோழரும், அவர் மகன் ஆதித்த கரிகாலனும் பிறகு அவர் சகோதரர் அருண்மொழியும் தொடர்ந்து இளவரசர்களாக விளங்கினார்கள். இப்போது மட்டும் என்னை விட்டுக் கொடுக்குமாறு ஏன் உறுதிமொழி கேட்கிறார்கள்?" என்று வல்லபன் கேட்டான்.

செல்வி திடுக்கிட்டாள். தான் சொன்னவுடன் அப்படியே தக் மகன் ஒப்புக்கொள்வான் என்று நினைத்தது போக அவன் விவாதத்தில் இறங்குகிறானே என்ற கவலை கொண்டாள்.

ஆனால் அவள் கவலையைப் போக்க வந்ததுபோல் முதலமைச்சர் பெருமான் நம்பிப் பல்லவரையர், "தக்க சமயத்தில் பதவியை விட்டுக் கொடுத்த பழைய கதையை நான் சொல்கிறேன்" என்று கூறிக் கொண்டே அங்கே வந்தார்.

# 12. நள்ளிரவில் உதவி

இருள் பகலானதைப் போன்று எங்கும் வெளிச்சம். சிவந்த தீ நாக்குகள் இருளை விழுங்குவது போல் இருளை நோக்கி நீண்டன. 'ஹோ' ஹோ' என்ற கூக்குரல் எங்கும் கேட்டது. பெண்களின் அபயக்குரல் பயங்கரத்தை அதிகம் செய்தது. வேகமாக ஓடுபவர்களும், ஓடுபவர்களைத் துரத்துபவர்களும், ஓடுபவர்களை 'விடாதே விடாதே என்று கூக்குரலால் பயமுறுத்தப் பார்ப்பவர்களுமாக அந்த இரவின் பின் ஜாமத்தில் அந்த மாளிகை அல்லோல கல்லோலப்பட்டது. சோழ கேரளன் திருமாளிகையின் ஒரு பகுதி எரிந்து கொண்டிருந்தது.

செய்வதறியாது ஒரு கணம் குழந்தையை அணைத்துக் கொண்டு நின்ற அல்லியினருகே வந்த பெரிய பிராட்டி, "நீ ஏதோ கனவு கண்டு உறக்கத்தில் பிதற்றுகிறாய் என்று நினைத்தேன். உண்மையாகிவிட்டதே" என்றாள். அந்த முதிய உடலிலும் நடுக்கம் இருந்தது. சிறிது நேரம் செய்வதறியாது இங்கும் அங்கும் நடந்தாள். பிறகு அல்லியின் அருகே வந்தாள். "அல்லி! பயப்படாதே. நம் வீரர்கள் நம்மைக் காப்பாற்றுவார்கள்" என்றாள்.

திடீரென்று மாளிகையை தாக்கி எரியூட்டச் சிலர் முயல்வதன் காரணம் பெரிய பிராட்டிக்குப் புரியவில்லை. கங்கை கொண்ட சோழபுரத்தைத் தாக்கும் பகைவர்கள் யார் இருக்கப் போகிறார்கள் என்று யோசனை கூட பெரிய பிராட்டிக்கு அப்போது தோன்றவில்லை.

"ஏன் இப்படித் திடீரென்று கலகம்? இடங்கை, வலங்கைப் படையினரின் கலகம் பல வருடங்களுக்கு முன்பு நடந்தது. மீண்டும் அப்படி கலகஞ்செய்பவர்கள் ஒருவருமில்லையே?..." என்று முணுமுணுத்துக்கொண்டாள் பெரிய பிராட்டி.

"அம்மா! குழந்தைகளைத் தூக்கிச் செல்லச் சிலர் சதி செய்கின்றனர்!" என்று அல்லி வார்த்தைகள் முழுமையையும் சொல்லவில்லை.

மேல் மாடத்தை நோக்கிச் சிலர் ஓடிவரும் அரவம் கேட்டது. கீழ்த்தளத்திலுள்ளவர்களின் ஓலம் அல்லியை நடுநடுங்க வைத்தது.

"காப்பாற்றுங்கள்" என்று அல்லி கூவியவாறு இங்குமங்கும் ஓடினாள். இப்போது அனைவரும் விழித்தெழுந்து விட்டனர். பணிப் பெண்கள் செய்வதறியாது திகைத்தனர். அரச குலத்து

உறவினர்கள் என்ன செய்வது என்று தெரியாமல் ஒரு மூலையில் பயந்து நின்றனர்.

அல்லி தொட்டிலிலிருக்கும் குழந்தைகளை எடுத்துக் கொண்டாள். இரண்டு குழந்தைகளையும் தோளில் சாய்த்துக் கொண்டாள். தூக்கம் கலைந்ததால் அவை வீரிட்டழுதன. படிக்கட்டுகளில் ஏறி ஓர் உருவம் அங்கே வந்தது. அந்த உருவத்தைத் தொடர்ந்து இரண்டு வீரர்கள். அல்லி பயத்தால் அலறினாள்.

"அல்லி!" என்று அந்த உருவம் குரல் கொடுத்தது. "பயப்படாதே. என்னைப் பின் தொடர்ந்து வா. ஒரு குழந்தையை என்னிடம் கொடு" என்றது அந்த உருவம்.

"நீங்கள்... நீங்கள்..." என்று அல்லி ஏதோ கேட்க வாயெடுத்தாள்.

"உம்... அதற்கெல்லாம் நேரமில்லை. பெரிய பிராட்டியையும் மற்றவர்களையும் வீரர்கள் அழைத்துச் செல்வார்கள். நீ என்னைத் தொடர்ந்து ஓட்டமும் நடையுமாக வரவேண்டும்" என்று கட்டளையிட்டது அந்த உருவம்.

சின்னஞ்சிறு சிறு கைகளும், கால்களும் பூவினும் மென்மையான மேனியும் கொண்ட சிறிய குழந்தையை அல்லி எடுத்துக் கொண்டாள். தொட்டிலிலிருந்த குழந்தையைத் தோளில் சாய்த்துக் கொண்டது அந்த உருவம். இரண்டு எட்டில் அந்த உருவம் விரைந்தது. அல்லியும் பின் தொடர்ந்தாள்.

மாளிகையைச் சுற்றி அடர்ந்து வளர்ந்திருந்த மரங்களின் நடுவில் இருந்த சிறு மண்டபமொன்றை அவர்கள் அடைந்தனர். மண்டபத்தின் நடுவே சுரங்கவழி திறந்திருந்தது. பூமியின் அடியில் இறங்கப் படிக்கட்டு இருந்தது. படிக்கட்டில் அகல்விளக்கு சிறு ஒளியை வீசிக் கொண்டிருந்தது. முன்பே பழக்கப்பட்டவர் போல் அல்லியை அழைத்துக் கொண்டு அந்த உருவம் சென்றது. சிறிது தொலைவு சென்றவுடன் தீவர்த்தியை ஏந்தியவாறு ஒருவன் நின்று கொண்டிருந்தான். சுரங்கப்பாதை மிகக் குறுகலாக இருந்தது. இயற்கையாகக் காற்று வீசுவதற்கு வழிவகைகள் செய்யப்பட்டிருந்ததால் மூச்சுத் திணறாமல் அவ்வழியில் செல்ல முடிந்தது. பின் தொடர்ந்து சிலர் வருவதும் சில கணத்திற்குள் புலப்பட்டது.

"நம்மை யாராவது பின் தொடர்கிறார்களா?" என்று அல்லி நடுக்கத்துடன் கேட்டாள். இரு குழந்தைகளும் அழுது கொண்டிருந்தன.

"பெரிய பிராட்டியாரையும், மற்றும் பெண்கள் சிலரையும் வீரர்கள் அழைத்து வருவார்கள்" என்று மட்டும் குரல் கொடுத்தது அவ்வுருவம்.

தன்னைக் காப்பாற்றி அழைத்துச் செல்வதாகத் தான் அல்லி நம்பினாள். அவளால் அந்த உருவத்தை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. தலையில் பெரிய முண்டாசுடன், போர்வையை முழங்கால் வரை மறைத்துக் கொண்டிருந்தாலும் மறைக்கப்படாத முகத்திலிருந்து அவளால் அடையாளம் கண்டு கொள்ளமுடியவில்லை.

சிறிது தொலைவு சென்ற பிறகு, "அல்லி! உனக்குச் சந்தேகமிருக்கும், நான் குழந்தையைக் காப்பாற்ற வந்தவன் தானா என்று. உன்னிடமிருப்பது போன்ற அடையாள மோதிரம் என்னிடமும் இருக்கிறது. இதோபார்!" என்று தன் கை விரல்களைக் காட்டியது அந்த உருவம். அல்லியின் சந்தேகமும்,. பயமும் நீங்கின. "இனி குழந்தைகளுக்கு அபாயம் இருக்காதல்லவா?" என்று அல்லி கேட்டாள்.

"இனி என்ன?... எப்போதும் குழந்தைகளுக்கு அபாயம் கிடையாது. ஆனால், குழந்தைகளைத் தக்க இடத்தில் மிகவும் கவனமாக வளர்க்க வேண்டும் என்பதற்காகவே இந்த மாளிகையினின்று, வெளியே கொண்டு செல்கிறேன்" - நடந்தவாறு கூறியது அந்த உருவம்.

"மாளிகையினின்று பெரிய பிராட்டியை ஏன் அழைத்துச் செல்கிறீர்கள்?" அல்லி கேட்டாள். அவள் கேட்டதற்கு உடனுக்குடன் அந்த உருவம் மறுமொழி கூறியது.

"இனியும் ஆபத்து ஏற்படாமலிருக்க."

"அப்படியென்றால் கங்காபுரியில் அரச குடும்பத்திற்குப் பாதுகாப்பு இல்லை என்று சொல்லுங்கள்..."

"ஆமாம், எதிர்ப்பு வலுவடையலாம்..."

"நம் வீரர்களை எதிர்த்துக் கலகஞ் செய்யக் கூடியவர்களும் இருக்கிறார்களா?"

"குழந்தைகளைக் கொல்லத் திட்டமிட்டுள்ள கலகக்காரர்களை அடக்குவதற்குப் பழையாறையிலிருந்து ஏராளமான படைவீரர்கள் வந்து விட்டார்கள். இந்த நேரத்துக்குள் மாளிகையைத் திடீரென்று தாக்கியவர்களைச் சுற்றி வளைத்துப் பிடித்திருப்பார்கள். அனைவரையும் ஒரே சமயத்தில் ஒரே இடத்தில் பிடித்துவிடவேண்டும் என்பதற்காகவே விட்டுப் பிடித்தோம்..."

இதைக் கேட்ட அல்லி நடுங்கினாள். அவளுடைய கணவனின் கதி?

"ஒருவர் கூடத் தப்பிவிட மாட்டார்களில்லையா?" அல்லியின் குரலில் பயத்துடன் கவலையும் இருந்தது.

"ஆமாம்; உன் கணவன் கூட அகப்பட்டுக் கொண்டிருப்பான்" என்று கூறியவுடன் அல்லி திடுக்கிட்டாள்.

இவர் யார்? எல்லாச் செய்திகளையும் தெரிந்து வைத்திருக்கிறாரே என்ற கவலை அவளைப் பீடித்தது. இவர் யார்?

"ஐயா! நான் தங்களைப் பார்த்ததேயில்லை. சகல விஷயங்களையும் தெரிந்து வைத்திருக்கிறீர்களே, தாங்கள் யார் என்று நான் தெரிந்து கொள்ளலாமா?" என்று அல்லி பயத்துடன் கேட்டாள்.

அவர் திரும்பிப் பார்த்தார். "அல்லி! நீ என்னைப் பார்த்திருக்க நியாயமில்லை. நான் பல ஆண்டுகளாக இந்தப் பக்கமே வரவில்லை. நான் தான் இந்தக் குழந்தைகளின் பாட்டனார்" என்று கூறினார் மலையமான்.

அல்லி அடைந்த வியப்பு ஒருவிதக் குரலோசையாக வெளிப்பட்டது.

"ஐயா! தக்க சமயத்தில் தான் வந்தீர்கள்" என்று அல்லி நன்றியைத் தெரிவித்துக் கொண்டாள்.

"தக்க சமயத்தை எதிர்பார்த்திருந்தேன். நான் காலையிலிருந்தே கங்காபுரியில் தான் இருக்கிறேன். சதிகாரர்களின் இருப்பிடத்தைக் கண்டு பிடிப்பதில் முனைந்திருக்கிறேன். சரியான சமயத்தில் அகப்பட்டுக் கொண்டார்கள். என் பெயரர்கள் இருவரையும் அழித்துவிடுவதன் மூலம் சோழ குலத்தையே நசுக்க முடிவு செய்துவிட்டார்கள். முடியுமா? சோழநாட்டை என் பெயரன் ஆளுவதினின்று தடுக்க ஒருவராலும் முடியாது" என்றார்.

சுரங்கப்பாதை முடிவடையும் இடம் வந்து விட்டது. தீவர்த்தி ஏந்தியவன் படிக்கட்டுகள் வழியாக மேலே ஏறுவது தெரிந்தது.

"ஐயா! ஒரே ஒரு சந்தேகம் கேட்கலாமா? இந்த இரு குழந்தைகளும் சேர்ந்தே நாட்டை ஆளப்போகிறார்களா?" என்று அல்லி கேட்டாள். அவர்களைக் காப்பாற்ற வந்த திருக்கோவலூர் மலையமான் பெரிதாகச் சிரித்தார்.

"நல்ல கேள்வி கேட்டாய் அல்லி! பெரியவர்கள் ஆனபிறகு யாராவது ஒருவன்தான் நாட்டை ஆளமுடியும். அதனால் தான் குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பை நான் ஏற்றுக் கொள்ளப் போகிறேன். நீ ஓர் உதவி செய்ய வேண்டும். திருக்கோவலூர்

அரண்மனை வரை குழந்தைகளைக் காப்பாற்றி அழைத்து வரவேண்டும்" என்றார்.

அல்லி திடுக்கிட்டாள். "திருக்கோவலூருக்கா? நம்பி அவர்கள் அப்படிச் சொல்லவில்லையே. அவருடைய உத்தரவு இல்லாமல் செய்யமாட்டேன்" என்றாள்.

மலையமான் ஒரு கணம் திகைத்தார். படிக்கட்டுகளில் நின்றவாறு, "என்ன சொன்னாய் பெண்ணே! என்னிடம் ஒப்படைக்க மாட்டாயா?" என்றார்.

"ஆம்" என்று அழுத்தந்திருத்தமாகக் கூறினாள் அல்லி.

"பெருமான் நம்பி சொன்னால் கேட்பாயா?"

"அவரது கட்டளையை மீற முடியுமா?"

"நான் குழந்தைகளின் பாட்டனல்லவா? நான் குழந்தைகளை அழைத்துச் செல்வதில் உனக்கென்ன ஆட்சேபம்?"

"எனக்கு, அரச குடும்ப விவகாரங்கள் தெரியாது, புரியாது. குழந்தைகளைப் பாதுகாக்க ஒப்படைக்க வேண்டுமென்று படைத்தலைவர் உத்தரவிட்டார். அதன்படிதான் நடப்பேன்."

மலையமான் மீண்டும் நகைத்தார். "அல்லி! இன்னும் சிறிது நேரத்தில் சுரங்கப்பாதை வெளியே நீ பெருமான் நம்பியைச் சந்திக்கப் போகிறாய். அவரே உன்னிடம் சொல்லுவார்" என்றார்.

சுரங்கப்பாதை கோட்டைக்கு வெளியே வந்து முடிந்தது. வெப்பக் காற்று நீங்கி வெளி உலக குளிர் காற்று புத்துணர்ச்சியை அளித்து, அழுது கொண்டிருந்த குழந்தைகளும் அழுகையை நிறுத்தினர்.

மலையமான் கூறியது போல் பெருமான் நம்பி பல்லவரையர் வீரர்களுடன் அங்கே நின்று கொண்டிருந்தார்.

அவர் தம் வலக்கை நான்கு விரல்களையும் மடித்துக் கொண்டு கட்டை விரலை மட்டும் உயர்த்திக் காட்டினார்.

மலையமானும், "பெயரர்களைப் பத்திரமாகக் கொண்டு வந்து விட்டேன்" என்று அவருக்கு மறுமொழி போல் கூறினார்.

"சோழ குலத்து அரசரை என்று சொல்லுங்கள்" என்று அவரைத் திருத்தினார் பல்லவரையர். "ஆகா, அப்படியே சொல்கிறேன். சோழ சக்கரவர்த்தியை பத்திரமாக அழைத்து வந்துவிட்டேன்" என்று கூறிய மலையமான் அல்லியைப் பார்த்தவாறு, "நம்பி! நீங்கள் தேர்ந்தெடுத்த பெண் அல்லி மிகக்கெட்டிக்காரியாக இருக்கிறாள். குழந்தைகளைத் தங்கள் அனுமதியில்லாமல் என்னிடம் ஒப்படைக்க மாட்டாளாம்" என்றார்.

"அவள் சொல்வது நியாயம்தானே? அவளிடம் தான் குழந்தைகளைப் பாதுகாக்கும் பொறுப்பை ஒப்படைத்தேன்" என்றார் பெருமான் நம்பி.

"அல்லி என்ன படைவீரர்களைத் தனக்குத் துணையாக வைத்துக் கொண்டிருக்கிறாளா குழந்தைகளைப் பாதுகாக்க?" என்று கேட்டார் மலையமான்.

"படை வீரர்களை விட மிகப்பெரிய ஆயுதம் அவளிடம் இருக்கிறது" என்று குறும்புச் சிரிப்புடன் கூறினார் நம்பி.

அல்லி புரிந்து கொண்டாள். தலையைக் குனிந்து கொண்டாள். மலையமான் புரிந்து கொள்ளவில்லை. நம்பி, அவர் காதருகே மெல்லக் கூறினார்.

"அதற்கென்ன, அல்லியையும் திருக்கோவலூருக்கு அழைத்துச் செல்கிறேன். அங்கே தங்கியிருந்து குழந்தைகளைப் பாலூட்டி வளர்க்கட்டும்" என்றார் மலையமான்.

"மலையமான் அவர்களே! குழந்தைகளிருவரையும் தக்கவர்களிடம் ஒப்படைக்கும் பொறுப்பை என்னிடம் அளியுங்கள். குழந்தைகளைத் திறமையுடன் வளர்க்கும் பொறுப்பை நானும் ஏற்க வேண்டாம். நீங்களும் ஏற்க வேண்டாம். விரோதிகள் நெருங்காத இடத்தில் அவர்களைக் கொண்டு சேர்ப்போம்" என்றார் பெருமான் நம்பி.

"என்ன சொல்கிறீர்கள், எனக்குப் புரியவில்லையே?" என்று கேட்டார் மலையமான்.

"முதலில் நாம் கங்காபுரியை விட்டுக் குழந்தைகளைக் கொண்டு சென்று விடுவோம்" என்றார் நம்பி.

பழையாறைக்குச் செல்வதை விடத் திருக்கோவலூருக்கு என் அரண்மனைக்குக் குழந்தைகளை அழைத்துச் செல்வது நியாயமாகத் தோன்றவில்லையோ தங்களுக்கு? மன்னர் சில ஆண்டுகளுக்குக் குழந்தைகளைப் பார்க்கவே கூடாது என்று ராஜகுரு சொல்லியிருக்கிறாரே, மறந்து விட்டீர்களா?" என்று மலையமான் கேட்டார்.

"ஆம். அதனால் தான் பழையாறைக்குக் குழந்தைகளை அழைத்துச் செல்லப்போவதில்லை. பெரிய பிராட்டியும், மற்ற அரச குலப்பெண்கள் மாத்திரம் ஆயிரத்தளி மாளிகைக்கு அழைத்துச் செல்லப்படுகின்றார்கள்..." என்று கூறி நம்பி நிறுத்தினார்.

"பிறகு, குழந்தைகள்?" - மலையமான் ஆவலுடன் கேட்டார்.

"கேசவ சுவாமியும், அரச அவைக் கவிஞர் கூத்தர் பிரானும் இராசராசபுரம் மாளிகையில் நமக்காகக் காத்திருக்கிறார்கள். அவர்களிடம் குழந்தைகளை அழைத்துச் செல்வோம். யார் எந்தக் குழந்தையை வளர்க்கும் பொறுப்பை ஏற்கிறார்களோ அவரிடம் ஒப்படைத்து விடுவோம்" என்றார் நம்பி.

மலையமான் சிறிது யோசித்தார். "நல்ல திட்டம் தான். கேசவ சுவாமி வடமொழியிலும், தர்க்கசாஸ்திரங்களிலும் ஜோதிடக் கலையிலும் வல்லவர், ராஜரிக முறைகளைத் திறம்படக் கற்றுக் கொடுப்பவர். பெரிய குழந்தையை அவரிடம் ஒப்படைப்போம். ஒட்டக்கூத்தர் மகாமேதை. மூன்று தலைமுறையாக அவர் அரச அவைக் கவிஞராக இருந்து மாபெரும் காப்பியங்களைப் படைத்தவர், முதிர்ந்த அறிவும், ஆற்றலும் மிக்கவர். ஒரு குழந்தையை அவர் ஒளிமிக்க மாமேதையாக ஆக்கட்டும்" என்றார்.

"யார் எந்த குழந்தையை ஏற்றுக் கொள்வார் என்பதை நாம் முடிவு செய்ய வேண்டாம். கேசவசுவாமியும், கூத்தர் பிரானும் முடிவு செய்யட்டும்" என்றார் பெருமான் நம்பி. அப்போது அல்லியிடமிருந்து விம்மும் ஒலி கேட்டது.

"அப்படியென்றால் நான் குழந்தைகளைப் பிரிந்து பழையாறைக்குச் சென்றுவிட வேண்டியதுதானா? பழையபடி பூந்தோட்டத்தில் மாலைகளைக் கட்டியவாறு சோகத்தில் மூழ்க வேண்டியதுதானா? என் கணவரைப் பிரிந்தேன். இந்தப் பச்சிளம் குழந்தை முகத்தைப் பார்த்தாவது வாழ்வில் அமைதியைத் தேடிக் கொள்ளலாம் என்று கனவு கண்டேன். என்னிடமிருந்து குழந்தைகளைப் பிரிக்காதீர்கள். நீங்கள் பிரித்தாலும் இந்தத் தெய்வங்களை நான் பிரியமாட்டேன்" என்று கூறிக் கண்ணீர் விட்டுக் கதற ஆரம்பித்தாள் அல்லி.

"அல்லி! வருந்தாதே. உன்னிடமிருந்து குழந்தையைப் பிரிக்கும் யோசனை எனக்கில்லை. பாலூட்டிப் பராமரிக்க வேண்டும் என்பதற்காகத் தானே உன்னை கங்காபுரிக்கு அனுப்பினேன்? பால் மறக்கச் சிறிய சிசுவை யார் வளர்க்க ஏற்றுக் கொள்கிறார்களோ அவரோடு அங்கேயே நீ இருக்கலாம்" என்றார் நம்பி.

இரு குழந்தைகளுள், சின்னஞ்சிறு பாலனை ஏற்றுக் கொள்ளப் போவது கேசவ சுவாமியா அல்லது கூத்தர் பிரானா என்ற ஆவல் அல்லிக்கு மட்டுமென்ன, மலையமானுக்கும் பெருமான் நம்பிப் பல்லவரையருக்கும் ஏற்பட்டது.

# 13. இளவரசனுக்கு ஓர் இளவரசி!

**சோ**ழச் சக்கரவர்த்தி ராஜராஜசோழ தேவரைச் சந்திக்கப் போகும் முன்பு, தன்னிடம் உறுதிமொழியைத் தர வேண்டும் என்று சோழ நாட்டு முதல் அமைச்சரும் மாதண்ட நாயகருமான திருச்சிற்றம்பலமுடையார் பெருமான் நம்பிப் பல்லவரையர் வல்லபனிடம் எதிர்பார்த்தார். தன்னை வேங்கியினின்று வரவழைத்து தாயும் தன் விழியாலேயே தன் சம்மதத்தை எதிர்பார்க்கிறார்கள்.

இப்போது சின்னஞ்சிறு குழந்தைகளாக இருக்கும் மன்னர்பிரானின் புதல்வர்களுள் ஒருவரிடம் தான் இளவரசுப் பதவியைப் பிறகு ஒப்படைக்க வேண்டுமாம்.

வல்லபன் மெல்லத் தனக்குத்தானே சிரித்துக் கொண்டான்.

"இளவரசரே! தங்களுக்குள்ளேயே மெல்லச் சிரித்துக் கொள்ளும் காரணத்தை நான்அறியலாமா?" என்று நம்பி கேட்டார். செல்வியும் மகனுடைய முகத்தையே கூர்ந்து நோக்கியவாறிருந்தாள்.

"வேங்கியிலிருந்தால் நான் கீழைச் சாளுக்கிய நாட்டு மன்னர். சோழ நாட்டிலோ இளவரசர்!! அதுவும் நிரந்தரமற்ற பதவி. விட்டுக் கொடுக்க வேண்டிய பதவி. நாளைக்குச் சாதாரணப் பிரஜையாக சோழநாட்டிலும் இருக்க முடியாமல், வேங்கியிலும் வாழ முடியாத நிலை ஏற்படுமே என்பதை நினைக்கும் போது சிரிப்பு வந்தது!" என்றான் வல்லபன். பிறகு உடனே தொடர்ந்து, "பெருமான் நம்பி அவர்களே! என்னை இளவரசர் என்று அழைக்கிறீர்களே அந்தப் பதவியைத் தர முடிவு செய்து விட்டீர்களா?" என்று கேட்டான்.

"இளவரசரே! கீழைச் சாளுக்கியநாட்டு அரசர் பதவியை விடச் சோழநாட்டு இளவரசர் பதவி உயர்ந்தது என்பது தங்களுக்குத் தெரியாததா?" என்று நம்பி கேட்டார்.

"எந்த விதத்தில் என்று அறியலாமா?" வல்லபன் கேட்டான்.

"கீழைச் சாளுக்கிய நாடு, சோழ மன்னர்கள் அளித்த பிச்சை என்பதும், இன்றளவும் சோழநாட்டுக்குத் திறைப்பணம் செலுத்தி வரும் சிற்றரசர்கள் தாம் அவர்கள் என்பதும் தங்களுக்குத் தெரியாதா?" என்று நம்பி கூறியதும் வல்லபன்

திகைத்தான். என்றாலும், தாயை நோக்கி, "அம்மா! தங்களுடைய இலட்சியமெல்லாம் என்னை வேங்கி சிங்காதனத்தில் அமர வைத்துப் பார்ப்பது ஒன்றுதானே? சோழ இளவரசர் பதவி குறித்துத் தாங்கள் இப்போது ஆசை கொண்டது ஏன்?" என்றான்.

"மகனே! வேங்கியில் நீ அரசனாக அமரவேண்டும் என்று எண்ணியது உண்மைதான். அது உன்னுடைய உரிமை இடம். ஆனால், சோழநாட்டு இளவரசர் பதவியை என் சகோதரர் உனக்கு விரும்பி அளிக்கிறார். இளவரசர் பதவிக்கு ஏற்றவன் நீதான் என்று உறுதியாக அவர் முடிவு செய்தபடியால் நான் உன்னை வரவழைத்தேன்" என்றாள் செல்வி.

"சக்கரவர்த்திகளின் எண்ணம் நியாயமானதாயிருக்கலாம். ஆனால் நிபந்தனை விதிப்பதைத் தான் என்னால் ஏற்க முடியவில்லை."

"இளவரசரே! நிபந்தனையை இப்போதே விதிக்காவிடில் பிறகு பல தொல்லைகள் ஏற்படக்கூடும். சோழநாட்டின் பட்டத்துக்கு எந்தவிதப் போட்டியும் பூசலும் வருங்காலத்தில் இருக்கக்கூடாது என்பதை எண்ணியே முன் எச்சரிக்கையாக நானும், மற்ற பெரியவர்களும் முடிவு செய்தோம்" என்று நம்பி மேலும் தொடர்ந்தார்.

"சக்கரவர்த்திகளுக்குத் தன் வாழ்நாளைப் பற்றிய ஏதோ ஓர் ஐயப்பாடு மனத்தில் குடி கொண்டிருக்கிறது. தன் வாழ்நாளின் இறுதி நெருங்குவதாக அவருக்குத் தோன்றுகிறது. சோழநாட்டின் வருங்காலத் திட்டம் தெளிவாக இப்போதே முடிவாக வேண்டும், தாம் அந்திம காலத்தை அமைதியாகக் கழிக்க வேண்டும் என்றும் அவர் எதிர்பார்க்கிறார்" என்று நம்பி கூறும்போது அவர் உணர்ச்சி வயப்பட்டவராகத் தோன்றினார்.

சிறிது நிறுத்திப் பிறகு தொடர்ந்து, "இளவரசரே! சோழநாடு இன்று எந்தவித பூசலுமின்றி அமைதியாக இருக்கிறது. ஆனால் நாளைக்கே பெரும் இடர்கள் ஏற்படலாம். பாண்டியர்கள் அப்போதே படைகளைத் திரட்டுவதாகக் கேள்வி. ஈழத்து அரசர்கள், சோழநாட்டின் மீது படை எடுத்துக் கைப்பற்றப் பெரும் சதித்திட்டம் வகுப்பதாக நம் ஒற்றர்கள் தெரிவித்துள்ளார்கள். இவற்றையெல்லாம் எதிர்பார்க்கும் போது சோழநாட்டில் திறமையுடன் பலமும் ஆற்றலும் மிகுந்த தலைமை இருக்க வேண்டும். சக்கரவர்த்திகள் இவற்றையெல்லாம் முன்பே திட்டமிட்டுச் செய்ய விரும்புகிறார். சின்னஞ்சிறு குழந்தைகள்

தாம் சோழநாட்டு வாரிசு. அவர்களை எளிதில் வென்று விடலாம் என்று எதிரிகள் மனப்பால் குடிக்கக் கூடாது. அதனால் தான்..." என்று நம்பி கூறி முடிப்பதற்குள், வல்லபன் குறுக்கிட்டான்.

"பெருமான் நம்பி அவர்களே! தங்களை விட அறிவும் பலமும் நிறைந்தவர்கள் இருக்கும்போது சோழ நாட்டிற்கு என்ன பயம்? குழந்தைகள் வளர்ந்து பெரியவர்கள் ஆகும் வரையில் தாங்களே ஆட்சியை நடத்தலாமே?" என்று கூறினான்.

செல்வியும், நம்பியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். நம்பி புன்முறுவல் பூத்தார்.

"முதலமைச்சர் சோழநாட்டை ஆண்டதாக இதுவரையில் சரித்திரமில்லை" என்று விடை பகர்ந்த நம்பி சற்றுக் குரலை உயர்த்தி, "இளவரசரே! சோழநாட்டு இளவரசர் பதவியை விட, வேங்கியின் சிற்றரசர் பதவி தான் தங்களுக்குப் பிடித்தமானதா? சொல்லுங்கள்?" என்று கேட்டார்.

வல்லபன் சிறிது யோசித்தான். "என் திறமையை நம்பி எனக்குச் சோழ இளவரசப் பதவியைச் சக்கரவர்த்திகள் அளிக்கிறார்கள் என்றால் அது என் முன்னோர்கள் செய்த புண்ணியம். என் தாய் என்ன கட்டளையிடுகிறாரோ, என்ன விரும்புகிறாரோ அதுவே என் விருப்பம்" என்றான்.

இதுவரை தன் மகன் என்ன சொல்லப் போகிறானோ என்ற கவலையில் வாடிய செல்வியின் முகத்தில் புதிய ஒளி மிளிர்ந்தது. "மகனே!" என்று ஆவலுடன் அழைத்து, அவனை அணைத்து ஆறத்தழுவி உச்சி முகர்ந்து முத்தமிட்டு ஆசி கூறினாள்.

பெருமான் நம்பி பல்லவரையர் எழுந்து நின்றார். "இளவரசரைப் பெற்றெடுத்த புண்ணியவதியே! சோழநாடு புண்ணியம் செய்து விட்டது. இளவரசர்க்கான மண்டை கவிழ்க்கும் சடங்குகளைச் செய்ய நல்ல நாளை உடனே பார்க்க வேண்டும். அந்த நாள் மகத்தான சோழ வள நாட்டின் வரலாற்றிலே திருப்பு முனையான நாள். நான் இப்போதே தங்கள் மகனைச் சக்கரவர்த்திகளிடம் அழைத்துச் செல்கிறேன். நான் கேட்ட உறுதியை இன்னும் தாங்கள் இருவரும் ஏற்றதாகக் கூறவில்லையே" என்றார்.

"தாங்கள் விரும்பிய வண்ணம் உறுதியை அளிக்கிறேன்" என்றான் வல்லபன்.

"என்னிடமோ, சக்கரவர்த்திகளிடமோ உறுதியளிப்பதைவிட, வருங்கால சோழ அரசரிடமே உறுதிமொழியை அளித்தால் போதும்" என்றார் நம்பி.

"சோழநாட்டின் இளவரசராகவும், பிறகு சக்கரவர்த்தி யாகவும் திகழப்போகும் அந்தக் குழந்தைகள் இப்போது எங்கே இருக்கிறார்கள்? அந்தப் புண்ணிய பூபதிகளை நான் காண வேண்டாமா?" என்றான் வல்லபன்.

"என் அருமைச் சகோதரரின் செல்வங்களை நானும் இன்றளவும் பார்க்கவில்லை. ஆயிரத்தளி மாளிகைக்குக் கங்காபுரியிலிருந்து அந்தப்புர மகளிர் எல்லாரும் வந்துவிட்டார்கள் என்று கேள்விப்பட்டேன். குழந்தைகளும் அங்கே தான் இருக்கிறார்களா?" என்று செல்வி கேட்டாள்.

"கங்காபுரியில் நேர இருந்த பெரும் ஆபத்திலிருந்து தப்பிய அந்தப்புரப் பெண்கள், பெரியபிராட்டி அனைவருமே இராச ராசபுர மாளிகையில் இருக்கிறார்கள். ஆனால் அரச குமாரர்கள் அங்கில்லை" என்றார் நம்பி.

"அவர்கள் எங்கே?" என்று செல்வியும் வல்லபனும் ஒரே குரலில் கேட்டார்கள்.

"குழந்தைகளைக் கொன்றுவிடச் சதித்திட்டம் தீட்டியவர்களின் சதியை முறியடித்துக் குழந்தைகளைக் கொண்டு வந்து தக்க இடத்தில் சேர்த்து விட்டோம்..." என்றார் நம்பி.

"நான் உடனே குழந்தைகளைப் பார்க்க வேண்டும்" என்று பரபரப்பும் ஆவலும் மிகக் கேட்டான் வல்லபன்.

"இளவரசே! தாங்கள் குழந்தைகளை உடனே பார்க்கத்தான் போகிறீர்கள். குழந்தையின் எதிரே வாள்மீது ஆணையிட்டுத் தாங்கள் உறுதி எடுத்துக் கொள்ளப் போகிறீர்கள். முதலில் நாம் சக்கரவர்த்தியின் சமூகத்தைக் காணச் செல்கிறோம். அங்கிருந்து குழந்தைகளைக் காணப் பயணமாகிறோம்" என்றார் நம்பி.

"பயணமாகிறோமா? அப்படியென்றால் குழந்தைகள் பழைய யாறையிலோ... இராசராசபுரத்திலோ இல்லையா?" என்று வல்லபன் கேட்டான்.

நம்பி தலையை அசைத்தார். "இளவரசரே! தங்களுடைய பட்டாபிஷேகம் முடியும் வரை குழந்தைகள் இருக்குமிடத்தை மிக இரகசியமாக வைத்திருக்க வேண்டியிருக்கிறது. பிறகு..." என்று கூறிய நம்பியை நோக்கிய வல்லபன் "பிறகு...?" என்று கேட்டான்.

"பிறகு குழந்தைகளைப் பாதுகாக்க வேண்டியது இளவரசரின் பொறுப்பு என்று கூறிச் சிரித்தார்.

"ஆகா, சோழநாட்டு வாரிசுகளைக் கண்ணும் கருத்துமாகப் பாதுகாப்பது என்னுடைய பொறுப்பு பல்லவரையரே! கண்ணை

இமை காப்பது போல் நான் காப்பாற்றுவேன்" என்றான் வல்லபன்.

திருச்சிற்றம்பலமுடைய பெருமான் நம்பி பல்லவரையர் வல்லபனை நோக்கி, "இளவரசரே! முதலில் தாயை வணங்கி ஆசிபெற்று அரசரைக் காணப் புறப்படுவோம்" என்றார்.

வல்லபன், செல்வியை வணங்கியபோது நம்பி செல்வியை நோக்கிக் கூறினார்: "நெறியுடைப் பெம்மாள் என்று புகழ்பெற்ற தாங்கள் சொன்ன சொல்லைக் காப்பாற்றுவீர்கள் என்ற நம்பிக்கையில் தங்கள் மகனை எதிரிலிப் பெருமாளை – சக்கரவர்த்திகளிடம் அழைத்துச் செல்கிறேன். தங்கள் மகன் சொன்ன சொல்லைக் காப்பாற்றுமாறு பார்த்துக் கொள்வது தங்கள் பொறுப்பு" என்றார்.

செல்வியின் மலரடியில் தன் சிரசைப் பதித்துப் பாதங்களில் கண்ணீர்த் துளிகள் சிந்த, எதிரிலிப் பெருமாள் ஆன வல்லபன் கூறினான்: "முதலில் என் தாயின் மீது ஆணை, தாய் சொல்லி என்றும் தட்டவே மாட்டேன்."

சோழச் சக்கரவர்த்திகளைச் சந்தித்த பிறகு வல்லபனுக்குப் புது பிரச்சினையொன்று எழுந்தது. அதற்கான ஏற்பாடுகளை விரைவில் செய்யுமாறும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். அத்துடன், பெருமான் நம்பியிடம் அவர் கூறிய மற்றொரு செய்தி வல்லபனைத் திடுக்கிடச் செய்தது. அது, திடுக்கிடும் படியான செய்தி இல்லை தான். குதூகலிக்க வேண்டிய மங்கலச் செய்தி தான் அது.

இளவரசர் பட்டம் சூட்டிக் கொள்ளத்தக்க வயது வந்தவர்க்கு உடன் திருமணத்தையும் முடித்து வைக்கும் பரம்பரைச் சம்பிரதாயம் தான் அது.

"பெருமான் நம்பி சற்று யோசித்தார். "அபிடேகப் பெயரைச் சூட்டுவதைக் குறித்து நாம் உடனே கலந்து ஆலோசித்து விடலாம். அதில் கூட நான் ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். இளவரசுப் பட்டம் சூட்டும் போது அபிடேகப் பெயர் அவசியமில்லை. தக்க அரசகுலப் பெண்டிரைத் தேர்ந்தெடுப்பதில் தான் தீர்க்காலோசனை தேவை. மற்றவர்களைக் கலந்து யோசிப்பதை விடத் தாங்களே முடிவு செய்து அறிவிப்பது தான் சரி என எனக்குத் தோன்றுகிறது" என்றார்.

அப்போது மலையமான் அங்கு வந்தார். வல்லபனுக்குத் திருமணம் என்ற செய்தி அவரைச் சிந்திக்க வைத்தது. திருமணப் பிரச்னை மூவரைச் சிந்திக்க வைத்தது.

பெருமான் நம்பிக்குத் தன் பெண்ணைச் சோழ அரச குலத்தவரொருவருக்கு மணம் முடித்து அரசகுலத்தவருடன் சம்பந்தப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் உடனே எழுந்தது.

மலையமான் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டார். அவரது சகோதரருக்கு அழகிய மகள் இருந்தாள்.

வல்லபனுக்கு இளவரசுப் பட்டம் என்பது உறுதியாகி விட்டது. மலையமான் குலத்துப் பெண்ணை மணம் புரிவித்துச் சோழர்களுடன் மீண்டும் ஏன் தொடர்பு கொள்ளக்கூடாது? இந்த நல்வாய்ப்பை இழந்துவிடக்கூடாது என்று முடிவு செய்து கொண்டார். பெருமான் நம்பியும் மலையமானும் அரசரிடம் தக்க தருணம் பார்த்துத் தனித்தனியே சொல்ல விரும்பினர்.

வல்லபன் கவலை தோய்த்த முகத்துடன் தாயிடம் சென்றான்.

"அன்றலர்ந்த செந்தாமரையின் வெல்ல வேண்டிய உன் முகம் கூம்பிப் போயிருக்கிறதே. என்ன நேர்ந்தது வல்லபா?" என்று கேட்டாள் செல்வி பரபரப்புடன்.

"தாயே! எனக்குத் திருமணமும் உடனே நடந்தாக வேண்டுமாம்! பட்டமேற்பு விழா நிகழ்ச்சியின் போது இளவரசர் இளவரசியுடன் அமர வேண்டுமாம்! அம்மா இங்கே விரைவாக நடப்பன எல்லாம் மிகவும் விசித்திரமாக இருக்கின்றன" என்றான்.

செல்வி அவ்வாறு கலகலவென்று நகைத்துப் பல ஆண்டுகளாகி விட்டன.

"மகனே! இதில் வருத்தப்பட என்ன இருக்கிறது? என் மகன் இளவரசன்! என் மகனுக்குத் திருமணம்! எனக்கு மருமகள் வரப்போகிறாள்! ஆகா, இதை விட மகிழ்ச்சியான செய்தி வேறென்ன இருக்கிறது?" என்றாள்.

தாயின் முகத்தில் ஏற்பட்ட மகிழ்ச்சியைக் கண்ட வல்லபன் தன் எண்ணத்தை எப்படி வெளியிடுவது என்று திகைத்தான்.

வேங்கியில் உள்ள சந்திரப்பிரபாவின் அந்த இரு விழிகள் அவன் கண்முன்னே தோன்றின. விரைவில் திரும்பி வருவதாக உறுதி கொடுத்து வந்த போது ஏக்கம் நிறைந்த விழிகளுடன் விடை கொடுத்த அந்த முகம் நினைவுக்கு வந்தது.

"வேங்கிலிருந்து சந்திரப்பிரபாவை இங்கே வரவழைத்துத் திருமணம் செய்து கொள்ளக்கூடாதா? சோழ நாட்டு இளவரசியாக அவள் ஆகக்கூடாதா? அருமைக் காதலி வேங்கியில் இருக்கும்

போது, மற்றொரு பெண்ணை நான் எவ்வாறு மணப்பது?" என்ற கவலை அவன் மனத்தில் சுழன்றது.

"மகனே! ஏன் மௌனமாகி விட்டாய்? ஏன் உன் முகத்தில் சோகம் நொடிக்கு நொடி வளர்கிறது? உன் உள்ளத்தில் தோன்றியுள்ள வேதனை தான் என்ன?" என்று செல்வி கேட்டாள்.

வேங்கியில் தனக்காக ஒருத்தி காத்திருக்கிறாள் என்பதைத் தாயாரிடம் சொல்லி விடலாமா என்று வல்லபன் எண்ணினான். தாய் வருத்தப்படுவாளே என்பதை நினைக்கும்போது, அந்த இரகசியத்தைச் சொல்லாமலே இருக்கலாம் என்றும் தோன்றியது.

ஆனால், செல்வி அவனை மிகவும் வற்புறுத்திக் கேட்ட பிறகு வல்லபன் தான் காதலித்திருக்கும் கீழைச் சாளுக்கிய நாட்டு மங்கை சந்திரப் பிரபாவைக் குறித்துச் சொன்னான். அது கேட்டுச் செல்வி திடுக்கிட்டாள்.

## 14. நம்பியின் மகள்

இளவரசுப் பட்டம் சூட்டுவதற்கான நாள் குறித்து அந்தச் செய்தியைச் சோழ நாட்டிலுள்ள குறுநில மன்னர்களுக்கு மட்டும் அறிவிக்குமாறு சோழ மாமன்னர் இராஜராஜன் கட்டளையிட்டார். பாண்டிய, கீழைச் சாளுக்கிய, கங்க நாட்டவர்களுக்கு அறிவிக்க வேண்டாம் என்று அவர் கூறியதன் உள்ளர்த்தம் மற்றவர்களுக்குப் புரியவில்லை.

மகிழ்ச்சி நிறைந்த இந்தச் செய்தியால் வல்லபன் மனத்தில் எந்தவித உற்சாகமுமில்லை. அவனுக்கு ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஒவ்வொரு புதுக் கவலையை அளித்து வந்தது. பட்டமேற்பு விழாவின் போது திருமணச் சடங்குகளை நிறைவேற்ற வேண்டும். மணப்பெண் யார்? தன் மனதுக்கு இனிய சந்திரப் பிரபாவை மணந்துகொள்ள முடியவில்லை. தாயும் அதற்குச் சம்மதம் தெரிவிக்கவில்லை. விரைவில் திரும்பி வருவேன் என்று சந்திரப் பிரபாவுக்கு வாக்குக் கொடுத்தது என்ன ஆவது? இளவரசர் வாக்குத் தவறிவிட்டார் என்ற அவப்பெயர் ஏற்பட வேண்டுமா?

திருக்கோவலூர் மலையமானின் வேண்டுகோள், அதிகாரக் கட்டளையாகத் தோன்றியது. தன் சகோதரனின் மகளை

வல்லபனுக்கு மணம் புரிவித்தே ஆகவேண்டும் என்ற தனது கோரிக்கைக்கு அவர் பலம் தேடிக் கொண்டிருந்தார். சோழச் சக்கரவர்த்திகளிடமும் அதைப் பற்றி அவர் கண்டிப்புடன் விவாதித்ததாகத் தெரிந்தது.

எல்லாவற்றிற்கும் மேலாக இப்போது வேறொரு பிரச்னை.

சோழச் சக்கரவர்த்திகளின் இரு குழந்தைகளை – சோழ நாட்டின் நியாயமான வாரிசுகளைக் காண பெருமான் நம்பி அழைத்துச் செல்வதற்கு முன்பு செல்லும் வழியில் வீட்டுக்கு வல்லபனை வரவேற்றார்.

சோழ நாட்டின் மாதண்ட நாயகரும், பிரதம மந்திரியுமான பெருமான் நம்பியின் இல்லம் பெரும் மாளிகையாக இருக்கும் என்று எண்ணிச் சென்ற வல்லபனுக்கு ஏமாற்றமே காத்திருந்தது.

காவிரிக் கரை ஓரமாகச் சின்னஞ்சிறிய தோட்டம். தோட்டத்தின் நடுவே, சிறு வீடு. மாடமில்லை. கூட கோபுரமில்லை. மதில் சுவரில்லை. ஓர் ஓரம் அமைதியாக, புலிக்கொடி தவழ்ந்து பறந்து கொண்டிருந்தது. விசாலமான திண்ணை, தாழ்வாரம், ஓடு வேயப்பட்ட அந்த வீடு, கோடை நாள்களிலும் செடிகொடிகள் அடர்ந்து வளர்ந்திருந்தன. சலசலவென்று காற்றில் ஓசை எழுப்பிக் கொண்டிருக்கும் அரசமரம் ஒன்று. ஓடும் அருவியின் நினைவை அவ்வப்போது ஏற்படுத்திக் கொண்டிருந்தது. மெல்லிய குரலில் புள்ளினங்கள் அவ்வப்போது குரல் எழுப்பி விட்டுப் பறந்து சென்றவாறிருந்தன. அணிலொன்று மிகச் சுறுசுறுப்பாக இங்குமங்கும் ஓடிக் கொண்டிருந்தது.

வல்லபனும், பெருமான் நம்பியும் வரும்போது பசுமாட்டுக்குத் திலகமிட்டுத் தட்டில் வாழைப்பழங்களை வைத்து தூபங்காட்டிக் கொண்டிருந்தாள் இளமங்கை நல்லாள்.

"நல்ல சகுனம்" என்று கூறிக் கொண்டே குதிரையினின்று இறங்கினார் நம்பி. வல்லபனும் இறங்கி, நம்பி எதைக் குறித்து அவ்வாறு சொல்கிறார் என்று அறியச் சுற்றும் முற்றும் பார்த்தான்.

மாமரத்தடியில் சோலைத் தேவதை போல் அழகு மங்கை, கோபூஜை செய்வதைக் கண்டான். நம்பி அதைத் தான் சொல்கிறாரோ? சோழ நாட்டில் ஆவினத்துக்கு நல்ல மரியாதை. வேங்கியிலும் இதுபோன்று பசுவுக்கு மரியாதை செலுத்தும் வழக்கததை ஏற்படுத்த வேண்டும் என்று எண்ணிக் கொண்டான்.

பூஜை செய்து கொண்டிருந்த பெண், புதியதாக அங்கு வந்திருக்கும் வல்லபனை ஒரேஒரு கணத்தில் விழிக்கோணத்தால்

அளவெடுத்துவிட்டு பூஜைப் பொருள்களை அப்படி அப்படியே வைத்து விட்டு வீட்டுக்குள் விரைந்து சென்று மறைந்தாள்.

நம்பி திகைத்தார். இரு கைகூப்பி வாருங்கள் என்று இன்முகம் காட்டித் தன் மகள் வரும் இளவரசரை வரவேற்பாள் என்று நம்பி நினைத்து விட்டாரோ! தாயற்ற அவர் மகள் திலகதேவி, அந்தக் குடிலுக்குத் தலைவி போல் இருந்து, வீட்டுவேலைகளை ஒன்றுவிடாமல் ஓய்வே இல்லாமல் செய்து கொண்டிருப்பாள். பணியாட்களுக்கு வேலையிடுவதும் ராஜாங்கக் காரியமாக வரும் அதிகாரிகளுக்குத் தந்தையின் சார்பில் மறுமொழி கூறுவதுமாக, ஓர் ஆண்மகனுக்குண்டான தைரியத்துடன் விளங்குபவள். இப்போது புதிய ஓர் இளைஞனைக் கண்டவுடன் மின்னலென மறைந்துவிட்டாள்.

நம்பி மெல்ல நகைத்துக் கொண்டார். "பெண்களுக்கே இயற்கையான நாணம் அவளிடம் தோன்றியதில் தவறில்லை. ஆனால், பாதியிலேயே பூஜையை நிறுத்தலாமா?" என்று மனத்துள் நினைத்துக் கொண்ட நம்பி, "திலகா, திலகா" என்று குரல் கொடுத்தார்.

மாமரத்தின் அடியில் இடப்பட்டிருந்த கருங்கல் மேடையில் நம்பியும் வல்லபனும் அமர்ந்தார்கள்.

"இளவரசருக்கு இந்தக் கல் ஆசனம் அளிக்கத் தான் இந்த ஏழையின் இல்லத்தில் வசதியிருக்கிறது. பொறுத்தருள வேண்டும்" என்றார்.

சோழநாட்டு சேனைத் தலைவர் மனம் வைத்திருந்தால் இதுவரை பெரிய மாளிகையைக் கட்டியிருக்கலாம். நூறு நூறு பணியாளர்கள் இங்குமங்குமாக நடந்து உற்ற ஏவல்களைச் செய்யக் காத்திருக்குமாறு செய்திருக்கலாம். யானை தந்தத்தாலான இருக்கைகள், மாளிகையில் அதிகம் அமைத்திருக்கலாம். ஏனோ நம்பி அடக்கமும், எளிமையும் தம் இல்லத்திலிருந்து முதலில் தொடங்க வேண்டும் என்று எண்ணியிருக்கிறார்.

அது நியாயமானது. எடுத்துக்காட்டு மிக்கது. அரசு அதிகாரிகளைப் போல் தானே மக்கள் வாழ விரும்புவர்? சோழ நாட்டு முதல் அமைச்சர் எளிய முறையில் வாழ்ந்தால் மக்களும் அவ்வாறே வீண் ஆடம்பரங்களைக் குறைத்துக் கொண்டு வாழ்வார்கள். வல்லபன் இவ்வாறு எண்ணிக் கொண்டிருக்கும் போது, "இளவரசே! பலமான சிந்தனையிலாழ்ந்து விட்டீர்கள் போல் தோன்றுகிறது" என்று கூறி அவன் கவனத்தைத் திருப்பினார்.

"கல் ஆசனம் உறுதியானது. அதில் அமர்ந்து ஆள்பவர்களும் உறுதியுடன் இருக்க வேண்டும் என்று இந்த இருக்கை தெரிவிக்கிறது"

என்று வல்லபன் கூறும்போது நம்பி அவனது முகத்தையும், அவன் பேசும் விதத்தையும் பேச்சிலுள்ள கருத்தையும் கூர்ந்து நோக்கியவாறிருந்தார்.

"பாறை என்றும் அழியாதது. உயரிய கலைஞர்கள் தமது நோக்கத்துக்கு ஏற்றவாறு அதை மாற்றி உருப்படுத்துவார்கள். அதுபோல் சோழ அரியணையும் அழியாதது. அதில் அமரும் மன்னர்கள் உயரிய கலைஞர்களைப் போல், நாட்டைச் செம்மையாக உருவாக்க வேண்டும் என்றும் பொருள் கொள்ளலாம்" என்று நம்பி கூறியபோது, அவர்கள் பேச்சைத் தடைப்படுத்துவது போல் அந்தப் பகல் வேளையிலும் ஒரு பரிபூரண மதி அங்கு ஒளி வீசியது.

திலகதேவி ஒரு தட்டில் இரண்டு குவளைகள் நிறைய மோருடன் வந்தாள். அமுத கலசம் ஏந்தி அழகுத் தேவதை பவனி வருவது போல் தோன்றிற்று.

"திலகா! பாதி பூஜையில் நிறுத்திவிட்டு ஓடிவிடலாமா? பூஜையை முடித்துவிட்டு எங்களுக்கு உபசரணை செய்வதை, வந்திருக்கும் விருந்தினர் தவறாக நினைக்கமாட்டார்" என்று கூறி, நம்பி வல்லபன் பக்கம் திரும்பி நோக்கினார். இதுவரை, திலக தேவியின் எழில் முகத்தையும் அவள் ஒயிலாக நடந்து வந்த நடை அழகையும், குனிந்து அவள் பணிவும் பரிவும் மிகுந்து தட்டை நீட்டியதையும், விழிகள் இரண்டும் மிகப் பொல்லாத்தனமாகத் தான் பாராக்காதபோது தன்னை நோக்குவதையும், தான் நோக்கும் போது நிலம் நோக்குவதையும், பிறகு இதழ்களில் மெல்லிய பூ நகையை மலர விடுவதையும் ரசித்தவாறிருந்த வல்லபன், நம்பி தன்னை நோக்குகிறாரென்று அறிந்தவுடன், திலகதேவியிடமிருந்து விழிகளைத் திருப்பி, மாமரத்தில் பூத்திருக்கும் மாம் பூக்களையும், பிஞ்சுகளையும் பார்த்து ரசிப்பது போல் நடிக்கலானான்.

. "திலகா, வந்தவரை அறிமுகப்படுத்தாமல் இருந்து விட்டேனே! விருந்தாளி என்று சாதாரணமாகக் கூறிவிட்டேன். சொல்லப்போனால் நாம் தான் அவரது மிகப் பரந்த சோழநாட்டின் நிரந்தர விருந்தாளி. இவர் – வல்லபன் – நாளைக்கே பராந்தகன் என்றோ, குலோத்துங்கன் என்றோ, வீர இராஜேந்திரன் என்றோ, இராஜாதிராஜன் என்றோ பட்டப்பெயர் சூட்டப்பெற்று அரியணையில் அமரப் போகிறார். அடுத்த பத்தாவது நாள் பழையாறையில் இவருக்கு இளவரசுப் பட்டம் சூட்டப் போகிறார்கள். கோலாகலமாக அந்த விழாவில் கலந்து கொள்ளப் போகிறோம்" என்று கூறியவுடன், திலகதேவி தன் அகன்ற

விழிகளை மடல் அவிழ்ந்த தாமரை போல் மேலும் பரக்க விரித்து, வல்லபன் திருமுகத்தை ஒரு கணம் ஆழ நிமிர்ந்து நோக்கி, இதயத்தில் அழியாது பதித்துக் கொண்டாள். அந்தப் பார்வையில் அரசகுலத்துக்கு உரிய கம்பீரம் இயற்கையாக அமைந்திருந்தது. மறுகணம் அவள் தலை குனிந்து, முகத்தில் செவ்வண்ணம் பரவ, நாணம் அந்தப் பூங்கொடியின் உடலில் தழுவ, மான் விழியில் மருட்சி ததும்ப, அதரங்கள் ஆயிரம் ஆயிரம் வார்த்தைகள் கொண்டிருப்பதைச் சொல்ல நினைத்தது போல் துடிக்க அங்கிருந்து துள்ளி ஓடிக் குடிலுக்குள் நுழைந்தாள். ஆனால் விழிப்பார்வை, உள்ளிருந்து நோக்குகின்றன என்பதை வல்லபன் கவனிக்காமலில்லை.

சோழநாட்டுச் சிற்பிகளின் கை வண்ணத்தை வல்லபன் அறிந்திருக்கிறான். இராஜராஜேச்வரக் கோயிலில் எழில்மிகு மங்கையர் சிற்பங்களை அழகு வடிவமாகச் சிற்பி படைத்திருப்பதைக் கண்டிருக்கிறான். இத்தகைய அழகு வடிவங்களைப் படைக்கச் சிற்பிக்குக் கற்பனை எவ்வாறு உதயமாயிற்று என்று அவன் எண்ணியதுண்டு. இப்போதுதான் அவன் 'அந்த உண்மையை அறிந்து கொண்டான். நம்பியின் மகளைப் போன்ற அழகிகளை மனத்தில் உருவகப்படுத்தி அற்புதச் சித்திரங்களைச் சிற்பி அமைத்தான் என்று அறிந்து கொண்டான்.

குடிலைச் சுற்றிப் பார்க்க வல்லபனை நம்பி அழைத்தார். குடிலைத் தழுவி ஓடும் காவிரி ஆற்றில் சிறிது நேரம் நின்று வர வல்லபன் விரும்பினான். பொன்னித்தாயின் எழில் கோலங்களைச் சிறிது நேரம் ரசித்துவிட்டு வல்லபன் குடிலை அடையும் போது, குடிலில் உள்ள அறையிலிருந்து திலகதேவியும், நம்பியும் பேசும் உரையாடலில் ஒரு பகுதி வல்லபன் செவிகளில் விழுந்தது. வல்லபன் சற்று நின்று கேட்டான்.

"சக்கரவர்த்தி மிகத் திறமைமிக்கவர் அப்பா! தகுந்தவரையே இளவரசராகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்" – இது திலகதேவி.

"திலகா! வல்லபன் அதிர்ஷ்டசாலி மட்டுமல்லன். அறிவும், ஆற்றலும் மிக்கவன். வீரமும் அழகும் ஒன்று கூடியதால் சோழநாட்டின் மற்றும் ஓர் அருள்மொழி வர்மர் பிறந்து விட்டாரோ என்றே எண்ணத் தோன்றுகிறது. அவருடைய திருக்கரத்தைப் பிடிக்கும் அதிர்ஷ்டசாலி யாரோ தெரியவில்லை" – என்று நம்பி பெருமூச்சு விட்டவாறு கூறுகிறார்.

"அப்பா! நான் கோபூஜையை முடிக்கும் சமயம், என் மனத்தில் ஒன்றை வேண்டிக் கொண்டேன். "கோமாதா! இந்த சோழநாட்டு இளவரசியாக ஆகும் பாக்கியம் எனக்குக்

கிடைக்குமா? என் தந்தை இந்த சாம்ராஜ்யத்தின் வளர்ச்சிக்கு உண்மையுடன் உழைத்து, நாட்டைக் காப்பதற்கு நம்பிக்கையுடன் தொண்டாற்றுவது உண்மையென்றால், தாயே! அவருக்கு, நீ அரசகுலத் தொடர்பை ஏற்படுத்திக் கொடு; காமதேனு தாயே! கோமாதா! என்று உள்ளம் நெகிழ வேண்டிக் கொண்ட அந்தக் கணம் நீங்கள் 'நல்ல சகுனம்' என்று கூறியவாறு வந்தீர்கள். என் மனத்திலும் புதிய ஒளி தோன்றியது. நிமிர்ந்து ஒரே கணம் அவரை நோக்கினேன்" – திலகவதி உணர்ச்சிவசப்பட்டுக் கூறுகிறாள்.

நம்பி மெல்ல நகைக்கும் ஒலி கேட்டது.

"திலகா! இளவரசரைப் பாதாதி கேசம் நன்றாகப் பார்த்துக் கொண்டாயா? அவரை உனக்குப் பிடித்திருக்கிறதா? இளவரசர் என்பதற்காக அவரை மணம் புரிந்து கொள்வதாக நீ நினைக்கக்கூடாது. உன் மனத்துக்கு அவரைப் பிடித்திருக்கிறதா?" என்று கேட்டார்.

திலகதேவி நாணத்தால் பேச வார்த்தைகளின்றி ஏதோ கூற முயல்வது மட்டும், ஒலிக் கோவையாகக் கேட்டது. நகையொலி எழுந்தது.

"திலகா! இளவரசரை வெளியே காக்க வைத்துவிட்டு உன்னுடன் பேசிக் கொண்டிருக்கிறேன். என்றும் மறவாது சிந்தையில் துதிக்கும் தில்லை அம்பலவாணர் அருள் இருந்தால் சோழ அரச குடும்பத்துடன் மணத்தொடர்பு ஏற்படட்டும். சோழச் சக்கரவர்த்திகளை இதுபற்றிக் கேட்பதற்கு முன்பு, இளவரசர் வல்லபனையே கேட்கப்போகிறேன். உன்னை அவர் ஒருமுறை காணவேண்டும் என்பதற்காகவே அரச அவைக் கவிஞர் கூத்தர் வீட்டுக்கு அழைத்துச் செல்வதற்கு முன்பு இங்கு அழைத்து வந்தேன். இப்போது கூத்தனூர் செல்கிறோம். திரும்பும்போது ஒருவேளை, நல்ல செய்தியுடனும் நான் திரும்பலாம். சோழநாட்டின் இளவரசியாக ஆகும் அதிர்ஷ்டம் உனக்கு இருக்க ஆண்டவன் அருளட்டும்" என்றார்.

நம்பி, குடிலுக்குள்ளிருந்து வெளியே வருவதற்குள், வல்லபன் ஏதும் கேட்காதவன் போல், ஏதும் அறியாதவன் போல் – மரத்தடிக்குச் சென்று விட்டான்.

குழந்தைகளைக் காணக் கூத்தர் வசிக்கும் கூத்தனூர் நோக்கிப் பயணப்படும்போது எந்தக் கணமும், அமைச்சர் பெருமான் நம்பி தன்னிடம் திருமண விஷயமாகப் பேசுவார். தன் மகளை மணந்து கொள்ளுமாறு வேண்டுவார் என்று வல்லபன் எதிர்பார்த்தான்.

நம்பியின் கேள்விக்கு என்ன மறுமொழி கூறுவது என்று வல்லபன் சிந்திக்கலானான்.

# 15. வல்லபனின் உறுதி

அரிசிலாற்றங்கரை ஓரமாகச் சென்ற சாலையில் பெருமான் நம்பியும், வல்லபனும் குதிரை மீது அமர்ந்து சென்று கொண்டிருந்தனர். இன்னும் ஒரு காத தூரம் சென்றால் கூத்தனூரை அவர்கள் அடைந்து விடுவர். முதுபெரும் கவிஞரும் சோழ அரசவைப் புலவருமான ஒட்டக்கூத்தரின் இல்லத்துக்கு இருவரும் சென்று கொண்டிருந்தனர். சில நாள்களுக்கு முன்பு பெருமான் நம்பி அதே சாலை வழியே சென்றிருக்கிறார். இரவு நேரம்; பிறைச்சந்திரனின் ஒளியில் துணைக்குக் குதிரை வீரன் ஒருவன் தீவர்த்தி ஒளி ஏந்தி வர அவர் விரைந்திருக்கிறார். அவர் சென்ற சிறிது நேரம் கழித்துத்தான், சிவிகையில் அல்லியும் சோழ குலத்துக் குழந்தைகளும் வந்தனர். அரச சிவிகை அது. குழந்தைகளும் அரச குழந்தைகள். அல்லி பட்டாடை அணிந்திருந்தாள். அவள் முகத்தில் கவலைக் கோடுகள் இல்லை. பால் கொடுத்து வளர்க்கும் பொறுப்பேற்றிருந்த இளைய குழந்தை அவள் மடியில் துயின்று கொண்டிருந்தது.

'ஹோ ஹோ ஹோ' என்று சிவிகை சுமப்பவர் எழுப்பும் ஒலி குழந்தைகளுக்குத் தாலாட்டுப் பாடுவது போலிருந்தது. சிவிகை இப்படியும், அப்படியும் அசைவது தொட்டில் ஆட்டுவதைப் போலிருந்தது. இரு குழந்தைகளுள் முதலில் பிறந்த இரு வயது நிறைந்த குழந்தையைத் தாம் வளர்ப்பதாக கேசவ சுவாமி ஏற்றுக் கொண்டுவிட்டார். இரண்டு குழந்தைகளும் ஒரே இடத்தில் வளர வேண்டாம் என்பது முதலமைச்சரின் யோசனை. இரண்டாவது இளைய குழந்தையைத் தாம் வளர்ப்பதாக சோழநாட்டு அரசவைக் கவிஞர் ஒட்டக்கூத்தர் ஏற்றுக் கொண்டார்.

நிசிக்குச் சிறிது நேரம் முன்பு, ஒட்டக்கூத்தர் வீட்டு வாயிற் கதவைப் பெருமான் நம்பி தட்டினார்.

பழங்கால வீடு, யானையும், குதிரையும், பல்லக்கும் சோழ மன்னர்கள் வேண்டுமளவுக்குப் பரிசாக அளித்திருந்தனர். அந்த ஊரையே கவிஞருக்குப் பரிசாக அளித்திருந்தார். மன்னர் இராஜராஜன். இராஜராஜனுக்குக் கூத்தர் பிரானிடம் மிகுந்த மரியாதை. அன்பு, பற்றுதல். எண்பது பிராயத்தையும் கடந்து விட்ட அந்த நிலையிலும் அவரை ஆதரித்து மிக மரியாதையுடன் நடத்தி வந்தார். அந்த ஊருக்கே கூத்தனூர் என்று பெயரிட்டு இறையிலி கிராமமாக அளித்தார். கவிஞர் எவ்வித இடர்ப்பாடும்

இல்லாமல் நிம்மதியாக வாழ வழி செய்திருந்தார். கரியும், பரியும், பணியாட்களுமாக அவர் நலங்களைக் காக்க அரசாங்க அலுவலர்களையும் அளித்துச் சிறப்பித்தார்.

கூத்தரும் மன்னர் இராஜராஜனிடம் மிகுந்த மரியாதையும் அன்பும் கொண்டார். இராஜராஜனுலா பாடி வேண்டிய பொன் பரிசில் பெற்றார்.

தன் மகன்களுள் ஒருவரைப் பாதுகாத்து வளர்க்கத் தக்கவர் கவிஞரவர்களே என்று அரசர் கருதினார். மூத்த குழந்தையை கேசவ சுவாமி ஏற்றது மிகவும் பொருத்தமுடையது என்று இராஜராஜன் கருதி, இளைய குழந்தையைக் கூத்தரிடம் ஒப்படைக்கும் பெருமான் நம்பி யோசனையைப் பெரிதும் பாராட்டினார்.

நடுநிசியில் கூத்தர் வீட்டுக் கதவை உரிமையுடன் தட்டக் கூடியவர் பெருமான் நம்பி ஒருவரே. உறக்கம் கலைந்து எழுந்து வந்த கூத்தர், வாயிலில் சோழநாட்டு மாதண்ட நாயகர் – முதல் அமைச்சர் நம்பி நிற்பது கண்டு வியப்படைந்து தம் சோர்வும் உறக்கக் கலக்கமும் மறந்து வரவேற்றார். சிறிது நேரத்தில் சிவிகையும் வந்து சேர்ந்தது.

அல்லியின் கரத்தில் தவழ்ந்த பச்சிளம் பாலகனை அரசுக் கவிஞர் கூத்தர் கண்டார்.

"அம்பலவாணா! உன் திருவிளையாடலை என்னென்று கூறுவேன்? சோழப் பெருவேந்தர்கள் மூவர் காலத்தில் நான் பெருவாழ்வு வாழ்ந்துவிட்டேன். சோழநாட்டு அரசிளங்குமாரனை வளர்த்து ஆளாக்கும் வரையில் நான் வாழ்ந்தாக வேண்டும் என்பது உன் திருவுளமோ?" என்று கூறிக் குனிந்து குழந்தையின் செவ்விதழில் முத்தமிட்டார்.

நம்பி மெல்ல முறுவல் பூத்து, "அரசவைப் பெருங்கவிஞரே! மூன்று அரசர்களைப் பற்றி உலா பாடிய தாங்கள் இந்தக் குழந்தை வளர்ந்து பெரியவனான பிறகு உலா பாடும் வரை நீடுவாழ வேண்டும்" என்று கூறினார்.

"எல்லாம் கலைவாணியின் அருள்" என்று கூறிய கூத்தர் குழந்தையை மிகச் சிறப்பாக வளர்க்கும் பொறுப்பை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஒரே ஒரு வீரனை மட்டும், சில ஆண்டுகள் கழித்து அனுப்புங்கள். வாள்வீச்சு, வேல் எறிதல் யானை – குதிரை ஏற்றம் கற்றுக் கொடுக்க" என்றார்.

"ஆகா, தமிழுடன் ஆய கலைகளையும் சோழகுலச் செல்வனுககுக் கற்றுக் கொடுக்கும் கடமையை ஏற்ற தங்கள்

இல்லத்தருகே போதுமான வீரர்கள் எப்போதும் இருப்பார்கள்" என்றார்.

**வ**ல்லபனை அழைத்துக் கொண்டு குழந்தையைக் காட்ட வந்த நம்பி வழியில், சோழநாட்டு அரசு அமைப்பைப் பற்றியும் உற்றவர்கள், விரோதிகள் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவர்கள் அடையாளங்களையும் கூறி வந்தார்.

மெல்ல மெல்லத் தம் மகளை அவனுக்கு மணம் புரிவிக்கும் தம் விருப்பத்தையும் தெரிவித்துக் கொண்டார். வல்லபன் உடனே ஏதும் பேசவில்லை. தர்மசங்கடமான திருமணப் பிரச்னையை எப்படி தீர்ப்பது என்று அவனுக்குப் புரியவில்லை. வேங்கியில் தான் விரும்பி வாக்களித்து வந்திருக்கும் மங்கையைக் குறித்துச் சொல்லி விட விரும்பினான்.

கூத்தர் வீட்டு கூடத்துத் தொட்டிலில் சோழகுலச்செம்மல் உறங்கிக் கொண்டிருந்தான். சோழநாட்டின் இளவரசரை வரவேற்கக் கூத்தர் காத்திருந்தார்.

வல்லபன், கூத்தர் பாதங்களில் வீழ்ந்து ஆசி பெற்றுத் தொட்டிலில் உறங்கும் குழந்தையைக் காணச் சென்றான். அல்லி அங்கே நின்று கொண்டு வல்லபனின் வனப்பு மிகுந்த கம்பீரத் தோற்றத்தை வியந்தவாறு இருந்தாள்.

'கூத்தர் வீட்டில் வளரும் குழந்தையா, கேசவ சுவாமியின் வீட்டில் வளரும் குழந்தையா எது நாளைக்கு நாட்டை ஆளும் உரிமையடையப் போகிறதோ – அவ்வாறு உரிமை வயதை அடையும்போது, இவர் தம் உரிமையை விட்டுக் கொடுப்பார்?' என்று அல்லி எண்ணினாள்.

"இளவரசர் அவர்களே! தங்களை இங்கே அழைத்து வந்த நோக்கமே, குழந்தையைக் காண வேண்டும் என்பது மட்டுமன்று, அரச அவைக் கவிஞர் எதிரே உறுதிமொழி பெறுவதற்கே. மனத்தை நன்றாகத் திடப்படுத்திக் கொள்ளுங்கள். அரச வாழ்வின் சுகபோகங்களை அனுபவித்துவிட்டு, அதைத் தியாகம் செய்வது என்பது எளிதான காரியமன்று, பார்வையற்ற குருடனுக்கு விழியை அளித்துப் பிறகு பறிப்பது போல, ஊமைக்குக் குரல் கொடுத்துப் பிறகு பறித்து விடுவது போல... வரலாற்றில் மிக முக்கியமான கட்டம் வருங்காலத்தவர் என்னையும் சேர்த்தே குறை கூறுவார்கள். பட்டத்துக்கு உரிமையுடையவனை மறைத்து வேறு ஒருவருக்கு நாட்டை ஆள உரிமையாக்கியவர்களுள் முதல் அமைச்சர் நம்பியும் பெரும்பங்கு வகித்தார் என்று செப்பேட்டில் எழுதி விடுவார்கள். இளவரசர் வல்லபர் அவர்களே! அரச

அவைக் கவிஞர் எதிரே பச்சிளம் பாலகனுக்கு உறுதி செய்து கொடுக்கவே அழைத்து வந்தேன்..." என்றார் நம்பி.

"இரு குழந்தைகளின் முன்னிலையிலும் உறுதி செய்து கொடுப்பது தானே முறை?" என்றார் கூத்தர்.

"ஆம், நாளைக்குக் கேசவ சுவாமியைச் சந்திக்கச் செல்கிறோம்" என்றார் நம்பி.

"ஆகா; கேசவ சுவாமியா? முக்காலமும் உணர்ந்தவர் அவர். அவருக்குத் தெரியும் வருங்காலம்..." என்றார் கூத்தர்.

"அவர் வருங்காலம் உணர்ந்து கூறியபடிதான் எல்லாம் நடக்கின்றன. குழந்தைகளை அரசர் பார்க்கக்கூடாது என்ற அவர் கருத்துப்படி குழந்தைகளை வெவ்வேறிடங்களில் வளர விடுகிறோம். எட்டாண்டுகள் வரை குழந்தைகளுக்குப் போதாத காலமாம். பகைவர்கள் எந்தக் கணமும் உயிருக்கு ஊறு விளைவிக்கலாமாம். பிறகு சிறுகுழந்தைகளுள் ஒருவரிடம் நாட்டை அளித்துவிட்டு இளவரசர் விலகவேண்டும். கேசவ சுவாமி கூறிய சொல்லை அப்படியே கூறுகிறேன்" என்றார் நம்பி.

கூத்தர்பிரான், வல்லபனின் முகத்தைக் கூர்ந்து நோக்கினார். பிறகு மெல்ல நகர்ந்து, கூடத்தில் அம்பலவாணர் சிலைக்கு அருகே சென்று, அங்கிருந்த திருநீற்றுக் கிண்ணத்திலிருந்து திருநீறு எடுத்து வந்து வல்லபனுக்கும் நம்பிக்கும் அல்லிக்கும் அளித்து, "எல்லாம் அவன் செயல். குறைவின்றி நடக்கும். இருப்பினும் என் உள்ளத்தின் ஒரு மூலையில் அச்ச உணர்வு சிறிது படர்கிறது. சோழநாட்டில் சில நாள்களில் துக்ககரமான சம்பவமொன்று நடைபெறுமோ என்ற கவலை தோன்றுகிறது. தில்லை அம்பலவாணர் அருளால் எல்லாம் நன்மைக்கே" என்று கூறித் தாமும் நெற்றியில் விபூதியை அணிந்து கொண்டார்.

நம்பியின் உடல் மெல்ல நடுங்கியது. "கவிஞர் பிரானே! கேசவ சுவாமியும் இது போன்றே கூறினார். எதற்கும் அஞ்சாத என் உள்ளத்திலும் சிறிது அச்ச உணர்வு ஏற்படுகிறது" என்றார்.

"பெருமான் நம்பி அவர்களே! தாங்கள் அருகிலிருக்கும் வரை ஒருவித இடரும் இந்த நாட்டை அணுகாது. மேலே ஆக வேண்டியதைக் கவனியுங்கள். இளவரசுப் பட்டம் சூட்டும் கோலாகலத் திருவிழாவை நடத்துங்கள்" என்றார்.

வல்லபன் தலைநிமிர்ந்து நின்றான். தன் இடையிலிருந்து வாளை உருவினான்.

"சிபிச் சக்கரவர்த்தி, கோச்செங்கணான், விஜயாலயர் வழிவந்த சோழநாட்டின் இளவரசுப் பொறுப்பை ஏற்கும் நான், இங்குள்ள முதல் அமைச்சர், அரச அவைக் கவிஞர் முன்னிலையில் எடுத்துக் கொள்ளும் உறுதிமொழி. வேங்கிக்கும், கங்காபுரிக்குமாக அலைந்து கொண்டிருந்த எளியவனுக்கு இறையருளால் சோழநாட்டு இளவரசுப் பட்டம் கிட்டுகிறது. இங்குத் தொட்டிலில் உறங்கும் பாலகனும், கேசவசுவாமியிடத்து வளரும் பாலகனும் இளவரசராகக் கூடிய பருவத்தை அடையும்போது அவர்களுள் ஒருவருக்கு இளவரசர் பொறுப்பை அளிப்பேனென்றும், இளவரசராகும் செல்வன் என்று வேண்டுகிறாரோ அன்று அரசுப் பதவியையும் துறந்து செல்லச் சித்தமாயிருக்கிறேன் என்றும் உறுதி கூறுகிறேன். என் தாயின் கட்டளைப்படி அவ்வாறு சொல் மாறாமல் நடப்பேன் என்று உறுதி கூறுகிறேன். இங்குள்ள பெரியவர்கள் முன்னிலையில் நான் உரைத்த உறுதியை மீறமாட்டேன் என்று உறுதி கூறுகிறேன்."

இவ்விதம் கம்பீரமான, உறுதியான குரலில் கூறினான். நம்பியின் கண்களில் இன்பக் கண்ணீர் பெருகியது. கூத்தர் உணர்ச்சிவயப்பட்டார். வைத்த விழி எடுக்காமல் நோக்கியவாறிருந்த அல்லி, தொட்டிற் குழந்தையின் கன்னங்களைத் தொட்டு திருஷ்டி சுற்றினாள்.

குழந்தை விழித்துக் கொண்டது. தன் பொக்கை வாய் காட்டிச் சிரித்தது.

"என் செல்வமே! என்று எடுத்து அல்லி அணைத்துக் கொண்டாள்.

கூத்தரின் ஆசிபெற்றுப் புறப்பட்ட வல்லபனும் நம்பியும், கேசவ சுவாமியிடம் சென்றனர். அங்கும் வல்லபன் உறுதிமொழி ஏற்றுக் கொண்டான்.

"பெருமான் நம்பி அவர்களே! எல்லாம் நல்லபடியாக நடக்கும். வல்லபனின் மிக அருகே அதிர்ஷ்ட தேவதை நிற்கிறாள். நவகோள்களின் பலன்கள் மிகவும் உதவும் வகையில் உள்ளன. மகத்தான புகழோடு வல்லபன் விளங்குவான். ஆனால் – வருங்காலத்தில் இந்தக் குழந்தைகளுள் ஒருவருக்கு விட்டுக் கொடுக்காமல் உடும்புப் பிடியாக அரியணையில் அமர்ந்திருந்தால், சோழநாட்டிற்கு பெரிய ஆபத்து வருவது உறுதி" என்றார்.

"சுவாமி, தங்களுக்குத் தெரியாதா? நான் எத்தகைய குணமுடையவன் என்பதைத் தாங்கள் உணர்ந்திருக்க மாட்டீர்களா?" என்று கேட்டான் வல்லபன்.

"விதியை மாற்ற எந்த ஞானியாலும் சர்வேசுவரனாலும் முடியாது. அவன் இட்ட விதியை அவனாலேயே மாற்ற முடியாது. எல்லாம் அவன் ஆணைப்படி நடக்கும். வல்லபா! நீ எதிர்பார்த்ததை விட மகத்தான அதிர்ஷ்டங்கள், பதவிகள் உன்னை மிக விரைவில் நெருங்கப் போகின்றன. என்னிடம் வளரும் குழந்தையா, கூத்தரிடம் வளரும் குழந்தையா? யார் வருங்கால அரசர் என்று இப்போது சொல்லமுடியாது. அதனால் தான் இரண்டு குழந்தைகளின் எதிரிலும் உறுதி எடுத்துக் கொள்ளுமாறு சொல்லியிருந்தேன். உலகிலேயே மிக முக்கியமான கடமைகள் மூன்று. தாய் சொல் தட்டாமை, கொடுத்த வாக்கு மீறாமை, பிறர் உடைமையை அபகரிக்காமை. ஆட்சிப் பொறுப்பில் அமர்பவர்கள் பின் இரண்டு தர்மங்களைக் கடைப்பிடிப்பது மிகவும் சிரமம். கடைப்பிடித்தாலோ அழியாப் புகழ் உறுதி" என்று கூறி வாழ்த்தி அனுப்பினார்.

கேசவ சுவாமியிடம் தனியாக நெருங்கின பெருமான் நம்பி, வல்லபன் திருமணத்தைக் குறித்துக் கேட்டார். தம் மகளை மணம் புரிவிக்க வேண்டிய ஓர் எண்ணம் தன்னிடம் உதித்திருப்பதைக் கூறி யோசனை கேட்டார்.

கேசவ சுவாமி சிறிது நேரம் தியானத்தில் இருந்து விட்டு, "நம்பி! உன் எண்ணம் நிறைவேற வேண்டுமானால் நீ பலருடன் விரோதம் கொள்ள வேண்டும். ஆனால் வல்லபனுக்கோ பலதார யோகமிருக்கிறது. இதில் திட்டமாக நான் ஏதும் சொல்லமுடியாது. வல்லபனின் தாய் என்ன சொல்கிறாளோ அதன்படி நடக்கட்டும்" என்றார்.

நம்பி வீட்டை அடைந்தவுடன், ஆவலுடன் காத்திருந்த அவருடைய மகள் கேட்டாள்; "என்ன முடிவு ஏற்பட்டது அப்பா?" என்று. நடந்தவற்றை விவரித்த நம்பி, "நானே கேட்கவில்லை, வல்லபனே பேசினான். உன்னை ஒரு கணம் பார்த்ததிலிருந்தே அவனுக்கு உன்னைப் பிடித்துவிட்டது. ஆனால் நான் அறிந்த வரை வேங்கியில் அவனுக்கு ஒரு காதலி இருக்கிறாள். அந்தக் காதலைத் தடை செய்ய என்னால் முடியும். ஆனால், திருக்கோவலூர் மலையமானின் குறுக்கீட்டைத் தடைசெய்ய வேண்டுமானால், நான் அவருடன் விரோதம்

கொள்ள வேண்டும். என்ன செய்வதென்று புரியவில்லை. எல்லாம் அம்பலவாணன் அருள்" என்றார்.

வல்லபன் தன் தாயிடம் நடந்தவற்றைக் கூறி, "இளவரசுப் பட்டம் ஏற்கும் போது, எனக்குத் திருமணம் நடந்துதான் ஆக வேண்டுமாம். நான் வேங்கியிலிருந்து சந்திரப்பிரபாவை உடனே வரவழைக்கட்டுமா?" என்று கேட்டான்.

வல்லபனின் தாய் செல்வி திடுக்கிட்டாள். கோபங் கொண்டாள். வல்லபன் திருமணம் குறித்து அவள் கூறிய யோசனை வல்லபனைத் திகைக்க வைத்தது.

## 16. வாக்குத் தவறாதவர்!

துங்கபத்திரை ஆறு பெரும் சுழலுடன் ஓடிக் கொண்டிருந்தது. நதிக்கரையில் படித்துறையில் அமர்ந்து சந்திரப் பிரபா, ஓடும் பெரும் வெள்ளத்தையே உற்று நோக்கியவாறிருந்தாள். அவள் உள்ளத்தில் எழுந்த பெரும் சுழற்சி, சிந்தனைப் பிரவாகமாய்ப் பெருக்கெடுத்துக் கரையை மீறிப் பொங்கிப் பாய்ந்து கொண்டிருந்தது.

அவள் ஓட்டி வந்த கன்று காலிகள் நதிக்கரை ஓரம் மேய்ந்து கொண்டிருந்தன. அவள் நேரம் போவது தெரியாமல் அமர்ந்து கொண்டிருந்தாள். இன்று வருவார், நாளை வருவார் என்று அவள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த வல்லபன் வரவில்லை. தெற்கே கங்காபுரிக்கு எதற்காகச் சென்றார் என்று அவள் அறியாமல் பல நாள்கள் இருந்தாள். பிறகு தந்தையை வற்புறுத்திச் செய்தி அறிந்துவரச் செய்தாள்.

இரண்டு நாள்களுக்கு முன்பு அந்தச் செய்தி வந்திருந்தது. அவளுடைய தந்தை மிகவும் மகிழ்ச்சியுடன் வல்லபன் சோழநாட்டு இளவரசராகப் போவதைக் குறித்துத் தெரிவித்தார். தம் மகள் மனம் மகிழ்ச்சியால் துள்ளும் என்று எண்ணினார். ஆனால், அதற்கு மாறாகச் சந்திரபிரபா மௌனமாகி விட்டாள். சரியாக உண்பதில்லை. உறக்கத்திலும் வல்லபன் நினைவுதான். நதிக்கரைக்குச் சென்றால் ஓடும் நீரைப் பார்த்தவாறு நேரம் போவது தெரியாமல் இருந்தாள். தாயற்ற அவளை எப்படித் தேற்றுவது என்று தெரியாமல் அவள் தந்தை தவித்தார்.

"மகளே! இப்படி நீ கவலையுடன், ஊண் உறக்கமின்றி இருந்தால் உன் உடல் நிலை என்னவாகும்?" என்று அவள் தந்தை கூறி அவளைத் தேற்ற முற்பட்டார்.

சந்திரப்பிரபாவின் விழிகளில் நீர் தளும்பியது. "நான் அவரைப் பார்க்க வேண்டும் அப்பா!" என்று கூறி விம்மினாள்.

அவள் தந்தை திடுக்கிட்டார். "அவரைச் சந்திப்பது என்பது அவ்வளவு எளிதான செயலா, மகளே?" என்று கவலையுடன் கேட்டார்.

"என்னைப் பொறுத்தவரை எளிதுதான்" என்றாள் சந்திரபிரபா.

"தெற்கே வெகுதொலைவில் கங்காபுரி இருக்கிறது" என்றார் அவள் தந்தை.

"இருக்கட்டுமே! என் மனம் இப்போது அங்கு தான் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறது. அவர் இளவரசராகப் போகிறாராம். இப்போது அவர் என்ன செய்து கொண்டிருப்பார் என்று நினைத்துப் பார்க்கிறேன்" என்று நதியின் ஓட்டத்தைப் பார்த்தவாறு கூறினாள் சந்திரபிரபா.

"இப்படியே நினைத்துக் கொண்டிருந்தால் அவரைப் பார்த்தது போலாகி விடுமா?" என்று அவள் தந்தை சலிப்புடன் கேட்டார்.

"அவரை நான் அதோ காண்கிறேன். என்னைப் பார்த்து அவர் புன்முறுவல் பூக்கிறார். நான் அவரைப் பார்த்துப் பேசுகிறேன். 'என்னை மறந்து விட்டீர்களா?' என்று கேட்கிறேன். அவர் அதோ தலையை அசைக்கிறார். அவர் என்னை மறக்கவில்லை" என்று உணர்ச்சி நிறைந்த குரலில் பேசினாள்.

"மகளே! அவர் உன்னை மறக்காமலிருக்கலாம். ஆனால், அவர் இப்போது இளவரசராகப் போகிறார். அவரை அடைய உன்னால் முடியாது. அவரை நீ மறந்து விடுவது தான் உனக்கும் நல்லது; அவருக்கும் நல்லது" என்று கூறி மகள் மனத்தை மாற்ற முயன்றார் தந்தை.

சந்திரப்பிரபா தந்தையை நோக்கிச் சீறினாள். "அதெப்படி அப்பா முடியும்? எங்களிடையே ஏற்பட்ட காதல், பதவி, அந்தஸ்து பட்டம் ஆகியவற்றிற்கு மேம்பட்டது. இதே துங்கபத்திரை நதிக்கரையில் அவர் என்னைச் சந்திப்பார். அவரது இலட்சியங்கள் சாதாரணமானவையாக இருக்கவில்லை. அவர் வேங்கியின் அரியணையில் அமர்வதற்கு முயன்று கொண்டிருந்தார்..." என்று அவள் கூறும்போது, அவள் தந்தை குறுக்கிட்டு, "ஆமாம். அவருக்கு நானே பொருளும், ஆள் பலமும் கொண்டு உதவ முன் நின்றேன். நிற்கிறேன்" என்றார்.

"அப்படியென்றால், அவர் இந்த நாட்டு அரசராவார் என்பது உறுதிதானே?" -- சந்திரபிரபா கேட்டாள்.

"ஆமாம்; அதிலென்ன சந்தேகம்? வல்லபன் தெற்கே கங்காபுரிக்குச் செல்லாமல் இருந்திருந்தால் நிச்சயம். அரண்மனையை முற்றுகையிட்டு ஆட்சியைப் பிடித்திருக்க முடியும்" என்றார்.

"அது அவருக்குத் தெரியவில்லையா?"

"ஆகா; வல்லபன் நன்றாக அறிவார். என்றாவது ஒருநாள் தன் பாட்டனாரின் வாரிசாக, கீழைச் சாளுக்கிய நாட்டு அரசராகி விடுவோம் என்று உறுதி அவருக்கு இருந்தது. அதனால்தான் கங்காபுரியினின்று பலமுறை வேங்கிக்கு வந்து சென்றிருக்கிறார்."

"கீழைச் சாளுக்கிய நாட்டு அரசராகும் உறுதி படைத்த அவர் என்னைக் காதலித்தார் என்பதைத் தாங்கள் அறிவீர்களால்லவா?"

"ஆமாம் மகளே!"

"வேங்கியின் அரசருக்கு எளிய குடிமகளின் மீது அன்பு ஏற்படக் காரணம் என்ன?"

சந்திரபிரபா இவ்வாறு கேட்டவுடன் அவள் தந்தை மெல்ல நகைத்தார். "மகளே! இதற்கு விடை கூற எனக்குத் தெரியாது. காதல் எந்தக் கட்டுப்பாட்டையும் மீற வல்லது என்று இளம் வயதினர் சொல்கிறார்கள். இளம் வயதினர் எந்தக் காலத்திலும் அப்படித்தான் சொல்லி வந்தார்கள். அதனால் நீ அவ்வாறு சொல்வதிலும் தவறில்லை. வல்லபனுக்கு உன் மீது அழியாத அன்பு இருக்கிறது என்று எப்படி நீ உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்?" என்றார்.

"எனக்கு நம்பிக்கை இருக்கிறது. இதே நதிக்கரையில் இதே மண்டபத்தில் அமர்ந்து அவர் உறுதியளித்திருக்கிறார். அதற்குச் சாட்சியாக அவர் தனது மோதிரத்தை எனக்கு அளித்திருக்கிறார்" என்றாள்.

அவள் தந்தை மெல்லச் சிரித்தார். அதில் நம்பிக்கை மிகக் குறைவாக இருப்பது புலப்பட்டது.

"ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்?" என்று கேட்டாள் சந்திரபிரபா.

"இளம் பெண்களிடம் வாக்குறுதியளிப்பது வாலிபர்கள் வழக்கம். பெரிய மலைகளின் மீது ஏறுவதாகவும், வானத்தை

எட்டிப் பிடிப்பதாகவும் கூறுவார்கள். துஷ்யந்தன், சகுந்தலை கதை தெரியுமல்லவா?" என்றார் அவள் தந்தை.

"தெரியும் அப்பா! ஆனால் அவர் துஷ்யந்தரல்ல. அவர் வாக்குத் தவறாத சோழர் பரம்பரையில் வந்தவர். அவர் ஏமாற்ற மாட்டார்" என்றாள் சந்திரபிரபா.

"விரைவில் வருவதாக உன்னிடம் உறுதியளித்துச் சென்றார். கங்காபுரியில் இளவரசர் பதவி காத்திருப்பது அவருக்குத் தெரிந்திராதா? தெரிந்தும் உறுதி அளித்துச் சென்றிருக்கிறார். இனி அவர் வேங்கிக்குத் திரும்ப மாட்டார். எனக்குக் கிடைத்த செய்தியிலிருந்து இளவரசர் பட்டாபிஷேகத்துக்கான நாள் குறிப்பிட்டு விட்டார்களாம். மகோன்னதமான சோழநாட்டின் இளவரசராகிறவர், நினைத்த போது வேங்கிக்கு ஓடி வருவார் என்று கனவு காண்கிறாயா மகளே?" என்றார்.

"கனவு இல்லை, தந்தையே! உறுதியாக நம்புகிறேன். அவர் வருவார். என்னைத் தேடிவருவார்..." என்று சந்திரபிரபா கூறும்போது அவள் குரலில் அழுத்தம் நிறைந்திருந்தது.

இப்போதும் அவள் தந்தை நகைத்தார். "மகளே! சோழநாட்டின் இளவரசராக வல்லபன் பதவி ஏற்கும் போது தன்னருகே இளவரசியை அமர வைத்துக் கொள்ள வேண்டும். அரச குடும்பத்து மங்கையை இந்த நாள்களில் தேர்ந்தெடுத்திருப்பார்கள். சாதாரணக் குடிமக்கள் வயிற்றில் பிறந்த உன்னை, வல்லபன் ஏன் நினைக்கப் போகிறான்?" என்றார்.

சந்திரபிரபா திடுக்கிட்டாள். "ஒரு நாட்டின் எளிய குடிமகள் அரசியாக முடியாதா? இளவரசியாக முடியாதா? காதல் என்பது அரச குலத்துக்கு மட்டும்தானா? அவள் மனத்தில் இப்போது அச்சம் தோன்றியது. மகளுடைய முக மாற்றத்தைக் கண்ட அவள் தந்தை, "ஆமாம் மகளே! வல்லபன் இப்போது சாதாரண வல்லபன் அல்லன். இப்போது மிக மரியாதைக்குரிய சோழ நாட்டிளவரசர் வல்லபன். அவருக்கு மணம் முடிக்க மலையமான் தீவிரமாக இருக்கிறார். சோழநாட்டுப் படைத்தலைவர் தன் மகளை மணம் புரிவிக்க முனைந்திருக்கிறார். அந்தக் கடும்போட்டியினிடையே நீ... ஆடிக்காற்றில் பறக்கும் துரும்பு! மகளே, வல்லபனை மறந்துவிடு" என்று கண்டிப்பாக கூறினார்.

சந்திரபிரபா நதிச்சுழலைப் பார்த்தவாறிருந்தவள் ஆவேசம் வந்தவள் போல், "முடியாது, முடியாது, மறக்க முடியாது. அவரே என்னை மறந்துவிட்டாலும் நான் மறக்கமாட்டேன். அதோ அவர் கையை அசைக்கிறார். 'உன்னை நான் மறக்கவில்லை' என்கிறார்.

கையை நீட்டி என்னை அணைத்துக் கொள்ள அழைக்கிறார். நான் இதோ புறப்படுகிறேன்" என்று கூறி நதிப் பிரவாகத்தில் பாய முற்பட்டவளை, நொடியில் தந்தை தடுத்து ஆற்றங்கரைக்கு அருகே உள்ள மண்டபத்திற்கு அழைத்துச் சென்றார்.

"என்ன காரியம் செய்யத் துணிந்தாய் மகளே! இந்த நதி கங்காபுரிக்கு செல்லவில்லை. சமுத்திர ராஜனை நோக்கி விரைகிறது. அங்குச் செல்லவா நீ விரும்புகிறாய்? நான் எதிர்பார்த்து எச்சரிக்கையாக இல்லாவிடில் என் அருமை மகளை இழந்திருப்பேன். வல்லபனும் அருமைக் காதலியை இழந்திருப்பான்..." என்று வேதனையும், கணநேரத்தில் நிகழ இருந்த ஆபத்திலிருந்து மகளைக் காப்பாற்றியதால் ஏற்பட்ட பரபரப்பும் மிகப் பேசினார்.

"அருமைக் காதலியை இழந்திருப்பார்..." சந்திரபிரபா ஒருமுறை தனக்குத்தானே முணுமுணுத்தாள். அப்பொழுதுதான் தான் செய்ய இருந்த செயலின் பயங்கரத் தன்மை அவளுக்குப் புரிந்தது.

இரு கரங்களையும் முகத்தில் புதைத்துக் கொண்டு விம்மினாள். அவள் தந்தை அவளை மெல்ல அணைத்துக் கொண்டு, கண்ணீரைத் துடைத்து, "பிரபா! மனத்தைத் தேற்றிக்கொள். எட்டாத கனியை எண்ணிக் காலமெல்லாம் வேதனையுடன் வாழக்கூடாது. வல்லபனை மறந்து விடு. நம் உறவினருள் உனக்கேற்ற வரனை நான் முடிவு செய்திருக்கிறேன். நம் செல்வம் அழியாதது. அரசுச் செல்வம் அழிந்துவிடும். நம் மந்தையிலுள்ள பசுக்களின் எண்ணிக்கை உனக்குத் தெரியுமா? இருபதினாயிரம் பசுக்கள்...! நீ ஓர் அரசி போல் வாழலாம். வல்லபனை மறந்துவிடு மகளே!" என்றார்.

அவருடைய கரங்களை விலக்கி, கண்ணீரைத் துடைத்துக் கொண்டு "முடியாது, முடியவே முடியாது. அவரை மறக்கவே முடியாது. நான் இப்போது அவரைப் பார்த்தாக வேண்டும். அப்பா! நான் அவரை உடனே சந்தித்தாக வேண்டும்" என்றாள்.

அவளுடைய தந்தைக்குப் பயம் ஏற்பட்டுவிட்டது. வல்லபனைச் சந்திக்கப் போகிறேன் என்று நதிவெள்ளத்தில் குதித்துவிடப் போகிறாளே என்ற அச்சத்தில், "வேண்டாம் மகளே, வீணே உயிரை மாய்த்துக் கொள்ளாதே மகளே! நீ இந்த உலகை விட்டுப் போனபிறகுகு நான் மட்டும் யாருக்காக வாழவேண்டும்?" என்று கண் கலங்கிக் கூறினார்.

பிரபாவின் முகத்தில் புன்முறுவல் பூத்தது.

"நான் உயிரைவிட விரும்பவில்லை அப்பா! எதற்காக நான் சாகவேண்டும்? என் உயிருக்குயிரானவர் என்னை மறந்து விட்டார் என்றாலோ, மறுத்து விட்டார் என்றாலோ தான் நான் இந்த உலகை விட்டுப் பிரிய முற்படுவேன். என்னை அவர் இருப்பிடத்துக்கு அழைத்துச் செல்லுங்கள்" என்றாள்.

"மகளே! நீ என்ன சொல்கிறாய்? கங்காபுரிக்குச் சென்று, அங்கே அவர் இளவரசராக விளங்குவதைப் பார்த்து நீ வருத்தப்படப் போகிறாயா?" என்று கேட்டார்.

"இல்லை, இல்லை, நான் கங்காபுரிக்குச் செல்ல வேண்டும். அங்கே அவரை ஒரே ஒரு முறையாவது பார்க்க வேண்டும். என்னை அவர் பார்த்து விட்டால் அவர் என்னை மறுக்க மாட்டார். என்னை உடனே கங்காபுரிக்கு அழைத்துச் செல்லுங்கள். என் அருமைத் தந்தையே!" என்று அவள் குழைந்தாள்.

அவள் தந்தை பலவாறு எடுத்துச் சொல்லிப் பார்த்தார். கங்காபுரிக்குச் செல்லப் பலநாள்களாகுமென்றார். பயணத்தில் பல துன்பங்கள் நேரும் என்றார். காரணங்களை அவள் ஏற்கவில்லை.

**வ**ல்லபன் தன் காதலைக் குறித்துத் தன் தாயிடம் கூறியவுடன் செல்வியின் முகம் மாறியது. வேங்கியில் தான் மனத்திலே ஏற்றிக் கொண்ட சந்திரபிரபாவை மனைவியாக ஏற்றுக் கொள்ள தாய் சம்மதிப்பாள் என்று வல்லபன் உறுதியாக நம்பினான்.

ஆனால் செல்வி தலையை அசைத்து விட்டாள்.

"மகனே! திருமணம் என்பது ஆயிரங்காலத்துப் பயிர். நீ செய்து கொள்ளும் திருமணம் இந்த நாட்டின் கௌரவத்தைப் பாதிக்கக்கூடியதாக அமைந்து விடக்கூடாது. இந்த நாட்டின் இளவரசனாக நீ விளங்கி ஆற்றும் கடமையில் உன்னை மணக்கப் போகும் இளவரசிக்கும் சம பங்கு உண்டு. அதனால், சக்கரவர்த்தி என்ன சொல்கிறாரோ அதன்படி நீ நடந்து கொள்வதுதான் நியாயம்..." என்று அறிவுரை வழங்கினாள்.

வல்லபன் திடுக்கிட்டான். "வேங்கி மகள் சந்திரபிரபாவை நான் மணக்கக்கூடாதா? அரசர் தேர்ந்தெடுக்கும் மங்கையைத் தான் நான் மணக்க வேண்டுமா? இது என்ன நியாயம்?" என்று வல்லபன் குமுறினான்.

சோழச் சக்கரவர்த்தி ராஜராஜனைச் சந்திக்க வல்லபன் விழைந்தான். வல்லபன் அவரைச் சந்திக்கச் சென்றபோது,

திருச்சிற்றம்பலமுடையர் பெருமான் நம்பிப் பல்லவரையர் சக்கரவர்த்தியிடம் வல்லபன் திருமண குறித்து விவாதித்துக் கொண்டிருந்தார்.

வல்லபனுக்குத் தன் மகளை மணம் புரிவித்துச் சோழ குலத்தோடு மனைவினைத் தொடர்பு கொள்ள விரும்புவதாக தம் உள்ளக் கிடக்கையைத் தெளிவாகப் புலப்படுத்தினார். சோழநாட்டிற்கு தான் இதுவரை உண்மையாக ஆற்றிய தொண்டிற்கு ஒரு பரிசாக அவர், மன்னரிடம் அதைக் கேட்டார்.

நம்பியிடமிருந்து இப்படியொரு வேண்டுகோள் வரும் என்று ராஜராஜசோழர் எதிர்பார்க்கவில்லை.

## 17. மறக்க வேண்டியது தான்

சோழச் சக்கரவர்த்தி ராஜராஜ சோழதேவர் மிகுந்த சிந்தனையில் ஆழ்ந்தார். திருச்சிற்றம்பலமுடையார் பெருமான் நம்பிப் பல்லவரையர் அவர் நம்பிக்கைக்குப் பெரிதும் உரியவர். அவர்களுடைய நட்பு அந்தஸ்துக்கு அப்பாற்பட்டது. நம்பியின் உண்மை உள்ளத்தை அரசர் அறிவார். சோழவள நாட்டிற்குத் தளபதி என்ற முறையில் அவர் ஆற்றிய தொண்டைப் பாட ஒட்டக்கூத்தர் தான் வரவேண்டும். அவர் மனம் மாறியிருந்தால் சோழநாட்டைத் தமது கைக்குள் வைத்துக் கொண்டிருப்பார். அரசரை ஆட்டிப் படைத்திருப்பார். இளவரசர் பதவிக்குத் தன் சகோதரியின் மகனை அவர் தேர்ந்தெடுத்தபோது அதற்கு அவர் கூறிய காரணங்களை ஏற்றார். இரு குழந்தைகளுக்கும் ஆபத்து என்றதும் நடவடிக்கை எடுத்து, கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து காப்பாற்றினார். காப்பாற்றியதுடன் குழந்தைகளை வளர்ப்பதற்குத் தக்கவர்களைத் தேர்ந்தெடுத்து ஒப்படைத்தார்.

சோழகுலத்துக்கே பெரும் தொண்டாற்றிய நம்பியின் உள்ளக்கிடக்கை தம் மகளை, வல்லபனுக்கு மணம் செய்து கொடுக்க வேண்டும் என்பது. ராஜராஜரின் இரண்டு குழந்தைகளுள் ஒருவன் வளர்ந்து, தக்க பருவம் அடையும் போது, வல்லபன் தன் பதவியை அவனிடம் ஒப்படைக்க வேண்டும். எட்டு ஆண்டுகளோ, பத்து ஆண்டுகளோ! அந்தக் காலம் வரை தன் மகள் இளவரசியாகத் திகழ்வாள்!

திருச்சிற்றம்பலத்து இறைவனிடம் அளவற்ற பக்தி கொண்ட நம்பி, இச்சிறு ஆசையைத் தன் உள்ளத்தில் கொண்டிருக்க வேண்டாம். ஆவலை அரசரிடம் தெரிவித்திருக்க வேண்டாம்.

வெளிப்படுத்தி விட்டார். சக்கரவர்த்திக்கும் சங்கடம் தான். என்ன முடிவைக் கூறுவார்? இரவெல்லாம் அவருக்கு உறக்கமில்லை. திருக்கோவலூர் மலையமான் தன் சகோதரரின் மகளைத் தான் மணம் புரிவிக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறார்.

நம்பியிடம் தம் கருத்தை ராஜராஜர் உடனே எப்படிச் சொல்லுவார் சுற்றி வளைத்துப் பேசத் தொடங்கினார்.,

"முதல் குழந்தையைக் கூத்தர் வளர்ப்பார் என்று எதிர்பார்த்தேன்" என்று பேச்சைத் தொடங்கினார் அரசர்.

"கேசவசுவாமியின் விருப்பப்படியே நான் செய்தேன். அல்லியை விட்டு இளவல் பிரியமாட்டேன் என்கிறான். அவளும் தன் சொந்தக் குழந்தையைப் போல் அவனை வளர்க்கிறாள். கூத்தர்பிரானும் தம் முதிய பருவத்தில் குழந்தையைக் கொஞ்சும் அழகே அழகு" என்றார் நம்பி.

சக்கரவர்த்தி பெருமூச்சு விட்டார்."குழந்தைகளின் பால் முகத்தைப் பார்க்கக்கூடக் கொடுத்து வைக்காத பாவி நான். நம்பி! நான் முன் பிறவியில் என்ன பாபம் செய்திருப்பேன்?" என்று கண்களில் நீர் மல்கக் கேட்டார்.

"சக்கரவர்த்திகள் இப்படி மனத்தைக் கலங்க விடக்கூடாது. குழந்தைகள் தக்க இடத்தில் நலமுடன் வளர்ந்து மாமேதைகளாக வீரர்களாக ஆவார்கள். சில வருடங்களே. கேசவ சுவாமி எப்போது உத்தரவிடுகிறாரோ, அப்போது இரண்டு குழந்தைகளும் பழையாறை மாளிகைக்கு வந்து விடுவார்கள். வருங்காலத்து மாமன்னராக விளங்கப்போகும் இளவரசரை கேசவசுவாமி வளர்க்கிறார் என்றால் தாங்கள் முன் பிறவியில் புண்ணியம் அன்றோ செய்திருப்பீர்கள்" என்று சமாதானப்படுத்தினார் நம்பி.

"நம்பி! தங்களிடம் என் மனத்திலுள்ளதை நான் ஏன் மறைக்க வேண்டும்? என் மனத்துக்குள்ளே ஏதோ அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது. நான் அதிக காலம் உயிருடன் இருக்கமாட்டேன் என்று தோன்றுகிறது.. அதற்குள் ஒருமுறை என் மழலைச் செல்வங்களைப் பார்க்கக்கூடாதா? என்னைப் பார்க்க அனுமதிக்க மாட்டீர்களா?" என்று நெஞ்சு தழுதழுக்கப் பேசினார்.

நம்பி உரிமையுடன் சினங்கொண்டவராக, "சக்கரவர்த்தி அவர்களே! தங்களுக்கு நான் அறிவுரை வழங்குவதற்கும், சற்றுக்

கண்டிப்பாகப் பேசுவதற்கும் மன்னிக்க வேண்டும். தாங்கள் பல்லாண்டுகள் வாழ வேண்டும். வாழ்வீர்கள் என்பது என் நம்பிக்கை. கேசவ சுவாமிகளின் ஆசியும் அப்படித்தான். ஆனால், குழந்தைகளைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலை, உள்ளத் துடிப்பைச் சற்று அடக்கிக் கொள்ளுங்கள். தாங்கள் குழந்தைகளைச் சந்திக்கக்கூடாது என்பதற்காகத்தான், பழையாறையிலிருந்து தள்ளிச் சிற்றூரில் குழந்தைகளை வளர்க்க ஏற்பாடு செய்தேன். தங்கள் உடல்நிலை சற்று அபிவிருத்தி அடைந்து வரும் சமயத்தில், இப்படி மனத்தில் கவலையை ஏற்படுத்திக் கொள்ளலாமா?" என்றார்.

சக்கரவர்த்தி மெல்ல நகைத்தார். "நம்பி! ஒரு கவலை ஏற்படுகிறது" என்றார்.

"இப்போது புதிய கவலைக்குக் காரணமில்லையே!" என்று கேட்டார் நம்பி. "பாண்டிய நாட்டினின்று தாக்குதல் ஏதாவது ஏற்படும் என்ற கவலை சில ஆண்டுகளுக்கு இல்லை. அண்ணன் தம்பி சண்டை தான் இப்போது அங்கே புகையத் தொடங்கி இருக்கிறது. இரு குழந்தைகளையும் கொல்லத் திட்டமிட்டவர்களையும் சிறையில் அடைத்து விட்டேன். உட்பகைக்கு இடமில்லை. வேங்கியினின்று வந்துள்ள தங்கள் சகோதரியின் குமாரன் மிகத் திறமைசாலி. தக்க இளவரசரைத் தான் தாங்கள் தேர்ந்தெடுத்துள்ளீர்கள்.... வேறு கவலை எது அரசே?" என்று நம்பி கேட்டார்.

"இளவரசரைப் பற்றிய பிரச்னைதான்."

"இளவரசரைப் பற்றியா? பட்டம் சூட்டுவதற்கான நாளைக் குறித்து விட்டார் கேசவசுவாமி. இளவரசியைத் தேர்ந்தெடுக்க வேண்டியதுதான்."

"அதுதான் பிரச்னை."

"அதில் என்ன பிரச்னை இருக்கிறது சக்கரவர்த்தி?"

"இளவரசி யார் என்று தேர்ந்தெடுப்பதில் தான்..." என்று கூறி மெல்ல நகைத்தார் ராஜராஜர்.

நம்பி புரிந்து கொண்டு விட்டார். அங்கே மௌனம் நிலவியது. மௌனத்தை அரசர் கலைத்தார்.

"நம்பி அவர்களே! தாங்கள் என் நிலையிலிருந்தால் என்ன சொல்வீர்கள்? சோழநாட்டுக்குத் தன்னலமற்ற சேவை புரிபவரது அருமை மகள். சோழநாட்டின் முதுகெலும்பு போன்ற திருக்கோவலூர் மலையமான். அவருக்கு என் மீது எப்போதும் கோபம். தன் மகளை இழந்த துக்கம் மாறுமுன்பு, தன் பெண்

வயிற்றுப் பெயரன் இளவரசனாகவில்லையே என்ற ஏக்கம் வேறு. அவர் குலம், சோழ நாட்டுடன் பல ஆண்டுகளாக மணமகளை அளித்து உறவை உறுதிப்படுத்தி வருகிறது. இப்போது மலையமான் தன் சகோதரரின் மகளை வல்லபனுக்கு அளிக்க முன் வருகிறார். நான் யாரைத் தேர்ந்தெடுப்பது?" என்று சக்கரவர்த்தி கேட்டார்.

நம்பிக்குக் கோபம் மெல்ல மெல்ல முளைத்தது. அரசரிட மன்று, மலையமானிடம் தான்.

"சக்கரவர்த்தி அவர்களே! மலையமானுக்கு எப்போதும் யார் மீதாவது கோபம் தான். தங்கள் மீது ஏன் கோபப்பட வேண்டும்? ஒரு வயதுக் குழந்தையை இளவரசராக்க முடியாது என்று அவருக்கே தெரியுமே? இன்று இல்லாவிடில் இன்னும் பத்து வருடங்களுக்குப் பிறகு அவருடைய பெயரன் தான் இளவரசன். பிறகு, இந்த நாட்டுப் பேரரசர். வல்லபனுக்கு இப்போது கிடைக்கும் அதிர்ஷ்டம் இன்னும் சிறிது காலத்துக்குத்தான்..." என்று கூறியபோது மன்னர் குறுக்கிட்டார்.

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?"

"அந்த நிபந்தனையின் பேரில் தானே வல்லபன் இளவரசர் பட்டத்தை ஏற்கிறான். இன்றுள்ள இளம் பிஞ்சு தக்க வயதடையும் போது வல்லபன் விட்டுக் கொடுக்க வேண்டியதுதானே? அப்படிச் செய்வதாக, வல்லபன் சம்மதித்துக் குழந்தைகள் எதிரே உறுதி எடுத்திருக்கிறான். அந்த உறுதியை வல்லபன் மீறமாட்டான். இளவரசர் பட்டத்தை உதறித் தள்ளி, தியாகம் செய்து தியாக வல்லபனாக மாறும் ஒருவனுக்கு மலையமான் மகளை மணம் புரிவிக்கச் சம்மதிக்கிறாரா? தாங்கள் உறுதியாகக் கேட்டீர்களா?" என்று நம்பி கோபமாகப் பேசினார்.

மன்னர் பேச முற்படுவதற்குள், "மலையமானுடைய சகோதரர் மகள் இளவரசியாக வாழ்ந்தவள் தன் பதவியை இழக்கச் சம்மதிப்பாளா? வருங்காலத்தில் மலையமானும், அவரது சகோதரரும் மனவேற்றுமை கொண்டு ஒருவரோடொருவர் சண்டையிட்டுக் கொள்ளமாட்டார்கள் என்பது என்ன உறுதி?" என்று கடுமையான குரலில் கேட்டார்.

மன்னர் மிக அமைதியாக, "நம்பி! இந்த வாதம் தங்களுக்கும் பொருந்தும் அல்லவா? தங்கள் மகள் பதவி இழக்கச் சம்மதிப்பாளா?" என்று கேட்டார்.

நம்பி உணர்ச்சிவசப்பட்டவராக, "என் மகள் பதவி காரணமாக வல்லபனை மணக்க முன் வரவில்லை. முதல் பார்வையிலேயே

வல்லபனிடம் அவள் மனத்தைப் பறிகொடுத்துவிட்டாள். வல்லபன் இளவரசனாகப் போகிறான் என்று கூட அவளுக்குத் தெரியாது. தாயற்ற அவள் குணத்தை நான் எப்படிப் புகழ்வது என்றே தெரியவில்லை. தெய்வ பக்தி மிகுந்தவள். அவள் கண் எனப் போற்றும் நந்தினியையும், காவிரிக் கரையையும், நதிக்கரைக் குடிலையும், விட்டு வருவதற்கு அவள் என்றுமே விரும்பமாட்டாள். அடக்கத்தின் குன்று அவள். நான் தான் கனவு காண்கிறேன், என் மகளுக்கு ஏற்ற வல்லபனுக்கு அவளை மணம் புரிவிக்க வேண்டும் என்று. அவளுக்கு இளவரசியாகும் ஆசை இல்லை. சக்கரவர்த்தி அவர்களே! என் இதயத்தின் மூலையில் தான் என் மகளை இளவரசியாக்க வேண்டும் என்ற ஆசை..." என்று நம்பி கூறிவரும் போது மன்னர் குறுக்கிட்டு, "நம்பி! உம் ஆசை மிக நியாயமானது. உமது சேவைக்கு இந்த நாடு ஏழேழு தலைமுறைக்கும் கடமைப்பட்டுள்ளது. ஆனால், இந்த அந்தஸ்து, அரச குலம் என்ற பரம்பரை நிர்ப்பந்தம் மட்டும் இல்லாவிடில், உமக்கு ஒரு மகன் இருந்திருந்தால் இளவரசுப் பட்டத்தை அவனுக்கே சூட்டியிருப்பேன்..." என்றார்.

"அப்போது மட்டும் குலம், பரம்பரை நிர்ப்பந்தம் குறுக்கிடாதோ? அரசர்க்கரசே! நாம் இத்துடன் பேச்சை விட்டு விடுவோம். தங்கள் உடல் நிலைக்கு இதனால் ஏதாவது ஊறு நேர்ந்து விடப் போகிறது..." என்று கூறிக் கொண்டிருக்கும் போது, வல்லபன் அங்கு வந்து வணங்கி நின்றான். அவன் அந்தக் கூடத்து வாயிலில் வந்து நின்று கொண்டிருந்த போது சக்கரவர்த்தியும் நம்பியும் உரையாடிக் கொண்டிருந்தவற்றின் சில பகுதிகளைக் கேட்டான். ஒரு கணம் திகைத்தான். மறுகணம் சிரித்தான்.

சக்கரவர்த்தி அவனை உற்று நோக்கியது அவன் நகைத்ததற்குக் காரணத்தை வினவியது போலிருந்தது. நம்பியும் அவனை நோக்கினார்.

"சக்கரவர்த்தி அவர்களே! இளவரசர் பட்டத்தை நான் ஏற்கும் நாளன்று என் அருகே இளவரசி அமர்ந்திருக்க வேண்டியது கட்டாயம்?" என்று கேட்டான்.

"ஆமாம், சாஸ்திரம் சொல்கிறது வழக்கமும் அப்படியே" என்று மன்னர் சார்பில் மறுமொழி கூறினார் நம்பி.

"அப்படியென்றால் இளவரசியைத் தேர்ந்தெடுக்கும் உரிமை எனக்கு உண்டல்லவா?" என்று வல்லபன் கேட்ட போது, மன்னரும் நம்பியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

"உண்டு, ஆனால்.." என்றார் நம்பி.

"ஆனால்.... என்ன? முழுக் காரணமும் சொல்லுங்கள்..." என்றான் வல்லபன்.

"பெரியவர்களாகப் பார்த்து தக்கவளை மணம்புரிவிக்க வேண்டும் என்பது முறை" என்றார் நம்பி.

"எனக்கு யாரைத் தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள்?"

"அதைப் பற்றித் தான் இப்போது விவாதித்துக் கொண்டிருக்கிறோம்" என்றார் நம்பி, மன்னரை நோக்கியவாறு.

"மன்னருக்கு அதனால் சிறிது சங்கடங்கூட. இல்லையா...?"

"அப்படியெல்லாம் இல்லை. ஆனால் மன்னர் அதிர்ச்சி யடையும் படியாக ஏதும் சொல்லக்கூடாது, செய்யக்கூடாது என்று எண்ணுகிறோம்" என்றார் நம்பி.

"நானும் அதைத் தான் சொல்கிறேன். மலையமான் மகளா, நம்பியின் புதல்வியா என்று விவாதித்து மன்னருக்கு வேதனை தராமல் நான் முடிவு கூறுகிறேன்" என்று வல்லபன் கூறியபோது, மன்னரும், நம்பியும் அவன் என்ன சொல்லப் போகிறானோ என்று எதிர்பார்த்தனர்.

வல்லபன் தன் மனத்திலுள்ளதைத் தெரிவித்தான். தன் தாயிடம் விவாதித்ததைத் தெரிவித்தான். வேங்கியில் தன் மனத்துக்குகந்த சந்திரபிரபா தனக்காக காத்திருப்பதைத் தெரிவித்தான்.

மன்னரும், நம்பியும் திடுக்கிட்டனர். மன்னர் தலையை அசைத்தார். முடியாது. முடியவே முடியாது என்பதற்கு அறிகுறியாகத் தலையைப் பலமாக அசைத்தார்.

"வல்லபா! நீ வேங்கி மகளை மறந்துவிட வேண்டியது தான்" என்றார்.

நம்பி மௌனமாக நின்று கொண்டிருந்தார். "நம்பி, பார்த்தீர்களா? இப்போது புதிய பிரச்னை உருவாகிவிட்டது. நான் எப்படி அமைதியாக இருக்க முடியும்?" என்றார் மன்னர். அவர் குரலில் பரபரப்பும் கவலையுமிருந்தன. அவர் முகம் மாறியது.

நம்பி அதைக் கவனித்தார் "மன்னர்பிரானே! நான் உடனே சென்று தங்கள் சகோதரியை இங்கே வருமாறு செய்கிறேன். நெறியுடைய பெம்மாள் நல்வழி கூறுவாள்" என்று கூறிவிட்டு விரைந்தார்.

சிறிது நேரத்திற்கெல்லாம் வல்லபனின் தாய் செல்வி அங்கு வந்து சேர்ந்தாள். தன் சகோதரியைக் கண்டவுடன் ராஜராஜன் தம் மனத்திலுள்ளதைத் தங்கு தடையின்றிக் கொட்டி, "செல்வி!

உன் மகன் மோங்கி மகளை மறந்து விட வேண்டியதுதான்" என்றார்.

"நானும் அவ்வாறு தான் யோசனை கூறியுள்ளேன். வல்லபன் அதை ஏற்பான் என்று நினைக்கிறேன்" என்று செல்வியும் கூறினாள்.

வல்லபன் ஆழ்ந்த சிந்தனையுடன் தலைகுனிந்தவாறு நின்றான்.

## 18. "நான் உங்கள் அடைக்கலமே"

திருச்சிற்றம்பலமுடையார் பெருமான்நம்பி பல்லவரையர் பணியாட்களுக்கு உத்தரவிட்டுக் கொண்டிருந்தார். இரண்டு பெரிய பெட்டிகளில் ஆடை அணிகளை எடுத்து வைக்குமாறு சொன்னார். சில ஓலைச் சுவடிகளை எடுத்து வைக்குமாறு மகள் திலகதேவிக்குக் குரல் கொடுத்தார்.

திலகதேவி மாணிக்கவாசகர் பாடல்கள் எழுதப்பட்ட ஓலைச் சுவடியை எடுத்து வந்து தந்தையின் அருகில் நின்றாள்.

"நீயும் உடன் வருகிறாய் மகளே!" என்றார்நம்பி. எங்கே செல்கிறார். எப்போது புறப்படுவார். எப்போது வருவார் என்று யாரும் அவரைக் கேட்கத் துணியமாட்டார்கள். வீட்டின் முன் தோட்ட வாயிலில் சிவிகை வந்திருந்ததால் பழையாறை அரண்மனைக்குச் செல்கிறார் என்று பொருள். வேப்பமரத்து நிழலில் வெள்ளைக் குதிரை கனைத்தவாறு நின்றிருந்தால் வெளியூர் செல்வதாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

அன்று அவர் மன்னரைச் சந்தித்துவிட்டு வந்தபிறகு சிறிது நேரம் ஒருவருடனும் பேசாமல் அமைதியாக இருந்தார். அம்பலவாணர் திருவுருவத்தின் எதிரே கண்ணை மூடிக் கொண்டு தியானத்தில் அமர்ந்திருந்தார். நெற்றியில் திருநீறெடுத்து அணிந்து கொண்டு பெருமூச்சு விட்ட வண்ணம், பயணம் புறப்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலானாள்.

"திலகா! நாம் சிதம்பரத்துக்குப் புறப்படுகிறோம்" என்றார் நம்பி.

திலகதேவிக்கு மகிழ்ச்சி பொங்கிற்று, வெளியூருக்குச் செல்வதென்றால் அவளுக்கு ஏற்படும் குதூகலத்திற்குக் குறைவிருக்காது. ஆற்றங்கரையையும், சோலைப் புட்களையும், வீட்டுப் பசுக்களையும் தினந்தினம் பார்ப்பதில் அலுப்பு ஏற்படுவதில்லை என்றாலும், சிவிகையில் அமர்ந்து மெல்ல ஆடி

அசைந்தவாறு அது செல்கையில் சாலையின் இருபுறத்து இயற்கை நடனத்தைக் காண்பதில் ஏற்படும் இன்பம் தனி தான்.

"தில்லைச் சிற்றம்பலத்திற்கா அப்பா! இதோ நொடியில் எனக்கு வேண்டியவற்றை எடுத்து வைத்துக் கொள்கிறேன்" என்றாள் திலகா.

"நாம் எப்போது திரும்புவோம் என்று சொல்ல முடியாது. உடைகளைப் போதுமானதாக எடுத்து வைத்துக் கொள்" என்றார் நம்பி.

திலகா அவர் முகத்தை நோக்கினாள். சிதம்பரத்தில் நீண்ட நாள்கள் தங்கப் போகிறாரா? – அப்படியென்றால்?

'அப்படியென்றால்?' என்று கேட்க அவளுக்குத் துணிவு இல்லை. எப்போதும் அவரே கேள்விகளைக் கேட்பார். விடைகளையும் அவரே கூறிவிடுவார். குறுக்கே பேசுவது அவருக்குப் பிடிக்காது.

மகள் தன்னை ஏறிட்டு நோக்குவது புரிந்தது. "ஆமாம் மகளே! தில்லைச் சிற்றம்பலத்து அம்பலவாணர் சந்நிதியில் நம்மை மறந்து இருப்பது போன்ற பேரின்பம் வேறென்ன இருக்கிறது? எனக்குச் சோழ நாட்டு வாழ்க்கை அலுத்து விட்டது" என்றார்.

நம்பி இவ்விதம் சொல்லவே மாட்டார். அவருக்குச் சோழநாட்டுப் பழையாறையை, கங்காபுரியை, சோழ சக்கரவர்த்திகளைவிட்டுப் பிரியவே மனமிராது. நாள்தோறும் ஒற்றர்களைச் சந்திப்பதும், நால்வகைப் படைத் தலைவருடன் அளவளாவுவதும், அயல் நாட்டிலிருந்து வரும் அரசப் பிரதிநிதிகளைச் சந்தித்து அளவளாவுவதுமாக நேரம் போதாமல் தவிப்பவருக்குச் சிதம்பரத்துக்குச் சென்றால் பொழுது எப்படிப் போகும்?

அவர் முடிவு செய்து விட்டார். எப்போதும் திட்டமிட்டுக் கொண்டிருப்பதால் மனத்தில் ஏற்படும் உளைச்சல், தூக்கமின்மை ஆகியவற்றிற்கு விடுதலை தர முடிவு செய்துவிட்டார்.

சிவிகையில் மகளுடனேயே அமர்ந்து கொண்டார். சிவிகை சுமப்பவரின் 'ஹோ ஹோ' ஒலி மெல்லக் கேட்டுக் கொண்டிருந்தது. இலேசாகச் சிவிகை அசைந்தாடிச் சென்று கொண்டிருந்தது.

திலகதேவி ஏதும் பேசவில்லை; இளவரசர் வல்லபனைச் சந்தித்து அவருடைய மன எண்ணத்தைத் தெரிந்து கொள்வதாகச் சொன்னாரே, இளவரசர் ஏதும் மறுமொழி கூறவில்லையா?

திருமண நினைவு அவளுக்கு இப்போது ஏற்பட்டது தான். அவளொத்த தோழிகள் திருமணம் புரிந்து கொண்டு கணவர் வீட்டுக்குச் சென்று விட்டாலும், திலகதேவி குடிலைச்

சுற்றி வருவதும், பசுவைப் பராமரிப்பதும், தோப்பிலுள்ள பறவைகளுடன் பேசி மகிழ்வதுமாகக் காலத்தை கழித்து வந்தாள். அவளுடைய தந்தை தான் இளவரசருக்கு மணம் புரிவிக்கலாம் என்ற நினைவை ஏற்படுத்தினார். இப்போது அவர் அதைப் பற்றிய கருத்து ஏதும் தெரிவிக்கவில்லை. பழையாறையை விட்டு, சிதம்பரத்திற்குப் புறப்படுகிறார்.

அவராகவே பேச்சைத் தொடங்கினார். 'திலகா! சிதம்பரத்தில் பொழுது போகாது என்று நீ கவலைப்பட வேண்டாம்" என்றார்.

திலகதேவி மெல்ல நகைத்தாள். "தில்லை அம்பலவாணர் சந்நிதியில் நான் அமர்ந்து நேரம் போவதே தெரியாமல் குஞ்சித பாதத்தைக் கண்டு குதூகலித்துக் கொண்டிருப்பேன். பொன் விமானத்தைப் பார்த்தவாறு நிற்பேன். சிவங்கைக் குளத்தில் கால்களை நனையவிட்டு, சின்னஞ்சிறு மீன்களின் மென்தொடுதலில் மெய் சிலிர்த்து நிற்பேன்" என்று திலகதேவி உற்சாகத்துடன் கூறினாள்.

நம்பி தலையை அசைத்தார். 'நான் என்ன செய்வதாக நினைத்திருந்தேனோ அதைத்தானே, என் மகளும் செய்யப் போவதாகக் கூறுகிறாள்' – என அவர் நினைக்கும்போது அவருக்குப் புதிய உற்சாகமே ஏற்பட்டது.

"திலகா! இதைவிட வேறு இன்பம் உலகத்தில் இருப்பதாக நினைக்கிறாயா? போர்க்களங்களும், நாடு பிடித்தலும் எதிரிகளை முறியடிப்பதும், அதைப் பற்றிய சிந்தனையை எப்போதும் கொண்டிருப்பதுமாக எனக்கு அலுப்பே ஏற்பட்டு விட்டது. சிற்றம்பலத்தில் பேரின்பத்தைக் கண்டுகளிக்கப் போகிறேன்" என்றார் நம்பி.

தந்தை எதையோ மனத்தில் வைத்துக் கொண்டு பேசுகிறார் என்று திலகதேவிக்குப் புரிந்து விட்டது. ஒருவேளை சோழநாட்டு முதலமைச்சர் பதவியையும், மாதண்ட நாயகர் பதவியையும் உதறி விட்டாலும் வியப்பில்லை.

"அப்பா! பழையாறையிலிருந்து ஒவ்வொரு சிறு யோசனைக்கும் சிதம்பரத்திற்கு வருவதென்றால் நேரம் வீணாகாதா?" என்று திலகதேவி கேட்டாள்.

நம்பி மெல்லத் தமக்குத் தாமே நகைத்து கொண்டார்.

'பழையாறையிலிருந்து, இனி என்னை எதற்கு யோசனை கேட்க வேண்டும்? இவ்வளவு காலமாக ஆலோசனை கூறித் தொண்டாற்றியது போதும். என்னைவிட அறிவு மிக்கவர்களுக்கு வாய்ப்பளிப்போம் – நம்பி ஒருவரால் தான் சோழநாடு

பிழைத்திருக்கிறதா?' – இதை நினைக்கும் போது அவருக்கு சிரிப்பு வந்தது.

இல்லை – இல்லை; அவருடைய திடீர் முடிவுக்கு இது காரணமில்லை; அவரது உள்ளத்தின் அடித்தளத்தில் வேறு ஏதோ ஒன்று இப்போது முளைத்தெழுந்து உறுத்துகிறது.

"தங்களுடைய திடீர்ப் பயணம் எனக்கு வியப்பாய் இருக்கிறது. அரசர் பட்டமேற்கும் வைபவத்திற்கு மீண்டும் நீங்கள் பழையாறை செல்வீர்களா?" என்று திலகதேவி கேட்டாள்.

ஆமாம்; நம்பி இல்லாமல் பட்டமளிப்பு வைபவம் நடக்குமா?

"என்ன கேட்டாய்? பட்டமேற்கும் வைபவமா? அழைத்தால் போவேன். எனக்குச் சோழ நாட்டிடம் என்ன கோபம்? இளவரசரிடம் என்ன கோபம்? வல்லபன் நல்ல குணமுள்ளவன். சோழநாடு செய்த பாக்கியம் அவனை இளவரசனாக அடைகிறது" என்று கூறி நிறுத்திய அவர், மீண்டும் தொடர்ந்து "வல்லபனைப் பார்த்தவுடனேயே எனக்குப் பிடித்து விட்டது. எனக்கு வேண்டியவர் வேண்டாதவர் என்ற பேதமே இதுவரை இல்லாதிருந்தது. ஆனால், வல்லபனைப் பார்த்தவுடன் ஒரு சிறு சபலம், பெண்களுக்கு ஏற்பட வேண்டிய சபலம் எனக்கு ஏற்படலாமா? வல்லபனை என் மருமகனாக ஏற்க ஆசைப்பட்டேன். உள்ளூற சோழ அரச குலத்துடன் நெருங்கிய தொடர்புகொள்ள வேண்டும் என்ற ஆசையும் கொண்டேன். அப்படி நான் ஆசைப்பட்டது தவறு என்று இப்போதுதான் புரிகிறது..." என்று கூறி நிறுத்தினார். பிறகு, சிறிது கோபத்துடன் "மலையமான் பரம்பரை தான் சோழநாட்டுடன் மணத்தொடர்பு கொள்ள வேண்டுமா? சோழநாட்டின் உயர்வுக்கு உண்மையாக உழைத்த இந்த நம்பிக்கு அந்தக் கௌரவம் கொடுக்கக்கூடாதா? ராஜராஜருக்கு என் இதயம் நன்றாகப் புரியும். இருந்தாலும் அவர் தலையசைத்து விட்டார். திலகா! உனக்கு வல்லபன் இல்லை. நீ சோழநாட்டு இளவரசி ஆகப் போவதில்லை. இந்த நம்பிக்கு நாட்டைக் காப்பாற்றும் ஒரே கடமை தான் உண்டு. நம்பியின் பெயரன் அரியணையில் அமரக்கூடாது. அப்படித்தான் அரசர் நினைத்துவிட்டார். மன்னரின் உணர்ச்சியைப் புரிந்து கொண்ட பிறகு பழையாறையில் ஏன் இருக்க வேண்டும்? சோழநாட்டு முதல் மந்திரியாக நானிருக்கலாம்; மாதண்ட நாயகனாக இருக்கலாம். எனக்கும் மனிதனுக்குரிய இயற்கையான வக்கிர குணங்கள் ஏற்படலாம்... சோழநாட்டைத் தம் வசப்படுத்த முயற்சிகளில்

இறங்கலாம். வேண்டாம், வேண்டாம். கொடிய எண்ணத்திற்கு இடமேற்பட வழியின்றி, மனமாற்றம் ஏற்பட வாய்ப்பின்றிப் பழையாறையினின்று புறப்பட்டு விடுவோம்."

நம்பி அத்தகைய முடிவுடன் தான், தில்லை நகரை நோக்கிப் பயணமானார். இனி அவர் பழையாறைக்குத் திரும்பி வருவாரா? மன்னருக்கு இந்தச் செய்தி தெரியுமா?

சோழநாட்டில் பரபரப்பான நிகழ்ச்சிகள் நடப்பதற்கு இது ஓர் அறிகுறியா?

பெருமான் நம்பி, சிதம்பரத்தை நோக்கித் தம் மகளுடன் சென்று கொண்டிருக்கும் போது பழையாறைக்கு அடுத்து ராஜராஜேச்சுரத்து மாளிகையில், ஒரு பகுதியில் வல்லபனின் தாய் செல்வி தங்கியிருந்த இடத்தில் வாயிற்கதவை ஓர் இளம் பெண் வந்து தட்டினாள்.

வல்லபனின் வருகையை எதிர்பார்த்திருந்த செல்வி, சந்திரப் பிரபாவைக் கண்டவுடன் யார் என்று புரிந்து கொள்ளாமல் திகைத்து நின்றாள்.

சந்திரப்பிரபா குனிந்து மண்டியிட்டு வணங்கித் தான் கொண்டு வந்த கனிவகைகளை எடுத்து வைத்து மிக மரியாதையுடன் நின்றாள்.

"குழந்தாய்! யாரம்மா நீ? எனக்குப் பார்வை இப்போது சிறிது குறைந்து வருகிறது. அடையாளம் தெரியவில்லை. ஒருவேளை, பெருமான் நம்பியின் மகளா? அல்லது மலையமானின் புதல்வியா?" என்று கேட்டாள். அக்குரலில் அன்பு இருந்தது. வல்லபனைப் பெற்றெடுத்த பாக்கியசாலியின் குணநலன்கள் மிக உன்னதமாக இருப்பதில் வியப்பென்ன?

வாயிற்படியருகே நின்றவாறு பேசவிரும்பாமல் சந்திரப்பிரபாவை உள்ளே அழைத்து மஞ்சத்தில் அமரச் சொன்னாள்.

சந்திரப்பிரபா உட்காரவில்லை. நின்று கொண்டே இருந்தாள்.

"பெண்ணே! நீ யார் என்று சொல்லவில்லையே" என்று செல்வி அவளை உற்றுப் பார்த்தவாறு கேட்டாள்.

"அம்மா!" என்று சந்திரப்பிரபா அழைத்தாள். அந்தக் குரலின் இனிமை செல்வியை மெய்சிலிர்க்க வைத்தது.

"அம்மா! நீங்கள் நினைப்பது போல் சோழநாட்டு மாதண்ட நாயகரின் மகள் அல்லள். மலையமானின் புதல்வியும் அல்லள். நான் ஓர் எளிய குடிமகனின் திருக்குமரி. வேங்கி நாட்டினின்று

வருகிறேன். தங்களையும் தங்கள் புதல்வரையும் தேடி என்னை ஒப்படைத்துக் கொள்ள வந்தேன்" என்றாள்.

செல்விக்குப் புரிந்துவிட்டது. வேங்கியில் தன் மகனைக் காதல் வலையில் சிக்கவைத்த பெண்ணா என்று நினைக்கும்போது செல்விக்கு ஒரு கணம் சீற்றம் பொங்கியது.

## 19. 'என் செல்வமே!'

இருள் பிரிவதற்கு இரண்டு நாழிகைக்கு மேலிருந்தது. பறவைகள் மெல்லத் தம் சிறகுகளை அசைத்து, அன்றைய தம் பணியைத் தொடங்க ஆயத்தம் செய்து கொண்டிருந்தன. கிழக்கே முளைத்த வெள்ளியின் பளீரென்ற ஒளி கருநீல வானில் கதிரவனுக்குக் கட்டியங்கூறுவது போல் அமைந்தது.

கேசவசுவாமி தடியை ஊன்றிக் கொண்டு கொள்ளிடக் கரையை நோக்கிச் சென்றார். கரை ஓரமாகச் சலசலவென்று ஓடும் நீரில் அமிழ்ந்து நீராடி விஷ்ணுவின் ஆயிரத்தெட்டுத் திருநாமங்களை மெல்ல உச்சரித்தவாறு, ஈர உடையுடன் குடிலை நோக்கித் திரும்புவார். திருப்பெயரைச் சொல்வதற்கும் அவர் குடிலை அடைவதற்கும் நேரம் சரியாக இருக்கும்.

அவர் வருவதற்குள் அவர் சீடர்கள் எழுந்து நீராடிக் கண்ண பிரான் திரு உருவத்தின் முன் விளக்கேற்றி அமர்ந்து, பாசுரங்களைப் பாடுவர். கீதையின் சில பகுதிகளைக் கூறுவர். கேசவ சுவாமியும் சேர்ந்து சொல்லுவார். பிறகு சீடர்களில் ஒருவனை நந்தவனத்தில் பூக்கொய்யச் சொல்வார். ஒருவன், கொட்டடியிலுள்ள பசுக்களுக்கு வைக்கோல் போடச் செல்வான். ஒருவன் அடுப்பை மூட்டி நைவேத்தியத்துக்கு ஆயத்தம் செய்வான். இப்போது மற்றொரு கடமையும் சீடன் ஒருவனுக்குச் சேர்ந்து விட்டது. கேசவ சுவாமி அவனிடம் அந்தப் பணியை ஒப்படைத்திருந்தார். சோழச் சக்கரவர்த்தி ராஜராஜனின் குழந்தைகளுள் சற்று வயதில் மூத்தவனை வளர்க்க ஒப்புக் கொண்டிருந்தார்.

சீடனுக்கு அரசிளங்குமரனைத் தான் பேணிப் பாதுகாக்கிறோம் என்பது தெரியாது. சுவாமியின் கட்டளை, "குழந்தையை நன்றாக வளர்க்க வேண்டும். அறிவுடையவனாக வளர்க்க வேண்டும். பக்திமானாக வளர்க்க வேண்டும் என்பதுதான்.

சுவாமி இல்லாதபோது சீடர்கள் பேசிக் கொள்வார்கள். சுவாமியின் வயதான காலத்தில் இந்தக் குழந்தையை -

தாயில்லாத குழந்தையை வளர்ப்பதாக ஏன் ஏற்றுக் கொண்டார் என்று சந்தேகத்தை எழுப்புவார்கள்.

"தாயின் பாலையே குழந்தை சுவைத்ததில்லையாம், நம் நந்தினியின் பால் இருக்கும் வரை கவலையில்லை" என்று பசுவின் பெருமையைப் பேசுவார்கள்.

"குழந்தையின் முகத்தைப் பார்த்தால், சாதாரணக் குடிமகன் வீட்டுக் குழந்தை போல் தெரியவில்லை. முகத்தில் ராஜகளை ததும்பி நிற்கிறது" என்பான் ஒரு சீடன். "இந்தக் குழந்தையை வளர்த்து இளவரசராக்கப் போகிறோம்" என்று ஒரு சீடன் கூறுவான்.

"ஆக, சீடர்கள் எல்லாருமே குழந்தையைப் பற்றிய கதையை அறிந்து கொள்ள விரும்பினாலும், கேசவ சுவாமிக்குப் பயந்து வம்புப் பேச்சை மறந்திருந்தனர். குழந்தையின் அழுகுரல் கேட்காவண்ணம் வளர்த்தனர்.

கிருஷ்ண பகவான் எதிரே சீடர்களும், கேசவ சுவாமியும் தம்மை மறந்து பாடும்போது ஒன்றரை வயதே நிறைந்த குழந்தை உட்கார்ந்து கொண்டு தாளம் போடும்.

நெற்றியில் கீற்றுச் சந்தனமிட்டு, இடையில் பட்டுக்கட்டி, 'என் கண்ணே, கிருஷ்ணா!" என்று கேசவ சுவாமி கொஞ்சுவார்.

கோடி அரச குலத்துக் குருவாக இருந்தாலும் எளிமையைத் தவிர வேறு அறியாத, எதன் மீதும் பற்று வைக்காத சுவாமிக்குக் குழந்தையிடம் அழுத்தமான பற்றும் பாசமும் ஏற்பட்டது. சீடர்களுக்குப் பெருவியப்பை அளித்ததில் வியப்பு இல்லை.

"இன்னும் சில நாள்களில் நாம் வடக்கேயுள்ள திருத்தலக்களைக் காணப்புறப்படுகிறோம். திருக்கச்சி, திருவல்லிக்கேணி, திருவேங்கடம், சிங்கவேள் குன்றம் என்று எம்பெருமான் உறையும் இடங்களைப் பார்த்துக் கொண்டே பத்ரி வரை போகிறோம்" என்று சுவாமி சீடர்களிடம் தெரிவித்தார்.

"இளவரசுப் பட்டாபிஷேகத்துக்குத் தாங்கள் இருந்து விட்டு பிறகுதானே புறப்படத் திருவுளம்?" என்று பிரதம சீடன் கேட்டான்.

"ஆமாம், அதற்காகத் தான் காத்திருக்கிறேன். அந்த வைபவம் நடந்த சில நாள்களுக்குள் சோழநாட்டில் ஒரு முக்கிய மாறுதல் ஏற்படப் போகிறது" என்று தம் விழிகளை மூடிக் கொண்டு, வருங்காலத்தில் நடப்பதை எதிரே காண்பது போல் கூறினார்.

சீடனின் உடல் சிலிர்த்தது. "சுவாமி! சோழ நாட்டில் இன்னும் என்ன மாறுதல் நிகழப் போகிறது? இப்போதே சோழப் பரம்பரை

மாறி வேறு ஒருவரிடம் தான் செல்ல இருக்கிறது. இன்னும் மாறுதல் உண்டா...?" என்று கேட்டான்.

கேசவசுவாமி மெல்ல நகைத்தார். "இப்போது சோழ பரம்பரை எங்கே மாறியிருக்கிறது? எதைக் கொண்டு அவ்வாறு கூறுகிறாய்?" என்று கூறிவிட்டு, "எல்லாம் கண்ணன் திருவிளையாடல். அவன் சித்தம் எப்படியோ, அப்படித்தான் எல்லாம் நடக்கும். வல்லபனின் முடிசூட்டு விழா முடிந்தவுடன் நாம் புறப்படுகிறோம்" என்றார்.

"இந்த பாலகனையும் எடுத்துக் கொண்டா?" சீடன் கேட்டான்.

"ஆமாம்; குழந்தை நம் கூட்டத்தில் ஒருவன். தாயும் தந்தையும் நாம் தான். இறைவனின் குழந்தை இந்தப் பாலகன். அவனது செவிகளில் எப்போதும் இறைவன் திருநாமமே கேட்க வேண்டும். அவன் பெரிய அறிஞனாக வளர வேண்டும்..." என்று கூறினார.

கேசவ சுவாமி அந்தப் பாலகனைத் தம் இருகரங்களாலும் தூக்கி எடுத்து அணைத்து, உச்சி முகர்ந்து, ஆரத்தழுவி, முத்தம் பொழிந்து, கொஞ்சிக் குலவி வெளியே கொணர்ந்து உட்கார வைத்தார். பாலகன் தன் பிஞ்சுக்கரம் கொட்டி நகைத்தான். எதிரே இருந்த சிறு தேரை உருட்டினான். யானை, ரிஷபம், மான், மயில் போன்ற மண்ணால் செய்யப்பட்ட உருவங்களைக் கரகங்களால் தூக்கியும், கீழே வீசியும் கலகலவென்று சிரித்தான்.

கேசவ சுவாமி பாலகனின் பால்வடியும் வதனத்தையே நோக்கியவாறு இருந்தார். அவர் ஏனோ பெருமூச்சு விட்டார்.

அப்போது யாரோ வந்து நிற்கும் அரவமும் மெல்ல விசும்பும் ஓசையும் கேட்டன. சுவாமி திரும்பி நோக்கினார். பரபரப்புடன் எழுந்தார்.

"அரசே! வரவேண்டும் வரவேண்டும்" என்று வரவேற்றார். சீடர்களை அழைத்து இருக்கை கொண்டுவரச் சொன்னார்.

சோழமன்னர் ராஜராஜன் கேசவ சுவாமியின் பாதங்களில் வீழ்ந்து வணங்கி எழுந்து நின்று, "சுவாமி தங்களுக்குத் தெரிவிக்காமல் வந்து விட்டேன். மன்னிக்க வேண்டும்" என்றார்.

"நீடுவாழ்க" என்று ஆசி கூறிய கேசவ சுவாமி மேலும் தொடர்ந்தார்.

"மன்னவா! இங்கே வருவதற்கு முன் அறிவிப்பு வேண்டுமா? நாளை புறப்பட்டு பழையாறைக்கு வர நானே எண்ணியிருந்தேன். ஆனால்..." என்று கூறி சுவாமி நிறுத்தினார்.

மன்னர் விழிகளில் நீர் ததும்பி நின்றது. உதடுகள் என்ன – உடலே மெல்லத் துடித்துக் கொண்டிருப்பது தெரிந்தது. கேசவ சுவாமி வாயிலை நோக்கினார். மன்னருடன் பரிவாரங்கள் காணவில்லை. பவனி புறப்படும்போது அணியும் ஆடை ஆபரண மகுடம் ஆகிய எதையும் மன்னர் அணியவில்லை. உடைவாளும் இல்லை.

"சுவாமி! என்னுடன் மெய்க் காவலர் யாரும் வரவில்லை. நான் இங்கே வருவது ஒருவருக்கும் தெரியாது. இரவெல்லாம் உறக்கமில்லை. பொழுது புலருவதற்காகக் காத்திருந்தேன். நேற்றெல்லாம் மனத்திலே பலவிதப் போராட்டங்கள்; குழப்பங்கள், நாம் திட்டமிட்டபடி இளவரசுப் பட்டாபிஷேக விழா நடைபெறுமா என்ற சந்கேம் எனக்கு எழுந்துவிட்டது. வல்லபன் தன் திருமணத்தைக் குறித்துத் தனக்கென்று ஓர் எண்ணம் கொண்டிருக்கிறான்..." என்று கூறிச் சற்றுப் பேச்சை நிறுத்தித் தம்மை ஆசுவாசப்படுத்திக் கொண்டார் அரசர்.

கேசவ சுவாமி ஏதும் பேசாது மௌனமாக இருந்தார். குழந்தை விளையாடிக் கொண்டிருந்தது. மண்ணால் ஆன தேரை இழுத்து வந்த வேகத்தில் தேர் கவிழந்தது. குழந்தை கை கொட்டிச் சிரித்தது.

சோழ மன்னர் குழந்தையைப் பார்த்தார். அவரின் செல்வம், சோழ நாட்டின் வாரிசு, மாளிகையில் தாதியர் மடியில் கம்பீரமாக இருந்து தங்கத்தால் ஆன பதுமைகளுடன் விளையாடிக் கொண்டிருக்க வேண்டிய பாலகன், குடிலின் புழுதியில் மண் பொம்மையுடன் விளையாடினான். நறுமணத் தைலம் தடவி வாரிவிடப்பட வேண்டிய அவன் கூந்தல் சரிவர எண்ணெய் காணாமல் பழுப்பு நிறம் பரவியிருந்தது.

திருச்சிற்றம்பலமுடையார் நம்பி பல்லவரையர் மாதண்ட நாயகர். அவர் சேவைக்காக அவரை முதல் அமைச்சர் ஆக்கினேன். எல்லாவற்றிற்கும் மேலாக அவர் என் உயிர் நண்பர். குழந்தைகளை என் கண்ணில் படாமல் வளர்க்க வேண்டும் என்றால் இப்படி சந்நியாசியிடமா ஒப்படைப்பது? தன் உணவுக்கே பிறர் கையை எதிர்பார்த்து இருக்கும் முனிவரிடம் குழந்தையை வளர்க்கும் பொறுப்பை ஒப்படைக்கலாமா? நாளை இந்த நாட்டை அரசாளப் போகும் அரசகுமாரனை அநாதைபோல் வளர்ப்பதா?

"குழந்தாய்! என் செல்வமே" என்று ஓடிச் சென்று வாரியணைத்து முத்தமாரி பொழிந்து குழந்தை திக்பிரமையுடன் கதறும் வரை அழுத்தமாக முகத்துடன் அணைத்துக் கொண்ட ராஜராஜர், "மகனே! உன்னைப் பிரிந்திருக்க என்னால் முடியாதடா, வானத்துச் சூரியனே! குலம் விளங்க வந்த கோதிலாப் பூங்கொத்தே" என்று பலவாறாகக் கூறி, தம் ஆசையைப் பாசத்தை வெளியிட்டார். பலவந்தமாக வெளியிட்ட ஆசையால் அதிர்ச்சியுற்ற குழந்தை கதறி அழுதது.

"ஏ, ராஜன்! இப்படித் தள்ளி வாரும். என்ன காரியம் செய்து விட்டீர்?" என்று கேசவசுவாமி கர்ஜித்து, குழந்தையை அவர் அணைப்பினின்று பறித்துப் பிரித்து, சீடனை அழைத்து, "குழந்தையை உள்ளே கொண்டு போ" என்று கூறினார்.

திகைத்து நின்ற அரசரைப் பார்த்து, "மன்னவா! நீர் செய்தது சரியென்று உமக்குப்பட்டதா?" என்று சீற்றத்துடன் கேட்டார்.

கேசவ சுவாமியை நோக்கித் திக்பிரமையுடன் நின்ற ராஜராஜன், தழுதழுத்த குரலில், "நான் என்ன பிழை செய்து விட்டேன் சுவாமி?" என்று கேட்டார்.

"நீங்கள் இங்கு வந்தது தவறு."

"இரவு முழுவதும் தூங்காமலிருந்த என் உள்ளத்தில் ஏற்பட்ட பீதியை, வேதனையைக் கூற வந்தேன்."

"குழந்தையைக் காண வரவில்லையா?"

"குழந்தை இங்கு வளருகிறான் என்பதே என் நினைவிலில்லை."

"நினைவை விட்டு அகன்றிருக்கும் ஒரு நிகழ்ச்சி திடீரென்று எவ்வாறு நினைவுக்கு வந்தது?"

"இங்கு வந்தேன், பிள்ளைப் பாசம் என் மதியைக் கட்டி விட்டது."

"இதன் விளைவு உமக்குத் தெரியுமா?" கேசவசுவாமி இப்படி கடுமையான குரலில் கேட்கவும், சொல்வதறியாது திகைத்து நின்றிருந்த அரசரை நோக்கி, "சோழநாட்டு மாமன்னரே! என் மீது உமக்கு நம்பிக்கை உண்டா?" என்று கேட்டார்.

"ஆகா! என்ன கேள்வி கேட்டு விட்டீர்கள்? தாங்கள் என் குரு. எங்கள் குலகுரு. இந்த நாட்டின் குரு. நம்பிக்கை இருக்கிறதா என்று கேட்ட கேள்வியே என்னைச் சுட்டுக் கொல்கிறது" என்று பயபயக்தியுடன் கூறினார்.

"நான் கூறியது நினைவிருக்கின்றதா? இந்தக் குழந்தைகள் இந்த சந்நியாசியின் வீட்டிலும், மற்றொரு கவியரசர் வீட்டிலும்

வளர்வதற்குக் காரணம் தெரியுமா?" என்று கேசவசுவாமி சுற்றி வளைக்காமல் கேட்டார். மன்னரின் உடல் சிலிர்த்தது. மெல்ல நடுங்கியது. "குழந்தைகளை நான் பார்க்கவே கூடாது என்று கட்டளையிட்டிருந்தீர்கள்" என்றார் மன்னர்.

"எப்பொழுதுமே தங்கள் அருகில் மாளிகை சுகங்களுடன் வளரவேண்டிய குழந்தைகளை ஏன் நான் பிரித்தேன்? உங்களுடைய நன்மைக்காகத்தான் மன்னரே! உம்முடைய நன்மைக்காகத்தான்!"

ராஜராஜன் உடல் நடுங்கியது.

"நீங்கள் இன்னும் சிறிது காலம் வாழ வேண்டும் என்பதற்காகத் தான். குழந்தைகளுக்குப் பல ஆண்டுகள் வரை கிரக பலன் சரியில்லை. இந்த மூத்த குழந்தையை விட இளைய குழந்தைக்குப் பலன் சரியில்லை..."

"கேசவசுவாமியின் விழிகள் மூடியிருந்தன.

"நல்லவேளை, இளையவனை நீங்கள் பார்க்கப் போக வில்லை..."

"இங்கே வந்து பார்த்தப்பிறகு, கவிஞர் வீட்டிற்கும் செல்ல எண்ணினேன்."

"அரசே! இப்படியே திரும்பிச் செல்லுங்கள். அடுத்த திங்கட்கிழமை வல்லபனுக்கு மண்டை கவிழ்த்து விட வேண்டும். உடனே ஆக வேண்டும்... புறப்பட்டுச் செல்லுங்கள்..." சுவாமியின் பேச்சு கட்டளையைப் போலிருந்தது.

மேல் உத்தரீயத்தினால் கண்களைத் துடைத்துக் கொண்ட சோழ மன்னன், நெஞ்சு தழுதழுக்க, சுவாமி! பட்டாபிஷேகம் நடைபெறாது போல் தோன்றுகிறதே! அதைக் கூறத்தானே ஓடோடி வந்தேன்" என்றார்.

"எல்லாம் நடக்கும்..."

"பெருமான் நம்பி பழையாறையை விட்டுப் புறப்பட்டுப் போய்விட்டார். அவருக்கு என் மேல் கோபம் தான். தன் மகளை வல்லபனுக்கு மணம் புரிவிக்கவில்லையாம்" என்றார் அரசர்.

"யார் யாரை மணக்கப் போகிறார்கள் என்ற முடிச்சு அதோ, அங்கே கண்ணபிரானால் போடப்பட்டிருக்கிறது. நீங்கள் உடனே பழையாறைக்குச் செல்லுங்கள். நம்பியை உடனே அழைத்து வர வேதவனமுடையாரை அனுப்புங்கள்" என்றார்.

"நாம் இங்கே பேசி எல்லாவற்றையும் முடிவு செய்து விடமுடியாது. நீங்கள் குழந்தையைப் பார்த்ததே பெரிய

தவறு. உடனே புறப்படுங்கள், வல்லபனுக்கு மகுடாபிஷேகம் செய்விக்க ஏற்பாடு செய்யுங்கள்..." என்று கூறிய கேசவசுவாமி, ஏதோ சொல்லக் கூடாததைக் கூறிவிட்டது போல் 'கிருஷ்ணா, கிருஷ்ணா' என்று தமக்குள் முணுமுணுத்துக் கொண்டார்.

குதிரை விரைந்து சென்று கொண்டிருந்ததே தவிர, ராஜராஜனுக்குக் குழந்தையின் நினைவுதான். குழந்தைகளைப் பழையாறை மாளிகைக்கே திரும்பவும் வரவழைத்து விட்டால் என்ன?... எனக்குத் தானே ஆகாது... ஆகாமல் போகட்டும். ஆனால் குழந்தைகள் சுகமாக வளருமல்லவா?" என்ற எண்ணத்துடன் அரண்மனையை அடைந்தார்.

அங்கே அவருக்குக் காத்திருந்த செய்தி அதிர்ச்சி தரக்கூடியதாயிருந்தது. வல்லபன் இளவரசர் பொறுப்பை ஏற்காமல் தியாகம் செய்துவிட்டுப் புறப்பட்டுப் போய்விட்டான் என்பதே அச்செய்தி.

# 20. மகுடாபிஷேகம்

சந்திரப்பிரபா வந்து சென்ற சிறிது நேரத்துக்கெல்லாம் வல்லபன் அங்கு வந்தான். நெறியுடையப் பெம்மாள் தன் மனக்கவலை முகத்தில் பிரதிபலிப்பதை மாற்றிக் கொண்டாள்.

"அம்மா! சற்று முன்பு இங்கு யாராவது வந்து சென்றார்களா?" என்று வல்லபன் கேட்டான்.

தாய் அவன் முகத்தையே உற்று நோக்கினாள். வேங்கியினின்று சந்திரப்பிரபா வந்து சென்றாள் என்பதை அவள் மறைக்க விரும்பவில்லை. தன் மகனுடைய மன்த்தை மாற்ற முடியும் என்றே நம்பினாள்.

"ஆம், மகனே! உனக்கு வேண்டியவர்கள் வந்தார்கள்" என்று கூறிச் செல்வி மெல்லிய முறுவலை உதடுகளில் பிரதிபலித்தாள்.

வல்லபன் ஒரு கணம் திகைத்தான். அவனுடைய தீர்மானம் சரியாகத் தான் இருக்கும்.

"வேங்கியிலிருந்து சந்திரப்பிரபா வந்திருக்கிறாளா?" என்று மிகுந்த பரபரப்புடன் கேட்டான்.

தன் மகனுடைய பரபரப்பைக் கவனித்த செல்வி, "உனக்கு வேண்டியவர்கள் என்றவுடன் நீ அவளைக் குறிப்பிட்டது எனக்கு வியப்பை அளிக்கிறது" என்றாள்.

"ஆம் தாயே! இந்த உலகத்தில் எனக்கு வேண்டியவர்கள் இருவர். ஒருவர் என்னைப் பெற்றெடுத்து உருவாக்கி, என் நலனையே என்றும் சிந்தனையில் கொண்டிருக்கும் தாங்கள். மற்றவள் - பல காத தூரத்தில் எனக்காகவே காத்திருக்கும் வேங்கி நாட்டு மங்கை சந்திரப்பிரபா. நாடும் ஊரும் அற்றவனாக நான் வேங்கிக்கு வந்த போதே என் மீது நம்பிக்கை வைத்து, தன் இதயத்தைப் பறிகொடுத்தவள். எனக்கு வேங்கி கிடைக்கும் என்றோ, அல்லது சோழநாட்டு இளவரசனாக ஆகும் பாக்கியம் பெறுவேன் என்றோ அவள் எதிர்பார்க்காமல் தன்னை என்னிடம் ஒப்படைத்தாள். அதனால் வேண்டியவர் என்றவுடன் அவள் நினைவு வராமல் வேறு யார் நினைவு வரும் தாயே?" என்று உணர்ச்சிப்பெருக்குடன் கேட்டான். பிறகு தொடர்ந்து "தாயே! அவள் எங்கே? வேங்கியினின்று என்னைத் தேடி வந்த அவள் என்னைக் காண எங்கெல்லாம் அலைந்தாளோ?" என்றான்.

"என் மகன் வல்லபனைத் தேடிக் கண்டு பிடிப்பதில் தொல்லை ஏது? உனக்கு இளவரசுப் பட்டம் சூட்டும் விழா நாள் நெருங்க, நெருங்க, உன்னைப் பற்றி அறியாதார் இந்த நகரத்தில் யார் இருக்கப் போகிறார்கள்? கங்காபுரிக்குச் சென்று அங்கு நீ இல்லாததால் இங்கு தேடிவந்து விட்டாள்" என்றாள் செல்வி.

வல்லபன் இருக்கையை விட்டு எழுந்து, "தாயே, அவள் எங்கே? எங்கே தங்கியிருக்கிறாள். உடனே நான் கண்டாக வேண்டும்" என்றான் பரபரப்புடன்.

"அமைதி கொள் மகனே! உள்ளத்து உணர்ச்சியை வெளிக்கு உடனே புலப்படுத்திக் கொள்ளாமையும், எடுத்த முடிவை முகத்தோற்றத்திலிருந்து அறிய முடியாமையும் ஆட்சிப் பொறுப்பில் இருக்க வேண்டியவர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய கலை" என்றாள் செல்வி.

"கடும் புயல் வீசும் போதும், கடல் கொந்தளிக்கும் போதும், சட்டமும் கட்டுபாடும் நிலைத்து நிற்குமா?" வல்லபன் குரலில் பொறுமையின்மை பொங்கி நின்றது.

"இளவரசுப் பதவியை ஏற்று மகிழ்ச்சிக் கடலில் திளைத்து நிற்கும் நீ புயல், கொந்தளிப்பு என்று பேசலாமா?" என்று செல்வி கேட்டாள்.

"ஆம்! தாயே! என் மனத்தில் புரிய முடியா வேதனை. நான் சூடப் போகும் மகுடம் முள் போல் தோன்றுகிறது. அளிக்கப்படும் உடைவாள் நாக சர்ப்பம் போல் காட்சியளிக்கிறது" என்றான் வல்லபன்.

"மகனே! என்ன நேர்ந்து விட்டது உனக்கு? உன்னைத் தேடி வந்த மகுடத்தை முள் என்கிறாயே?"

"ஆம் தாயே! என்னுடைய சுய சுதந்திரத்தைப் பறிக்கும் மகுடத்தை வேறு எப்படி அழைப்பேன்?"

"பொன் விளையும் நாடு, விஜயாலயர் வளர்த்த நாடு, அதன் இளவரசுப் பட்டம் சாதாரணமானதா? உன் சுதந்திரத்தைப் பறிக்கிறதா? உனக்கு மணம் முடிக்கத் திருக்கோவலூர் மலையமானும், முதல் அமைச்சர் நம்பியும் போட்டி போடும்போது பதவியின் முக்கியத்துவம் உனக்குத் தெரியவில்லையா?"

"தெரிந்துதான் சொல்கிறேன். நான் இளவரசன் என்றறிந்த மலையமான் தம் மகளைக் கொடுக்க முன் வருகிறார். ஆனால் நம்பி அவர்கள் என் பதவிக்காகத் தன் மகளை மணம் முடிக்க முன் வரவில்லை. ஆனால் நம்பியின் எண்ணம் ஈடேறவில்லை. அவர் தில்லை நகரை நோக்கிப் புறப்பட்டு விட்டார்" என்று வல்லபன் கூறியவுடன், செல்வி திடுக்கிட்டு, "பெருமான் நம்பி பழையாறையை விட்டுப் போய் விட்டாரா?" என்று கேட்டாள். பிறகு, "வல்லபா! சக்கரவர்த்தியின் முடிவுப்படி நான் நடக்க வேண்டும். நான் அவருக்கு வாக்குக் கொடுத்துவிட்டேன்" என்றாள்.

வல்லபன், தாய் கூறியதைக் கேட்டுக் கொள்ளாமலேயே, "நான் சக்கரவர்த்தியிடம் கூறிவிட்டேன். திருமண விஷயத்தில் அவர் யோசனையை ஏற்க விரும்பவில்லை. சந்திரப்பிரபாவுக்குக் கொடுத்த வாக்கை நான் மீற விரும்பவில்லை என்றான்.

"வல்லபா!! நான் கூறுவதைப் பொறுமையுடன் கேள். நான் சந்திரப்பிரபாவிடம் மனம் விட்டுப் பேசிவிட்டேன். சோழநாட்டு இளவரசுப் பதவிக்குக் குறுக்கே அவள் நிற்க விரும்பவில்லை..." என்று செல்வி கூறியபோது, வல்லபன் கோபக் குரலில், "நீங்கள் என்ன சொல்லிவிட்டீர்கள்?..." என்று கேட்டான்.

"நான் எல்லாம் சொல்லிவிட்டேன். என் மகன் வல்லபன் அரச குலத்து மங்கையை மணந்தாக வேண்டும் என்று கூறிவிட்டேன். அவள் மிகவும் குணமுடையவள். உண்மையிலேயே உன் நலனைத் தான் விரும்புகிறாள். சோழ நாட்டு இளவரசனாகப் போகும் பேறு பெற்றிருக்கிறாய் என்பது இதுவரை அவளுக்குத் தெரியாதாம்..."

"அம்மா! என்னைக் கேட்காமல் நீங்கள் அவளிடம் என்ன பேசினீர்கள்?"

"உன்னைக் கேளாமலேயே, உன்னை இளவரசனாக ஆக்கும் முழுமனதுடன் ஆதரவு தந்து, வாக்குக் கொடுத்தேனே, அதுபோல்..."

"இது ஒரு பெண்ணின் வாழ்க்கையைப் பாதிக்கும் விஷயம்."

"நானும் ஒரு பெண் தானே வல்லபா? மற்றொரு பெண்ணுக்குத் தீங்கு செய்வேனா?"

"என்ன முடிவு எடுத்தீர்கள்?"

"வேங்கி மகள் மிக நல்லவள். அவள் வேங்கிக்குத் திரும்பவும் செல்லப் புறப்படுகிறாள்..."

"ஆ! என்னைப் பார்க்காமலே புறப்படுகிறாளா? அம்மா, இதைவிடக் கொடுமை எனக்குத் தாங்கள் செய்ய முடியாது. பெண் மற்றொரு பெண்ணுக்குத் தீங்கு செய்யமாட்டாள் என்கிறீர்கள். வேங்கியிலிருந்து என்னைத் தேடி ஒரு பெண் தன்னந்தனியாகக் கங்கை கொண்ட சோழபுரம் வந்து, அங்கும் காணாமல், பழையாறைக்கு வந்து ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கிறாள் என்றால், அது ஒரு பெரிய தியாகமல்லவா?"

"இருக்கலாம். அவள் தனியாக வரவில்லை. அவளுடைய சகோதரர்களுடன் வந்தாள். தக்க வசதியுடன் வந்தாள். ஆனால் அவளுடைய சகோதரர்கள், புரிந்து கொண்டு விட்டனர். நீ சோழநாட்டு இளவரசராகும் வாய்ப்பைக் கெடுக்க அவர்கள் விரும்பவில்லை."

"ஒரு பெண்ணின் தியாகம் சாதாரணமானதன்று. ஒரு கணமாவது அவள் என்னைச் சபிப்பாள்."

"இல்லை; அவள் மகிழ்வுடன் செல்கிறாள். நான் அவளுக்கு ஒரு வரமும் கொடுத்துள்ளேன்."

"தியாகம் செய்து உள்ளம் நொந்தவளுக்கு கொடுக்கும் வரத்தால் என்ன பலன்?"

"மகத்தான பலன், உன்னை என்றும் அவள் உள்ளத்தில் ஏற்றி வைத்திருக்கும் உரிமையை அளித்தேன்."

"அவள் உள்ளத்தில் என்னை அழிக்காமல் வைத்திருப்பதற்கு மற்றவர் உரிமை தர வேண்டுமா?"

"ஆமாம்; நீ சாதாராணக் குடிமகனல்லன்; அரச குடும்பத்தைச் சேர்ந்தவன். இப்போது இளவரசனாவதால் அரச குடும்பத்தைச் சேர்ந்தவனாகிறாய் என எண்ணிவிடாதே. ஏற்கெனவே நீ வேங்கியின் மன்னனாகும் உரிமை பெற்றவன். நீ யாரை மணக்க வேண்டும், யாரை நேசிக்க வேண்டும் என்றுசொல்ல மற்றவருக்கு உரிமை உண்டு."

"நான் விரும்பவில்லை. அப்படிப்பட்ட அரசு தொடர்பு வேண்டாம். பட்டம் வேண்டாம். நான் முன்பே முடிவு செய்துவிட்டேன். எனக்கு இளவரசுப் பதவி வேண்டாம். சக்கரவர்த்தியிடம் முடிவைக் கூறிவிட்டேன். சந்திரப்பிரபா இல்லாத பதவியை நான் வேண்டேன்."

"அவள் அரச குடும்பப் பெண் இல்லை வல்லபா!"

"தாயே! என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். நான் முடிவு செய்துவிட்டேன். அதைத் தெரிவிக்கவே வந்தேன். வேங்கியிலிருந்து என் அபிமானவல்லி வந்திருப்பதைக் கேட்டவுடன் என் முடிவு உறுதியாகிவிட்டது. தாயே! என்னைத் தவறாக நினைக்காதீர்கள். நல்லவேளையாக இளவரசுப் பட்டம் சூட்டும் விழா நடைபெறவில்லை. வேறு தக்கவர் கிடைக்காமல் போய்விடமாட்டார்கள்" என்று கூறி நிறுத்திய வல்லபன், தான் உடுத்திலிருந்த அரச குல உடைகளைக் களைந்து விட்டு, எளிய உடையை அணிந்து கொண்டு, தாயின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினான்.

பிறகு எழுந்து, "தாயே! எனக்கு விடை கொடுங்கள்" நான் சந்திரப்பிரபாவைச் சந்திக்க உடனே செல்ல வேண்டும்; பலகாத தொலைவிலிருந்து, சோழநாட்டுக்கு வந்த திருமகளை உடனே திரும்பிச் செல்லுமாறு செய்வது நியாயமன்று. நான் சென்று தடுத்து நிறுத்துகிறேன். இனி என் சுதந்திரத்தில் ஒருவரும் தலையிட்டுத் தடை செய்ய முடியாது" என்றான். குரலில் கம்பீரம் இருந்தது.

செல்வி திடுக்கிட்டாள். "வல்லபா! நான் சொல்வதைக் கேள். அருண்மொழி தேவரும், மதுராந்தகரும் வகித்த மகத்தான இளவரசர் பதவியை ஒரு பெண்ணின் காதல் நிமித்தம் உதறித் தள்ளாதே" என்றாள்.

வாயிற் கதவருகே சென்ற வல்லபன், திரும்பி வந்தான். "தாயே! என்னை மன்னித்துவிடுங்கள் என்று மீண்டும் கேட்டுக் கொள்கிறேன். ஒரு பெண்ணின் தூய அன்பை விடச் சோழநாட்டு இளவரசுப் பதவி பெரிதன்று. வருகிறேன்" என்று கூறிவிட்டு, விரைந்து சென்றான், கங்கை கொண்ட சோழபுரம் நோக்கி.

சந்திரப்பிரபா வல்லபனை அங்கே எதிர்பார்க்கவில்லை. மீண்டும் வேங்கிக்குப் புறப்படுவதற்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்து வர அவளது சகோதரர்கள் வெளியே சென்றிருந்தார்கள்.

வல்லபனைக் கண்டவுடன் சந்திரப்பிரபா ஒரு கணம் திகைத்தாள். அவளுக்குப் பேச நா எழவில்லை. மறுகணம்

ஓடிடோடி வந்து, வல்லபன் தோள்களில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மினாள்.

"என்னை மறந்துவிடுங்கள்..." என்று கூறுவதற்குள் அவள் பட்டபாடு...

வல்லபன் அவளது கூந்தலை மெல்லக் கோதியவாறு, "சந்திரப்பிரபா! உன்னை எப்படி மறக்கமுடியும்?" என்று கூறினான்.

"மறந்துதான் ஆகவேண்டும். என்னைவிட நாடு பெரிது."

"அப்படி நான் நினைக்கவில்லை. எனக்கு நீதான் பெரியவள். இதயத்தில் அமர்ந்தவள். நான் இளவரசுப் பட்டத்தை நிராகரித்து விட்டேன்."

வல்லபன் இவ்வாறு கூறியவுடன், தீயை மிதித்தவள் போல் சந்திரப்பிரபா அவனிடமிருந்து விலகி நின்றாள்.

"நான் தங்கள் தாயிடம் வாக்களித்து விட்டேன். தங்கள் பதவிக்கு என்னால் இடையூறு வரக்கூடாது. நான் இங்கு வந்ததே பெரும் பிழை. நாளை நான் புறப்படுகிறேன். ஆனால், நான்... தங்களை ஒருநாளும் மறக்கமாட்டேன்" என்று கூறித் தலையைக் குனிந்து கொண்டு விம்மினாள். இரு ரங்களாலும் முகத்தை மூடிக் கொண்டாள்.

"சந்திரப்பிரபா! நானும் உன்னுடன் வேங்கிக்கு வருகிறேன்... எப்படியும் வேங்கியின் அரியணை எனக்கு உறுதி. நீ அரசியாவது உறுதி" என்றான்.

"தாங்கள் என்னுடன் வரக்கூடாது. உங்கள் தாயிடம் கையடித்துச் சத்தியம் செய்து கொடுத்திருக்கிறேன்" என்று அவனைத் திரும்பிப் பாராமலேயே பேசினாள்.

"சந்திரப்பிரபா! நான் என் முடிவைச் சக்கரவர்த்தியிடம் தெரிவித்துவிட்டேன். என் தாயிடமும் கூறிவிட்டேன். நான் உன்னுடன் வருவது உறுதி. பதவி எனக்குத் துரும்பு?" என்று கூறிக் கொண்டிருக்கும் போது, வெளியே, யாரோ வரும் அரவம் கேட்டது.

சந்திரப்பிரபா தங்கியிருந்த குடிலின் வெளியே சிவிகை வந்து நின்றது. குதிரைகளில் வீரர்கள் வந்து இறங்கினார்கள். அலங்கரிக்கப்பட்ட தேர் வந்து நின்றது. இரட்டைக் குதிரைகள் தேரில் பூட்டப்பட்டிருந்தன.

குதிரை மீதிருந்து திருச்சிற்றம்பலமுடையார் பெருமான் நம்பி பல்லவரையர் இறங்கி, வல்லபனை நோக்கி வந்தார்.

"இளவரசே! தங்களை எங்கெல்லாம் தேடுவது? புறப்படுங்கள், புறப்படுங்கள். மிக அவசரம்" என்றார். அவர் முகம் வாடியிருந்தது.

அங்கே நின்ற வீரர்கள் தலையைத் தாழ்த்தியவாறு நின்று கொண்டிருந்தனர்.

வல்லபன் திகைத்தவாறு நின்றான். "நான் இளவரசன் அல்லன். வல்லபன் என்றே என்னை அழைத்தால் போதும்" என்றான்.

"இளவரசே! நாம் எதிர்பாராதது நடந்துவிட்டது. நேற்று எனக்குச் செய்தி வந்தது. சக்கரவர்த்தியின் உடல் நிலை மோசமாகி விட்டது என்று கேள்விப்பட்டவுடன் நான் புறப்பட்டுப் பழையாறைக்கு வந்தேன். நான் மனத்தாங்கலுடன் புறப்பட்டது எவ்வளவு பெரிய தவறு என்பதை இப்போது உணர்கிறேன். இளவரசே! சோழநாட்டுக்குக் கைம்மாறு கருதாப் பணிகள் பல செய்துள்ளேன். அரசர் வேறு நான் வேறு என்று கருதியதே இல்லை.. ஆனால், கடைசியில் சோழர் குடும்பத்துடன் மணத்தொடர்பு கொள்ளவில்லையே என்ற எண்ணத்தில், மாதண்ட நாயகர் பதவியையும், முதல் அமைச்சர் பதவியையும் துறந்து, சிதம்பரத்திலேயே தங்கி விட முடிவு செய்து புறப்பட்டு வந்துவிட்டேன். தாங்களும், வேங்கி மகளை மணம் புரிந்து கொள்வதில் பிடிவாதம் காட்டினீர்கள். இளவரசர் பதவியைத் தியாகம் செய்து விட்டீர்கள்.

"சக்கரவர்த்தி இதை அறிந்தவுடன் மிக அதிர்ச்சி அடைந்து விட்டார். எதைச் செய்யக்கூடாது என்ற கேசவசுவாமி தடுத்திருந்தாரோ அதைச் செய்தார். உடல்நிலை திடீரென்று மோசமாகியது. இதயவலி ஏற்பட்டது. நான் வந்து சேர்ந்தவுடன் என் மடியில் தம் தலையை வைத்துக் கொண்டு ஓரிரு வார்த்தைகள் பேசிய பிறகே உயிரை நீத்தார். அவரது கடைசிச் சொற்கள் தங்கள் இளவரசுப் பட்டத்தைக் குறித்ததே. காதலுக்காகத் தங்கள் தியாகம் செய்ததை நான் அறிவேன். தியாக வல்லபனான தாங்கள் மற்றொரு தியாகம் செய்து தான் ஆக வேண்டும். தாங்கள் இப்போது சோழநாட்டின் இளவரசர் மட்டும் அல்லர். சோழ நாட்டின் சக்கரவர்த்தி. இராசாதி ராசர் என்ற பெயரைத் தங்களுக்குச் சூட்டி சோழ மாமன்னராக ஆக்க கேசவசுவாமிகள் யோசனை கூறிவிட்டார்கள்..." என்று நம்பி கூறி வரும்போது, வல்லபன். "ஆ! சக்கரவர்த்தி இறந்துவிட்டாரா?" என்று அலறினான்.

"இளவரசே! தங்களுக்கு உடன் இளவரசர்க்குரிய மகுடத்தைச் சூட்ட வேண்டும். இராஜராஜருக்கு இறுதிச் சடங்குகள் செய்த பிறகு, தங்களுக்கு நல்லதொரு நாளில் மகுடாபிஷேகம் செய்ய

வேண்டும். இராஜராஜரின் புதல்வருக்கு இளவரசுப் பட்டம் சூட்ட வேண்டும். முன்பு தாங்கள் எடுத்துக் கொண்ட உறுதியை மறந்திருக்க மாட்டீர்கள் என்று நினைக்கிறேன். இளவரசுப் பட்டம் சூடப்போகும் குழந்தை வளர்ந்து தக்க வயதடையும் போது நாட்டை அவனிடம் ஒப்படைத்து விட வேண்டும். உம். புறப்படுங்கள்" என்றார்.

பேரதிர்ச்சி தரும் மன்னரின் மரணச் செய்தியை அறிந்த நிலையிலும் வல்லபன் ஒன்று கேட்டான்:

"சின்னஞ்சிறு இளவரசர் பட்டமேற்பு விழாவில் சிறு குழந்தைக்கும் திருமணத்தை நடத்தி வைக்க வேண்டுமல்லவா? அரச குடும்பப் பெண் எங்கு பிறந்திருக்கிறாள் என்று தேடிப் பார்க்க வேண்டியது நமது கடமை. எனக்கு ஏற்பட்டது போன்ற பிரச்னை சிறுவனுக்கு ஏற்படாது?" என்றான் சிறுமுறுவலுடன்.

"இளவரசே! விவரித்துக் கொண்டிருக்க நேரமில்லை. சக்கரவர்த்தியின் உடலைத் தைலமிட்டுப் பாதுகாத்து வைக்கச் சொல்லி இங்கு விரைந்து வந்திருக்கிறேன். உடனே புறப்படுங்கள்" என்றார்.

"நான் வேங்கிக்குப் புறப்படத் திட்டமிட்டிருக்கிறேன்" என்றான் வல்லபன்.

"தெரியும். தங்கள் தாய் எல்லாம் கூறினார்கள். நீங்கள் புறப்பட்டு வந்தவுடன் தங்கள் தாய் அதிர்ச்சி மிக அடைந்து படுத்த படுக்கையாயிருக்கிறார்கள். சோழநாடே தங்களை எதிர்பார்த்திக்கிறது" என்று துரிதப்படுத்தினார்.

"அமைச்சரவர்களே! நான் வேங்கி மகளுக்குக் கொடுத்தவாக்கு என்னாவது?" என்று வல்லபன் கேட்டான்.

நம்பி பெரியதாகச் சிரித்தார். கூடத்தில் அங்கு நடப்பனவற்றைக் கவனித்தவாறு நின்று கொண்டிருந்த சந்திரப்பிரபாவைப் பார்த்தவாறு, "வேங்கி மகளை மறந்து விடுமாறு நான் சொல்லவில்லை. நமது சக்கரவர்த்தி ராஜராஜன் முப்பாட்டனார் ராஜராஜசோழ தேவர் பட்டத்து அரசியாக அரச குல மங்கையை ஏற்றார். ஆனால் தான் காதலித்த இன்பவல்லியை * மறக்கவில்லை. அபிமானவல்லியாக அவள் ராஜராஜரின் இதயத்தில் என்றும் வீற்றிருந்தாள். அரசர்கள் ஒன்றுக்கு மேல் பல பெண்களை மணப்பது மரபுதானே?" என்று நம்பி கூறி சந்திரபிரபாவைப் பார்த்து, "வேங்கை மகளே! நீதான் இப்போது சொல்ல வேண்டும். உன்னை இவர் மறக்கவே மாட்டார்.

* விக்கிரமன் எழுதிய 'நந்திபுரத்து நாயகி' நாவலில் விபரம் காண்க.

சோழநாட்டு அரசராகப் போகும் இவருக்கு நல்ல யோசனை கூறம்மா" என்றார்.

பிறகு, "இளவரசரே! தாமதப்படுத்தாதீர்கள். நீங்கள் பழையாறைக்கு வந்துதான் சக்கரவர்த்திகளின் இறுதிச் சடங்குகள் ஆக வேண்டும். பழையாறை நகரமே தங்களை எதிர்நோக்குகிறது. காதலுக்காகப் பதவியைத் துறக்க முற்பட்ட தியாக வல்லபனைக் காண அவர்கள் காத்திருக்கிறார்கள். தியாக வல்லபன் இராசாதிராசனாக மாறி மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டாமா?" என்று மிக உருக்கமாகக் கேட்டார்.

வல்லபன் சந்திரப்பிரபாவை நோக்கினான். அவள் சைகை மூலம் இதயத்தைச் சுட்டிக் காட்டி, "என்றுமே என் இதயத்தில் இடமுண்டு; சக்கரவர்த்தியானதும் தாங்கள் என்னை மறந்துவிடக்கூடாது" என்றாள்.

"பெண்ணே! வல்லபன் உன்னை மறக்கவிடமாட்டேன்" என்றார் நம்பி.

வல்லபன் நம்பியின் கரங்களைப் பிடித்துக் கொண்டு, "அமைச்சர் பெருமானே! தங்கள் வேண்டுகோளை ஏற்கிறேன். தங்களுடைய பக்கபலம் இருந்தால்தான் நான் சோழநாட்டின் மாபெரும் பொறுப்பை ஏற்பேன். தியாக வல்லபனாகவே என் பெயர் என்றும் விளங்கக் காதலையும் தியாகம் செய்யத் துணிவதே இந்த சோழ நாட்டுக்காகத்தான்" என்றான்.

நம்பி அந்தத் துயரம் நிறைந்த வேளையில் பெரிதாக நகைத்து, "தியாகவல்லபன் என்ற பெயர் ஒரே ஒரு காரணத்துக்காகத் தான். தங்களைத் தேடிவந்த இளவரசர் பதவியைத் துரும்பாக எண்ணி உதறி விட்டுப் புறப்பட்டீர்களே, அதற்காகத் தான். காதலைத் தியாகம் செய்ய நான் அனுமதிக்கமாட்டேன். இராசாதிராசனாக பழையாறையில் மகுடாபிஷேகம் செய்து கொண்ட பிறகு வேங்கி மகள் சந்திரப்பிரபாவையும், கங்கைபுரி அரண்மனை அந்தப்புரத்தில் அழைத்து வந்து அமர்த்திவிடுவேன்" என்றார்.

தியாகவல்லபன், சந்திரப்பிரபாவிடம் 'விரைவில் சந்திப்பேன்' என்று விடைபெற்றுக் கொண்டு பழையாறை நோக்கி வீரர்கள் புடைசூழ, திருச்சிற்றம்பலமுடையார் பெருமான் நம்பிப் பல்லவரையர் உடன்வர சோழநாட்டின் மகுடத்தை ஏற்கப் புறப்பட்டான்.

**(முற்றும்)**

தமிழ்நேசன் மின்நூலகம்
www.tamilnesan1981.blogspot.in

